AR
136

12-6-85

ஸ்ரீ:

S.

॥ यादवाभ्युदयः ॥

யாதவாப்யுதயம்

மஹாகாவ்யம்

ஸ்ரீ வேதாந்த தேசிகர்

இயற்றியது

7049
S. 7049
Acc. 23418

இரண்டாவது ஸர்கம்

தேசிகபக்தரத்னம்

நல்லூர் ஸேவா,

ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமியின்

"ஆமோதம்" எனும் வ்யாக்யானத்துடன்.

2, லக்ஷ்மீபுரம்,

வில்லிவாக்கம் :: சென்னை - 49.

ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன்

ஸ்ரீ:

॥ यादवाभ्युदयः ॥

யாதவாப்யுதயம்

மஹாகாவ்யம்

ஸ்ரீ வேதாந்த தேசிகர்

இயற்றியது

இரண்டாவது ஸர்கம்

தேசிகபக்தரத்னம்

நல்லூர் ஸேவா,

ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமியின்

"ஆமோதம்" எனும் வ்யாக்யானத்துடன்.

2, லக்ஷ்மீபுரம்,

வில்லிவாக்கம் :: சென்னை - 49.

[விலை ரூ. 7 - 25

Printed At

NEW BHARATHI VIJAYAM PRINTERS
49, Venkatachala Chetty Street,
Triplicane, Madras - 600 005.

விக்ஞாபனம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த அழகான யாதவாப்யுதய மஹாகாவ்யத்தின் இரண்டாவது ஸர்கம் இன்று வியாக்யானத்துடன் வெளியிடப் பெறுகிறது. இதை தேசிகனடியார்களும் மஹா ப்ராக்ஞர்களும் கடாக்ஷித்து அடியேனுடைய இந்த க்ருஷி ஸபலமாகும்படி அனுக்ரஹிக்க வேண்டுமாய் அடிபணிந்து ப்ரார்த்திக்கிறேன்.

இத்தகைய மஹத்தான-அழகான-கம்பீரமான-ரஸமான-பரமஸாரமான பவித்ரமான காவியத்தை இதுகாரும் ஸேவிக்காதவர்கள் மிக மிக தௌர்பாக்ய சாலிகள் என்று சொல்வதில் அபராத லேசமுமில்லை. ஸம்ஸ்க்ருத ஸாஹித்யத்தில் இதற்கு நிகரான காவியம் இல்லை. ஸ்வாமியின் சைலி பரமபோக்யமானது. மஹாகவிகள்-மாமேதைகள் மநஸ்விகள் மண்டியிடத்தக்க மாண்பினை இம்மா காவியம் பெற்றுளது என்பது மிகையல்ல.

கவி தார்கிக சிங்கம் எனப் போற்றநின்றவர் ஸ்வாமி. இதற்கு இந்த மாகாவியம் ஒன்றே சான்றாகும். ஸ்வாமி ஒரு சில இடங்களில் நாம் தெளிவு பெறத் தமது க்ரந்தங்களின் பெருமைகளை சாதிப்பது உண்டு. தனது நூல்களின் ஆழத்தையும் அழகையும் கண்டு தானே வியந்து பணிப்பது நூற்றுக்கு நூறு ஸத்யம். வைசம்பாயன சௌனக ப்ரப்ருதிகள் தானே சிர: கம்பம் செய்வர் என்று கூறுவர்.

ஸரஸ்வதி எங்கு நடமாடுகிறாளோ அவன் தான் கவி என்று இலக்கணம் வகுத்தவர் ஸ்வாமி. அத்தகைய ஸரஸ்வதீ வல்லபனின் படைப்பு விசித்ரமாயிருக்கும் என்றும் பணித்தார். இதற்கு இவருடைய அழகிய படைப்புகள் எடுத்துக் காட்டுகள்.

ஸ்ரீமத் ராமாயணத்தின் சீர்மையை பிற்காலத்திய நூல்களில் காணவேணும் என்றால் அதற்கு ஸ்வாமியின் காவியம் தவிர வேறு இல்லை என்றே கூறலாம். காளி தாஸன் முதலிய அக்காலத்து மஹாகவிகளும் கண்டறி யாத பல படைப்புகளை ஸ்வாமியின் காவியத்தில் காண லாம். யாதவாப்யுதயம் என்று பெயர் சூட்டியதே இதனைத் தெளிவு பெறச் செய்யும்.

வான்மீகி மஹாதபஸ்வி. காயத்ரீ ப்ரதிபாத்யனும், சூரிய மண்டல வர்த்தியுமான பகவான் சூரியவம்சத்தில் அவதரிக்க, காயத்ரி எழுத்து எண்ணிக்கை கொண்டு 24 ஆயிரம் ச்லோகம் இயற்றினார். அவ்வாறு ஒரு இருபத்தி நாலாயிரம் ச்லோகம் கண்ணனுக்கு வேண்டும் என்று திருவுள்ளமிருப்பினும், விரிவுக்கஞ்சி 24 ஸர்கங்களிலேயே அமைத்து விட்டார்.

சொற்களும் நான்முன்னம் நான்முன்னம் எனப் போட்டியிட்டு வருகின்றன. மந்தாகிநீம் மந்தயிதும் க்ஷமம் என்றவாறு அமைகின்றனவே! அநேக கோடி ஜந்மங்களில் புண்யம் பண்ணியிருந்தால் தான் ஸ்வாமியின் க்ரந்தங்களை ஸேவிக்கவும், ஸேவித்துப் பெருமையுடையவும் ஏற்ற ஸௌபாக்யம் கிட்டும் என்பது கல்வெட்டு.

ரத்ன பரீக்ஷகன் ரத்தினத்தைப் பல கோணங்களில் திருப்பித் திருப்பிப் பார்ப்பதுண்டு. சிறந்த ரத்னம் என்று தெரிந்ததும் ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லையேயிராது. இவ் வண்ணமே இந்த யாதவாப்யுதயத்தை காவ்யரத்னம் என்கிறார் ஸ்வாமி. சிறந்த ரத்தினம் மங்களத்தைக் கொடுக்கும். இதையே க்ஷேமத்தை அளிக்கவல்லது என்று குறிப்பினால் உணர்த்துகிறார்.

எம்பெருமானுடைய கல்யாண தமமான ரூபத்தைப் பல கோணங்களிலிருந்து அன்பர்கள் ஸேவித்துப் பூரித் துப் போவர். இவ்வண்ணமே இந்த யாதவாப்யுதயத் தைப் பல கோணங்களில் ஸேவிக்க வேண்டும். அணி வகுத்து நிற்கும் அணிகளுக்கு எண்ணிக்கையே இல்லை.

சப்தாலங்காரம் அர்த்தாலங்காரம் இந்த அப்யுதயத்தை அலங்கரிக்கின்றன. ஒவ்வொரு சுலோகத்திலும் பல அலங் காரங்கள். அலங்கார ஸாங்கர்யமே ஏற்பட்டுவிட்டது என்று வியக்கிறார் இதின் வ்யாக்யானத்தில் இழிந்த பரம ரஸிகரும் ஆலங்காரிகருமான தீக்ஷிதர்.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் இம்மஹா காவியத்திற்கு ஸம்ஸ்க்ருதத்தில் அழகான வ்யாக்யானமிட் டிருக்கிறார். இந்த வ்யாக்யானம் தனிப்பெருமையுடையது என்பதில் ஐயம் இல்லை. யோசித்துப் பார்க்கின்றபொழுது ஒவ் வொரு சொல்லிலும் பல பல கருத்துக்கள் அடங்கியுள் ளன என்பது தெரிய வருகிறது. அத்தனை தாத்பர்யங் களையும் ஸாதாரண பண்டிதன் அறிய வாய்ப்பே இல்லை. மஹாப்ராச்ஞர்களுக்குத்தான் நிலமாகும். ஆயினும் வ்யா க்யானம் செய்யப்புகுமவர் சில நியமங்களைப் பின்பற்று கின்றனர். அவ்வண்ணமே இந்த வ்யாக்யானத்தை சுருக்க மாகவே வரைகின்றேன் என்று பெரியதொரு உண்மையை விளக்கிவிட்டார். ப்ரயோகங்களின் பெருமை, சொற் களின் தூய்மை காம்பீர்யம், அலங்காரப் பொலிவு என்ற கணக்கில் வ்யாக்யானத்தை அமைத்து விட்டார்.

அழகான அந்த வ்யாக்யானத்தில் சொல்லியிருக்கும் கருத்துகளையும் விடாமல் எளிய தமிழ் நடையில் இந்த வ்யாக்யானம் இயற்றப் படுகிறது.

மேலும் சிற்சில இடங்களில் ஸ்ரீமதபிநவ தேசிக ஸ்வாமி டிப்பணி என்பதோரு சிறு குறிப்பு வரைந்துள் ளார். பல இடங்களில் தீக்ஷிதர் விட்டுவிட்ட விஷயங்களை அழகாக கோடிக் காண்பித்து அபூர்வமான ஸமஞ்ஜஸ மான விஷயங்களைக் குறிப்பிட்டருளினார். ஆங்காங்கு பாடங்கள் மாறி இருப்பதையும் ஸ்வாமி காட்டியுள் ளார். மேலும் தமிழில் மிக மிகச் சுருக்கமாக கருத்தினை மட்டும் கூறியுள்ளார். வாசகர்களுக்கு அது போதுமான தாக இல்லையோ என்று எண்ணம் தோன்றியவண்ணம் இருந்தது.

ஸ்வாமி தேசிகன் ஸங்கல்பத்தாலும், லக்ஷ்மீ ஹய க்ரீவனுடைய கடாக்ஷத்தாலும் அடியேன் விரிவான ஒரு தமிழ் வ்யாக்யானம் எழுதத் துணிந்துள்ளேன். சிறிய ஞானத்தனுகிய அடியேனுக்கு இப்பொழுது ஏற்படும் ஆனந்தம் அளவு கடந்தது. ஸ்வாமி தேசிகனை இத்தனை நாள் இவ்வாறு சேவிக்காமல் போய் விட்டோமே என்று நினைக்கிறேன். உள்ளுக்குள்ளே ஏற்படும் குமுறலுக்கு கதியில்லை. இனி சென்ற நாட்களை நினைத்துப் பயனில்லை. எழுந்திரு, விழித்துக்கொள், உயர்ந்ததை அறி என்ற வேதம் இட்ட ஆணைதான் துணை.

யாதவாப்யுதயம் சேவிக்காத பிறவியே வீண். இவ்வாறு சொல்வதற்கு தேசிகனடியார்கள் மன்னிக்க வேண்டும். நாமும் தேசிகனை உள்ளவாறு உணர்ந்து கொள்ளவில்லை. உலகம் அறியும் வகையில் உணர்த்தவும் முற்படவில்லை. தேசிகன் வேதாந்தி, வைராக்ய பூஷணர்.

காவியங்களிலே ஸஞ்சாரம் பண்ணும் பொழுது என்ன அதிசயம்! எத்தனை அத்புதம்! எத்தனை அனுபவம்! ஸ்வாமியின் வர்ணனையின் வடிவம் சொல்லுக்கு அப்பாற்பட்டது.

ஸ்வாமியின் சைலி பரம போக்யமானது. இதுவரை கவிலோகம் சிந்திக்காத அல்லது சந்திக்காத கல்பனைகள். வேதாந்த வாஸனையோடு ஸஞ்சாரம். கவிகள் கூறியுள்ளதைக் கண்டிப்பதில்லை. ஆனுல் அங்கு எப்படி இருந்தால் நன்ருக இருக்கும் என்பதை அக்கவிகளை நினைவு கூறும் வகையில் சொல் அமைத்து அதற்குமேல் தனது போக்கினை முத்திரையிடுவது போல் கூறுவது ஸ்வாமியின் அலாதியான பாணி.

காளிதாஸனுடைய கவிநயமும், ஸ்வாமியின் கவிதை நயமும் எங்கோ உளது. காளிதாஸன் மஹாகவி. அவனுக்குத் தமிழ் தெரிய ஏதுவில்லை. அவ்வாறே கம்பனும் கவி சக்ரவர்த்தி. அவனுக்கு ஸம்ஸ்க்ருத வல்லமைக்கு ஈடு இல்லை. ஆனுல் தமிழில் கம்பனையும், ஸம்ஸ்க்ருதத்தில் காளிதாஸனையும் விஞ்சியிருக்கும் ஸ்வாமி பெருமையை யாரே அறிவார்?

ஒவ்வொரு ச்லோகத்திலும் மோகித்து நிற்கிறேன். அந்த சுலோகத்தையே மன்ருடிக் கேட்கிறேன். உன்னிடத்தில் உள்ள கருத்தினை நீ கூறிடுவாய் என்று. இத்தகைய போராட்டத்தில் முதல் ஸர்கம் முடிந்தது. வ்யாக்யானங்களில் காணக் கிடைக்காத பல ரஸங்களை விண்ணப்பித்துள்ளேன். ரஸிகர்களும் பாவுகர்களும் வித்வான்களும் தான் இதற்கு ப்ரமாணம்.

இப்பொழுது இரண்டாவது ஸர்கம் பூர்த்தியாகி ஸ்ரீ தேசிகனடியார் திரளில் ஸமர்பித்துக் கொள்கிறேன். இரண்டாவது ஸர்கத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளாவது விண்ணப்பிக்காமல் இருப்பது அபசாரம் என எண்ணி இங்கு ஒரு சில விஷயங்களை விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

இந்த ஸர்கம் பகவதவதார ஸர்கம். 97 ச்லோகங்கள் கொண்டது இந்த ஸர்கம். உபஜாதி வ்ருத்தத்தில் இந்த ஸர்கம் அமைந்துளது. இது ரஸம். எம்பெருமானும் உபஜாதியில் ஸஞ்சரிப்பன். 96வது சுலோகத்தில் பகவதவதாரம். அநபாயமான சூரியனை தேவகி என்ற பூர்வ ஸந்த்யை பெற்று எடுத்தது எனப்பட்டது. முதல் ஸர்கத்திலே 74வது சுலோகத்தில் அநபாயம் தமாதித்யம் என்று தேவஸ்துதியில் உள்ளது. அதையே அவதார காலத்திலும் திநகரம் அநபாயம் என்று பணிப்பர் போலும்.

மேலும் பிறகாவியங்களில் காணப்பெருத ஓர் ஈடுபாடுடைய போக்கு விலக்ஷணமானது. ஆகமாநாம் என்ற தொடக்கமே ரஸம். கர்ப்பிணியை வர்ணிக்கும் சுலோகங்கள் 35. பிறகு ஸந்த்யையை வர்ணிப்பது அழகு. சாயங்கால ஸந்த்யாவர்ணனம் பரமபோக்யம். பிறகு க்ரமமாக நள்ளிரவு வரை வர்ணனப்ரக்ரியை அதி-அத்புதம். நள்ளிரவில் விலக்ஷணமானதொரு பூர்வஸந்த்யை.

அப்பொழுதே பகவதவதாரம். ஒவ்வொரு இடத்திலும் மூலக்ரந்தங்களின் சொற்களைக் கொண்டு வர்ணிக்கும் முறை அலாதியானது.

37 சுலோகங்கள் வரையில் விஸ்தாரமாக எழுதி வரும்பொழுது பக்கங்களின் பெருக்கத்தைக் கண்ட பொழுது ஓர் விதமான அச்சம் ஏற்பட்டது. ஆம் இவ்வாறு எழுதிக் கொண்டே போனால் பெரிய புத்தமாகி விடுமே. ஆகட்டுமே என்று சொல்ல முடியாத காலநிலை. 160 பக்கங்களில் முடிக்க நினைத்தது 288 பக்கங்களாகி விட்டது. இதை லௌகிக ரீதியில் சமாளிப்பது மிகவும் கடினமாயிற்று. முக்கியமாக பேபர்கள் விலை ஏறியது பாரமாகத் தோன்றியது. ஆதலால் தவிர்க்க முடியாமல் 38வது சுலோகங்கள் முதல் வ்யாக்யானத்தைச் சுருக்க வேண்டியதாயிற்று. என் செய்வது!

முதல் ஸர்கத்திற்கு ஸான்கோ ட்ரான்ஸ் நிர்வாஹத்தைச் சேர்ந்தவர்களின் பரமோபகாரம் உதவியாக இருந்தது. அவர்களுக்கு ஸ்வாமியின் திருவடிகளை த்யானித்து தன்யவாதங்களை ஸமர்பித்துக் கொள்கிறேன். இனி இரண்டாவது ஸர்கத்திற்கு என் செய்வது என்று யோசித்து அவனைச் சரணடைந்த பொழுது, பரிமுகனின் பரிவு ஏற்படமல் போகாதே! பம்பாய் மாநகரத்திலிருந்து ஸ்ரீமான். N. S. L நரஸிம்மன் என்ற பரமாஸ்திகர் அடியேனுக்கு அமோகமான த்ரவ்யஸஹாயம் செய்து இந்த கைங்கர்யத்திற்கு உயிரளித்தார். ஸ்வாமி தேசிகனிடத்தில் அந்தரங்கபக்தி தான் இதற்கு காரணம் என்பதை எழுத்துக்களில் எப்படி காட்டமுடியும்! ஸ்வாமியை முன்பின் தெண்டம் ஸமர்பித்ததில்லை. சுமார் ஒரு வருஷமாகியும் இதுவரை அந்த பாக்யம் கிட்டவில்லை. ஸ்வாமியின் உத்ஸாகப் படுத்தும் ஸ்ரீமுகங்களைத் தவிர வேறு அறியேன். அந்த ஸ்வாமியினிடம் முன்பின் தெரியாத ஒருவனுக்கு இவ்வளவு பெரிய தொகையை அனுப்பி ஊக்குவித்ததற்கு நன்றியாவது சொல்ல வேண்டுமே

என்று அடியேன் விண்ணப்பித்ததற்கு இணங்க ஸ்வாமி ஒரு சில வரிகளை மாத்திரம் எழுதியனுப்பியுள்ளார். இப்படியும் மஹான்கள் மறைந்திருப்பதை என்ன என்று சொல்வது! அந்த ஸ்வாமியினிடம் உத்தரவு பெறாது போயினும் அவ்வரிகளை அவ்வாறே குறிப்பது தான் அடியேன் செய்யும் சிறுதன்ய வாதம் என எண்ணி இங்கு குறிப்பிடுகிறேன்.

"சென்னை மயிலாபூரில் வழக்கறிஞராக இருந்தவரும், மயிலை ஸ்ரீதேசிகன் ஸந்நிதி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ தேவஸ்தானத்திற்கு ட்ரஸ்டியாக இருந்தவருமான ஸ்ரீ உபயவேநடாதூர் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களுடைய ஞாபகார்த்தமாகவும், அவருடைய தர்மபத்னி கல்யாணி அம்மாளுடைய ஞாபகார்த்தமாகவும் அவர்களுடைய குமாரன் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹன் கொடுத்த பொருளுதவியினால் வெளியிடப்பட்டது" என்று குறிப்பிட்டால் போதும் என்பவை அவ்வாசகங்கள். வழக்கறிஞராக இருந்தும் எவ்விதபடாடோபமும் இல்லாமல் வாழ்ந்தவர். பகவத் விஷயத்தில் மிக மிக ஈடுபாடுடையவர் என்பதையும் அறியமுடிகிறது. அவ்வாறே பிதாவைக் காட்டிலும் நூறு மடங்கு புத்திரன் என்பதை முதலிக்கும் N. S. L "நரஸிம்மனுக்கு அனந்த தன்ய வாதங்கள்" ஆதலால் இந்த ஸர்கம் ஒரு தேசிகபக்தரின் த்ரவ்ய ஸஹாயத்தினால் வெளிடப் பெற்றது. என்றென்றும் வாசகர்களுடன் கலந்து அடியேன் ஸம்ப்ராதாயத்தின் சார்பிலும், தன்யவாதத்தை ஸமர்பித்துக் கொள்கிறேன்.

இம்முன்னுரையில் மற்றொரு விஷயத்தை விண்ணப்பிக்காமல் இருக்க முடியவில்லை. 160 பக்கங்களில் அச்சிடும் பொழுது விலை 5 ரூபாய் வைக்கலாம் என்று தீர்மானித்தேன். இந்த இரண்டாவது ஸர்கத்தின் பதிப்பிற்கு பேபர் அச்சுக் கூலி மட்டும் 7,200 ரூபாய்கள் ஆகி உள்ளன. ஆதலால் இரண்டாவது ஸர்கத்தின் விலையை ரூ. 7-25 என்று வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுளது.

கண்டவர்களும் வாங்கும் புத்தகம் இல்லை இது. கண்டவர்கள் தான் வாங்கும் தன்மையது. அன்றியும் சில வெளியீடுகள் போல் யார் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளட்டும் என்று சொல்லி பணம் பண்ணி விட்டால் போதும் என்ற நிலையிலும் இல்லை. 25 பாகங்களாக வெளி வரும் இதற்கு சுமார் 750 பேர்களாவது கட்டாயமாக வாங்குவோர் இருந்தால் தான் 24 ஸர்கமும் கிடைத்த படியிருக்கும். ஆதலால் தேவையுள்ளவர்கள் தமது பெயர்களைப்பதிவு செய்து கொள்வது சாலச்சிறந்தது. சுமார் 5000 பக்கங்களில் தயாராகும் இப்பதிப்புக்கு, சரண்யனுடைய அனுக்ரஹமும், ஆசார்யாளுடைய கடாக்ஷமும் ஸ்ரீமான். N. S. L நரஸிம்மன் போன்ற மஹான்களின் உபகாரமும் தான் இத்திட்டத்தைத் தலைக்கட்ட வல்லது. மேலும் மேல் ஸர்கங்கள் விரைவில் வெளிவர ஸ்வாமி தேசிகன் அர்த்தத்தைக் கொடுத்தும், அர்த்தங்களைக் காட்டிக் கொடுத்தும் அருள் பாலிக்க வேண்டுமென்று இறைஞ்சி. ஸ்ரீமான். N. S. L நரஸிம்மனுக்கு அனந்த கோடி தன்யவாதங்களை ஸமர்பித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ பாகவதத்தில் க்ருஷ்ணவதார கட்டத்தை ஸ்ரீ ஜயந்தியில் ஸேவிப்பது வழக்கம். இந்த ஸ்வாமிக்கு ஸ்ரீ க்ருஷ்ணவதார ஸர்கம் அமைந்தது பெரும் பேருகும் என்பதையும் சுட்டிக்காட்டி அஞ்சலியோடு நிற்கிறேன்.

நன்றே வருவதெல்லாம் நமக்குப்பரம் ஒன்றிலதே.

7-4-85 ஸேவா, ஸ்ரீநிவாஸராகவ தாஸன்



ஸ்ரீமான் நடாதூர் ஸ்ரீநிவாஸ அய்யங்கார்
ஸ்ரீமதி கல்யாணி அம்மாள்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதந பரப்ரம்ஹணே நம:



ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

யாதவாப்யுதய மஹாகாவியம்

இரண்டாவது ஸர்கம்

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிககேஸரீ
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

अथागमानां अनघेन भूम्ना
धर्मस्य पूर्णेन धनागमेन ।
दिवौकसां दर्शयता विभूतिं
देवी बभौ दौहृदलक्षणेन ॥ १ ॥

அதாகமாநாம் அநேகந பூம்நா
தர்மஸ்ய பூர்ணேந தநாகமேந
திவௌகஸாம் தர்சயதா விபூதிம்
தேவீ பபௌ தௌஹ்ருதலக்ஷணேந (1)

(கருத்து)

தேவியான தேவகி கர்ப்பவதியானாள். அதன் அடையாளம் தோன்றுகின்றது. ஆகமங்களின் தூய்மை கலந்த நிறைவோ, தர்மத்தின் பூரணமான பணப் பெருக்கோ, தேவர்களின் வைபவத்தைக் காண்பிக்கும் குறியோ என்னலாம்படி இருக்கின்றது இந்த கர்ப்ப லக்ஷணம்.

(விரிவுரை)

முதல் ஸர்கம் முற்றுப்பெற்றது. கர்ப்ப க்ருஹத்தில் பிரமன் முதலிய தேவர்கள் துதித்தனர் என்றார் ஸ்ரீசுகர். இதை ஸ்வாமியும் தேவ தேவ சப்தத்தினால் உணர்த்தினார். மற்றைய அவதாரங்களில் அவதரித்த பிறகே தோத்திரம் பிறந்தது. இதில் இவ்வாறில்லை. விலக்ஷணமான அவதாரம்.

இரண்டாவது ஸர்கம் தொடங்குகிறது. **அத** என்று தொடங்குகிறார். அத என்பதற்குப் பிறகு என்று பொருள். பெருமாள் கர்ப்பத்தில் எழுந்தருளின பிறகு என்பது ஸ்வரஸம். முக்யமான விஷயத்தைச் சொல்லத் தொடங்கும்பொழுது **அத** என்று தொடங்குவது பெரியோர் வழக்கு. பிறகு என்ற பொருள் தேவையல்லாத போதும் இவ்வாறே கூறி வருவதை தர்சன க்ரந்தங்களில் காணலாம். **அத சப்தாநு சாஸனம்** என்பர். அதாதோ தர்மஜிக்ஞாஸா என்பன போன்ற ப்ரயோகங்கள் உண்டு. அத என்கிற சப்தத்தின் அர்த்தத்தை ஸ்ரீபாஷ்யகாரர் விவரித்தார்.

அத என்கிற சொல்லுக்கு மங்களம் என்ற பொருளும் உண்டு. பிறகு என்று சாதாரணமாயிருப்பினும், மங்களமாகத் தொடங்குவது காவியத்தின் லக்ஷணமாகும். காளிதாஸனும் திலீபன் கோஸஞ்சாரம் பண்ணத் தொடங்கும் பொழுது அத என்று தொடங்கினான் இரண்டாவது ஸர்கத்தை. காளிதாஸன் கையாண்ட வ்ருத்தமே ஸ்வாமிக்கும் உகப்பாயிருந்தது. **ஜகந் மங்களம் அச்யுதாம்சம் ஸமாஹிதம் சூரஸுதேந தேவீ.** என்றார் ஸ்ரீசுகர். ஏழு கர்ப்பங்களை தரித்தவளுக்கு - இதற்கு முன்பில்லாத ஒரு சோபை ஏற்படுவதால் **அத** என்று பிரித்துக் காட்டுவார் போலும். தேவீ விளங்கினாள் என்கிறார். காளிதாஸன் மூன்றாவது ஸர்கத்தில் தொடக்கத்தில் **அதேப்ஸிதம்** என்று கர்ப்ப லக்ஷணம் கூறலானான். ஸ்வாமி இரண்டிலேயே தொடக்கத்திலேயே கூறுவர். 2, 3 வது ஸர்கங்களை அத என்று தொடங்குவதில் இருவருக்கும் உள்ளது ஒற்றுமை. பகவதவதாரத்திற்கு முன் ஸர்கம் உபோத்காதமாயிருந்தது. ஸாக்ஷாத் பகவதவதாரத்தையே இங்கு ப்ரஸ்தாபிப்பதால் இவ்வாறு தொடக்கம்.

கர்ப்ப லக்ஷணங்கள் மிகவும் உயர்ந்தவையாயிருந்தன என்கிறார். ஆகமங்கள் என்று பன்மையும், தர்மஸ்ய என்ற ஏகவசனமும் அமைந்தது ரஸம். ப்ரதம கர்ப்பத்தில் இருக்கவேண்டிய லக்ஷணம் எட்டாவதில் இருந்தபடியை என் சொல்வது! ப்ரதம புருஷனான உத்தம புருஷன் ப்ரவேசித்தால் இவ்வாறு ஆகலாம். ஆகமங்கள் தூய்மையும் பெருமையும் பெற்றன என்பர். வேத்யனான்

பகவான் ஒருவன், அவனே விளக்க வந்த வேதங்கள் அனந்தம். **வேதைஸ் ச ஸர்வை: அஹமேவ வேத்ய:** என்று அவனே சொன்னான். ஆதலால் ஆகமாநாம் எனப் பட்டது. சாஸ்திரங்களைக் கொண்டே அறியப்படுபவன் எம்பெருமான். இவளுடைய கர்ப்பசின்ஹங்கள் எம் பெருமானைக் காட்டும் சாஸ்திரங்கள் ஆகலாம்! **நாரணனை நான்மறையால்** நான் கண்டேனே என்று மற்றொரு இடத்தில் ஸ்வாமி அருளிச் செய்தார்.

ஆகமங்கள் என்பது **ஸ்ரீபாஞ்சராத்ராதி** ஆகமங்களை குறிக்கும். அர்ச்சையில் எம்பெருமான் நித்யஸாந்நித்யம் பண்ணுமிடத்தை கர்ப்பக்ருஹம் என்பர். தேவகியே தேவ ஸந்நிதியானாள் போலும்! அவளே கர்ப்பக்ருஹ மானாள் என்பதும் கர்ப்பக்ருஹமாக தேவகி **விளங்கினாள்.** என்பதும் ரஸம். அர்ச்சாஸமாதிக்கும் தேவகி கர்ப்பத் தில் எழுந்தருளின நிலைக்கும் வாசியில்லை என்பதைக் காட்டவே **ஆகமாநாம்** என்று தொடங்கியது. அத ச்ருதீநாம் என்றும் ப்ரயோகித்திருக்கலாம். ச்ருதிகளில் கர்ப்பக்ருஹார்ச்சாதி விசாரம் குறைவு. ஆகமங்கள் **ஸர்வே வேதா யத்பதமாமநந்தி** என்னுமாப்போலே ஒருவனைப் பெற்று பெருமை அடைகின்றன. அதுதான் அவைகளுக்குத் தூய்மை. அநகம் என்பதற்கு அழகான என்று தீக்ஷிதர் பொருள் கூறினார். ஆகமங்கள் அழகு பெற்றன என்பதாகும். தேவகி கர்ப்பத்தில் அவதரித்த பொழுது சதுர்புஜனாகத்தானே அவதரித்தது! கர்ப்ப க்ருஹத்தில் அர்ச்சையில் போல் இங்கும் ப்ரதிஷ்டிதனாக லாம். இதற்கு முன் ஸர்கத்தில் கடைசி 3 சுலோகங்

களிலும் ஸ்வாமி **அநக** சப்தத்தை ப்ரயோகிக்கிறார். **अनघादेश:** அநகாதேச: என்றும், **प्रादुर्बभूवुरनघ:** ப்ராதுர்பு பூவுரநக: என்றும், **धर्मस्य स्थितिं अनघां** தர்மஸ்ய ஸ்திதிம் அநகாம் என்றும் ப்ரயோகித்தார். ஆதேசம் அநகம், தான் அநகன், தர்மத்தின் ஸ்திதி அநகம் எனப்பட்டது. இங்கோ ஆகமங்களின் மிகுதி அநகமானது என்பர். தேவர்கள் கர்ப்பக்ருஹத்தில் வந்து துதித்தனர் என்று அத்யாயத்தை முடித்தார். அதஸர்வ குணோபேத: கால: என்று மேல் அத்யாயத்தின் தொடக்கம். இங்கும் தேவ தேவ வந்த்ய: என்று ஸர்கத்தை முடித்து, **அதாகமாநாம்** என்று இரண்டாவது ஸர்க்காரம்பம். 9.7049

ஆகமங்களின் பூரிப்பு. தேவகியின் திருமேனியில் தெரிகிறது. எம்பெருமானுடைய ஆகமனத்தினால் ஆக மங்களின் தன்மையை திருமேனிபெற்றது போலும். பூம்நா என்பதற்கு ப்ரசயம்-மிகுதி என்றார் தீக்ஷிதர். ஆகமங்களின் இந்நிறைவு. எம்பெருமானையே ஏகாயன மாகக் கொண்டதாலேயே. தூய்மையும் அதனாலேயாம். ஆதேசம்போல் அல்லாமல் ஆகமம் என்பது மென்மையைக் காண்பிக்கும். அறுவரை ஈந்து இழந்த திருமேனிக்கு இப்பொழுது ஆகமம் நல்வரவாயிற்று !

தர்மஸ்ய பூர்ணேந தநாகமேந

தர்மத்தைக் காக்கவே எம்பெருமான் தோன்றுவது. இதை இந்த அவதாரத்திலேயே சொன்னான். தர்மோ ரக்ஷதி ரக்ஷித: என்பர். தர்மம் சர என்று வேதம் ஆதேசம் விடுத்தது. கோ தர்ம: ஸர்வதர்மாணாம் என்று கேட்டுக்

கொண்டு ஏஷ மே ஸர்வதர்மாணும் தர்மோதிகதமோ மத: என்றூர் ஸ்ரீ பீஷ்மரும். தர்மஜிக்ஞாஸை பூர்வ மீமாம்ஸை. ஆகமாநாம் அநகேந பூம்நா என்பது உத்தர மீமாம்ஸை. இரண்டும் ஒன்றியது. அந்த இருபது அத்யாய ஸ்ரீயாக விளங்குவது தேவகியின் கர்ப்ப லக்ஷணம். அல்லது ஆராத்யன்-ஆராதனம் என்றிரண்டு கொண்டு 16 அத்யாய லக்ஷணமும் பெற்றதாம். **வேதோகிலோ தர்மமூலம்** என்ற ஸூத்திரத்தின்படி முன்னம் மூலமான வேதங்களைக் கூறி பிறகு தர்மஸ்ய என்று தொடங்குவது ரஸம்.

தர்மத்திற்கு தனம் தேவை. தக்ஷிணு ஸம்ருத்யை என்பர். தனம் எந்த ரூபத்திலும் இருக்கலாம். **தர்மம் ப்ராப்தும்** தாரயந்தே **தநாயாம்** என்றூர் ஸ்ரீஸ்துதியில், கையில் நிறைய ஐச்வர்யம் பெற்றிருப்பவன் செய்யும் தர்மத்திற்கும் செல்வமேயில்லாதவன் செய்யும் தர்மத்திற்கும் வாசியில்லாமல் இல்லை. வேதா மே பரமம் சக்ஷு: வேதா மே பரமம் தனம் என்பதையும் நினைக்க. பைதாமஹம் தனம் தனக்கு உள்ளது என்றூர் ஸ்வாமி. தர்மரூபியான எம்பெருமான் கர்ப்பத்தில் எழுந்தருளினுன். திருமேனி பூர்ணமாயிற்று. க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் என்பர். தேவகி திருமேனி ஸம்பந்தம் இல்லாவிட்டால் தனவரவு இல்லாதவன் தர்மம் போல் எம்பெருமான் ஆகியிருக்கக் கூடும். ராஜஸூயாதிகள் செய்யுமுன் திக்விஜயம் செய்து தனத்தை சேமிப்பது சாஸ்த்ரீயம், தர்மஸ்ய என்பதற்கு மர்யாதை என்று பொருள். பூர்ணமான பணம் வந்தவுடனே காரியம் துவங்குவதில் தயக்கம் இருக்காது. தேவகியின் கர்ப்பம் எம்பெருமான்

அவதரித்துச் செய்யப் போகும் தர்மத்திற்கு பூரணமான முன் பணம் போல் உள்ளது என்பது ரஸம். இவள் திருமேனியே :தர்ம ப்ரசாரரூபமாயிருக்கும் என்பர் அபிநவதேசிக ஸ்வாமி. எம்பெருமானுடைய அவதார விசேஷங்கள் எல்லாம் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனத்திற்கே யாம் கர்ப்பம் பகவதவதாரத்தை ஸூசிப்பதால் இவ்வாறு ஆகலாம்.

திவௌகஸாம் தர்சயதா விபூதிம்

மேலும் இந்த லக்ஷணம் மற்றொன்றையும் தெரிவிக்கிறது. தேவலோகத்தை இருப்பிடமாகக் கொண்டவர்களுக்கு ஏற்படவிருக்கும் வைபவத்தையும் காண்பிக்கின்றது. தேவகாரியமும் இதில் தெளிவாகிறது. விபூதி என்பதற்கு ஐச்வர்யம் என்று பொருள். உபய வீபூதி நாதன் லீலாவிபூதியில் தேவகியின் கர்ப்பத்தில் எழுந்தருளின பொழுது போக விபூதி நிலையையும் காண்பிக்கும் என்னலாம். தேவத்துவத்தை மறைக்கவில்லை. இங்கிருப்பினும் தேவலோக வாஸிகளுக்குத் தனது வைபவத்தைக் காண்பித்து, அவர்களுக்கும் அது விரைவில் கைகூடும் என்று பணிக்குமாப் போல் இருந்தது தேவகியின் கர்ப்ப லக்ஷணம். இங்கு விபூதி என்பதற்கு விபவாவதாரம் என்று பொருள் உரைத்தார் அபிநவதேசிக ஸ்வாமி, ஸ்வாமியின் ஸூக்தி கஹனமானது. ப்ரமாணம்-ப்ரமேயம். ப்ரமாதா என்ற மூன்று ஸம்ருத்திகளும் மூன்று பாதங்களால் காட்டப்பெற்றன. தேவகீ என்பது திருநாமம். தேவீ என்பது பொதுச் சொல். தேவகனுடைய பெண் என்று பொருள் ஏற்படும். தேவகியான இவளை

எம்பெருமான் எழுந்தருளினபடியால் தேவி என்றே அழைப்பர். தேவனைப் பெற்றதால் தேவி. தனிநிறம் பெற்றதால் தேவி. தேவரூபிணீ என்றார் ஸ்ரீசுகர். தனிப் பட்ட தீப்தி (ஒளி) பெற்றதால் இவள் தேவி. ராணி என்று உரை எழுதினார் ஸ்ரீ தீக்ஷிதர். கர்ப்பலக்ஷணம் தேவகியையும் தேவியாக மாற்றியது போலும். இவனே முன் ஸர்கத்தில் உபேந்திரனானான். தேவகாரியம் திருத் தினான். இப்பொழுதும் அச்சுவடு தெரியும் போலும்.

பபௌ ஜகந்நிவாஸ நிவாஸபூதா நிதராம் ந ரேஜே என்றார் ஸ்ரீசுகர். ஸ்வாமி ந ரேஜே—(விளங்கவில்லை) என்பதை மாற்றி தேவீ பபௌ என்று சாதிப்பதையும் உற்று நோக்க வேண்டும்.

இந்த சைலியில் தேரின பொருள் முதல் பாதம் கீதோதயம். இரண்டாம் பாதம் பாண்டவர்களுக்கு ஏற் பட்ட ஐச்வர்ய ப்ராப்தி. (இங்கு தர்ம சப்தம், யுதிஷ் டிரரை குறிக்கும்) விபூதி தர்சனம், அவன் காண்பித்தது அர்ஜுனனுக்கு. இந்த கர்ப்ப சின்ஹம் காட்டுவது தேவர்களுக்கு என்பது ரஸம். ப்ரகாசித்தாள் என்கிறார். தௌஹ்ருத லக்ஷணம் தெரிந்தவர்கள் மூன்று விதமாக சுலபமாக அறிந்து கொண்டனர் என்றபடி. வஸுதேவரை தேவர் என்று சுருக்கினால் சிறமை. தேவகியை தேவி என்று சுருக்கினால் பெருமை என்பதையும் உற்றுநோக்க வேண்டும். மற்றும் பல ரஸங்கள்.

— o —

शृङ्गारवीराद्भुतचित्ररूपं
गर्भे त्रिलोकैकनिधिं वहन्त्याः ।
परावरक्रीडितकर्बुराणि
द्वेधाभवन् दौहृदलक्षणानि ॥ २ ॥

ச்ருங்கார வீராத்புதசித்ரரூபம்
கர்ப்பே த்ரிலோகைகநிதிம் வஹந்த்யா:
பராவர க்ரீடித கர்புராணி
த்வேதா பவந் தௌஹ்ருதலக்ஷணாநி (2)

(கருத்து)

ச்ருங்காரம் வீரம் அத்புதம் என்ற மூன்று வகை யான ரஸங்கள் கலந்து சித்திரமான திருமேனியுடை யவன். மூன்று லோகங்களுக்கும் ஒரே நிதியாய் விளங்கு பவன். இத்தகைய எம்பெருமானை கர்ப்பத்தில் தரிக் கின்றாள் தேவகி. இவளுடைய கர்ப்ப அடையாளங்கள் இருவகையாய் இருந்தன. பரத்துவத்தைக் காணவல்ல குறிகளும், அவரத்துவத்தைக் காணவல்ல குறிகளும் இணைந்து விளங்கின. இரண்டு விதமான விளையாட்டைச் செய்பவனாய் விளங்கினான் என்பதை ஊகிக்கலாம்..

(விரிவுரை)

ச்ருங்கார வீராத்புத சித்ரரூபம்

இதற்கு முன் ச்லோகத்தில் கர்ப்பசின்னங்களைக் கூறும்பொழுது மூன்று பெருமைகளைக் கூறினார். இங்கு

அவைகளை இரண்டு கூறுகளாகப் பகுத்து அறியலாம் என்கிறார். எம்பெருமான் விசித்திரன். அவனுடைய ரூபம் விசித்திரம். இன்ன வண்ணம் என்று காட்டீர் இந்தனூரீரே என்றார் கலியன். நிர்வர்ணனாயிருப்பவனுக்கு எல்லா வர்ணமும் உண்டு. ப்ரதியுகம் வர்ண பேதம் உண்டு என்றார் ஸ்ரீசுகர். கல்யாணதமம் ரூபம் என்றது ஈசாவாஸ்யம். இங்கு ரஸமயன் எம்பெருமான். அந்த அந்த ரஸ ரூபமாகவே ஆகிவிடுகிறான். ரஸநேந்த்ரியத்தால் க்ரஹிக்கப்படும் ரஸங்கள் வேறு. அவை ஆறு. ஆலங்காரிகர்கள் சொல்லும் ரஸங்கள் ஒன்பதும் ஒன்றும். சாந்தியையும் ரஸமாகச் சொன்னார் ஸ்வாமி. ஒன்பதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரஸங்கள் ச்ருங்காரம், வீரம், அத்புதம் என்பவை. இம்மூன்று ரஸங்கள் வெளிப்படையாகவே தோன்றுபவை. ஆதலால் இவை முக்யத்துவம் பெற்றுவிட்டன போலும். இதிலும் ச்ருங்காரம் ரஸராஜன். இந்த ரஸத்தின் பெருமையை அறியாதவரோ விரும்பாதவரோ இல்லை. அநிர்வசநீயமான வைபவமுடையது இது. பக்தியும் ச்ருங்கார ரஸத்தின் கூறே என்பர். பக்தி : ச்ருங்கார வ்ருத்யா பரிணமதி என்பர். கர்மம் க்ஞானம் காதல் கொண்டு என்ற விடத்தில் பக்தியை காதல் என்ற சொல்லால் உணர்த்தினார். நமக்கு பக்தி என்று வ்யவஹாரம், எம்பெருமானுக்கு அது ச்ருங்காரமாகவே இருக்கும். ரஸமயன் என்பதற்கு ச்ருங்கார ரஸமயன் என்ற பொருள் தேரும். க்ஞாநாநந்தமயன் ச்ருங்காரமயனாவதில் வியப்பில்லை. இங்கு ரூபம் என்பது ரஸம். க்ருஷ்ணரூபாணி அஸங்க்யாநி என்பர். அவற்றுள் ஒன்று இந்த ச்ருங்கார ரூபம். ஸாக்ஷாத் மந்மத மந்மதனாகத்

தோன்றியதும், காமதேவன் அநங்கதேவன் என்று திருநாமம் பெறவல்ல ச்ருங்காரரஸ ஸமாத்யநுகுணமான ரூபமும் உண்டு. மற்ற அவதாரங்கள் போலல்லாமல் ரஸரூபனாய் ராஸரூபத்தில் எழுந்தருளியிருக்கும் இருப்பாலே இங்கு ச்ருங்காரரஸத்தை முதலாகக் குறிப்பிட்டது என்னலாம். 24-ம் ஸர்கம் ச்ருங்கார ரஸாநுபவத்திற்கென்றே அமைக்கப்பெற்றது. அதிலும் 90-வது சுலோகத்தில் **ச்ருங்கார பூமா** என்று குறிப்பிடுவதும் ரஸிகபோக்யம். வீரரஸம் மிசவும் உயர்ந்தது. இந்த ரஸத்தை வீரர்கள் தான் அனுபவிக்க இயலும். ராமாவதாரத்தில் ராவணன் ஒரு சொல்லால் சொன்னான், தம் மந்யே ராகவம் வீரம் என்பது அவன் வார்த்தை. மஹாவீரன் என்று ஸ்வாமி வ்யவஹரித்தார். இந்த அவதாரத்தில் இந்த ரஸம் நீர்பட்டபாடாயிருக்கும். தொட்டில் முதல்—ஸ்தந்யபாநம் முதல் இந்த ரஸத்திற்கு குறைவு இல்லை. வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி என்பர். கோவர்த்தனம் முதலியதைத் தாங்கியதும் இதற்கு அடையாளம். அத்புதம் என்பது இந்த அவதாரத்தின் மூச்சேயாகும். எது தான் அத்புதம் இல்லை! **தமத்புதம்** என்றே ஸேவிக்கிறார் ஸ்ரீசுகர். குருதக்ஷிணை யளிப்பதும், குசேலருக்கு சுச்ரூஷை செய்வதும் பதினாறு ஆயிரம் பெண்களை ஏக காலத்தில் மணப்பதும், தூது போவதும் தேரோட்டுவதும் அத்புதம் தானே! இம்மூன்றும் கலந்து ஒரு உருவம் கொண்டது என்னும்படியாக இருந்தான் எம்பெருமான். இம்மூன்று ரஸங்களும் ஒன்றோடொன்று இணைந்தன போலும். சித்ர ரூபம் என்பதற்கு நாநாரூபம் என்று வ்யாக்யானமிட்டார் தீக்ஷிதர். ரஸவிசேஷங்களால் பல ரூபமாயிருப்பது என்றும்

கூறினர். ச்ருங்காரவீர அத்புத ரஸங்களை சித்திரமாக ரூபிப்பவன் என்றும் கொள்ளலாம். இது எம்பெருமானுக்கு விசேஷணம்.

எம்பெருமான் கர்ப்பத்திலே ரஸ ரூபத்திலேயே எழுந்தருளியிருப்பதால் விசேஷ்யமாக நிற்கவில்லை. சித்திரமான ரூபத்தையே வஹிக்கிருன் என்றும் கொள்ளலாம். மூன்று ரஸங்களும் சித்திரமாகவே அமையப் பெற்றனன் என்றும் கொள்க.

த்ரிலோகைகநிதிம்

மூன்று உலகங்களுக்கும் ஒரு நிதியாய் விளங்குபவன் என்று பொருள். இவன் எம்பெருமானே! **லோகத்ரயேபி அப்ரதிம ப்ரபாவ** என்று இவ்வெம்பெருமானுடன் பழகிய பழுத்த ஞானி சொன்ஞன். பூலோகத்துடன் பலவகையிலும் தொடர்புள்ளதால் த்ரிலோகம் என்று வ்யவஹரிப்பது. அந்த அந்த உலகத்துக்கு என்று ஒரு நிதியிருக்கலாம். மூன்று உலகுக்குமான ஒரு நிதி என்பர். நிதியை பூமியில் வைப்பது வழக்கம். அந்த நிதி பூலோகத்திலேயே ஸுரக்ஷிதமாகிறது. நவநிதிகளைக் காட்டிலும் சீரியது இந்த சாச்வத நிதி. குப்தமான தநத்தை நிதி யென்பர். தேவகியின் கர்ப்பத்திலே இருப்பது இந்த நிதி. இந்த நிதியினுல் மூன்று உலகங்களும் பயன் அடையும். ஒருவன் தன்னை நான்கு கூறுகளாகச் செய்துகொள்ள, மூவர் கர்ப்பம் தரித்தனர். மூவரின் கர்ப்பங்களில் பிறந்தது ஒருவனே. ஆனுல் உருவங்கள் நான்கு. அவற்றினின்று மூன்று உலகங்களுக்கும் நிதியானவனை ஒருவனே

கர்ப்பத்தில் தரித்தாள் என்று நினைக்க. மூன்று உலகங்கள் என்பதை மூன்று வகையான ஜனங்கள் என்றும் கொள்ளலாம். அனுகூலருக்கு ச்ருங்காரமாய், ப்ரதிகூலருக்கு வீரமாய், உதாஸீனருக்கு அத்புதமாய் அமைந்தது இந்த கர்ப்பம் என்றும் கொள்ளலாம். நிதியினைப் பவளத் தூணை என்று தொடங்கினர் கலியன். **யோகக்ஷேமம் வஹாம்யஹம்** என்று சொல்லப் போகிறவனைத்தான் சுமக்கிருள். தேவகியின் கர்ப்பம் ரஸகர்ப்பம். த்ரிகுணுத்மகமான ப்ரக்ருதிபோலல்லாது த்ரிரஸமயனுன அப்ராக்ருதனை கர்ப்பத்தில் வஹிக்கிருள் என்பதும் ரஸம்.

பராவரக்ரீடித கர்புராணி

தேவகியின் கர்ப்பலக்ஷணங்கள் அமைந்துள்ள அழகை வர்ணிக்கிருர். பராவரன் என்பது பகவானைக் குறிக்கும். உலகத்தில் பெரியவர்களாக இருப்பவர்கள் அனைவருமே அவனைக் காட்டிலும் அவரர்கள் தாழ்ந்தவர்களே. ஆதலால் அவனுக்கு அது திருநாமமாயிற்று. **தஸ்மிந் த்ருஷ்டே பராவரே** என்ருர் பராசரர். அவனுடைய விளையாட்டுகள் பலவகையாயிருக்கும், க்ரீடிதம் - விளையாட்டு. கர்புராணி - சித்திரமானவை - வெவ்வேறு வகையானவை. லக்ஷணம் அறிந்தவர்களுக்குத்தான் கர்ப்ப சின்னங்களை செவ்வனே புரிந்து கொள்ள முடியும். பராவரனுடைய க்ரீடை இரண்டு விதமாக இருப்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. பரத்துவத்துக்குச் சேர்ந்ததான க்ரீடைகளும், சாதாரண நிலைக்குச் சேர்ந்ததான க்ரீடைகளும் என்று விவரித்தார் தீக்ஷிதர். இந்த அவதாரத்தில் இருவிதமான க்ரீடைகளும்

உண்டு. பரக்ரீடிதம் த்ரிலோகைகநிதிம் என்றபடியால், அவரக்ரீடிதம் ச்ருங்காராதிப்ரசுரமானதால் உலக இயற்கைக்கு ஏற்றதானது என்று விளக்கினார். அஸ்மத்ஸ்வாமி இயற்கையில் பரத்துவமும், அவதார தசையில் அவரத்வமும் தோற்றுவிப்பவை என்று திருவுள்ளம் பற்றினார்.

இந்த அவதாரம் விலக்ஷணம். பரத்வே அவரத்வம், அவரத்வே பரத்வமும் கலந்தது விரிவுக்கு அஞ்சி சுருக்கமாக விண்ணப்பிக்கிறேன். ஒவ்வொரு செயலும் இருதன்மைகளையும் காட்டுபவை. பூதனையின் ஸ்தந்யபானம் அவர கார்யம், அவளுக்கு மோக்ஷமளித்தது பரகார்யம். குஹநாஜநந்யா: ப்ராணஸ்தநந்தயம் அவைமி **பரம் புமாம்ஸம்** என்றார் விம்சதியில். தாம்பின் கயிற்றினால் கட்டுப்பட்டது அவரகார்யம். யமலார்ஜுன பங்கம் பரகார்யம், துஷ்டனான கம்ஸனைக் கொன்றது அவர கார்யம், அவனுக்கு ஸத்கதி அளித்தது பரகார்யம். கோபியை சுமந்தது அவரகார்யம் ராஸபோகத்தை அளித்தது பரகார்யம். சக்கரத்தால் சிசுபாலன் தலையையறுத்தது அவரகார்யம். அவனை சோதியில் சேர்த்துக் கொண்டது பரகார்யம். விரிக்குற் பெருகும். இவ்வாறே எல்லா லீலைகளுமே விசித்திரமாகவே அமைந்தவை. அவன் க்ரீடைகள் இவ்வாறு இருக்க, அவன் பரர்களோடும் அவரவர்களோடும் விளையாடினான். பிரமன் விச்வரூபத்தில் மன்னிப்பு கேட்டதும் இந்திரன் மன்னிப்பு கேட்டு கோவிந்த மட்டாபிஷேகம் செய்து வைப்பதும் தேவர்களோடே விளையாடின விளையாட்டு. அவரர்களான வத்ஸன், பகன், கேசி, நாகம், முதலானவர்களோடு விளையாடியது அவரம். ஆதலால் இவ்வெம்பெருமானின்

திவ்ய லீலைகள் கர்ப்ப சின்ஹங்களாகவே திகழ்கின்றன. பிறந்த பிறகு, இவன் நேரில்லை காண் திருவோணத்தான் உலகாளும் என்பர். இது போலன்றிக்கே கர்ப்பத்திலேயே இதையெல்லாம் காட்டிக் கொடுப்பான் போலும். கர்ப்பத்தில் இருப்பது பெண்ணா பிள்ளையா ! என்றால் ஸாமுத்திரிகாலக்ஷணம் தெரிந்தவர்கள் ஒருவாறு சொல்லக்கூடும் ! அவ்வாறே லாக்ஷணிகர்களுக்கு தேவகீ கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய லீலைகள் இருவகையாயிருக்கின்றன என்று அறிவது ஸுலபமே. தௌஹ்ருதலக்ஷணத்தினால் தேவி விளங்கினாள் என்றார் முதல் சுலோகத்தில். இதில் தௌஹ்ருத லக்ஷணம் இரண்டு வகையாய் இருக்கின்றன என்கிறார். த்வேதா - இரண்டு விதமாக அபவந் ஆயின என்று பொருள். ஒரு கர்ப்பத்தின் இரண்டு லக்ஷணங்கள் மூன்று ரஸங்கள் என்பது ஸங்க்யா சித்திரம் - அபவந் என்பதற்கு இருந்தன என்றும் பொருள் கொள்ளலாம்.

अशेषवेदैरधिगम्यभूम्ना
सिद्धेन सिद्धैश्च निषेवितेन ।
अमानुषी नूनमभूदयत्नात्
कृष्णेन केनापि रसायनेन ॥ ३ ॥

அசேஷவேதைரதிகம்யபூம்நா
ஸித்தேந ஸித்தைஸ்ச நிஷேவிதேந
அமாநுஷீ நூநம் அபூத் அயத்நாத்
க்ருஷ்ணேந கேநாபி ரஸாயநேந. (3)

(கருத்து)

எல்லா வேதங்களாலும் போற்றப் பெற்ற பெருமை யுடையதும், எப்பொழுதுமே ஸித்தமாயிருப்பதும், ஸித்த புருஷர்களாலே உபயோகிக்கப் பெற்றதும், கருப்பு நிற முடையதுமான ஓர் ரஸாயனத்தினுல் வேறு எத்தகைய முயற்சியுமின்றியே (தேவகி) அமாநுஷியாகி விட்டாள் போலும்!

[விரிவுரை]

இதற்கு முந்திய ச்லோகத்தில் தேவகியின் கர்ப்பக் குறிகள் இரண்டு வகையாகத் தோன்றலாயின என்றூர். இங்கு அதற்கு ஏற்ப இவள் திருமேனியில் ஏற்பட்ட மாறு தலும் அதற்கு காரணம் இன்னது என்பதையும் அழகான சைலியில் ஸ்வாமி ஸாதிக்கின்றூர். தேவகியை முதல் சுலோகத்தில் தேவீ என்றே குறிப்பிட்டார். அத்தகைய ஒளிக்கு காரணம் ஒன்று உண்டு என்று இதில் கூறுவார் போலும்! இந்த சுலோகமே ஒரு ரஸாயனம். இயன்ற வரைப் பருகுவோம்.

அசேஷ வேதை: அதிகம்ய பூம்நா:-

இதன் பெருமை எல்லா வேதங்களாலும் அறியப் பட்டதாயிருக்கும். கீதையில் இதை க்ருஷ்ணனே சொன்னுன். **வேதைஸ் ச ஸர்வை: அஹமேவ வேத்ய:** என்று. எல்லா வேதங்களாலும் அறியப்படு பவன் நானே என்று இதற்குப் பொருள். இது பெருமை.

ஸர்வவேதங்களிலும் படிக்கப்படுவதுதான் புருஷஸூக்தத் திற்கு ஏற்றம். **பும் ஸூக்தம் ஸர்வ வேத ப்ரபட ந மஹிதம்** என்றூர் முக்தாகலாபத்தில். ஸர்வவேத படித மாய்க் கொண்டு என்றூர் ப்ரதான சதகத்தில். இவ்வாறே எல்லா வேதங்களாலும் அறியப்படுவது என்பது பெரு மையே வேதங்களால் அடையப்படவேண்டிய பெருமை யுடையது என்றும் கொள்ளலாம். இதைப் பரம்பொருள் கூறியதாலேயே வேதங்கள் பெருமை பெற்றன என்று பொருள். அசேஷ சப்தமானது வேத துல்யமானதும், **பாரதம் பஞ்சமோ வேத:** என்று புகழப் பெற்றதுமான பாரதத்தையும் குறிக்கும். பாரதத்தில்தானே இந்த ரஸா யனத்தின் பெருமை கூறப்பட்டுள்ளது! ஆயுர்வேதமும் இதன் பெருமையை கூறும். ரஸாயநம் என்பது ஒரு மருந்தின் வகை. அது ஆயுர்வேதந் தன்னுல்தான் அறியப் படும். க்ருஷ்ணன் என்கிற ரஸாயநம் எல்லா வேதங்களி லும் அறியப்படும் என்பது ஏற்றம். அம்மருந்து ஜரா வ்யாதிகளை மட்டுமே போக்குவது இது தேவத்வத்தையும் அளிக்கவல்லது என்று விளக்கினுர் தீக்ஷிதர்.

ஸித்தேந நித்யமாயிருப்பது என்று பொருள். ஸித்த சப்தத்திற்கு ஒருவகையான தேவ ஜாதி என்றும், நித்யம்-ப்ரஸித்தம் தயாராயிருப்பது என்றும் விச்வ கோசம் பொருள் கூறியது. எம்பெருமான் நித்யஸித்தன். **நித்யஸித்தே ததாகாரே** என்று ஆகமம் கூறியது. எம்பெருமான் ஸித்தோபாயன் என்பது ப்ரஸித்தம். ரஸாயனம் ஸர்வோபயோகமானபடியாலே ஸித்தமாகவே யிருக்கும்.

ஸித்தைஸ்ச நிஷேவிதேந ஸித்தர்களாலே உபயோகப்படுத்தப்பட்டது என்று பொருள். ஸித்தர்கள் என்பது ஒருவகை தேவ ஜாதியை சேர்ந்தவர்களே. **ஸித்த கந்தர்வ யக்ஷாஸ்ச ததஸ் த்வாம் சரணம் கதா:** என்ருர் வால்மீகி. ஆதலால் ஸித்தர்கள் எப்பொழுதும் ஸேவிப்பர் என்பது ஸித்தம். பலன் அடைந்தவர்கள் என்றும் கூறலாம். தேவர்கள் பருகும் அமுதம் போலல்லாது ஸித்தர்கள் பருகும் ரஸாயநம் மிகவும் போக்யமாகும் போலும்! ராஜஸ தாமஸ லீலைகள் இல்லாமல் ஸ்வயமாகவே ஸித்தமாயிருப்பது இதன் ஏற்றம். மஹான்கள் பரிக்ரஹித்தால் வஸ்துவுக்கு ஏற்றம் உண்டு. அது போலவே இந்த ரஸாயநம் ஸித்தர்கள் உபயோகிப்பது என்பர் போலும். தேவர்களிலும் ஸாத்யர்கள் என்றும் ஸித்தர்கள் என்றும் இருகூறுகள் உண்டு. ஸித்தர்கள் அனைவருமே போக்யமாக உட்கொள்வது என்பது ஏற்றம். நிதராம் ஸேவநம் நன்ருக-த்ருப்தியாக, பூர்த்தியாக புஷ்டியாக உட்கொள்வது என்று பொருள். நிஷேவிதேந என்பதற்கு பூஜிதேந என்று உரையிட்டார் தீக்ஷிதர். வம்சேந சங்க்கபதிநாச நிஷேவிதம் தேபிம்பாதரம் என்று ஸ்வாமி தேவநாயக பஞ்சாசத்தில் ப்ரயோகித்தார். ஔஷதஸேவநம்-ரஸாயநநிஷேவணம்.

ஸித்தேந-ரஸாயநேந என்பதில் ஒரு சுவையும் உண்டு. பாயஸம் தேவநிர்மிதம் ப்ரஜாகரம் க்ருஹாண என்பதுபோலன்றிக்கே இது ஸித்தமான ரஸாயனம் என்றவாரும்.

அமாநுஷீ நூநம் அபூத் அயத்நாத்

தேவகி மனுஷ்ய ஸ்த்ரீ. அவள் நிலைமாறிவிட்டது போலும். இதற்கு முயற்சி ஏதும் இல்லை. ஸசரீர ஸ்வர்கத்திற்காக எவ்வளவு முயற்சித்தும் பயன் கிட்டவில்லை. அமாநுஷீ அப்படியாளுள் என்பது வியப்பில்லை. மாநுஷீ அமாநுஷி ஆகிவிட்டாள் என்பதுதானே பூரிப்பு! அதிமாநுஷ சேஷ்டிதங்களைச் செய்யப்போகிறவன் பிறக்கப்போகிறபடியால் இவளும் அமாநுஷியாளுள். **நூநம்** என்பதற்கு உறுதி என்று பொருள். உத்ப்ரேக்ஷை என்கிற அலங்காரம் இங்கு உளது என்ருர் தீக்ஷிதர். அபூத்-ஆகிவிட்டாள் என்றபடி. அயத்நாத்- என்பதற்கு தனது ப்ரயத்னமில்லாமலேயே என்று பொருள். [அ. விஷ்ணுவின் யத்நாத்-ஸங்கல்பத்திஞல் என்றும் கொள்ளலாம்.] மனிதர்களுக்கு இத்தகைய தேஜஸ் இருக்காது என்பதால் இவ்வாறு கூறப்பட்டது என்று விவரித்தார் தீக்ஷிதர்.

க்ருஷ்ணேந கேநாபி ரஸாயநேந

க்ருஷ்ணன் ஒருவகையான ரஸாயனம் ஆகின்ருன். ரஸாயனம் என்பதற்கு ஒருவகையான மருந்து என்று பொருள். பல மருந்துகளைச் சேர்த்து செய்யப்படும் மருந்து இது. கசப்பில்லாமல் ருசியாயிருப்பதால் ரஸமாயிருக்கும். உட்கொண்டால் ரஸம் மாறும் பெருமையுடையது. கஷாயமாயிருந்து கஷாயத்தைப் போக்குவது போலன்றி ரஸமாயிருந்து கர்மகஷாயத்தைப் போக்குவது சிறப்பல்லவா! சரு போல் அன்றிக்கே சாருவான ரஸாயனம் இது. ஆயுர்வேதம் இதன் சிறப்பினைக் கூறும். கிழத்தன்மையையும், வ்யாதியையும் போக்கவல்ல மருந்திற்கு

ரஸாயனம் என்று பெயர் என்று விச்வகோசம் விளக்கம் தந்தது. ஸித்தர்கள் இதை உட்கொண்டதால் முதுமை நோயின்றி வாழ்ந்தனர் போலும்! இந்த ரஸாயனம் என்ற மருந்து கறுப்பு நிறமுடையது என்று பொதுவாக ஏற்படும். இதன் சக்தி அபரிமிதமானதால் **கேநாபி** என்கிறார். அநிர்வசநீயமான - சொல்லுக்கடங்காத சிறந்த தனிப் பெருமையுடையது என்றபடி. க்ருஷ்ணனே—அவதரிக்கப் போகும் எம்பெருமானே ரஸாயனம் என்கிறார். இதை ரஸிகர்கள் அனுபவிக்கவேண்டும். இந்த எம்பெருமான் ரஸமயன். ரஸோ வை ஸ: என்று போற்றப்பெற்றவன். அதனால்தான் ராஸாநுபவம் செய்து வைத்தான்போலும். க்ருஷ்ணாக்யம் அம்ருதம் பரமௌஷதம் ஆபீயதாம் என்றார் குலசேகரப் பெருமாள். ப்ரஸூதி மரண வ்யாதிக்கு இது சிகித்ஸை என்றார். யோகிகளான யாக்ஞவல்கியர் முதலானவர்கள் தேர்ந்தெடுத்தது என்றார். இந்த மருந்து ஒன்றே போதும். வேறு மருந்து வேண்டாம் என்பதை ஏகம் அம்ருதம் என்றார். இங்குள்ள ஏகம் என்பதை ஸ்வாமி **கேநாபி** என்று நினைவு படுத்துகிறார் என்றும் கொள்ளலாம். ராமரஸம் என்னுமாப்போலே இது க்ருஷ்ண ரஸாயனம். மேலும் ச்ருங்கார வீராத்புதசித்ரமான விசித்ர ரஸங்களுக்கு இருப்பிடமானவன் இவன். ரஸா என்பதற்கு பூமி என்று பொருள். பூமியின் துயர் துடைக்க வந்தவன் என்றும் கொள்ளலாம். க்ருஷிர் பூவாசக: சப்த: ணஸ்ச நிர்வ்ருதி வாசக: என்று ஒரு நிர்வசனம் உண்டு. பூமிக்கு நிம்மதி-மகிழ்ச்சியை அளித்தது அதுவே க்ருஷ்ண சப்தத்தினால் சொல்லப்படும் பரம் பொருள் என்று இதற்குப் பொருள். க்ருஷ்ணன் மருந்தா

கிறான் என்று பலரும் பேசினர். மருந்தும் பொருளும் அமுதமும் தானே என்றும், வருநரகம் தீர்க்கும் மருந்து என்றும், அருமருந்தாவது அறியாய் என்றும், பேயரும் பெரியாழ்வாரும் பேசினர். ஆதலால் க்ருஷ்ணன் ரஸாயன வகையைச் சேர்ந்த மருந்தாவன் போலும். நாத த்வயா நத ஜநஸ்ய பவௌஷதேந என்றார் தேவநாயக பஞ்சாசத்தில் அத்ரி ஸுச்ருதர், சரகர் சார்ங்கதரர் முதலியோர் காட்டித் தந்த ரஸாயனம் எம்பெருமான்.

கறுப்பான ஒரு மருந்தை உட்கொண்டுவிட்டாள். மனுஷியாயிருந்தவள் முற்றிலும் ! மாறிவிட்டாளே முன் பின் தெரியாத மருந்தினை உட்கொண்டதால்தானே இம்மாற்றம்! மனிதர்கள் உபயோகப்படுத்தும் மருந்தினை உபயோகித்தால் நல்லது. ஸித்தர்கள் உபயோகித்துவரும் மருந்தினை உபயோகித்ததால் மனுஷ்யத் தன்மையே போய்விட்டதே! என்று அத்புதமான ரஸாநுபவம். ரஸமும் அவனே, ரஸத்தை அடைவிப்பவனும் அவனே, உபாயமும் அவனே, பலமும் அவனே, மோக்ஷாநந்தமாகிற ரஸத்தை அடைவிப்பவன் க்ருஷ்ணன். அவனை கர்ப்பத்தில் கொண்டதால் அமாநுஷியாகிவிட்டாள். நித்ய ஸூரி ஸாம்யம் பெற்றுவிட்டாள் போலும். இங்கு ஸித்த சப்தம் வைத்யர்களில் ஸித்தர் முறை என்று உண்டு. அம்முறையில் தயாரித்த ரஸாயனம் என்றும் சொல்லக்கூடும். ரஸாயனம் என்ற சொல்லை ஸ்வாமி பல இடங்களில் ரஸமாக ப்ரயோகிப்பர். ப்ரபித்ஸூநாம் ரஸாயனம் என்றும், **இதி ஸௌக்ய ரஸாயனம்** என்றும் பல. எம்பெருமான் அபரியாப்தாம்ருதனாய் ஸேவை ஸாதிப்பன். இந்த க்ருஷ்ண

ரஸாயனம் அந்தர்ஜ்யோதிஸ்ஸாக இருக்கும். அவ்வொளி வெளியிலும் தோன்றலாயிற்று என்றும் அனுபவிக்கலாம். சாஸ்த்ர ரீதியில் பார்க்கின்ற பொழுது சாஸ்த்ரைக வேத்யத்வம், முக்தப்ராப்யத்வம் ஆனந்த மயத்வம் என்கிற மூன்று தன்மைகளும் இங்கு மூன்று சொற்களால் கூறப்பட்டன. ரஸச்சுவையல்லவா ஸ்வாமியின் ஒவ்வொரு ச்லோகமும். முற்றிலும் உணர்வார் ஆரே!

शतह्रदाबन्धुरया स्वकान्त्या
सञ्चारिजांबूनदबिंबकल्पा ।
त्रय्यन्तसिद्धेन रसायनेन
कालेन भेजे कलधौतलक्ष्मीम् ॥ ४ ॥

ஶத ஹ்ரதா பந்துரயா ஸ்வகாந்த்யா
ஸஞ்சாரி ஜாம்பூநதபிம்பகல்பா
த்ரய்யந்தஸித்தேந ரஸாயநேந
காலேந பேஜே கலதௌதலக்ஷ்மீம் (4)

(க. து) தேவகியின் திருமேனி தனிப்பொலிவுடன் விளங்கியது அவளது காந்தி மின்னல் போன்றதொரு அழகைப் பெற்றுவிட்டது. தங்கப்பதுமையும் நடந்து வருமோ என்று எண்ணவல்ல நிலை. அவள் வேதாந்தங்களில் ஏற்பட்டதானதொரு ரஸாயனத்தை உள்ளே கொண்டுள்ளாள். அதனாலே அவள் காலக்ரமத்தில் மேனியில் வெண்மையைப் பெற்றாள். இதுவும் எவ்வளவு லக்ஷ்மீகரமாயுள்ளது! என்றபடி.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் பரத்வதைக் காண்பிக்கவல்ல கர்ப்பலக்ஷணம் இருந்ததை விளக்கினார். இங்கு வெளிப்படையான உலகரீதியில் கர்ப்பதிவகளின் உடலில் ஏற்படும் மாறுதல்களையும், அதன் பொலிவையும் விளக்குகிறார்.

சதஹ்ரதா பந்துரயா: — சதஹ்ரதா என்பதற்கு மின்னல் என்று பொருள். **பந்துரயா**—அழகானது, **ஸ்வகாந்த்யா** என்பதற்கு விசேஷணம். தனது காந்தியினாலே என்று பொருள். தனக்கே யுரியதான அஸாதாரணமான காந்தி என்று கொள்ளவேண்டும். மின்னலுக்குத் தனியொளி உண்டு. தன்னையும் காட்டிக் கொடுத்துக் கொண்டு பிற பொருளையும் விளங்க வைக்கும் தன்மையாம். இதை பாஸ்வரரூபம் என்பர். **நீலதோயத மத்யஸ்த்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா** என்று கூறுவர். மின்னலைக் கண்களாலே நிலையாகப் பார்ப்பது எளிதல்ல. ஆனால் தேவகியின் சரீர காந்தி மின்னொளி போல் மனோகரமாயிருக்கிறது என்றபடி.

ஸஞ்சாரி ஜாம்பூநத பிம்பகல்பா ப்ரதிமை எவ்வளவு அழகாக இருக்கும்! தங்கப்பதுமையானால் கேட்கவேண்டுமோ! அதுவும் நடந்து வந்தால் எப்படி இருக்கும்! பசும் பொன் போன்ற திருமேனி என்றபடி. ஜாம்பூநதம் என்பதற்கு தங்கம் என்று பொருள். **ஜாம்பூநதம் - ஸுவர்ணம்** - இதன் விளக்கம்:— மேருவின் நான்கு பக்கங்களிலும் நான்கு மலைகள். இவை அவஷ்டம்ப மலைகள். இவை மந்தரம், மேருமந்தரம், ஸுபார்ச்வம், குமுதம் என்பவை. மந்தரத்தில் மாமரங்கள். மேரு

மந்தரத்தில் நாவல்மரங்கள். ஸுபார்ச்வத்தில் கதம்ப மரங்கள். குமுதத்தில் அரச மரங்கள். மலைகளுக்கு ஐயஸ்தம்பங்கள் போன்றவை அவை. மரங்கள் ஆயிரக் கணக்கான மயில்கள் உயரமானவை. நாவல்பழம் ஒவ்வொன்றும் யானைகள் போல் இருக்கும். அப்பழங்கள் மேலிருந்து விழும் பொழுது சிதறுகின்றன. அவற்றின் சாறுகள் பெருக்கெடுத்து ஜம்பூ என்ற ஆறுகி மேரு மந்தரத்திலிருந்து விழுந்து தெற்கு பக்கமாகச் சென்று இலாவ்ருதம் என்ற பகுதியில் பாய்கிறது. அதன் இரு கரைகளிலும் இருக்கும் மண் அச்சாறு தோய்ந்து காற்றும் சூரிய வெப்பமும் கலந்து ஸுவர்ணமாகிறது. தேவர்கள் இதைக் கொண்டு ஆபரணங்கள் செய்து கொள்கின்றனர். ஆதலால் ஸுவர்ணத்திற்கு ஜாம்பூநதம் என்ற பெயர் ஏற்பட்டது. [ஸ்ரீபாகவதம் 5வது ஸ்கந்தம் 16வது அத்யாயம் (10-21) இதை விளக்கும்.]

जांबूनदं नाम सुवर्णं भवति। यदु हवाव विबुधादयः सह युवतिभिः मुकुट कटक कटि सूत्राद्याभरणरूपेण खलु धारयन्ति ॥ इति ॥]

பிம்பம் என்பதற்கு ப்ரதிமை என்று பொருள். தங்கப்பதுமையோ என்னலாம்படியாயிற்று. பிம்பாக்ருத் யாத்மநா பிப்பே ஸமாகத்யாவதிஷ்டதே என்பர். அவன் பிம்பம் கர்ப்பத்தில் ஏற்பட இவளும் தங்க பிம்பமானாள். **ருக்மாபம்** என்பர். ருக்மிணீ என்கிற தற்கு தங்கப்பதுமை என்றுதானே பொருள். கல்பா என்பதற்கு போன்றது என்று பொருள், இவள் திருமேனி வாஸத்தினால் தானே ஜம்பூ பலத்தில் (நாவல் பழத்தில்) இவ்வவதாரத்தில் உகப்பு போலும்.

த்ரய்யந்தஸித்தேந ரஸாயநேந உபநிஷத்துக்களில் ஸித்தமானதொரு ரஸாயனத்தாலே என்று பொருள். **த்ரய்யந்தம்**— வேதாந்தம். இதற்கு முன் ச்லோகத்தில் **அசேஷவேதை:** என்றார். இங்கு **த்ரய்யந்தம்** என்பர் முன்பு கர்மகாண்டம். இது ப்ரம்ஹகாண்டம் என்றும் கொள்ளலாம்.

ஸித்தேந என்பதற்கு ப்ரஸித்தேந என்று உரை யிட்டார் தீக்ஷிதர். ரஸாயனம் ரஸங்களுக்கு இருப்பிடம். ரஸமான வஸ்துக்களுக்கு இருப்பிடம். ரஸா - பூமியில் உள்ளவர்கள் எல்லாம் சென்று அடையப்படவேண்டி யவன். ஆனந்தமயன். ரஸமாய் அடையவேண்டியவன். அவதாரதசையில் முற்றுமாக இந்த தத்வத்தைக் காட்டித் தந்தவன் அன்றோ க்ருஷ்ணன். க்ஞானானந்தமயன். ஸர்வகந்தன் - ஸர்வரஸன். ரஸோ வை ஸ: எனப்பட்ட வன். ச்ருதிரஸன், க்ராணரஸன், ரஸநாரஸன், கன்னலே அமுதே எனப்பட்டவன் ஆதலால் ஸர்வரஸனுவான் போலும்.

ரஸாயனம் என்பதால் திவ்யமான திருமேனி யுடைய வன் என்றும் தேரும் என்று அபிநவ தேசிகஸ்வாமி திரு வுள்ளம் பற்றினர். மற்ற ரஸாயனம் போலில்லாமல் இது தன்னேற்ற முடையது.

காலேந பேஜே:— காலக்ரமத்தினில் பெற்றனள் என்றபடி. எந்தக் காலத்தில்-ஸமயத்தில் அதாவது உசித ஸமயத்தில் என்று பொருள். காலேந என்பதற்கு கருப்பு நிறம் என்றும் பொருள். க்ருஷ்ண சப்தத்தையும் கால

சப்தத்தையும் பர்யாயமாகச் சொன்னான் அமரஸிம்ஹன். க்ருஷ்ண வர்ணம் என்று பொருள். இதற்கு முன் க்ருஷ்ணேந என்றார். இங்கு காலேந என்கிறார்.

காலம் என்கிற சொல் கண்ணனையே குறிக்கும் அவனே கீதையில் சொன்னான். அஹமேவ அக்ஷய: கால: என்றும், கால: கலயதாம் அஸ்மி என்றும். ஆதலால் காலமாகவும் ரஸாயனமாகவும் இருக்கும் கண்ணனால் தனிச்சோபையைப் பெற்றாள் என்றபடி.

கலதௌதலக்ஷ்மீம்

கலதௌதம் என்பதற்கு வெள்ளியென்று பொருள். ரஜத சோபாம் லேபே என்றார் தீக்ஷிதர். கலதௌத சோபாம் என்று கூறாமல் லக்ஷ்மீ சப்தத்தை இங்கு ப்ரயோகித்தார். தேவகி கர்ப்பத்திலே திருவினைப்பெற்று விட்டாள் போலும். தங்க பிம்பமானது வெள்ளி பிம்ப மாக ஆயிற்று போலும்! இது ரஸாயன ஸேவையால் வந்த மாற்றம் என்றார் தீக்ஷிதர். வெள்ளி தங்கமானால் விசேஷம். தங்கம் வெள்ளியாவது குறைவன்றோ! அன்று என்கிறார். உள்ளே யிருப்பவன் செய்யும் ரஸவாதம் இது. ரூபம் மாறுபட்டது போலும். தங்கம் கறுப்பின் சேர்க்கையால் வெள்ளியாகிவிட்டது என்பது ரஸம்.

கலதௌதம் என்பது வெள்ளியையும் தங்கத்தையும் குறிக்கும் சொல். **கலதௌதம் ரூப்யஹேம்நோ:** என்றான் அமரஸிம்ஹன். வெள்ளியும் தங்கமும் சேர்ந்த நிலையை இது காட்டக்கூடும் என்று தெளியலாம். கர்ப்ப வதியின் உடல் வெளுக்க ஆரம்பிக்கும். இந்த நிலை தேவகிக்கு ஏற்பட்டது என்பது திரண்ட பொருள்.

मयूरपिञ्च्छद्युतिभिर्मयूखैः
तत्कान्तिरन्तर्वसतः त्रिधाम्नः ।
श्यामा बहिर्मूलसिता बभासे
मङ्गल्यरत्नाङ्कुरपालिकेव ॥ ५ ॥

மயூர பிஞ்ச்ச த்யுதிபிர் மயூகை:
தத்காந்திர் அந்தர்வஸதஸ் த்ரிதாம்ந:
ச்யாமா பஹிர் மூலஸிதா பபாஸே
மங்கல்ய ரத்நாங்குர பாலிகேவ (5)

(க. து) தேவகியின் திருமேனியில் ஒரு பொலிவு ஏற்பட்டுள்ளது. அந்த சோபையை கவியின் கண்களால் பார்க்கிறார். கருவுக்குள் வசிப்பவன் மூன்று வகையான சோதி வடிவுடையவன். அவ்வொளி வெளியில் தோற்ற மளிக்கிறது. மயில் தோகையின் நிலையும் நிறமும் என்ன லாம்படியுள்ளது. திருமேனி வெளுப்பு ஆனால் அதன் பள பளப்பு கறுப்பாக இருக்கிறது. மங்கள கார்யத்திற்கு சுப ஸூசகமாக பாலிகை வளர்ப்பது உண்டு. அப்பாலிகை முளைக்கின்ற பொழுது அடியில் வெளுத்தும் நுனியில் கறுத்துமே இருக்கும். இம்மாதிரி திருமேனி ப்ரகாசித்தது என்கிறார்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் தேவகியின் திருமேனி வெளுப்பு நிறம் பெற்றமையை உரைத்தார். இப்பொழுது அதன் மேலும் கறுப்பு நிறமும் ஓடுகிறது என்கிறார். கர்ப்பவதிகளின் சரீரத்தில் ஏற்படும் காந்தி மாற்றங்கள் உன்னிப்பாக கவனிப்பவர்களுக்குத்தான் விளங்கும்.

மயூரபிஞ்ச்சத்யுதிபி: மயூகை: மயிலின் தோகையின் அழகு சொல்லுக்கு அடங்காதது. மயில் கண்கள் என்ற அவை சுழிச்சுழியாக அழகானவை. அதில் தான் எத்தனை வர்ணங்கள். இவை போல் விளங்கின என்கிறார். மயூகை: என்பதற்கு கிரணங்கள் என்று பொருள். லக்ஷ்மீ என்று முன் சுலோகத்தில் பொதுவான சோபையைக் கூறினார். இங்கு தத் காந்தி: என்கிறார். கதிர் வீச்சுக்கள் என்னலாம். மயூகை: என்பதற்கு விசேஷணம் மயூர பிஞ்ச்சத்யுதிபி: என்பது. அவள் திருமேனி காந்தி மிகவும் ஒளிமிக்கதாயிருந்தது என்பது முக்கியமாகச் சொல்ல வேண்டுவது. இந்த விசேஷணத்தால் ஸ்வாமி குறிப்பிடுவது மிகவும் அழகு. நிறைந்த சொற்கள். உள்ளே வசிப்பவன் மயில் கண்களை சிரஸில் தரிப்பவன் போலும்! கர்ப்பத்திலிருந்து தத்ரூபமாக ஸேவை ஸாதித்தபொழுதும் தமத்புதம் என்ற சுலோகத்தில் மயில் தோகை மாத்திரம் குறிப்பிடவில்லை. அக்குறையை தீர்க்கும் போலும். பாலக்ருஷ்ணனுக்கு மயில் கண்ணில் உகப்பு உண்டே. இதை ஸ்வாமி விசித்ரசைலியில் நிரூபணம் பண்ணுகிறார் என்றும் கொள்ளலாம். த்யுதி என்று ஏகவசனமாக அல்லாமல் த்யுதிபி: என்று பன்மையில் பேசியது ரஸம். அப்பொழுதைக்கப்பொழுது அள்ளி வீசும் ஒளிகள் என்றும் கொள்ளலாம்.

மயூகை: கிரணங்களால் சோபைகளால் என்று பொருள். ஜ்வாலைகளால் என்றும் கொள்ளலாம். உள்ளே இருப்பவன் ஜோதீரூபன். அவனுடைய ஜ்வாலை போலும்.

தத்காந்தி: தேவகியின் காந்தி என்றார் தீக்ஷிதர். கர்ப்பத்தின் ஒளியென்றும்: கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்கும் கண்ணன் ஒளி என்றும் கொள்ளலாம். உள்ளே எழுந்தருளியிருப்பவனால் ஏற்பட்ட வெளிகாந்தி என்றும் சொல்லலாம். உள்ளே அடக்க முடியாமல் வெளிவரும் காந்தி என்றும், அத்தகைய காந்தி என்றும் கொள்ளலாம்.

அந்தர் வஸத: த்ரிதாம்ந: உள்ளே வஸிக்கும் பகவானுடைய என்று பொருள். அந்த: என்கிற சொல்லுக்கு மத்யத்தில் என்று பொருள். கர்ப்பமத்யத்தில் என்று இங்கு கொள்ளவேண்டும். பெட்டிக்குள், வீட்டிற்குள் என்ற இடங்களில் இவ்வாறு வழங்குவது உண்டு. அந்த: பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: என்று வேதம் கூறியது. உள்ளேயும் வெளியிலேயும் என்று அங்கு பஹி: என்கிற சொல்லுக்கு எதிர் தட்டில் அந்த: என்கிற சொல் வழங்கப்பெற்றது. கர்ப்பிணியை அந்தர்வத்நீ என்று சொல்வர். வஸத: வஸிக்கிற என்று பொருள். அசேதநத்திற்கு இது சேராது. வஸிக்கிறவனை என்றபடி, கர்ப்பவாஸம் என்றே உலக வழக்கு. அந்த: பஹிஸ்ச **ஸ்த்தித:** என்றதை மாற்றி அந்தர்வஸத: என்பர் போலும். நினைப்பவர்களின் கர்ப்பவாஸத்தையே போக்கும் இவன், கர்ப்ப வாஸ துக்கமே அறியாத இவன், பாங்காக வஸிக்கிறான் போலும். இது தேவகியின் அந்திமமான கர்ப்பம். த்ரிதாம்ந: மூன்று இடங்களைப் பெற்றவன். ஸ்ரீக்ருஷ்ணஸ்ய என்று வ்யாக்யானம். முதல் ஸர்கத்திலே த்ரிவேதீ மத்ய தீப்தாய த்ரிதாம்நே என்று சாதித்தார். த்ரிதாமா என்கிற சொல் க்ருஷ்ணனுக்கு அவ்வளவு பொருத்தமானது, சூரிய

மண்டலம், க்ஷீராப்தி ஸ்ரீவைகுண்டம் என்ற மூன்று இடங்களை இருப்பிடமாகக் கொண்டவன். மேலும் **धाम** என்ற சொல் கிரணம், க்ருஹம், ஒளி, உடல், ப்ரபாவம், ஸ்தானம், பிறப்பு, விஷ்ணு ஜ்யோதி என்ற பொருள்களையுடையது.

பரம் தாம (கீதை-11-38) என்பதற்கு ஸ்தானம் ப்ராப்ய ஸ்தாநம் என்றும் பாஷ்யகாரர் உரையிட்டார். **धामशब्दस्य अनेकार्थस्यापि प्रसिद्धिप्रकर्षात् सएवार्थ उचितः-** தாத்பர்யசந்த்ரிகை.]-**स्थाने** என்று ஸ்வாமி ஸ்தாபித்தார். இங்கு ஜ்யோதி- ப்ரபாவம் உடல் பிறப்பு என்கிற பொருள்கள் பொருத்தமாய் அமைந்தன. ப்ருச்னிகர்ப்பன் வாமனன். க்ருஷ்ணன். ஆகிய முப்பிறப்புகளும் கால பேதத்தால் ஒருவனே பெற்ருன். தேவகியின் ஆத்மாவில் அந்தர்யாமியாய், இதயத்தில் ஆனந்தமயனுய், கர்ப்பத்தில் புத்திரனுய், மூன்று ஸ்தானங்களைப் பற்ருன், கர்ப்பவாஸமாகிற மூன்ருவது ஸ்தானம் இங்கு தானே என்றும் கொள்ளலாம். தத் தாம பரமம் மம. (8.21கீ) என்ற இடத்தில் மூன்று நியமந ஸ்தானங்களை விளக்கியருளினர் ஸ்ரீபாஷ்யகாரர். தாம என்பதற்கு ஜ்யோதி என்று பொருள். யதாதித்யகதம் தேஜ:, யச்சந்த்ரமஸி யச்சாக்நௌ - தத்தேஜோ வித்தி மாமகம். என்று மூன்று விதமான தேஜஜ்ஸாக இருப்பதால் த்ரிதாமா என்று கண்ணனுக்குப் பெயர். மூன்று விதமான தேஜஸ்ஸாக இருப்பதால் உள்ளடங்காமல் அவ்வொளி தேவகியின் திருமேனியில் வெளியாயின போலும். த்ரிதாமா கேசவே அநலே என்று வைஜயந்தி நிகண்டுவில் கூறப்பட்டதால், அக்னி - விஷ்ணு ஆகிய இருவருக்கும் இப்பெயர் உண்டு, அந்தர்யாமி என்பதற்கும் அந்தர்

வாஸி என்பதற்கும் வேறுபாடு உண்டு. அந்தர்யாமியாயும் அந்தர்வாஸியாயும் இருப்பது ஏற்றம்.

ச்யாமா பஹி: வெளியில் கறுத்ததாய் என்று பொருள். பஹி: என்பதற்கு மேலே என்று உரையிட்டார் தீக்ஷிதர். அடிவெளுத்து மேல் கறுத்து உள்ளது என்று கொள்ளவேண்டும்.

மயில் தோகையின்- (கண்ணின்) காந்தி வெளியில் கறுத்து காணப்பட்டது எனப்பட்டது. ச்யாமா என்பது ஒருவகையான மங்கையை குறிக்கும். சீதே ஸுகோஷ்ண ஸர்வாங்கீ க்ரீஷ்மே ச ஸுகசீதளா, தப்தகாஞ்சந வர்ணாபா ஸா ஸ்த்ரீ ச்யாமேதி கத்யதே. தூர்வா காண்டமிவ ச்யாமா என்ற ச்லோகப் பகுதிகளால் அறியலாம். இந்த நிலையும் தேவகிக்குப் பொருந்தும் போலும். ஜாம்பூநத பிம்பகல்பா என்று முன் சுலோகத்திலேயே கூறிவிட்டார். ச்யாமா-ப்ரஸவிக்காத ஸ்த்ரீ என்றும் பொருள். இங்கு ச்யாமா என்று கூறியது அவளது காந்தியை. திருமேனி பூர்ணமாக வெளுத்திருப்பதால் மூல ஸிதா என்ருர். இது ஒளிமயமான ச்லோகம். த்யுதிபி;, மயூகை:, த்ரிதாம்ந:, பபாஸே என்ற சொற்களின் சேர்த்தி மிகவும் நேர்த்தி.

இதற்கு ஒரு உபமானம் காட்டுகிருர். மங்கல்ய ரத்நாங்குர பாலிகேவ-மங்களகரமான ரத்னங்களாகிய முளைகள் உதிக்கும் பாலிகைபோல் இருந்தது என்றபடி. பாலிகையில் நவதான்யம் முளைக்கும். அப்பொழுது அடி வெளுத்து மேற்புறம் கறுத்துக் காணப்படும். ஒரே காலத்தில் தோன்றுவதால் வரிசை வரிசையாக இருக்கும். தேவகியின் திருமேனி வெளுப்பு. அக்காந்தியில் க்ருஷ்ணனின் கறுப்பு நிறம் வெளிப்பட்டது, மிகவும் அழகாக உள்ளது

என்றபடி சுப காரியங்களில் பாலிகை வளர்ப்பதுவழக்கம். அது நன்றாக செழிப்பாக, அடியில் வெளுத்தும் நுணியில் கறுத்தும் காணப்பட்டால் மங்கள பரம்பரை ஏற்படும் என்பது லோகானுபவம்.

இங்கு சில ரஸங்கள். ஐந்தாவது சுலோகம் இது. பாலிகைகளும் ஐந்துதான் வைப்பது வழக்கம். யாதவனின் இந்த உதயம் அப்யுதயமாகப் போகிறது. அதற்கு தேவகி திருமேனி காந்தியே பாலிகையாக அமைந்தது என்பது ரஸம். தேவீ பபௌ என்றார் முதல் சுலோகத்தில். அவளது காந்தி பாஸிக்கிறது-விளங்குகிறது என்கிறார் இந்த சுலோகத்தில். பாலிகை நவதான்யங்களால் அமையும். இங்கு ரத்னாங்குர பாலிகை என்று சொன்னதால் **நவரத்னங்களும்** தான்ய ஸ்தானத்தைப் பெற்றன என்று கொள்ளலாம். ஜாம்பூநத பிம்பமோ எனப்பட்ட திருமேனி ரஸாயனச் சேர்க்கையாலே வெள்ளியாகி விட்டது என்றார். அதற்குமேல் நவரத்ன காந்தி தோன்றுவது இதில் அழகு. வெளுப்பும், கறுப்புமாக திருனிமேயில் ஒளி படர்ந்துளது என்பதாம். மங்கல்யம் என்பதற்கு மங்கலத்தை தரவல்லது என்று பொருள், மங்கல்யம் மங்கலம் விஷ்ணும் என்பர். வரப்போகிற மங்களத்திற்கு அறிகுறியாம். ஜகந்மங்களம் அச்யுதாம்சம் என்றார் ஸ்ரீசுகர். மங்களாநாஞ்ச மங்களம் என்றார் ஸ்ரீபீஷ்மர். அவனுக்கு ஹிதமாகத்தோன்றிய காந்தி எனப்பட்டது. தேவகி காந்தியையும் விஞ்சி உள்ளே இருக்கும் கண்ணனின் மயில் தோகை காந்தி இருப்பதாக கூறினதால் பரத்வ ஸூசகமான கர்ப்ப அடையாளம் கூறப்பட்டது என்று தீக்ஷிதர் விவரித்தார். விரிக்கிற் பெருகும்.

काले बभासे वसुदेवपत्न्याः
कर्पूरलिप्तेव कपोलशोभा ।
शशिप्रभा सप्तमगर्भकान्तिः
च्युतावशिष्टेव शनैरुदीर्णा ॥ ६ ॥

காலே பபாஸே வஸுதேவபத்ந்யா:
கர்பூர லிப்தேவ கபோலசோபா
சசிப்ரபா ஸப்தமகர்ப்பகாந்தி:
ச்யுதாவசிஷ்டேவ ஶநைருதீர்ணா (6)

(கருத்து) தேவகியின் கபோல பாகம் கன்னம் மிகவும் அழகாக விளங்கியது. கர்ப்பம் வளர வளர இத்தகைய சோபை ஏற்படுவது இயற்கை. கர்பூரத்தினால் பூசப் பட்டதோ என்று சொல்லத் தக்கதாயிருந்தது. இங்கு இந்த கபோல காந்தியின் தோற்றத்திற்கு ஒருவிதமான காரணம் இருக்கிறது என்கிறார். ஏழாவது கர்ப்பத்தில் ஏற்பட்ட வெளுப்பு மிஞ்சியிருந்தது. இப்பொழுது அது மெல்லியதாக தோன்றுவதாயிற்று போலும் என்று.

(விரிவுரை) **காலே பபாஸே** ஒளிமயமாயிருந்தாலும் அந்த அந்த காலத்தில் ஏற்படும் பொலிவு தனித்ததாகவே இருக்கும். **பபாஸே** என்று முன் ச்லோகத்தில் கூறினார். அங்கு ஸமுதாய சோபை கூறப்பட்டது. இங்கு அவயவ சோபையை குறிப்பிடுகிறார். காலஸ்வரூபியான எம்பெருமான் கர்ப்பத்தில் எழுந்தருளின பொழுது அவயவ சோபையும் அந்த அந்த காலத்தில் ஏற்பட்டது. உள்ளே இருப்பவன் அப்ராக்ருதனாலும் வஸுதேவ பத்நி ப்ரக்ருதியிற் சேர்ந்தபடியால் ப்ராக்ருத சோபை இங்கு உணர்த்தப்பட்டது போலும்.

வஸுதேவபத்ந்யா:—தேவகியின் என்று பொருள். வஸுதேவருக்கு பத்நியாக வாய்த்தலில் பயனன்றோ! தேவ பத்னிகளுக்கோ ப்ரம்ஹ பத்நிகளுக்கோ கிடைக்கப்பெறாத தொரு ஏற்றம் வஸுதேவ பத்நிக்கு என்பர் போலும். பல ஏற்றங்கள் பிராட்டிக்கு இருப்பினும் விஷ்ணு பத்நீ என்பதால் கிடைக்கப்பெறும் ஏற்றம் சீரியதே !

கர்பூரலிப்தேவ கபோல சோபா கன்னத்தின் சோபையை உத்ப்ரேக்ஷிக்கிறார். கர்பூரம் பூசியதுபோல் இருந்தது என்றபடி. லேபம் இருந்தால் அது அழகல்ல, லேபம் இல்லாத பொழுதே அவ்வாறு இருப்பது அதிசயம் தானே! கர்பூரம் என்பது பச்சை கற்பூரத்தை. **கர்பூர: த்வித: ப்ரோக்த: பக்வாபக்வ ப்ரபேதந:, பக்வாத் கர்பூரத: ப்ராஹு: அபக்வம் குணவத்தரம்** என்பர். இதற்கு கனஸாரம் என்றும் பெயர். **ஸ தௌத: சுபக்ருத் பர:, ஸுரபி: மதுர: திக்த: கபபித்த விஷாபஹ:** என்றும் கர்பூரத்தின் தன்மைகளைச் சொன்னார்கள். கபோல சோபை. கபோலம் என்ற சொல்லே அழகானது. **கம்-ஸுகம்-போலதி-கபோல** என்று விளக்கம் தருவர். ஸ்த்ரீகள் கர்ப்பமாயிருக்கிறபொழுது கபோலம்-கன்னம் வெளுப்பது இயற்கை. நெற்றிக்கு திலகம், கண்ணுக்கு அஞ்சனம், உதட்டிற்கு ராகம், கன்னத்திற்கு வெளுப்பு என்றவாறு சோபைகள் பல. ஸ்வாபாவிகமாக ஏற்படுவது கபோல சோபை ஆதலால் அதை இங்கு குறிப்பிட்டார் போலும்.

சசிப்ரபா ஸப்தம கர்ப்பகாந்தி : ஏழாவது கர்ப்பத்தின் சந்திர நிலவு போன்ற ஒளி என்று பொருள். ஏழா

வது கர்ப்பத்தின் காந்தியே சந்திரன் ஒளிபோல் விளங்கியது, **ஸப்தமோ வைஷ்ணவம் தாம யம் அனந்தம் ப்ரசக்ஷதே** என்றார் ஸ்ரீசுகர். விஷ்ணுவின் தேஜஸ் உள்ளே இருக்கும்பொழுது தேவகியின் ஒளி சந்திரனின் ஒளியொத்திருந்தது போலும். பலராமன் அவ்வொளி பெற்றிருந்தது இதற்கு ஆதாரம். சந்திர வமிசத்தின் அம்சம் இருந்தது போலும்! வெள்ளிப் பெருமலைக் குட்டன் என்று பெரியாழ்வார் பேசினார். ஸப்தம கர்ப்பம்-ஏழாவது கர்ப்பம் என்று பொருள். ஏழாவது மாதத்தில் இந்த கர்ப்பம் ரோகிணியின் கர்ப்பத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஸ்ரீபாகவதம் வைஷ்ணவம் தாம என்றும், அனந்தன் என்றும், ஸங்கர்ஷணனன் என்றும் குறிப்பிட்டது. அச்யுதன் அவன் ச்யுதனாகிவிட்டான். இங்கு அனந்தன் என்று ப்ரயோகித்தது ரஸம், நாசமற்றவன் என்று பொருள். கர்ப்பமாற்றமே தவிர கர்ப்பநாசமில்லை. கர்ப்பம் ச்யுதமாயிற்று. சிதைவு வேறு ச்யுதி வேறு. ரோஹிணீ கர்ப்பத்தில் அச்யுதன். தேவகீ கர்ப்பத்தில் அந்த காந்திமட்டும் கொஞ்சம் அவசிஷ்டமாக-மீதியாக தங்கிவிட்டது. அது காலக்ரமத்தில் எட்டாவது கர்ப்பத்தில் மெதுவாக கன்னத்தில் தோற்றம் அளிக்கும் போலும் என்றபடி. பூர்வார்த்தத்தில் கபோலசோபை கர்பூரலேபமோ! என்றார். உத்தரார்த்தத்தில் அதற்கு காரணம் காட்டுவார்போலும். இவ என்ற சொல் போல் என்ற பொருளுடையது. இதை மூன்று சொற்களோடும் சேர்க்கலாம். சசிப்ரபா-சசியின் சந்திரனின் ப்ரபை-காந்தி. அதுபோல் உதீர்ணா-வெளிவரலாயிற்று. (2) ச்யுதா அவசிஷ்டா இவ, மிச்சமானதுபோல் என்று பொருள். உதீர்ணா இவ தோன்றியதுபோல் என்றும் அந்வயித்துக் கொள்ளலாம்.

नवेन्दुनिष्यन्दनिभश्चकाशे
वर्णः प्रतीकेषु मधुद्रवाङ्ग्याः ।
अन्तःस्थितेन प्रथमेन पुंसा
प्रवर्तितं सत्वमिवावदातम् ॥ ७ ॥

நவேந்து நிஷ்யந்த நிபஸ் சகாஶே,
வர்ண: ப்ரதீகேஷு மதுத்ரவாங்க்யா:
அந்தஸ் ஸ்த்திதேந ப்ரதமேந பும்ஸா
ப்ரவர்த்திதம் ஸத்வமிவாவதாதம், **(7)**

(கருத்து) தேவகியின் திருமேனி மதுமயமாயிற்று. அவளது அங்கங்களில் ஒரு அழகான வர்ணம்—நிறம் ஓடுகிறது. புதியதான சந்திரனிடமிருந்து உண்டான அமுதப் பெருக்கோ என்ன என்று சொல்வது! உள்ளே ஆதி புருஷன் அமர்ந்திருக்கிறான். அவன் தான் மேலே ஸத்வ குணத்தை ப்ரவர்த்தனம் பண்ணுவான்போலும். ஸத்வம் என்பதற்கு வெளுப்பு என்று பொருள்.

(விரிவுரை) நவேந்துநிஷ்யந்தநிப: சகாசே இதற்கு முன் சுலோகத்தில் ஸப்தம கர்ப்ப காந்தி என்று கூறினார், அதனிலும் தேரினதும் தெள்ளியதுமான சோபை என்று இங்கு கூறுவர். முன் ச்லோகத்தில் கபோல சோபையை மட்டும் வர்ணித்தார். இதில் அங்கப்ரத்யங்க ஸௌஷ்டவத்தை அநுபவிக்கிறார்.

நவேந்து-என்பதற்கு புதிய சந்திரன் என்று பொருள். நிஷ்யந்த என்பதற்கு பெருக்கு என்று

பொருள். சந்திரனுக்கு அம்ருதாம்சு என்று ஒரு பெயர் உண்டு. ஒளி அவனிடமிருந்து பெருகும்பொழுது அதை அமுதப்பெருக்கு என்று கூறுவர். அமுதம் வெண்மையானது. புதிய சந்திரன் உண்டோ! சந்திரனுக்கு புதுமை யாவது என்ன என்று சிந்திக்கலாம். ஒரு சில ரஸங்கள்: அம்ருதமதனம் பண்ணும்பொழுது அமுதத்துடன் தோன்றியவன் சந்திரன். அமுத அலைகள் அவன் ஒளியோடு ஒன்றியிருக்கலாம். க்ஷீரம், அம்ருதம், ஐராவதம், உச்சைச்ரவஸ் பிராட்டி ஆகிய தோன்றியவெல்லாம் வெள்ளையாகவே இருப்பதால் சந்திரனும் வெண்மை பெற்றதாகலாம். புதிய சந்திரன். ராகுவினிடமிருந்து விடுபட்ட சந்திரன் ஒளிமிக்கவனாய் இருப்பான். ஆயினும் அவனை நவேந்து என்பதில்லை. ப்ரதமை முதல் கலை வளர்ச்சி பெற்று வருபவனும் நவேந்து எனப்படுவதில்லை. அகலங்கயோகம் எனப்பட்டதுபோல் கலங்கமேயில்லாத சந்திரன் என்று கொள்ளலாம். இதற்கு முன் சுலோகத்தில் ஶஶிப்ரபா என்றார். இங்கு நவேந்து என்பதில் ரஸமுண்டு. இதற்கு முன் ச்லோகத்தில் ச்யுதாவசிஷ்டா என்றார். இங்கு நவேந்து என்கிறார். பூர்ண சந்திரன் என்று திருவுள்ளமாகலாம். நிகர் ஒன்றும் கூறமுடியாத நவமாயிருக்கலாம். நிப: போன்றது. சகாஶே விளங்கியது.

வர்ண: ப்ரதீகேஷு ப்ரதீகேஷு என்பதற்கு அவயவங்களில் என்று பொருள். குறிப்பிடத்தக்க அவயங்களில் என்று கொள்ளலாம். ப்ரதீகம் எடுத்து பொருள் கூறுவது என்பதொரு முறை உள்ளது. தெள்ளிய தோற்றமுடைய அவயவங்கள் என்க.

மதுத்ரவாங்க்யா: திருமேனி தேன் பாய்ந்ததோ என்னலாம்படியுள்ளது. திருமேனியில் ஓர் வகையான ரஸபரிபோஷம் ஏற்பட்டுள்ளது போலும்! ஜிஹ்வா மே மதுமத்தமா என்றது வேதம். அம்ருதலஹரீலப்த ஸப்ரம்ஹ சர்யை: எனப்பட்ட கடாக்ஷ விசேஷமும் மது மயம். ஸர்வரஸனுன எம்பெருமான் மதுமயன். அவனுல் ஏற்பட்ட ரஸபரிபாகம் போலும். ஸ்வேதம் முதலியன இல்லாத திருமேனி என்னலாம். ஸ்வேதாதிகளும் மதுமய மாயமைந்தனவோ என்றும் கொள்ளலாம். திவ்யமான ப்ரயோகம் இது, நயநாப்யாயநம் லாவண்யம் மதுத்வேந அத்யவஸிதம்- அழகு இங்கு மது என்ற சொல்லுக்குப் பொருளாயிற்று என்றுர் தீக்ஷிதர். லாவண்ய வர்ஷிணி லலாடதடே என்று தேவநாயக பஞ்சாசத்தில் ப்ரயோகித்தார். அழகு மிகுந்த அங்கங்களையுடையவள் என்றபடி.

அந்த: ஸ்திதேந ப்ரதமேந பும்ஸா உள்ளே எழுந்தருளியிருக்கும் ஆதி புருஷனுலே என்று பொருள். ஆதிபுருஷன் எங்கும் இருப்பவன். அந்தர் பஹிஸ்ச ஸ்தித: என்று வேதம் கூறியது. இப்பொழுது அவன் அந்த: ஸ்தித: உள்ளேயிருக்கின்றுன் என்கிருர். ஆத்மாவா யிருக்கும்பொழுது அவன் ந புமாந் ந ச தேவ: என்றபடியாம். கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்கிறபொழுது புருஷனுகவே இருப்பன் போலும். அதனுல் பும்ஸா என்பர். எட்டாவது புருஷப்ரஜையாகப் பிறந்தபோதிலும் இவன் ப்ரதம புருஷன் என்கிருர். ஜகத்காரணமானவன் கார்யவஸ்தையை அடைகிருன்போலும். ப்ரதம புருஷனுக-ஊழி முதல்வனுக இருந்தபொழுது இவனுக்கு கர்ப்பஸ்திதி இல்லை. இங்கு அந்த: ஸ்திதனுகவும், ப்ரதம புருஷனுகவும் இருப்பன் போலும்! வெளியிலே தோன்றும் ரூபரஸமாற்றங்கள் எல்லாம் அவனிட்ட வழக்காயும், அவன் ஸந்நிதியாலே ஏற்பட்டதாயும் இருக்கும்.

அந்த: ஸ்திதேந-உள்ளே இருப்பவன் என்ற பொருளோடு கடைசியிலும் இருப்பவன் அவனே என்றபடி. ஆனுல் அவன் ஆதிபுருஷன். அனந்தன் அந்த; இருக்கிருன் என்பது ரஸம்.

ப்ரவர்த்திதம் ஸத்வமிவ இயக்கப்பெற்ற ஸத்வ குணம்போல் என்று பொருள். ப்ரவர்த்தகன் உள்ளேயிருப்பவன்தான். **ஸாது கர்ம காரயதி** என்பது போலாகும். ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் என்ற பகவத்கீதா வசனத்திற்கு **பரம புருஷேண ப்ரவர்த்திதம்** என்று ஸ்ரீபாஷ்யகாரர் பாஷ்யம் பண்ணியருளினுர். இங்கு தாயாரின் திருமேனி வெளுப்பு அவன் ப்ரவர்த்திப்பதே என்று பொருள். ஸத்வ குணத்தின் நிறம் வெளுப்பு. ரஜோ குணம் சிகப்பு, தமோகுணம் கறுப்பு என்று முக்குணங்களுக்கும் நிறத்தைக் கூறினர். **அஜாம் ஏகாம்லோஹித சுக்ல க்ருஷ்ணும்** என்ற ச்ருதியை மேற்கோளாகக் காட்டினுர் தீக்ஷிதர். ஸத்வோத்தரமான தேவதையான படியால் ஸத்வத்தை ப்ரவர்த்திப்பிக்கிருன். ஸத்வஸ்ய ஏஷ ப்ரவர்த்தக: என்று ச்வேதாச்வதரம் சொல்லிற்று. உள்ளே இருப்பவன் கறுப்பு நிறமுடையவன். ஊழி முதல்வன். உருவம்போல் மெய் கறுத்து என்றுள் ஆண்டாள். அவன் பரிக்ரஹித்த ரூபம் அது. ஆனுல் அவன் ஸத்வத்தைதான் ப்ரவர்த்தனம் பண்ணுகிருன்.

அவதாதம்: வெளுப்பு என்று பொருள். மஞ்சள் நிறத்தையும் அவதாதம் என்ற சொல் குறிக்கும். இரண்டும் கலந்ததொரு விலக்ஷணமான வெளுப்பு.

தேவகியின் திருமேனி சந்திரனிடம் பெருகின பெருக்குபோல் வெளுப்பாக இருந்தது என்றுர் முன் பாதியில். அந்த வெளுப்பும் ஸத்வகுணத்தின் வெளுப்பை யொத்திருந்தது என்கிறுர் பின்பாதியில்.

करंबिता किञ्चिदिव प्रसृतैः
तेजोभिरन्तर्वसतस्त्रिधाम्नः ।
मरीचिभिः स्वैरभवत् प्रजानां
मंगल्यरत्नाङ्कुरपालिकेव ॥ ८ ॥

கரம்பிதா கிஞ்சிதிவ ப்ரஸ்ருப்தை :
தேஜோபிர் அந்தர்வஸதஸ் த்ரிதாம்ந :
மரீசிபி: ஸ்வைரபவத் ப்ரஜாநாம்
மங்கல்ய ரத்நாங்குர பாலிகேவ (8)

(கருத்து) தேவகியின் திருமேனியில் தனித்ததொரு ஒளி படர்ந்திருக்கிறது. மேற்புறம் சிறிதே படர்ந்ததால் நிறங்கள் கலந்து நிற்கின்றன. உள்ளே வசிக்கும் த்ரிதாமா வினுல் ஏற்பட்ட ஒளிகள் இவை. தேவகியின் திருமேனி காந்திகளும் ஒன்றுகச் சேர்ந்தன. அப்பொழுது மங்கள காரியத்திற்கு அமைக்கப் பெற்ற பாலிகை போல் அவள் திருமேனி விளங்கியது என்றபடி.

(விரிவுரை) தேவகியின் திருமேனியை ஐந்தாவது சுலோகத்தில் வர்ணித்தார். இப்பொழுது அந்த அனுபவம் கண்களை விட்டகலாததாலும், மங்களபாலிகை மனதை விட்டகலாததாலும் மேலும் மேலும் அந்த தாத்பர்யத்தையே திருவுள்ளத்தில் இறுத்தி உவந்து மாற்று விதமாக இங்கு வர்ணிக்கிறுர்.

கரம்பிதா கிஞ்சிதிவ சிறிதளவே என்னலாம்படி சேர்ந்து என்றபடி. இங்கு இவ என்கிற சொல் வாக்யாலங்காரம் என்றுர் தீக்ஷிதர். கிஞ்சித் என்பதற்கு கொஞ்சம் என்று பொருள். இவ என்று சேரும்பொழுது சொல்லில் நடையழகு உண்டு.

ப்ரஸ்ருப்தை: ப்ரஸரிக்கின்ற என்று பொருள். டிப்பணியில் தூரப்ரஸாரி என்று உரை கூறினர். இது தேஜோபி : என்பதுடன் சேரும்.

தேஜோபி: தேஜஸ்ஸுக்களால் என்று பொருள். இங்கு பன்மையில் கூறியதின் சுவையை கவனிக்க வேண்டும். அவனே தேஜஸ். அவனுடைய ப்ரஸரம் கர்ப்பத்தில், அவனுடைய தேஜஸ்ஸின் ப்ரஸரம் தேவகியின் திருமேனியில் என்னலாம். ஓஜ: தேஜ: த்யுதி தர: என்று அவனுக்குத் திருநாமமாகவே அமைந்த சொல். த்ரிதாமாவின் முழு ஒளியும் தோன்றவில்லை. தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி என்பன போன்ற பல ப்ரமாணங்கள். ஆதலால் கிஞ்சிதிவ எனப்பட்டது. **மரீசிபி: ஸ்வை:** அபவத் தனது கிரணங்களாலே என்றபடி.

ப்ரஜாநாம்: மக்களுக்கு என்று பொருள். உயர்ந்தே பிறந்தவர்கள் ப்ரஜைகள். **ப்ரகர்ஷேண ஜாயந்தே**

என்று வ்யுத்பத்தி பண்ணவேணும். ப்ரஜைகளுக்கு அப்யுதயம் க்ஷேமபரம்பரை உண்டாகப் போகிறது. அதற்கு ஏற்றவாறு என்க.

மங்கல்ய ரத்நாங்குர பாலிகேவ : மங்கள ரத்னங்களாகிற முளைகள் தோன்றும் பாலிகைப் போல் என்றபடி. எட்டாவது சுலோகத்தில் மறுபடியும் பாலிகாப்ரஸங்கம் பண்ணுகிறார். முன் (5வது) ச்லோகத்தில் காந்தியை ரத்நாங்குர பாலிகையாக வர்ணித்தார். இங்கு தேவகியின் திருமேனி மங்கல்ய ரத்நாங்குர பாலிகையாயிற்று என்பர் போலும். தேவகி காந்தியும் கண்ணனின் காந்தியும் கலந்த பொழுது இத்தகைய தோற்றம் ஏற்படுவதில் வியப்பில்லை. பாலிகை என்பதற்கு வரிசை என்று பொருள் கொண்டனர்.

तस्याः सुधोल्लासजुषः कटाक्षाः
संक्षुब्ध दुग्धोदधि सौम्यभासः ।
जगत्त्रयीसौधविलेपनार्हां
वितेनिरे वर्णसुधामपूर्वाम् ॥ ९ ॥

தஸ்யாஸ் ஸுதோல்லாஸ ஜுஷ: கடாக்ஷா:
ஸங்க்ஷுப்த துக்தோததி ஸௌம்ய பாஸ:
ஜகத் த்ரயீ ஸௌத விலேபநார்ஹாம்
விதேநிரே வர்ணஸுதாம் அபூர்வாம் (9)

(கருத்து) தேவகியின் கடைக்கண் பார்வைகள் திருப்பாற்கடல் அமுதம்போல் விளங்குகின்றன. பார்வைகள் விழும் இடமெல்லாம் விளங்கிற்று. அபூர்வமான வர்ணம் பூசப்பட்டதுபோல் காணப்பெற்றது. மூன்று உலகங்களின் உப்பரிகைகளும் சுண்ணும்பு அடிக்கப்பெற்றது போல் ஆயிற்று என்றபடி.

(விரிவுரை) ரஸரூபியாகவும் தேஜோரூபியாகவும் எம்பெருமான் கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்க, தேவகி பெற்ற திருமேனிப் பொலிவை பல கோணங்களில் ஸ்வாமி வர்ணித்து வருகிறார். இந்த ச்லோகத்தில் தேவகியின் கடாக்ஷ விசேஷங்கள் எவ்வளவு அழகாக விளங்குகின்றன என்பதை சாதிக்கின்றார்.

தஸ்யா: ஸுதோல்லாஸ ஜுஷ: கடாக்ஷா: அவளுடைய என்று தேவகியை குறிப்பிடுகிறார். திருநாமத்தைச் சொல்லவும் கூச்சம்போலும்! எத்தகைய பெருமை வாய்ந்தவள் அவள்! என்றபடி. ஸுதா என்றால் அமுதம். **ஸுகேந தீயதேபீயதே**(ஸுகமாக குடிக்கப்படுவது)என்று கொண்டு அமுதத்திற்கு இது பெயராயிற்று. உல்லாஸம் விப்ரமம் கிளர்ச்சி. சிதறின நுரைகள்போல் எனவாம். பாலையோ தயிரையோ சிலுப்பும்பொழுது மேற்பக்கங்களில் குழப்புகின்ற வேகத்திற்கும் தரத்திற்கும் ஏற்றவாறு வெகு தூரத்திலும் திவலைகள் படிவது உண்டு. அவ்வாறுயின கடாக்ஷங்கள் என்றபடி. மதுத்ரவாங்கீ என்றார் ஏழாவது ச்லோகத்தில். இங்கு கடாக்ஷங்கள் ஸுதாரஸத்தைத் தெளிக்கின்றன என்பர். அம்ருதப்ரஸங்கம்வந்தபடியால் அடுத்த விசேஷணத்திஞல் அதை விவரிக்கின்றார்.

ஸங்க்ஷுப்த துக்தோததி ஸௌம்ய பாஸ: திருப்பாற்கடல் கடையப்பட்டது. அப்பொழுது திருப்பாற்கடல் என்ன அழகைப் பெற்றிருந்ததோ அந்த அழகை கடாக்ஷங்கள் பெற்றன என்கிறார். ஸங்க்ஷுப்தம் என்பதற்கு மந்தரமலையுடன் கூடின என்று வ்யாக்யானம் பண்ணினார் தீக்ஷிதர். க்ஷுப்த என்பதற்கு மத்து என்று பொருள். மந்தனத்திற்காக மலையை இட்டபடியாலே அதுவே மத்தாயிற்று. மத்தினால் சிலுப்பும் பொழுது திவலைகள் சிதறுகின்றன. பாற்கடலைக் கடைந்தபொழுது அத்திவலைகள் தேவலோகம் அளவும் சென்று படிந்தன என்றும் கொள்ளலாம். துக்தார்ணவம் என்று சொல்லாமல் துக்தோததி என்று ப்ரயோகித்தது ரஸம். உததி என்ற சொல் ஆயினும் ததி दधि என்ற ஓசையும் உண்டாகும். ஸௌம்யம் என்றால் அழகு சோபை என்று பொருள். தேவகி திருப்பாற்கடலாகவும் அவளது கடாக்ஷங்கள் தெளித்த திவலைகளாகவும் கூறப்பட்டது. துக்தோததி ஸௌம்யம் என்றபொழுது திருப்பாற்கடலில் தோன்றின ஸோமனையும் நினைவு கூறுவதாம். அமுதம், க்ஷீரம், தயிர், சந்திரன் எல்லாமே வெளுப்பு. கடாக்ஷம் வெளுப்பாக இருக்கும் என்பதை கவி ஸமயம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஸ்வாமியே ஸ்ரீ ஸ்துதியில் அம்ருத லஹரீ லப்த ஸப்ரம்ஹசர்யை: என்று ப்ரயோகித்தார். கர்ப்ப ஸமயத்தில் விசேஷித்து இம்மாதிரி பார்வைகள் ஏற்படுவது இயற்கை. திருவுள்ளத்தில் கொண்டே ஸுதோல்லாஸ ஜுஷ: என்று ஸ்வாமி ஸாதித்தது என்றார் ஸ்ரீ தீக்ஷிதர்.

ஜகத் த்ரயீஸௌத விலேபநார்ஹாம் மூன்று உலகங்களின் உப்பரிகைகளுக்குப் பூசத் தேவையானது-போதுமானது—ஏற்றது என்று பொருள். மூன்று லோகங்களில் உள்ள ஸௌதங்கள் எல்லாம் என்று கொள்ளலாம். லக்ஷ்மீகடாக்ஷத்தின் வைபவத்தை விளக்க வந்த ஆளவந்தார் ஈஷத் த்வத் கருணா நிரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாத் ரக்ஷ்ஸே, நஷ்டம் ப்ராக்ததலாபத: த்ரிபுவநம் ஸம்ப்ரத்யநந்தோதயம் என்று சதுச்லோகியில் ஸாதித்ததைத் திருவுள்ளத்தில் கொண்டு இங்கு தேவகீகடாக்ஷத்தை வர்ணிப்பர் போலும். ஸுதா ஸந்துக்ஷணம், த்ரிபுவநம் என்றவை உற்று நோக்கவேண்டியவை. ஸந்துக்ஷணம் ஸம்யகுல்லாஸநம் என்று சதுச்லோகீ பாஷ்யம். அதையே இங்கு ஸுதோல்லாஸ சப்தத்தினால் காண்பிக்கிறார். மூன்று உலகங்களுக்கும் ஸுதா யோகம். பகவான் தேவலோக வாஸிகளுக்கே அளித்த ஸுதைபோல் அல்லாமல் மூன்று உலகத்தவர்க்கும் எனப்பட்டது. ஸௌதம் ராஜஸதநம் என்றான் அமரஸிம்ஹன். ஸுதாயோகம் இருக்குமிடம் ஸௌதம் என்றும் கொள்ளலாம். மூன்று உலகங்களிலும் அடிக்கடி வர்ணம் பூசவேண்டிய நிலை ஏற்படுவது ஸஹஜம்.

மூன்று உலகங்களும் தனிநிறம் பெறப் போகின்றன என்றவாறு. இங்கு மாககவியின் போக்கு ஸ்வாமியின் திருவுள்ளத்தில் உள்ளது என்றும் கொள்ளலாம். 12வது ஸர்கம் 62வது ச்லோகத்தை நினைக்கிறார்.

स्निग्धाञ्जनश्यान तनूभिरुन्नतैः निरन्तराला करिणां कदंबकैः।
सेना सुधाक्षालित सौधसंपदां पुरां बहूनां परभागमाप सा ॥

என்பது அந்த ச்லோகம். த்வாரகை ஸௌதங்கள் நிறைந்தது. ஸுதா க்ஷாலிதமானது. யானை சேனை கறுத்தது. வெளுத்த த்வாரகை மாடிகளுக்கும் கறுத்த யானைக் கூட்டத்திற்கும் எவ்வளவு பொருத்தம் என்கிறார் மாககவி.

இங்கு ஸ்வாமி ஜகத்த்ரயீ ஸௌதவிலேபநார்ஹாம் என்பதால் விசேஷித்துக் காட்டுகிறார்.

விதேநிரே வர்ணஸுதாம் அபூர்வாம் கடாக்ஷங்கள் அபூர்வமான வர்ணப்பூச்சை செய்து வைத்தன என்று பொருள் உரைத்தார். வெளுப்பான த்ரவ்யம் சுண்ணாம்பு ஆனதால் சுண்ணாம்பு அடித்த மாதிரியாயிற்று என்று கூறுவர். அபூர்வாம் என்பதற்கு அப்ரஸித்தமானது விலக்ஷணமானது என்று உரையிட்டார் தீக்ஷிதர். ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியின் ஆழத்தையும் ரஸத்தையும் மந்தமதி எவ்வளவுதான் அனுபவிக்க இயலும். இரண்டொரு விஷயங்கள். இங்கு லக்ஷ்மீ கடாக்ஷ ஸாம்யத்தை தேவகீ கடாக்ஷம் பெற்றது என்று தேருகிறது.

கண்ணன் கர்ப்பத்தில் மந்தரம் போல் எழுந்தருளியிருப்பன். அவன் ஸ்திரனானாலும் சலிக்கிறான். அதனால் திருமேனியில் ஒரு ஒளி. மேலும் பார்ப்பன் தேவகி. அந்தப் பார்வை தேவலோகத்தளவும் சென்றது. இது வரையில்லாத விலக்ஷணமான ஒளி எல்லா மாடிகளுக்கும் ஏற்பட்டு விட்டது. எங்கும் க்ருஷ்ணன் என்ற திருநாமத்தை எழுதிவிட்டாள் போலும். வர்ண: ப்ரதீகேஷு என்று ஏழில் கூறினார். அது அவயவகாந்தி. இங்கு வர்ணஸுதை என்பர். கர்ப்பத்தில் இருப்பவன் நீலமேக ச்யாமளன். தேவகியின் கண்கள் கறுத்தது - ஆனால் பார்வை

வெளுத்தது. எங்கெங்கு அது விழுகிறதோ அங்கெல்லாம் அழகான தோற்றமும் ஆனந்தமும் குடி கொள்கிறது என்று கூறியபடியாம். அஞ்ஜந ஸ்ரீ: அபூர்வா என்பது போல் வர்ணஸுதை அபூர்வம் என்கிறார்.

रक्षाविधौ राक्षसदानवानां
कारागृहे कंसनियोगभाजाम् ।
संपश्यमाना सकृदीक्षिता वा
संक्षोभयामास मनांसि सैषा ॥ १० ॥

ரக்ஷாவிதௌ ராக்ஷஸதாநவாநாம்
காராக்ருஹே கம்ஸநியோகபாஜாம்
ஸம்பச்யமாநா ஸக்ருதீக்ஷிதா வா
ஸங்க்ஷோபயாமாஸ மநாம்ஸி ஸைஷா (10)

(க-து) இவள் காராக்ருஹத்தில் ரக்ஷைக்காக கம்ஸனால் அமர்த்தப்பட்ட அஸுரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் பெருங் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டனள். ஒரு முறை இவள் பார்த்தாலும் சரி, அல்லது அவர்களால் இவள் பார்க்கப் பட்டாலும் போதும், நடுங்கலாயினர் என்றபடி.

(விரிவுரை) ஒன்பது ச்லோகம் வரை தேவகியின் அதிசயமான சரீர சோபையை வர்ணித்து இப்பொழுது அவளைப் பார்ப்பவர்களுக்கு ஏற்படும் நிலைகளைக் கூறுகிறார்.

ஸைஷா அத்தகைய பெருமை வாய்ந்த இவள் என்று பொருள் உள்ளங்களை பயமும் பரபரப்பும் கொண்டவைகளாகச் செய்துவிட்டாள் என்றபடி.

ரக்ஷாவிதௌ ராக்ஷஸ தாநவாநாம்: ரக்ஷண வ்யாபாரத்தில் என்றபடி. தேவகியையும் வஸுதேவரையும் காவலில் வைத்தான் கம்ஸன். இவர்களை வெளியில் விடாமல் தடுப்பது தான் ரக்ஷை. இதற்கு யாரை நியமிப்பது ! அந்தரங்கர்களைத்தானே நியமிக்க முடியும். ராக்ஷஸர்களையும் அஸுரர்களையும் நியமித்தான் என்றபடி. காராக்ருஹத்தில் தேவகியை அடைத்தான் என்றார் முன் ஸர்க்கத்தில். தேவசத்ருக்கள் என்றார் ஸ்ரீசுகர். ராக்ஷஸர்களுக்கும் அஸுரர்களுக்கும் இது பொதுவாகும். இங்கு ஒருவிஷயம் கவனத்தில் கொள்ளவேண்டும். ராக்ஷஸ ப்ரஸ்தாவம் க்ருஷ்ணாவதார காலத்தில் இல்லை. ராமன் காலத்தோடு போய்விட்டது. வெகுவாக அஸுரர்களை அழிக்கவே அவதாரம். பூர்வாவதாரத்தில் ஒரு சில ராக்ஷஸர்கள் கர்மவிசேஷத்தினால் க்ருஷ்ணாவதார காலத்திலும் தோன்றி யிருக்கலாம் ஆதலால் ராக்ஷஸ தாநவாநாம் என்று கூறுவர் போலும்.

ராக்ஷஸ காரியம் என்றால் பயங்கரமான காரியம் என்று கொள்வது உண்டு. அதுவே போல் பயங்கரமான அஸுரர்கள் என்னலாம். தீவிர துஷ்டர்கள் என்றபடி, அல்லது அஸுரர்களை பூர்வதேவர்கள் என்பது வழக்கம். பரஸ்பரம் நம்பிக்கை அஸுரர்களில் இருக்காது. ஆதலால் ராக்ஷஸர்களையும் அஸுரர்களையும் கம்ஸன் நியமித்தான் என்று கொள்ளலாம். தமோகுணம் ரஜோகுணம்

மிக்கவர் ஒன்றாக கூட்டு சேருவதில் வியப்பில்லை. இரவில் அரக்கர்களும் பகலில் அஸுரர்களும் காவல் புரிந்த வண்ணம் இருப்பர் போலும். **காராக்ருஹே கம்ஸநியோக பாஜாம்.** சிறைச்சாலையில் கம்ஸனின் ஆணைக்குப் படிந்து நடப்பவர்கள் என்று பொருள். காலநேமியே கம்ஸனான். அஸுர பலமெல்லாம் ஒன்று சேர்ந்த வார்ப்படமாக இருந்தான். அவன் கட்டளைக்கு கீழ்ப் படியாத அஸுர இனமே இல்லை. **நியோகம்** கட்டளை.

ஸம்பச்யமாநா ஸக்ருதீக்ஷிதா வா பார்க்கப்பட்டாலோ அல்லது பார்த்தாலோ என்று பொருள். ஒரு முறை பார்த்தாலோ ஒருமுறை பார்க்கப்பட்டாலோ என்று ஸக்ருத் என்ற சொல்லை இரண்டிலும் சேர்க்கலாம். ராமனாவது ஒருவனை பார்க்க வேண்டும் ராமனையாவது ஒருவன் பார்க்க வேண்டும். அன்றில் பிறந்தது வீணே என்பர். யஸ் து ராமம் ந பச்யேத் து யஞ்ச ராமோ ந பச்யதி என்ற இடத்தில் போல் இங்கும். இவளாவது பார்க்க வேண்டும் அல்லது பிறரால் பார்க்கப் படவேண்டும் என்றபடி.

ஸங்க்ஷோபயாமாஸ மநாம்ஸி ஸைஷா உள்ளங்களை குமுறச் செய்து விட்டாள் என்று பொருள். இவளிடம் உள்ள தேஜஸ் ஆஸுரஸ்வபாவம் உள்ளவர்க்கு குழப்பத்தையும் குமுறலையும் தானே உண்டுபண்ணும்! காராக்ருஹத்தில் ரக்ஷகர்கள் க்ஷோபம் விளைவிப்பார்கள். அல்லது அங்கு இருக்கும் குற்றவாளிகள் க்ஷோபத்தை விளைவிக்கலாம். இங்கு நிலை முற்றும் மாறியுள்ளது.

இவளுடைய தர்சனமே சூழுற வைக்கிறது என்பது ரஸம். இங்கு மேலும் ஒரு ரஸத்தை ரஸிகர்கள் அனுபவிக்கலாம். இதற்கு முன் ச்லோகம் வரை திருமேனி ஒளிபெற்றிருந்தமையை விளக்கினார். இங்கு ஸ்ரீவிஷ்ணு புராண ச்லோகம் நினைவில் ஓடுகிறது.

ந ஸேஹே தேவகீம் த்ரஷ்டும் :கஸ்சிதப்யதி தேஜஸா, ஜாஜ்வல்யமாநாம் தாம் த்ருஷ்ட்வா மநாம்ஸி க்ஷோபம் ஆயயு: என்பது அங்கு உள்ள ச்லோகம். ஒருவராலும் தேவகியின் அதிகமான தேஜஸ்ஸின் காரணமாக பார்க்க இயலவில்லை. ஜ்வலித்துக் கொண்டிருக்கும் அவளைப் பார்த்து உள்ளங்கள் கலங்கின. இங்குள்ள மநாம்ஸி க்ஷோபமாயயு; என்பதையே ஸ்வாமி ஸம்க்ஷோபயாமாஸ மநாம்ஸி என்று கூறினார். அங்கு இன்னாரென்று குறிப்பிடவில்லை. தேவதைகள் துதிக்கலாயினர் என்றே உள்ளது. அந்த ஸங்க்ஷோபம் ஆச்ரிதர்களுக்கு வேண்டாமே என்று நினைத்து ராக்ஷஸ தாநவாநாம் மநாம்ஸி ஸங்க்ஷோபயமாஸ என்று திருத்தமாக சாதிக்கின்றார்.

முன் சுலோகத்தில் திருப்பாற்கடலில் கடையும் பொழுது உண்டான க்ஷோபத்தைக் கூறினார். அது தேவாஸுரர்களால் ஏற்பட்ட க்ஷோபம்-கலக்கம். இங்கும் அவ்வாறு ஒரு ராக்ஷஸ தானவ க்ஷோபத்தை கூறுவர் போலும்.

भुक्ता पुरा येन वसुन्धरा सा
स विश्वभोक्ता मम गर्भभूतः ।
इति ध्रुवं सूचनमाचरन्ती
तत्तादृशं नाटितकं ततान ॥ ११ ॥

புக்தா புரா யேந வஸுந்தரா ஸா
ஸ விச்வபோக்தா மம கர்ப்பபூத:
இதி த்ருவம் ஸூசநம் ஆசரந்தீ
தத்தாத்ருசம் நாடிதகம் ததாந **(11)**

(கருத்து) இதற்கு முன் எவனால் அத்தகைய பூமியானது அனுபவிக்கப் பெற்றதோ, அவனே உலகத்தை அனுபவித்தவனே எனது கர்ப்பத்தில் எழுந்தருளி விட்டான். இவ்வுண்மையை குறிப்பிடும் வகையில் விலக்ஷணமானதொரு அபிநயத்தைச் செய்வாள் போல் இருந்தாள்.

(விரிவுரை) புக்தா புரா யேந **வஸுந்தரா ஸா. பூமியை எவன்** முன்பு அனுபவித்தானோ அவன் என்று பொருள். கர்ப்பிணிகள் இயற்கையாகவே மண்ணை ருசித்துச் சாப்பிடுவதுண்டு. இந்த நிலையை தேவகி அடைந்தாள். எல்லோரும் மண்ணைச் சாப்பிடுவதற்கு காரணம் உண்டோ! த்ராக்ஷாதிகள் இருந்தாலும் மண்ணில் தனிச் சுவை ஏற்படுகிறது. மேலும் தேவகி மண்ணையுண்டாள் என்றால் அதன்காரணத்தை ஊகித்துக்கொள்ளவேண்டும். யாரால் இந்த பூமி (மண்) முன்பு உண்ணப்பட்டதோ

என்கிறார். வஸுந்தரா என்பதற்கு பூமி என்று பொருள். பலவகையான வஸுக்களை (வஸ்துக்களை) தரிப்பதாலே பூமிக்கு இப்பெயர் ஏற்பட்டது. வஸ்துக்களை உண்பது ஸஹஜம், ஆனால் அவ்வஸ்துக்களை சுமக்கின்ற பூமியை உண்பது என்பது எப்படி ! தீக்ஷிதர் இங்கு இதை அழகாக நிர்வஹிக்கிறார். **(ஆதி வராஹாதிரூபேண தேவதாரூபா வா, ரகுநாதாதிரூபேண கோலகரூபா வா உப புக்தா.)** ஆதி வராஹனாயிருந்து தேவதை என்ற உருவிலோ, ரகு நாதாதிரூபத்திலிருந்து உருண்டை வடிவமானதோ அனு பவிக்கப் பெற்றது என்றபடி. வராஹாவதாரத்தில் கை யில் மண்ணை ஏந்தி வந்ததும், பண்டாலிலையில் துயில் கொண்ட பொழுது வயிற்றில் பூமியை வைத்திருப்பதும் இரண்டு நிலைகள் என்று விவரித்தார் ஸ்ரீ அபிநவதேசிக ஸ்வாமி. மண்ணையுண்டவன் பிறக்கப்போகிறான், மண்ணை யுண்ணப் போகிறவன் பிறக்கப் போகிறான் ஆதலால் மண்வாசனை தேவகியை ஈர்த்தது போலும்! முன்பு மண்ணையுண்டவன் தானே எனது கர்ப்பத்தில் இருக் கிறான் என்று குறிப்பாள் போலும். ஸா என்பதற்கு அவள் என்று பொருள். ஸைஷா என்பது முன் ச்லோகம். ஸா என்றே இங்கு கூறுவது. ஸா என்பதை வஸுந்தரா என்பதோடும் சேர்க்கலாம் என்பர் டிப்பணியில். ஸா தேவகீ என்றே அன்வயித்தார் தீக்ஷிதர். காளிதாஸன் வரியைச் சிறிது மாற்றி யமைப்பர் போலும். ஸுதக்ஷிணை கர்ப்பவதி யாயிருந்த பொழுது மண்ணை யுண்டாள் என்றான். **ததாநநம் ம்ருத் ஸுரபி** என்றும், **திவம் மருத்வாநிவ போக்ஷ்யதே புவம்** என்றும் கூறினான். பிறக்கப் போகிறவன் பூமியை ஆளப்போகிறான் என்று

எண்ணி மண்ணில் மையல் கொண்டு அதைத் தின்றாள் என்று இதற்குப் பொருள். ஸ்வாமி ஏற்கனவே மண்ணை யுண்டவன், மண்ணையுண்டு வயிற்றில் வைத்துக்கொண்ட வன் கர்ப்பத்தில் எழுந்தருளியிருப்பதால் தேவகிக்கு மண்ணை யுண்பதில் நசை ஏற்பட்டது என்று கூறினார். இது ரஸம். மண்ணுக்கு ஏற்றம் முதன்மை யெல்லாம் உண்டு. வராஹன் பூவராஹன் என்றே அழைக்கப் பெற்றான். வாமனன் மண் இதுவென்று தோழி மண்ணை யளைவாள். தத்வ தரங்க பங்க்தே: விச்ராந்தி பூமிரஸி என்றார் பூஸ்துதியில். பூதேவி என்றும் பொருள் கொள்ள லாம். திருமாலுக்கு பூதேவி பத்னியாதலால் ஏற்றம் உண்டு. இந்த ரஸம் கண்டு உண்டு ரஸிப்பாள் போலும்.

ஸ விச்வ போக்தா மம கர்ப்ப பூத:

அந்த உலகை உண்டவன் எனது கர்ப்பத்தில் இருக் கிறான் என்று பொருள். விச்வத்தை புஜிப்பவன் என்று பதவுரை. ஹவ்ய கவ்ய போக்தா என்றார் தீக்ஷிதர். ஹரி ரீச்வரோத்ர தத்ஸந்நிதாநாத் அபயாந்தி ஸத்ய: ரக்ஷாம்ஸி அசேஷாணி அஸுராஸ் ச ஸர்வே, ஏகோ விஷ்ணுர் மஹத் பூதம் ப்ருதக்பூதாநி அநேகச: த்ரீந் லோகாந் வ்யாப்ய பூதாத்மா புங்க்தே விச்வபுக் அவ்யய: என்ற இடங்களில் எம்பெருமான் விச்வபோக்தா என்பது தெளிவாக்கப்பட்டது. சராசரங்களையும் உண்பவன் என்று க்ருஷ்ணத்வைபாயனர் கூறினார். விச்வமும் அவனே, விச்வத்தை உண்பவனும் அவனே. விச்வாத்மாநம் பரா யணம், விச்வமேவேதம் புருஷ: தத்விச்வம் உபஜீவதி, பதிம் விச்வஸ்ய, ஜோக்ரபுக் என்று புருஷ ஸூக்தம்

பேசியது. விச்வம் என்பதில் தொடங்கினூர் ஸ்ரீபீஷ்மர். ஐம்பூதங்களாலாயது விச்வம். ஒவ்வொன்றையும் உண்பான் என்று தனித்துச் சொல்ல வேண்டாமே. கடல் ஞாலமுண்டேனும் யானே என்ற நம்மாழ்வார். விச்வ போக்தா என்றதொரு ஆகாரத்தை குறிப்பிட்டருளினூர். தேவகியின் வயிற்றில் வளருபவன் மண்ணை மாத்திரமல்ல அனைத்தையும் புஜிப்பவன் என்ற உண்மையை வைய மேழும் கண்டாள் பிள்ளை வாயுளே என்று பெரியாழ்வார் விவரித்தார். ஆதலால் விச்வபோக்தா என்று ஸ்வாமி ப்ரயோகித்தார் என்பது ரஸம். மம என்கிறுள் தேவகி. மத்ஸ்த்தாநி ஸர்வபூதாநி என்றவன் இவளுடைய கர்ப்பத்திலே எழுந்தருளினூன். இவளுக்கு மம என்று சொல்லிக் கொள்வதில் இவ்வளவு ஏற்றம் உண்டு. இவ்வாறு நினைப்பது ஸாத்விகம். மண்வாசனை யேற்பட்ட பொழுதே பரத்துவத்தை மறைத்த ராமன் போலன்றே இந்த அவதாரம்!

இதி த்ருவம் ஸூசநம் ஆசரந்தீ இதைக் காண்பிப்பவள் போல் என்று பொருள். பூர்வார்த்தத்தில் கூறப்பட்டதை இதி என்ற சொல்லால் கொள்ள வேண்டும். நினைத்துக் கொள்ளலாம். ஆனுல் பிறர் நினைப்பதைப் பிறர் எவ்வாறு அறிய இயலும்! ஆதலால் ஸூசநம் ஆசரந்தீ என்கிறுர். தான் உணர்ந்ததை காண்பவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று எண்ணி அதன்படி அக்கருத்தினை வெளிப்படையாக்குவாள் போலும்! ஸூசநம் என்பதற்கு ப்ரகாசனம் என்று பொருள். த்ருவம் என்பது உத்ப்ரேக்ஷாவ்யஞ்ஜக சப்தம் என்பர். த்ருவா த்யௌ: த்ருவா ப்ருதிவீ த்ருவம் விச்வமிதம் ஜகத் என்ற இடத்தில் போலே இது ஸ்திரம் என்ற பொருளிலும் வரக்கூடும். இதி ஸூசநம் த்ருவம் ஆசரந்தீ என்று சேர்த்துப் பொருள் கூறவேண்டும்.

தத் தாத்ருசம் நாடிதகம் ததாந அந்த அந்த விதமான அபிநயத்தை செய்தாள் என்று பொருள். அதையும், அது போன்றதையும் என்னலாம்படி அபிநயம் இருந்தது. கர்ப்பிணி ஸ்த்ரீ அபிநயம் பண்ணுவாளோ என்று ஸந்தேகிக்கலாகாது. அவள் அபிநயம் பிடிக்கவில்லை. ஆனுல் அவள் கை கால் அசைவுகள் நமக்கு அபிநயமாகத் தோன்றுகின்றன. உள்ளே இருப்பவன் நாட்ய ரஸிகன். குடத்தில் இருக்கும் வஸ்துவிற்கும் ஆடுவான், குடங்களைக் கொண்டும் ஆடுவான். பாம்பின் தலையிலும் ஆடுவான். உள்ளங்களிலும் ஆடுவான். தேவகி அவனை கர்ப்பத்தில் கொண்டு ஆடுவாள் போலும். மண்ணை கையில் எடுப்பான், தாய் பார்க்கிருளோ என்று கண்ணைப் புறட்டிப் பார்ப்பான். இல்லையென்று அம்மண்ணை வாயில் போட்டுக்கொள்வான். திடீர் என்று யாராவது பார்த்து விட்டால் வெண்ணெயை விழுங்குமாப் போலே மண்ணையும் விழுங்குவான். நானல்லேன் என்பான். இம் மாதிரியே தேவகியும் மண்ணை எடுப்பாள் சுற்றம் பார்ப்பாள், வாயில் போட்டுக் கொள்வாள். யாராவது பார்த்து விட்டாலோ அப்படி யொன்றுமில்லை என்பாள். ஆனுல் வாயில் மண் வாசனை யில்லாமல் போகாது. இத்தகைய நிலையை ஸ்வாமி சுருக்கமாக இங்கு நாடிதகம் ததாந என்றுர். **தநு**-விஸ்தாரே என்ற தாது. நடித்தாள் என்ப

தோடு இல்லாமல், நடித்து நடித்துப் பார்த்துக்கொள்வாள் என்றும் கூறியபடி. கர்ப்பிணிகளுக்கு கல்பனே யதிகம். அதுவும் தன் வயிற்றில் இருக்கும் சிசுவைப்பற்றியதாகவே இருக்கும். ஸர்வேச்வரன் இவளை இப்படி யாட்டி வைப்பதில் வியப்பில்லை. தானே மகிழும் அபிநயம் போலும். விச்வபோக்தா, தத் தாத்ருசம் என்ற இரு சொற்களைப் பற்றி தீக்ஷிதர் உரையில் விவரணம் செய்துள்ளார்.

समाधिसुक्षेत्रकृषीवलानां
सन्तोष सस्योदय मेधकान्त्या ।
चकास तस्यास्तनचूचुकाभा
गर्भत्विषा गाढमिवानुलिप्ता ॥ १२ ॥

ஸமாதி ஸுக்ஷேத்ரக்ருஷீவலாநாம்
ஸந்தோஷ ஸஸ்யோதய மேககாந்த்யா
சகாஸ தஸ்யாஸ்தந சூசுகாபா
கர்ப்பத்விஷா காடமிவாநுலிப்தா (12)

(கருத்து) ஸமாதி என்பது நல்ல நிலம். அதில் க்ருஷி செய்பவர்கள் யோகிகள். அவர்களுக்கு ஏற்படும் ஸந்தோஷம் என்கிற பயிருக்கு மேகம் போல் ஒளிபெற்றது கர்ப்ப காந்தி. அந்த காந்தியினுல் ஓர் வகையான பூச்சைப் பெற்றதோ என்று சொல்லவல்லதாய் இருப்பது தேவகியின் ஸ்தனங்களின் நுனிபாகம். அது மிகவும் கறுத்திருந்தது என்றபடி.

(விரிவுரை) ஸமாதி ஸுக்ஷேத்ர க்ருஷீவலாநாம் ஸமாதி என்றதொரு நல்ல நிலத்தில் க்ருஷி பண்ணுபவர்களுக்கு என்று பொருள். யோகிகளுக்கு என்றபடி. இங்கு ஸமாதி என்ற சொல்லின் பொருளை அறிந்து கொள்வது முக்கியம். ப்ரணிதானம், மனதை ஒரு நிலைப்படுத்துவது, ப்ரம்ஹத்தினிடம் மனதை ஸ்திரமாக்குவது, த்யானம், இந்திரியங்களை அடக்குதல். போன்ற பல பொருள்கள் உண்டு. இடத்திற்கு ஏற்றவாறு பொருள் கொள்ளலாம். இவ்வாறே பகவத்கீதையிலும் ஸமாதி சப்தத்தை ப்ரயோகித்துள்ளனர். ஸ்ரீவிஷ்ணுபுராணம் 6-வது அம்சம் 7-வது அத்யாயத்தில் ஸமாதி சப்தத்தின் பொருள் விளக்கப்பட்டுளது. தஸ்யைவ கல்பநாஹீநம் ஸ்வரூபக்ரஹணஞ்ச யத், மநஸா த்யாநநிஷ்பாத்யம் ஸமாதி: ஸோபி தீயதே என்றுர் பராசரர். ஸமாதி நியதைரபி ஸாமி த்ருஷ்டம் என்றுர் தேவநாயக பஞ்சாசத்தில். ஸமாதி என்ற சொல்லுக்கு விஷ்ணு என்றே பொருள். விஷ்ணு எழுந்தருளியிருக்கும் ஸுக்ஷேத்திரங்கள் - திவ்ய தேசங்கள். அங்கு வஸிப்பதே க்ருஷியாக உள்ளவர்கள் என்றும் கொள்ளலாம் வ்ருஷ சைல வாஸியும் க்ருஷீவலன் என்றுர் ஸ்வாமி. அர்ச்சாஸமாதியில் இவ்வனுபவம். அஷ்டாங்கயோகத்தில் ஸமாதி என்பது உச்சநிலை.

ஸமாதௌ ஸமாதீயதே அஸ்மிந் ஆத்மக் ஞானம் இதி ஸமாதி:-மந: என்று விவரித்தார் கீதாபாஷ்யத்தில். தாத்பர்ய சந்த்ரிகையில் இதற்கு நிதி என்பதை த்ருஷ்டாந்தமாக்கினுர் ஸ்வாமி. மேலும் வேறு இடத்தில் நிர்மலீக்ருதமான மனஸில் என்று கூறினுர். அநுஸந்தானம் என்றும் வியாக்யானித்தார்.

ஆதலால் ஸமாதி என்ற ஸுக்ஷேத்திரத்தில் என்கிறார் இங்கு ஸ்வாமி தேசிகன். குடியானவன் ப்ரதிக்ஷணமும் அரும்பாடு படவேண்டும். யோகமும் அத்தகையதே என்பர். யோகசாஸ்த்ரம் வல்லவர்களே உணர்ந்தறிய வல்ல ச்லோகம் இது.

ஸந்தோஷ ஸஸ்யோதய மேககாந்த்யா: ஸந்தோஷமாகிற பயிர் முளைக்கு மேகம்போல் விளங்குபவை என்று பொருள். இது கர்ப்பத்விஷா என்பதற்கு விசேஷணம். குடியானவனுக்கு தான் விதைத்த விதை முளைத்தால் ஸந்தோஷம் ஏற்படுவது ஸஹஜம், குடியானவனைப்போல் யோகியின் ஸமாதி என்ற க்ஷேத்ரத்தில் ஸந்தோஷம் என்ற பயிர் முளைக்கிறகாலத்தில் என்று கூறுகிறார். மனதை வெளியில் செலுத்தாமல் அடக்கி, எத்தகைய விகாரமும் இல்லாமலிருக்கும் பொழுது ஈச்வர ப்ரணிதானத்தினால் உண்டாகும் ஸந்தோஷம் விலக்ஷணம். **ஸந்தோஷாத் அநுத்தம ஸுகலாப:** என்று பாதஞ்சலயோக ஸூத்ரம் கூறிற்று.

ஸஸ்யோதயத்தினால் ஏற்படும் ஸந்தோஷம் குடியானவனுக்கு. ஸந்தோஷமாகிற ஸஸ்யத்தின் உதயம் யோகிக்கு என்றபடியாம். ஸஸ்யத்தின் வளர்ச்சி என்றும் கொள்ளலாம். ஸஸ்யம் (பயிர்) மேகத்தைக் கண்டதும் தன் வளர்ச்சியை எண்ணி குதுகலிக்கின்றன. மேகத்தில் எவ்வளவு கறுப்பு நிறம் அடர்த்தியாக இருக்கிறதோ அவ்வளவு ப்ரகாசம் உண்டு என்னலாம். ஸாலம்பந யோகத்திற்கு இந்த கர்ப்பகாந்தி மேகத்தையொத்து விளங்கியது

என்றபடி. ஸாந்த்ரபயோத ஸௌபகனான எம்பெருமான் கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்க அந்த சோபை வெளியில் நின்று உட்கண்களால் காணும் யோகிகளின் ஸந்தோஷத்தை வ்ருத்தி செய்விப்பவையாய் அமைந்தன போலும். தர்மமேகம் என்றது ஒரு ஸமாதியின் நிலை. தர்மமேக: ஸமாதி: என்பது ஸூத்ரபாகம். இங்கு மேககாந்த்யா என்கிறபொழுது யோகஸூத்ரபாக சப்தங்களை ஸ்வாமி ஸ்மரிக்கிறார். இவ்வாறே க்ருஷிகவத் என்றும் ஒரு ஸூத்ரம். அதை க்ருஷீவலாநாம் என்பர் போலும்.

சகாஸ தஸ்யா: ஸ்தந சூசுகாபா தேவகியின் ஸ்தனங்களின் நுனிகளின் தோற்றம் அல்லது ஒளி விளங்கியது என்று பொருள்.

சகாஸ விளங்கியது-தஸ்யா: அத்தேவகியின். **ஸ்தந சூசுகாபா** ஸ்தனங்களின் நுனிகளின் ஒளி என்று பொருள் கர்ப்பகாலத்தில் இவை கறுப்பதும் கர்ப்பலக்ஷணமாகும், ஆதலால் இங்கு லர்ணனம். ஸ்தநசூசுகாபா சகாஸ என்பது ப்ரதானவாக்கியம், ஆபா-காந்த்யா சகாஸ எல்லாம் ஒளிமயம். **கஸ-கதௌ** என்றதாதுவின் உருவம். இதற்கு சோபையென்ற பொருளும் உண்டு என்றார் தீக்ஷிதர், இவ்வாறு உத்ப்ரேக்ஷை செய்யப்படுகிறது. ஸ்தநம் சூசுகம் என்று இப்படி ப்ரயோகிப்பானேன்என்று கேட்டுக்கொண்டு கவிஸமயம் இம்மாதிரி ப்ரயோகிப்பது உண்டு என்று ஸமாதானம் செய்து கொள்ளலாம் என்றும் அபிப்ராயப் படுகிறார் தீக்ஷிதர். சூசுகம் என்ற சொல் முலை நுனியைத் தான் சொல்லும். ஸ்தநம் என்ற சொல் வீண்தானே

என்று தோன்றும். அடுத்துவரும் ச்லோகத்தில் சூசுகரத்ந காந்தி: என்று ஸ்வாமியே ஸாதிக்கின்றார். இங்கு சப்த மயக்கம் ஏற்படவில்லை. தாத்பர்யம் இன்னதென்று அறிய வேண்டும். ஸ்தநம் என்ற சொல்லுக்கு ஸ்தநயதி-கதயதி வக்ஷ: சோபாம் இதி மார்பின் அழகைப் பேசுவது இந்த அவயவம் ஆனதால் இதற்கு இவ்வாறு பெயர் என்றான் ஹலாயுதன் அபிதாநரத்னமாலையில். இங்கு ஸ்தந சோபையும், அதற்கு சிகரம் வைத்தது போன்ற சூசுக சோபையும் கூறப்பட்டது எனில் வரும் குறையில்லை. நுனியே ஸ்தனமாகாது, ஸ்தனமே நுனியாகாது. ஸ்வாமி ஸ்ரீ ஸூக்தியில் அவகாஹனம் பண்ண பாக்யம் வேண்டும். இப்படி கவி ப்ரயோகிப்பது சரியோ என்று நினைக்காமல் இருக்கமுடியவில்லை. பஹுக்ரந்த தர்சியான ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியின் ஆழம்தான் என்னே! மஹாகவி மாகனின் ப்ரயோகம் இது:-**ஸகடிந குச சூசுகப்ரணுந்நம் ப்ரியம் அபலா ஸவிலாஸம் அந்வியாய** [ஏழாவது ஸர்க்கம் 19வது ச்லோகம்.] இங்கு மல்லிநாதன் ஸ்தநாக்ராப்யாம் என்றே உரை எழுதினான். ஆதலால் இங்கு ஸ்வாமியும் இவ்வாறு கூறினார் என்னலாம்.

கர்ப்பத்விஷா காடமிவாநுலிப்தா கர்ப்பகாந்தியினால் நன்றாகப் பூசப்பட்டதுபோல் இருந்தது தேவகியின் ஸ்தன சூசுககாந்தி என்று அந்வயிக்கவேண்டும். கர்ப்பத்தில் எழுந்தருளியிருப்பவனை கர்ப்பம் என்றே கொள்ளலாம் . அவனுடைய காந்தியோடு என்றபடி.

कस्तूरिकाकाम्यरुचिस्तदीया
रम्या बभौ चूचुकरत्नकान्तिः ।
तद्गर्भसन्दर्शनलोलुपानां
अन्तर्दृशां अञ्जनकल्पनेव ॥ १३ ॥

கஸ்தூரிகா காம்ய ருசிஸ்ததீயா
ரம்யா பபௌ சூசுகரத்ந காந்தி :
தத்கர்ப்ப ஸந்தர்சந லோலுபாநாம்
அந்தர்த்ருசாம் அஞ்ஜநகல்பநேவ (13)

(கருத்து) தேவகியின் முலை நுனிகளின் காந்தி இந்திர நீலமணி போல் இருந்தது. கஸ்தூரியே தான் அந்த காந்தியை பெற விரும்பும் வகையில் அழகான நிலையில் இருந்தது. அவளது கர்ப்பத்தினால் ஏற்படுவதுதான் அது. அந்த கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஸேவிக்கவேண்டும் என்ற உள்நோக்கு உடையவர்களுக்கு மைபூச்சாக அமைந்ததோ என்றபடி.

(விரிவுரை) **கஸ்தூரிகா காம்ய ருசிஸ் ததீயா** கஸ்தூரியும் விரும்பவல்ல காந்தி என்று பொருள். ஒளி மயமான ச்லோகம். கஸ்தூரியின் நிறம் கறுப்பு. கறுப்பில் அழகு வேறு எதிலுமே இருக்கும் இல்லை. கறுப்புக்கு வேறு உதாரணம் கூறலாம். ஆனால் இங்கு இவ்வாறு கூறியதில் பல ரஸமுண்டு. கஸ்தூரி விலை உயர்ந்த வஸ்து. எம்பெருமான் திலகம் தரிப்பது கஸ்தூரியினால் தான். **கஸ்தூரீ திலகம் லலாடபலகே** என்றும் கூறுவர். கஸ்தூரிக்கு

ஆமோதம் வாஸனை அதிகம். அதன் மணத்தை வெறும் சபதத்தினால் போக்க முடியுமோ என்பர். சூசுகம் பெற்ற நிறத்தை தாம் பெறவில்லையே என்ற வருத்தம் அவைகளுக்கு. கஸ்தூரி போன்ற நிறம் என்று பொருள். ததீயா என்பதற்கு அவளுடைய தான என்று பொருள்.

ரம்யா பபௌ சூசுக ரத்நகாந்தி: ரத்னங்கள் போன்று விளங்கிய அவற்றின் ஒளி மேலும் அழகாக விளங்கியது என்று பொருள். நீலரத்னங்கள் போல் அவை இருந்தன. கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமான் நீலமணி மயன். ஸ்வாபாவிகமான கறுப்பு நிறமான சூசுகங்கள் அப்ராக்ருதமானதொரு ஒளியைப் பெற்று விட்டதற்கு அம்மணியும் காரணம்! இரண்டு மணிகளும் மறைந்த இடத்தே இருக்கின்றன. காந்தி மட்டும் ப்ரஸரிக்கிறது போலும்.

தத்கர்ப்பஸந்தர்சந லோலுபாநாம்: அந்த கர்ப்பத்தை (கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை) காணவேண்டுமென்று ஆசையுடையவர்களுக்கு என்று பொருள். வெளிப்படையான பார்வையை தர்சனமென்றே சொல்வர். நன்றாக காண்பது என்று கூறப்படுகிறது. ஸாக்ஷாத்காரம் என்று பொருள். விலக்ஷணமான தொரு நிலை கண்ணில் படும்பொழுது அதன் உள்ளே என்ன இருக்கிறது என்று அறிய முற்படுவது இயற்கை. ப்ரம்ஹ ஸாக்ஷாத்காரத்திற்கு அலைபவர்கள் தானே யோகிகள். எங்கு அது இருக்கிறது என்று தகவல் கிடைத்தாலும் உடனே முயற்சிப்பர். லோலுபம் மந: என்று மாககவியும் கூறினான்.

அந்தர் த்ருசாம்: அஞ்ஜந கல்பநேவ உட் கண்களுக்கு மை தீட்டுவது போல் இருந்தது என்று பொருள். உள்ளே பார்வையுடையவர்கள் யோகிகள். வித்வான்களை அந்தர் வாணிகள் என்பர். அது போலவே உள் நோக்கு உடையவர்கள் என்றபடி, பௌதிகமான-வெளிப்படையான பார்வையுடையவர்கள் அல்லர். கர்ப்பத்தை பார்ப்பதில்லை. கர்ப்பத்திற்குள் எழுந்தருளியிருப்பவனை பார்ப்பதிலேயே கருத்துடையவர்கள். எவனை நினைத்தால், சொன்னால், அடைந்தால், கர்ப்பவாஸமே இல்லாமல் போகுமோ அவன் கர்ப்பத்தில் எழுந்தருளியிருப்பது எப்படி! இதைக் கண்டே தீரவேண்டுமென்று ஆசைப்படுகிறவர்களாகவும் இருக்கலாம். மேல்வாரியாக பார்க்கும் இயல்புடையவர்களுக்கு ஏற்றமில்லை. தம் **துர்தர்சம் கூடம் அநுப்ரவிஷ்டம் குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம், அத்யாத்ம யோகாதிகமேந தேவம் மத்வா தீரோ ஹர்ஷ சோகௌ ஜஹாதி** என்றது வேதம். அத்தகைய தீரர்கள் தான் அந்தர்த்ருஷ்டிகள். பாஹ்ய குத்ருஷ்டிகளுக்கு அந்தர் தர்சனம் கூடுவதில்லை. த்ருக் என்பதற்கு கண், பார்வை, புத்தி, பார்ப்பவன்-க்ஞாதா என்ற வகையில் பல பொருள்கள் உள்ளன. த்ருசாம் அந்த: கண்களுக்குள் இட்ட மை என்றனர். அஞ்ஜனம் என்பது மை. உள்ளே இருப்பவன் அஞ்சன வண்ணன். அஞ்சனம் பூசவேண்டும். இதை அஞ்ஜன லேபனம் என்ன வேண்டும். இந்த அஞ்சனம் கண்களுக்குத்தான் பூசப்படும். அவ்வாறின்றி அஞ்சன கல்பனம் என்கிறார். மைகூட்டி வைக்கப்பட்டுள்ளதோ என்று தோன்றச் செய்வது என்று பொருள். அந்தர்த்ருஷ்டிக்காக அல்லது திருஷ்டிகளுக்

களாக என்று தேரும். காந்தி கண்களில் படுவதால் கண்களுக்கு மெய்யிட்டதாகவும் அமையும். ஸித்தாஞ்ஜநம் இது. இந்த மையை இட்டுக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு பார்த்தால் உள்ளே இருப்பது தெளிவாகத் தெரியும். உள்ளே பார்வை செல்லுகிற பொழுது இந்த சூசுககாந்தி மை போல் அமைந்துவிட்டது என்பர். மை எப்படி காட்டித் தருமோ அவ்வாறே சூசுககாந்தி உள்ளே இருக்கும் மெய்யனைக் காட்டித்தந்தது போலும்! **அந்தர்த்ருஷ்டி**யுடன் ஸேவிக்க வேண்டிய ச்லோகம்.

परावराणां प्रभवस्य पुंसः
प्रकाशकत्वं प्रतिपद्यमानाम् ।
अभावयन् भावितचेतसस्तां
विद्यामयीं विश्वपितामहीञ्च ॥ १४ ॥

பராவராணும் ப்ரபவஸ்ய பும்ஸ:
ப்ரகாசகத்வம் ப்ரதிபத்யமாநாம்
அபாவயந் பாவித சேதஸஸ் தாம்
வித்யாமயீம் விச்வ பிதாமஹீஞ்ச (14)

கருத்து: பரிபக்வமான நிர்மலமான-மயர் வறமதி நலம் உடைய மஹான்கள் பராவரங்களுக்கெல்லாம் காரணமான பரமபுருஷனை வெளிப்படுத்தும் சிறந்த நிலையில் உள்ள அத்தேவகியை வித்யையாகவும், விச்வங்களுக்கெல்லாம் பிதாமஹியாகவும் உணர்ந்து கொண்டனர்.

விரிவுரை: இதற்கு முன் ச்லோகத்தில் யோகிகளின் ஸாக்ஷாத்கார ப்ரகாரத்தை ஒருவிதமான கவிஸமய சைலியால் உணர்த்தினார். இங்கு பரிபக்வமான மனோபாவத்தை அடைந்தவர்கள் ஸேவிக்கும் ப்ரகாரத்தைக் காட்டித் தருகிறார். எம்பெருமான் உள்ளே எழுந்தருளியிருப்பது ஸித்தம். அவன் எத்தகையவன் என்பதை உணரவேண்டும். இயற்கையாகவே கர்ப்பவாஸ பரிசயமுள்ளவனா! கர்ப்பவாஸ ச்ரமமே இல்லாதவனா! என்று நோக்க வேண்டும். அத்தகையவனை கர்ப்பத்தில் கொண்டவளின் ஏற்றம் என்னவென்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும். இதை இங்கு ஸ்வாமி உணர்த்துகிறார்.

பராவராணும் ப்ரபவஸ்ய பரங்களாயும் அவரங்களாயும் உள்ள ஜகத்திற்கு காரணமானவனுடைய என்று பொருள். ஜகத்-ஜங்கமமாயும் ஸ்தாவரமாயும் இரு கூறுயிருக்கும். ப்ரம்ஹருத்ரேந்த்ராதிகளுக்கும், தேவதிர்யங் மனுஷ்யாதிகளுக்கும் என்று பொருள். உத்க்ருஷ்டமாயும் அபக்ருஷ்டமாயுமுள்ள உருவங்களையுடைய என்று பொருள் கூறினார் தீக்ஷிதர். **பூர்வாபரரூபாணும் வா** முன்புள்ளவையும் பின்பு வரப்போகும் தன்மையதுமான என்றார். எல்லா உலகங்களுக்கும் என்று பொருள். **ப்ரபவஸ்ய** காரணமானவன் என்றபடி. இது பும்ஸ: என்பதற்கு விசேஷணம். ப்ரபவஸ்ய என்று இங்கு கூறியது ரஸம். **அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:** நான்தான் ஸர்வத்திற்கும் காரணம் என்று கீதையில் சொன்னான். அவனே இக்கர்ப்பத்தில் உள்ளவன். **அஹம் ஆதிர் ஹி பூதாநாம்** என்றும் அவன் பாசுரமேயுள்ளது. பவத்திற்கோ,

பவனுக்கோ இத்தகைய ஜகத்காரணத்வம் இல்லை என்றபடி. **விஷ்ணோ: ப்ரபவந்தி மாயா:** என்பதையும் நினைக்க.

பும்ஸ: புருஷனுடைய என்று பொருள். இவனை பரம புருஷன் என்பர். புமான் புத்ரோ ஜாயதே என்னுமாப்போலே இங்கு ஆகலாம். காரணாவஸ்தையில் இருக்கும் புருஷன்தான் இப்பொழுது கார்யாவஸ்தையில் கர்ப்பத்தில் எழுந்தருளியிருப்பான் போலும்! ப்ரக்ருதியோ, ப்ரம்ஹாதிகளோ, ஜகத்காரணம் அல்ல என்று உணர வேண்டும். புருஷசப்தம் நாராயணன் ஒருவனையே குறிக்கும்.

ப்ரகாசகத்வம் ப்ரதிபத்யமாநாம் தோற்றுவிக்கும் தன்மையை பெற்றிருப்பவள் என்று பொருள். ப்ரகாசமான ஒரு வஸ்துவை ப்ரகாசப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் அது குப்தமாக இருக்கிறது. இப்பொழுது கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்கிறது. அதை ப்ரகாசப் படுத்தும் நிலை இப்பொழுது தேவகிக்கு ஏற்பட்டுள்ளது. ப்ரகாசமான வஸ்து துர்தர்சமாவது வியப்பே. **த்வதந்யேந ந த்ருஷ்டபூர்வம்.** உன்னைத்தவிர பிற யாராலும் இதுவரை இந்த உருவம் காணப்பட்டதில்லை என்றான். ஜகத்காரணமான வஸ்துவை காட்டித்தருவது என்பது சாதாரண நிலையல்ல. அத்தகைய நிலையை அடைந்துவிட்டாள் தேவகி. நெருங்கின எதிர்காலமானால் நிகழ்காலத்திலேயே கூறலாம். ஸ்வாமி நிகழ்காலத்திலேயே கூறியிருப்பதை நிகழ்காலத்திலேயே பொருள்கொள்வதில் தடை ஏதுமில்லை. ஸ்வத: ப்ரகாசமான வஸ்து பிறரால் ப்ரகாசப்

படுத்தப்படும் நிலையை பெற்றதுபோலும். [இங்கு ப்ரகாசகத்வம் என்று புல்லிங்கப்ரயோகம் எப்படி பொருந்தும் என்று கேட்டுக்கொண்டு ஸ்த்ரீத்வம் அவிவக்ஷிதமாகையால் இவ்வாறு ப்ரயோகம் பண்ணலாம் என்று சமாதானம் சொன்னார் தீக்ஷிதர்.] மூலத்தில் ப்ரதிபத்ஸ்யமாநாம் வித்யாநிதிம் என்ற பாடமும் உளது. இதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு தீக்ஷிதர் உரையிட்டார். உத்தமூர் ஸ்வாமியும் ப்ரதிபத்யமாநாம், வித்யாமயீம் என்ற பாடத்தை ஆதரித்துள்ளார். ஆனால் டிப்பணியில் வித்யா நிதிம் என்பதற்கு பலம் தந்திருக்கிறார். ப்ரதிபத்யமாநாம் வித்யாமயீம் என்பதில் ஒருவகையான சுவை இருப்பதால் அதற்கேற்ப உரை எழுதியுள்ளேன்.

வித்யாநிதிம் என்பது புல்லிங்கமாகையால் ப்ரகாசகத்வம் என்பது பொருந்தும் என்று டிப்பணியில் ஸ்வாமி குறித்தார். விமர்சிக்க வேண்டியதொன்று. ப்ரகாசப்படுத்துதல் என்பது இப்பொழுதே ஏற்பட்டுவிட்டபடியால் இது பிறகு வரப்போகிறது என்று சொல்ல வேண்டியதில்லை. இது ப்ரதிபன்னமான விஷயம். அவதரித்த பிறகு இவ்வாறு ரூபணம் செய்யலாம், அவ்வாறில்லை.

அபாவயந் பாவித சேதஸ: தாம். பரிபக்வமான மனோநிலையுள்ளவர்கள் அவளை மேற்கூறியவாறு பாவித்தனர் என்று பொருள். ஸம்ஸ்க்ருதமான அந்தக்கரணமுடையவர்கள் ஞானிகள் நினைத்தார்கள். மய்யேவ மந ஆதத்ஸ்வ என்றபடி நிலையான மனோநிலையுள்ளவர்கள்.

வித்யாமயீம் விச்வபிதாமஹீஞ்ச. வித்யையாகவும், விச்வங்களுக்கெல்லாம் பிதாமஹியாகவும் (பாட்டியாக) நினைத்தனர். வித்யை என்பது வேதாந்தவித்யையை குறிக்கும். அவை பல. ஸத்வித்யை முதலானவை 32. மேலும் அவைகள் உண்டு. எல்லா வேதாந்த வித்யைகளும் எம்பெருமானை விளக்குகின்றன. அவ்வாறே தேவகியும் எம்பெருமானை விளக்கவல்லதொரு நிலையைப் பெற்றிருக்கிருள். வித்யைகளுக்கு ஏற்பட்ட அந்தஸ்து இவளுக்கும் ஏற்பட்டுளது. ஆதலால் இவளை வித்யையாகவே கருத்தில் கொண்டனர். ப்ராசுர்யம் விகாரம், ஸ்வார்த்தம் என்ற பொருள் உள்ளபொழுது மயட் என்ற ப்ரத்யயம் வரும். இங்கு வித்யாநிதிம் என்றே தீக்ஷிதர் விளக்குகிருர். வித்யாமயீம் என்பதற்கு அது தாத்பர்யமாகலாம், இரண்டு சொற்களுக்கும் வேற்றுமை உள்ளது.

வித்யாமயீம் என்பதற்கு பரவித்யா நிதாநரூபாம் என்று உரையிட்டார். இங்கு வித்யாமயீம் என்பதற்கு வித்யாஸ்வரூபமாக ஆனுள் என்பது ஸ்வரஸம். மேலும் இவளை ஜகத்திற்கு பிதாமஹியாகவும் கண்டனர். இது ரஸோக்தி. விச்வத்திற்கு-உலகனைத்துக்கும் என்று கொள்ள வேண்டும். உள்ளே இருப்பவன் விச்வபிதா. அவனே **பிதாஹம் அஸ்ய ஜகத:** என்று தானே சொன்னுன். அந்த ரங்கனும், **பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய**-இவ்வுலகுக்கெல்லாம் தந்தை நீயே என்றுன். ஆதலால் பகவான் விச்வபிதாவாகிருன். அவனைப் பெறுபவளாதலால் தேவகி பாட்டியாகவன்ருே ஆகிவிட்டாள். கர்ப்பிணிகளைப் பார்த்து நீ அம்மாவாகப் போகிருய் என்று சொல்வது

இயற்கை. ஆனுல் அவள் பாட்டியாக ஆகிவிட்டாள் என்பது ரஸம். இவ்வாறு அனுஸந்தானம் பண்ணுவது ஸ்வாமியின் வழக்கம். வேறு ஒரு இடத்தில் ந்ருஸிம்ஹாவதாரத்தைப் பேசும்பொழுது, கம்பமே பிதாமஹர்களுக்கெல்லாம் பிதாமஹி(பாட்டி)யாகிவிட்டாள் என்ருர்.

लिलेख विश्वानि जगन्त्यभिज्ञा
लीलाहृते चित्रपटे यथार्हम् ।
प्रायः प्रजानां पतयः प्रतीताः
यन्मातृकाः स्वेषु विधिष्वभूवन् ॥ १५ ॥

லிலேக விச்வாநி ஜகந்த்யபிக்ஞா
லீலாஹ்ருதே சித்ரபடே யதார்ஹம்
ப்ராய: ப்ரஜாநாம் பதய: ப்ரதீதா:
யந் மாத்ருகா: ஸ்வேஷு விதிஷ்வபூவந் (15)

(கருத்து) எல்லாம் நன்கே அறிந்து வைத்திருந்த தேவகி லீலைக்காக கொண்டு வரப்பட்ட சித்திரபடத்தில்-ஓவியம் தீட்டவல்ல துணியில் உலகங்களனைத்தையும் ஏற்றவாறு வரைந்தாள். ப்ரஜாபதிகள் என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ருஷ்டிகர்த்தர்கள் இந்த சித்திரத்தையே மனதில் கொண்டு அமைந்தனரோ அல்லது தங்கள் தங்கள் செயல்களில் இவற்றையே மாத்ருகையாக கொண்டனரோ என்று சொல்லும் பாங்கில் அமைந்தது தேவகி தீட்டிய ஓவியம்.

(விரிவுரை) இதற்கு முன் ச்லோகத்தில் பரமபுருஷனையே ப்ரகாசப்படுத்தும் தனிப்பேற்றினைப் பெற்றனள் என்றார். இங்கு ஜகத் ஸ்ருஷ்டிகர்த்தாக்களை ஸ்ருஷ்டிக்க வல்ல மாத்ருகையையும் விளையாட்டாக வரைந்த படத்தில் வரையறுத்து வரைந்து விட்டாள் என்கிறார். அவள் இழுத்த கோடுகளே ப்ரஜாபதிகளுக்கு கோட்பாடுகளாயின என்றும் கூறியபடி.

லிலேக விச்வாநி ஜகந்தி உலகங்களனைத்தையும் எழுதினாள் என்று பொருள். இன்றும் உலகப் படங்களை எழுதுவதை நாம் காண்கிறோம். ஆனால் அது ஒரு விச்வத்தின் படமேயன்றி விச்வங்களின் (உலகங்களின்) படங்களல்ல. எல்லாவுலகங்களையும் இக்காலத்தில் கண்டவரில்லை. விச்வாநி என்பதும் ஜகந்தி என்பதும் ஒரு பொருளையே குறிக்கும். ஆதலாலே வீணே என்னலாகாது. அதற்காக விச்வாநி என்பதற்கு ஸகலாநி (எல்லா) என்று பொருள் கூறினார் தீக்ஷிதர். இங்கு ஜங்கமமாயும் ஸ்தாவரமாயுமுள்ள விச்வங்களை என்றும் கொள்ளலாம். மேலும் இங்கு விச்வாநி என்றதில் பிறவிசேஷங்களும் உண்டு.

உள்ளே எழுந்தருளியிருப்பவன் விச்வங்களை ஸ்ருஷ்டிப்பவன். அவனை கர்ப்பத்தில் ஏற்றதால் இவளுக்கும் இத்தகைய ருசி. இங்கு விச்வாநி ஜகந்தி என்பது விச்வம் புவனமப்யபவாம் என்னுமிடத்தை நினைக்கச் செய்யும் போலும். ஏதோ எழுதவேண்டும் என்று எழுதினாளேயன்றி எழுதியே தீரவேண்டும் என்ற சூழ்நிலையும் கர்மவச்யதையும் இல்லை என்று கொள்ளலாம். அரசர் குலத்தில் பெண்கள் தமது விருப்பத்திற்கேற்ப கைவேலையில் நிபுணர்களாயிருப்பது இயற்கையே. தேவகியின் கலை ஓவியம் போலும். அன்றியும் அரண்மனையில் சித்ரலேகைகள் இருப்பது உண்டு. அவ்வாறின்றி இவளே சித்திரம் வரைந்தாள். எழுதப்படும் சித்திரம் இவளது கலைவண்ணத்தைக் காண்பிக்கும். ஸர்வக்ஞனை கர்ப்பத்தில் கொண்டதால் இவள் அபிக்ஞை. ஸாது கர்ம காரயதி என்னுமாப்போலே கருவிலே நின்றவாறே ப்ரேரணம் பண்ணுவான் போலும்! வித்யாமயீ என்று முன் ச்லோகத்தில் கூறினார். இங்கு அதையே அபிக்ஞை என்பதால் குறிப்பிடுவார். ச்ருங்கார-வீர-அத்புதசித்ரரூபனை தரிப்பதாலும் சித்ரலேகனத்தில் அபிருசி. அகிலலோக நிர்மாண நிபுணன் எதைத்தான் செய்துவைக்க மாட்டான்!

லீலாஹ்ருதே சித்ரபடே யதார்ஹம் லீலைக்காக கொண்டு வரப்பட்டது சித்ரபடம். சித்திரம் வரைவதற்கு ஏற்றதான தனித்துணி. அரண்மனைகளில் இது ஸஹஜம். சித்ரம் என்பதற்கு அழகான-ஆச்சரியமான-வியக்கவல்ல தொன்று என்று பொருள். யதார்ஹம்-ஏற்றவாறு என்றபடி. எந்த இடத்தில் எதை எழுத வேண்டுமோ அங்கு அதை எழுதினாள். விளையாட்டாக எழுதினது ஏனோதானோ என்று அமைந்து விடவில்லை. க்ரீடார்த்தமபி யம் ப்ரூயு: ஸ தர்ம: பரமோ மத: என்னுமாப்போலே (பெரியோர் விளையாட்டாகச் சொல்வதும் பரம தர்மமாகிவிடும்) தேவகியும் லீலைக்காக கொண்டுவரப்பட்டதில் அவலீலையாகவே எழுதியதாம். மத்த: ஸ்ம்ருதி: க்ஞானம் என்றான் கீதையில். அவனே தேவகியை அவ்வாறு எழுதச் செய்தான் போலும். அவனும் விளையாட்டுக்காரன். இதை ஸ்வாமி அழகான உத்ப்ரேக்ஷயால் விளக்குகிறார்.

ப்ராய: ப்ரஜாநாம் பதய: ப்ரதீதா: பிரஸித்தமான ப்ரஜைகளின் பதிகளானவர்கள் என்று பொருள். ப்ரஜைகளின் ஸ்ருஷ்டிக்காக நியமிக்கப் பெற்றவர்கள். தனபதி-ஸூரபதி-பித்ருபதி ஜலபதி ம்ருகபதி என்னுமாப்போலே ப்ரஜாபதிகளும் உண்டு. ஸ்ரஷ்டா ப்ரஜாபதிர் வேதா விதாதா விச்வஸ்ருட் விதி: என்று நான்முகனுன பிரமனைக் குறிக்கும் சொற்களை அமரஸிம்ஹன் சேர்த்துப் படித்தான். மற்ற பதிகளைக் காட்டிலும் இப்ரஜாபதிகளுக்கு ஏற்றமுண்டு. எந்த கல்பத்திலும் இதில் விகல்பம் இல்லை. ப்ரஜாபதி என்று ஏகவசனத்தில் சொன்னுல் பரம் பொருள் என்ற பொருள் தேரும். ஆதலால் ப்ரஜாநாம் பதய: என்று வ்யஸ்தமாகவும் பன்மையிலும் கூறினர். ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்க ஆரம்பித்து ஸர்பங்களை ஸ்ருஷ்டிப்பது போலன்றிக்கேயாயிற்று. தக்ஷர் முதலியோர் ப்ரஜாபதிகள். ப்ரஜாபதிகள் பத்து என்றும் இருபத்தியொன்று என்றும் கூறுவர். இந்திரனையும் மனுவையும் கூட ப்ரஜாபதி என்ற சொல்லால் கூறினர். விச்வாக்ய: தக்ஷ ப்ரஜாபதி என்றதையெல்லாம் கொள்க.

யந் மாத்ருகா: ஸ்வேஷு விதிஷ்வபூவந்

ப்ருப் ஹாக்கள் தங்கள் தங்கள் ஸ்ருஷ்டிகளைச் செய்து வருவர். எவ்வாறு ஸ்ருஷ்டிப்பது! ஸூரியனையும் சந்திரனையும் முன்பு இருந்ததுபோலவே ஸ்ருஷ்டித்தான் ப்ரம்ஹா என்பர். யதாபூர்வம் (முன்பிருந்த வகையிலேயே) என்று அங்கு சொல் அமைந்தது. முன் கல்பத்தில் எவ்வாறே அவ்வாறே என்றபடி. இங்கு யதாபூர்வம் என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு, தேவகி வரைந்த சித்திரத்தைக் கண்டு அப்படியே ஸ்ருஷ்டிக்கலாயினர் என்று அழகாக நிரூபணம் செய்கிறுர். விதிஷு என்பதற்கு ஸ்ருஷ்டிகளில் என்று பொருள். ஸ்ருஷ்டிகளில் என்று கூருமல், விதிஷு என்பதில் ரஸமுண்டு. பிரமன்களையும் விதிப்பவன் ஒருவன். அவன் விதித்தபடியேதான் எதுவும் அமையும். பிரமன்கள் அவனுக்கு விதேயர்கள். விதி தவருது ஸ்ருஷ்டிக்கலாயினர் என்றபடி. தேவகி வரைந்த ஓவியத்தை ஆதாரமாகக் கொண்டு ஸ்ருஷ்டித்தபடியால் அவர்கள் பிரஸித்தமானுர்கள். விவிதமாயும் விசித்திரமாயும் உள்ள ஸ்ருஷ்டிகளைப் பார்த்து, இது எங்ஙனே! என்று கேட்டால் அவர்கள் தேவகீ வரைந்ததையே மாத்ருகையாகக் காட்டுவர் போலும். தேவமாத்ருகம் என்னுமாப்போலே தேவகீ மாத்ருகம் என்னலாம். தேவகீ எம்பெருமானுக்கு மாதாவானுள். அவள் தீட்டிய சித்திரம் பிரமன்களுக்கு மாத்ருகையாயிற்று என்பது ரஸம். விதிஷு என்பதற்கு தமது கார்யங்களில்-ஸ்வக்ருத்யேஷு என்று கூறினுர் தீக்ஷிதர். இவ்வளவு அழகாகவும், கச்சிதமாகவும், ப்ரஜாபதிகள் எல்லாம் பின்பற்றக் கூடிய நேர்த்தியுடையதாகவும் தேவகீ வரைந்த சித்திரம் விளங்கியது என்று கூறியபடியாம்.

निराशिषां पद्धतिमाददाना
नैःश्रेयसीं नीतिमुपन्नयन्ती ।
पुण्याशया पूर्वयुगप्ररोहं
इयेष देवी भुवने विधातुम् ॥ १६ ॥

நிராசிஷாம் பத்ததி மாததாநா
நைச்ரேஸீம் நீதிம் உபக்நயந்தீ
புண்யாசயா பூர்வ யுகப்ரரோஹம்
இயேஷ தேவீ புவநே விதாதும்: (16)

(கருத்து) எதிலும் அபிலாஷையில்லாதவர்களான விரக்தர்களின் மார்க்கத்தை அடைந்தவளாயும், முக்திக்கு உபயோகமான நீதியை (நெறியை) வெளியில் மனதைச் செலுத்தாதொரு நிலையை அருகில் பெறுகின்றவளாயும் நல்ல உள்ளம் படைத்தவளாயும் விளங்கும் தேவகி உலகில் முந்திய யுகத்தின் முளைத்தலாகிற தோற்றத்தை ஏற்படுத்த விரும்பினுள்.

(விரிவுரை) **நிராசிஷாம் பத்ததிம்ஆததாநா** தேவியான தேவகியானவள் உலகில் க்ருதயுகதர்மம் நிலவ ஆசைகொண்டாள் என்கிருர். நிராசிஷாம் என்பதற்கு விரக்தர்களின் என்று பொருள். அவர்களின் வழியைப் பின்பற்றினவளாய் என்றபடி. எதிலுமே ஆசையில்லாதவர்கள். விரக்தர்கள் அகாமஹதரான ச்ரோத்ரியர்கள் என்றும் கொள்ளலாம். சதாயுஷ: புத்ரபௌத்ரான் வ்ருணீஷ்வ என்றபோதும், ச்வோபாவா: என்று மறுத்துவிடும் நிலையில் உள்ளவர்கள். பரிமிதமான பலத்தில் நசையும் இல்லாதவர்கள். ஐஹிகத்தில் எதையும் வேண்டாதவர்கள். ஆமுஷ்மிகத்திலும் முக்தியொன்றையே விரும்பும் பண்புடையவர்கள். அவர்களின் பத்ததி-வழி. அடிச்சுவடு என்றபடி. பத்ததி என்பதற்கு வரிசை என்றும் பொருள். விரக்தர்களின் வரிசையில் சேர்ந்தவள் என்றும் கொள்ளலாம்.

நைச்ரேயஸீம் நீதிம் உபக்நயந்தீ நிச்ரேயஸ ஸம்பந்தியான முக்திக்கு உபயோகமுள்ளதான நீதி என்று உரையிட்டார் தீக்ஷிதர். அபஹிர்மநஸ்கதாதி ரூபாம் என்ருர். நிச்ரேயஸம் என்பதற்கு முக்தி: கைவல்ய-நிர்வாண ச்ரேயோ நிச்ரேயஸாம்ருதம் என்று அமர கோசத்தையடி யொத்தி இவ்வாறு உரையிட்டார். யதோப்யுதய நிச்ரேயஸ ஸித்தி: ஸதர்ம: என்பர். தர்மத்தின் பலம் நிச்ரேயஸம் என்பதாம். நிவ்ருத்தி தர்மத்தில் இழிந்தவர்களின் நிலை என்ருர் அஸ்மத்ஸ்வாமி. நீதிம் என்பதற்கு நெறி என்று பொருள். ச்ரேய ஆததாநஸ்ய ஸாது பவதி என்ற கடவசனத்தில் உள்ள ஆததாநஸ்ய என்பதை ஆததாநா என்று கூறினுர். உபக்நயந்தீ கோள் கொம்பாகப் பற்றியது என்று பொருள். ஆச்ரயம் குர்வதீ என்ருர் தீக்ஷிதர். ஸ்யாதுபக்நோ அந்திகாச்ரயே என்ருன் அமரஸிம்ஹன்.

புண்யாசயா பூர்வயுகப்ரரோஹம் நல்ல எண்ணமுடையவள். புண்யமான ஆசயத்தையுடையவள் என்று பஹுவ்ரீஹிஸமாஸம். புண்யசப்தத்திற்கு அத்ருஷ்டம், தர்மம் ச்ரேயஸ் ஸுகந்தம் சுபகார்யம், அழகு, தூய்மையானது என்று பொருள் உண்டு. ஆசயா என்பதற்கு ஆதாரம் இருப்பிடம் என்று பொருள். புண்யத்திற்கு இருப்பிடமானவள் என்பதாம். ஜலாசயம் என்னுமாப் போலே புண்யம் தேங்கிய இடம் என்னலாம். புண்யனை ஆசயத்தில் கொண்டவள் என்றும் கூறலாம். பூர்ண: பூரயிதா புண்ய: என்ற வகையில் புண்யசப்தம் தேவகீ நந்தனனை குறிக்கும். அவனை கர்ப்பாசயத்தில் கொண்ட

வள் என்றபடியும் ஆம். புண்யம் என்பதற்கு தூய்மை என்ற பொருள்கொண்டு பரிசுத்தாந்தக்கரணா என்று வ்யாக்யானம் செய்தார் தீக்ஷிதர். வைராக்யம் முதலானவை தூய்மைக்கு காரணமாகலாம். ப்ரதமாவிபக்தியாக இல்லாமல் த்ருதீயாவிபக்தியிலும் பொருள்கொள்ளலாம். புண்ணியத்தில் ஆசையாலே என்றபடி, பூர்வார்த்தத்தில் நைராச்யத்தைக் கூறி பின் பகுதியால் புண்யத்தில் ஆசையென்பதால் பெருமையுண்டு. புண்யனான எம்பெருமானுடைய ஆசையினாலே இவள் விரும்பினாள் என்றும் அந்வயித்துக்கொள்ளலாம். எல்லாம் பொருந்தும். பூர்வயுக ப்ரரோஹம். முன்யுகத்தை மேலும் முளைவிடச் செய்ய என்றபடி. பூர்வம் என்பதற்கு முதலாவதான என்று பொருள். ஸர்வபூர்வமான யுகம் க்ருதயுகம் என்று விவரித்தார் தீக்ஷிதர். எம்பெருமான் அவதரித்ததும் க்ருதயுகம் தோன்றப்போகிறது என்று கூறியபடி. பூர்வ சப்தத்திற்கு முதலாவது, ஆதியானது, ஸமக்ரமானது, என்றும் பொருள். பூர்வம் முந்தியது. எதற்கு என்றால் தேவகியிருந்த யுகத்திற்கு முன்பு என்று கொள்ளலாம், தேஷாம் பூர்வ: பூர்வ: ஜந்மத: ச்ரேயான் என்னுமாப்போலே, கலியானால் த்வாபாரம் சிறந்தது, த்வாபரமானால் த்ரேதை சிறந்தது, த்ரேதையானால் க்ருதம் சிறந்தது என்ற அடைவிலும் பொருள் கொள்ளலாம். த்ரேதையில் கார்த்தயுகதர்மத்தை ப்ரவர்த்தனம் பண்ணினான் மஹாவீரன் என்பர். கல்கியை ப்ரஸங்கிக்கும் ஸ்வாமி புந: க்ருதயுகாங்குரம் புவி க்ருபாணதாராதர: என்று விவரித்தார்.

இயேஷ தேவீ புவநே விதாதும்:— உலகில் இவ்வாறு க்ருதயுகம் செழிக்க விதை விதைப்பவளாய் நாற்றங்கால் அமைப்பவளாய் விளங்கினாள். இயேஷ-விரும்பினாள். தேவியானபடியால் இந்த விருப்பம். புவநம் என்பது உலகு என்பதைக் கூறுவதாயினும் வேறு பொருளும் கொண்டது. நீரில் என்றும் கொள்ளலாம். ஸலிலம் புவநம் வநம் என்று அமரகோசம் கூறும். நாற்று நட வேண்டுமானால் நீருடன் செழித்த நிலத்தில்தான் நட வேண்டும். நீரில்லையானால் அங்குரம்-முளை-வளர்வதில்லை. இங்கு சொற்களின் அமைப்பு மிகவும் அழகு. பயிரிட வேண்டிய நிலத்தின் தன்மை நிலைமைகளை உற்று நோக்கினால் உணர்ந்துகொள்ளலாம். இது சப்தங்களின் விஹாரரஸம். பத்ததி-உபக்னம், ஆசயம், யுகம், ப்ரரோஹம், புவநம், [க்ருஷிஸம்பந்தமானவை இவை] யுகப்ரரோஹம், இரட்டை இரட்டையாய் முளைப்பவை அல்லது நடப்படுபவை என்றும் தேரும். சரணாகதர்களை பயிராக கூறினார் தயாசதகத்தில்.

கர்ப்பிணிகளுக்கு சில சில ஸமயங்களில் உணவில் அருசி ஏற்படும். எதிலும் ருசியிருக்காது. விரக்தியே ஏற்படும். எதிலும் நிவ்ருத்தியே காணப்படுவதால் க்ருதயுக தர்மம்தான் தோன்றிவிட்டது என்று சொல்லும் வகையில் காணப்பட்டாள் என்று டிப்பணியில் குறிக்கப்பட்டது. பூரணமான க்ருஷியுடையவர்களுக்கே புலனாகும் ச்லோகம். கொடி படருவதற்கு கோள் கொம்பு தேவை. அதை நைச்ரயஸநீதி என்றார்.

अनाप्तपूर्वं किमपेक्षितं ते
किं वोपपद्यामथवाधुनेति ।
वयस्यया भावविदानुयुक्ता
न किञ्चिदित्येव जगाद नाथा ॥ १७ ॥

அநாப்த பூர்வம் கிம் அபேக்ஷிதம் தே
கிம் வோபதத்யாம் அதவாதுநேதி
வயஸ்யயா பாவவிதா நுயுக்தா
ந கிஞ்சிதித்யேவ ஜகாத நாதா (17)

(கருத்து) இதுவரை நீ அடைந்திராதது ஏதாகிலும் வேண்டும் என்று நினைக்கின்றாயோ, அல்லது இதுவரை நீ அனுபவித்ததில் உனக்கு மிகவும் பிடித்தமானது ஏதாகிலும் அபேக்ஷிக்கின்றாயோ ! என்னவேண்டும் என்று சுவடறிந்த தோழி கேட்கின்றாள். ஒன்றும் வேண்டாம் என்றே பதில் கூறினாள் தேவகி. அவள் நாதையன்றோ ! அவளை வற்புறுத்த இயலுமோ ! என்றபடி.

(விரிவுரை) இதற்குமுன் ச்லோகத்தில் தேவகிக்கு சில விருப்பங்கள் இருந்தன என்று கூறினார். இப்பொழுது அவளுக்கு ஸ்வார்த்தமாக எதிலும் விருப்பமில்லை என்று கூறுகின்றார்.

அநாப்த பூர்வம் கிமபேக்ஷிதம் தே ஸமானமான வயஸ்ஸை உடையவர்கள் தோழிகள் என்று கருதப் படுவர். தோழிகளுக்கு ஒருவருடைய உள்ளம் பீறருக்குப் புரிந்திருக்கும். கர்ப்பகாலத்தில் பலவிதமான எண்ணங் கள் தோன்றுவதும், பல பல ஆசைகளும் உண்டாவதும் இயற்கை. பிறக்கவிருக்கும் குழந்தையைப் பற்றியதாயும் இந்த எண்ணம் இருக்கலாம். இதன் புஷ்டியாகவே பிறக்கும் குழந்தைக்கும் ஆசை, எண்ணம் முதலியன ஒருமித்து இருக்க வாய்ப்புண்டு. உனக்கு என்ன இப் பொழுது அபேக்ஷிதம் என்று கேட்கிறாள். லஜ்ஜாபயங் கள் இல்லை. எதுவும் வேண்டாம் என்கிறாள். புதியதாக ஏதாகிலும் வேண்டுமோ என்றால் அதற்கும் அதே பதில் தான். இதுவரை கண்டதே இல்லையே அத்தகையதை என்றால் ருசி பிறக்காதோ என்று நினைத்து கூறுவாள் தோழி. அப்பொழுது நாதபாவனையுடம் கம்பீரமாகவே பதில் கூறுவாள். கர்ப்பத்தில் எழுந்தருளியிருப்பவன் அவாப்தஸமஸ்தகாமன். அவனே ந அநவாப்தம் அவாப்த வ்யம் என்று சொன்னவனே யல்லவா ! அவனையே திரு வயிற்றில் கொண்டபொழுது எல்லாவற்றையும் அடைந்து விட்டபடியால் இதற்குமுன் அடையப்படாததென்று ஒன்றில்லை என்றபடியாம். ஆஹாராதி விஷயங்களிலும் இவ்வாறு கேட்பதுண்டு, இதற்குமுன் அனுபவத்தில் உள்ளதையே அபேக்ஷித்தாலும் ஸித்தம் பண்ணித் தருகி றேன் என்றால் அதற்கும் இதே பதில்தான்.

வயஸ்யயா பாவவிதாநுயுக்தா முன்பின் தெரியா தவர்கள் கேட்கவில்லை. பால்யம் முதல் பழகிய ஸகியே கேட்கின்றாள். மிகவும் நெருங்கிய தோழி. பாவம் என்ப தற்கு மனோநிலை என்று பொருள். தேவகியின் மனோநிலை என்று பொருள். அதை நன்கே அறிந்தவள் தோழி. கர்ப் பிணிகளின் மனோபாவத்தை நன்றாக அறிந்தவள் தோழி

ஆதலால் கேட்டாள். அநுநயமாகக் கேட்டாள். இங்கு अभावविदा (அபாவவிதா) என்று பிரித்துப் பொருள் கூறினார் தீக்ஷிதர். மனோபாவத்தை அறியாததொழியென்று விளக்கினார். பகவத் ரூபத்தைப் பெற்றுவிட்டாள் தேவகி, நித்யத்ருப்தையாகிவிட்டாள். மற்றைய கர்ப்பிணிப் பெண்களுக்குப் போலே பிற வஸ்துக்களில் சிறுநசையில்லாதவள் இவள் என்பதை அறியமாட்டாதவளாய் தோழி இவ்வாறு வினவினாள் என்று விவரித்தார். இவளுடைய அபேக்ஷயின் அபாவத்தை அறிந்து வைத்தும் என்று டிப்பணியில் இக் கருத்தை வலுப்படுத்தினார். ஸ்நேஹத்தினால் கேட்டாள். தெரிந்து வைத்தே கேட்டாள். பெண்களுக்கு பிறருடைய மனோநிலையை எளிதில் புரிந்துக்கொள்ளக்கூடிய அசிக்ஷித படுத்வம் உண்டெனில் அந்தரங்க தோழிகளுக்கு கேட்கவேண்டுமா! பாவத்தை அறியாதவள் என்றோ; சுபாவத்தை அறிந்தவள் என்றோ கொள்வதைக்காட்டிலும் भावத்தை உணர்ந்தவள் என்று பொருள் கொள்வதில் ரஸமுண்டு. பாவம் என்பதற்கு ஸ்வபாவம் என்று பொருள். கர்ப்பிணி ஸ்வபாவம் என்றபடியாம்.

ந கிஞ்சிதித்யேவ ஜகாத நாதா (எதுவும் அபேக்ஷிதமில்லை என்றே பதில் கூறினாள். जगाद என்பதற்கு தெளிவாக உரைத்தாள் என்று பொருள். गद् வ்யாக்தாயாம் வாசி என்பதுதாது. வ்யக்தமாகச் சொன்னாள். நீ அறிந்தவாறே ஒன்றும் தேவையில்லையே என்று டிப்பணியில் விவரணம் செய்தார். இங்கு एव என்பதை வயஸ்யயா பாவவிதா, அநுயுக்தா என்ற சொற்களோடு தனித்தனியே சேர்த்துப் பொருள் கொள்ளலாம்.

நாதனை கர்ப்பத்தில் கொண்டதால் இவள் நாதையானாள். க்ருஷ்ணனை நாதன் என்று கூறுவதில் ஸ்வாமிக்கு ஊற்றம் அதிகம். நாதாயைவ நம: பதம் என்று வேறு இடத்தில் கூறினார். நாதஸ்ய நந்தபவநே என்றும் சொன்னார். நாதனைப் பெற்றவளை அல்லது பெற்றெடுக்கப் போகிறவளை நாதா என்பதில் குறையில்லை. நாதா என்பதனால் அதிகாரதோரணை தோற்றும் வகையில்லாதவள் நாதா என்றும் பொருள் கொள்ளலாம். முன் ச்லோகத்தில் ஆததாநா என்றார். இங்கு உபதத்யாம் என்கிறார். இந்த ச்லோகம் மாற்றி படிக்கப்படுகிறது. அநாப்தபூர்வம் கிமபேக்ஷிதம் தே. கிம் புக்தபூர்வேஷ்வது நோபதத்யாம் என்று வேறு கோசங்களில் பாடம் உள்ளது.

अनादरे देवि सखीजनानां
कथं न दूयेत दया तवेति ।
उपह्वरे संलपिता मनोज्ञैः
आलोकनैरुत्तरं आचचक्षे ॥ १८ ॥

அநாதரே தேவி ஸகீஜநாநாம்
கதம் ந தூயேத தயா தவேதி
உபஹ்வரே ஸல்லபிதா மநோக்ஞை:
ஆலோகநை: உத்தரம் ஆசசக்ஷே (18)

(கருத்து) தோழிமார்களை இப்படி அநாதரம் செய்யலாமோ! அவர்கள்பால் நீ காட்டும் தயை என்ன ஆவது!

அத்தயையே பரிதபிக்காமல் இருக்குமோ! இவ்வாறு ஏகாந்தத்தில் ஜனஸஞ்சாரமில்லாத இடத்தில் ஸல்லாபம் செய்வதை செவிசாய்த்தாள். அப்பொழுது அழகு ததும்பும் பார்வைகளால் பதில் உரைத்தாள் என்றபடி. கர்ப்பத்தின் வளர்ச்சியாலும், சரீரத்தில் தளர்ச்சியாலும் எனக்கு ஏன் இரக்கமில்லை என்று வாயால் சொல்லாமல் கண்களால் காட்டுவாளாயிற்று.

அநாதரே தேவி ஸகீஜநாநாம். ஸகிகள் பலர், அவர்கள் தேவகியின் அன்புக்கு அடிமையானவர்கள். கள்ளமற்றவர்கள். பணிப்பெண்கள் வேறு தோழிகள் வேறு. இவர்களின் அந்தஸ்தில் ஏற்றத் தாழ்வுகள் உண்டு. தேவகி தேவியாகின்றாள். அவள் அந்தஸ்து மிக மிகப் பெரியது. யாருடைய ஆதரவு அவளுக்கு வேண்டும்! ஆனால் அவளுடைய ஆதரவு பிறருக்கு வேண்டும். அதைப் பெரும் பேருக நினைத்திருப்பவர்கள் அவளின் தோழிகள். நறுக்கென்று ஒன்றும் தேவையில்லை என்று உரைத்து விட்டாள் என்று முந்திய ச்லோகத்தில் கூறினர். அதனால் தோழிமார்களுக்கு கலக்கம் ஏற்பட்டது. தேவகியின் தயையை இழந்து விடுவோமோ என்று ஐயப்பாடு கொண்டனர். அப்பொழுது ஸகீஜனங்களை அநாதரம் செய்யலாமோ! என்று சொல்வர் போலும்.

கதம் ந தூயேத தயா தவேதி. உனது தயை வருந் தாதோ என்று பொருள். எங்களைப் பார்த்து வருத்தம் கொண்டு எங்கள்பால் தயை செய்கிறாய். நீ அநாதரம் செய்யலாம். நீ எங்களைக் கண்டு வருத்தப்படாமல் இருக்க லாம். ஆனால் உனது தயை எங்களை நீ அநாதரம் செய்த

தைப் பார்த்து ஐயோ என்று பரிதபித்துப்போகும். இது உண்மை. தயநீயர்களிடம் தயைக்கு இடமில்லையானால் தயை வருந்தாதோ! ஆம் தயைக்கு சொந்தக்காரி நீ தானே! தயை அழுதால் நீ சிரிக்க இயலுமோ! கதம் ந தூயேத-எப்படி வருந்தாதுபோகும்-ஸகீஜநாநாம் அநா தரே தவ தயா கதம் ந தூயேத! ஸகீஜனங்களை அநா தரித்தால் என்று பொருள். அநாதரம் இங்கு பேசாமல் இருப்பது, அவர்களுக்கு பதில் சொல்லாமல் இருப்பது. எதைச் சொன்னாலும் மறுத்துவிடுவது என்று கொள்ள வேண்டும். ஸகீஜனங்கள் உன்னை அநாதரிப்பதில்லை அது அகிஞ்சித்கரம். நீ அநாதரித்தால் அவர்களுக்கு ஸ்வரூப ஹானி. தயா ந தூயேத கதம் தவேதி என்றும் பதத்தை மாற்றிய பாடமும் உள்ளது.

உபஹ்வரே ஸல்லபிதா மநோக்ஞை: உபஹ்வரம் நிர்ஜனமானஸ்தானம். ஏகாந்தம் ரஹோந்திகம் உபஹ் வரே என்றது கோசம். தனியே பேசும்பொழுது தோழி களுடன் அழகாக அவர்களைப் பார்த்தாள். அதுவே அவர் களுக்கு பேரின்பத்தையளித்துவிட்டது போலும்.

ஆலோகநை: உத்தரம் ஆசசக்ஷே பார்வை களால் பதில் கூறினள் என்று பொருள். மநோக்ஞை: என்பது விசேஷணம். மனதினாலேயே அறியவல்லதான பார்வைகள் என்றபடி. அழகான மனோகரமான-என்று பொருள். அவளுடைய பதில் பார்வைகளால் வெளி யாயது. பார்வைகள் எத்தனையோ விதம். தயை இல்லை என்று யார் சொன்னது! எனது வயிற்றில் இருப்பவன் பார்வையாலேயே தயை செய்பவன் ஆயிற்றே. என்று தானும் அவ்வாறே செய்வள் என்றும் கொள்ளலாம்.

இங்கு கர்பத்தினாலே ஏற்பட்ட தௌர்பல்யம்-நலிவு காட்டப்பெற்றது என்றார் தீக்ஷிதர். வாயினால்தான் பதில் சொல்லவேண்டும் என்பதில்லை. பார்வையாலும் தயை ஸம்ரக்ஷிக்கப்படும் என்றார் டிப்பணியில். தம்பால் ஆதரம் பெருகவைத்த அழகன் கர்ப்பத்தில் வளரும்பொழுது இவள் அநாதரம் செய்வது ஏனோ என்று வியப்பும் தோன்றும். வளர்ச்சிதான் இதற்கும் காரணம் என்றபடி

अशेत सा काममजातनिद्रा
मातुं प्रवृत्तेव पदानि चक्रे ।
अध्यास्त लोकान् अवधीरयन्ती
भद्रासनं भावितपारमेष्ठ्या ॥ १९ ॥

அசேத ஸா காமம் அஜாத நித்ரா
மாதும் ப்ரவ்ருத்தேவ பதாநி சக்ரே
அத்யாஸ்த லோகாந் அவதீரயந்தீ
பத்ராஸநம் பாவிதபாரமேஷ்ட்யா (19)

[கருத்து] தூக்கமேயில்லாத தேவகி எப்பொழுதும் சயனித்து இருந்தாள். சில ஸமயங்கள் மெள்ள மெள்ள அடிமேல் அடிவைத்து நடந்தாள். யாருமே அவளுக்கு லக்ஷியத்தில் இல்லை. பரிஜனங்களை மதிக்கவேயில்லை. எங்கு தோன்றுகிறதோ அங்கு உட்காரலானாள். உலகை நடத்தும் பெரிய ராணி மாதிரியே உயர்ந்த ஸ்தானத்தில் அமர்ந்தாள். இவையெல்லாம் கர்ப்பவதிகளின் அவஸ்தைகள்.

[விரிவுரை] **அசேத ஸா காமம் அஜாதநித்ரா** இந்த ச்லோகத்தில் கர்ப்பிணிகளின் அவஸ்தைகளை வர்ணிக்கிறார். மூன்று அவஸ்தைகள். சயனம். கமநம், ஆஸனம் என்பவை இவை. காமம் என்பதற்கு விருப்பம் போல் என்று பொருள். அசேத = சயனித்தாள்—படுத்தாள். அசதியும் காரணம். காமம்—அத்யர்த்தம்—மிகவும் என்று பொருள் கூறினார் தீக்ஷிதர், அஜாதநித்ராபி என்றும் கூறினார். தூக்கம் வராவிட்டாலும் என்று பொருள்.

மாதும் ப்ரவ்ருத்தேவ பதாநி சக்ரே அளப்பதற்கு முனைந்தவள் போல் அடிகளை வைத்தாள். ஸஞ்சரிக்க இடம் எத்தனை அடிகள் இருக்கின்றன என்று அளந்து பார்ப்பவள் போல் இருந்தது அவளுடைய நடை. இதுவும் அசதியின் பயனே. மிதாநி என்பதற்கு அடிவைப்புகள் என்று பொருள்.

அத்யாஸ்த லோகாந் அவதீரயந்தீ அருகில் இருப்பவர்களை ஆதரிக்காமல் இருப்பவளாய்— லக்ஷியம் பண்ணாதவளாய் என்று பொருள். இங்கு லோகாந் என்பதற்கு பரிஸரவர்த்தி ஜநாந் என்று உரையிட்டார். யாருமே அவளுக்கு லக்ஷியமாகப்படவில்லை என்று கொள்ளலாம். நிஸ்ப்ருஹனுக்கு அரசனும் த்ருணத்திற்கு ஸமானம் என்பதுண்டு. இங்கு லோகாந் என்பதற்கு கண்களில் படுகின்ற தோழிகள் பணிப்பெண்கள்— அல்லது யாராயினும் சரி என்று பொருள் கொள்ள வேண்டும். நாதா என்று முன் ச்லோகத்தில் கூறினார். அந்த நாதபாவம் தொடர்ந்தால் இந்த நிலை ஏற்படுவதில்

விந்தையில்லை. (லோக்யந்த இதி லோகா: தாந்) என்று கொள்ளவேண்டும்.

பத்ராஸநம் பாவித பாரமேஷ்ட்யா பத்ரமான ஆஸனத்தில் அமர்ந்தாள். பத்ராஸனம்—ஸுகாஸனம் என்றார் தீக்ஷிதர். உந்நதஸ்தானம் என்றார் ஸ்வாமி டிப்பணியில். பத்ரம் மங்களகரமானது. மங்களகரமாக வீற்றிருக்கை என்பதாம். ஸிம்ஹாஸனம். நருபாஸனம், பத்ராஸனம் என்று கூறியது அமரம். பத்ரம் கல்யாண ஸௌக்யயோ: என்று யாதவ நிகண்டு கூறியது. பத்ராய லோகஹிதாய ஆஸநம், என்றும், ராஜஹைம ஸிம்ஹாஸனம் என்றும், யோகிகளின் ஆஸனவிசேஷங்களில் ஒன்று என்றும் கூறினன் ஹலாயுதன். பத்ரபீடே நிஷண்ணும் என்றார் ஸ்ரீஸ்துதியில். எந்த ஆஸனத்தில் அமர்ந்தால் நலிவு ஏற்படாதோ, ச்ரமத்திற்கும் பரிகார மாயிருக்குமோ அத்தகைய ஆஸனத்தில் அமர்ந்தாள். என்று பொருள். பாரமேஷ்ட்யம் என்பதற்கு பரமேச்வர பாவத்தை அடைந்திருத்தல் என்றார் உரைகாரர்.

இங்கு தீக்ஷிதர் தரும் விளக்கம் பின் வருமாறு:— சுமக்க முடியாத கர்ப்பத்தை சுமப்பதால் ஆலஸ்யத்தினல் தூக்கமில்லாத பொழுதும் சயனிப்பது; நடைகளில் மந்தமான போக்கு, ச்ரமத்தினல் பரிஜனங்களிடத்தில் பற்றின்மை, ஆர்த்தியான ஸமயத்துக்கு ஏற்றவாறு பகவானுடைய சரிதையை சிந்திப்பது, ஸஞ்சாரம் பண்ணமுடியாததால் ஸுகமானதொரு ஆஸனத்தில் அமருதல் என்பது இச்லோகத்தில் குறிக்கப் பெற்றது. இதனல் பகவான் ஆவேசித்திருப்பதால் அவன் சரிதையை அனுகரிப்பது என்பதும் காட்டப்பெற்றது. பூர்வார்த்தத்தில் சேஷசயனம், த்ரிவிக்ரம சரிதத்தை அனுகரிப்பது போலவே உத்தரார்த்தத்திலும் பாவித பாரமேஷ்ட்யா என்பதற்கு பரமேச்வர பாவத்தை அடைந்தவள் என்று கொள்வது உசிதம். அதனுல் தான் உலகங்களை அவள் லக்ஷியம் பண்ணவில்லை. வெற்றியும் கண்டதால் ராஜா ஸனத்தை அடைந்து வீற்றிருந்தாள் என்று கொள்ள வேண்டும். பாரமேஷ்ட்யா என்பதற்கு பரமேபதே திஷ்டதி இதி பரமேஷ்டீ தஸ்ய கர்ம = பாரமேஷ்ட்யம் என்று பொருள். உயர்ந்த ஸ்தானத்தில் அல்லது லோகத்தில் அமர்ந்தவன் செய்யும் தொழில் என்றபடி. பிரும்மா என்றான் அமரன். அவர் உயர்ந்த லோகத்தில் இருப்பதால். எம்பெருமானுக்கே இது திருநாமம் என்றார் ஸ்ரீ பீஷ்மர். பரமேஷ்டீ பரிக்ரஹ: என்று ஸஹஸ்ர நாமத்தில் கூறினர்.

S.7049

பாவிதம்—பரமேஷ்டியின் செய்கையை பாவிக்கின்ற வளாய் என்று பொருள், பூ அவகல்கனம், பூ ப்ராப்தௌ என்ற பொருளிலும் பாவிதம் என்ற உருவம் உண்டு. அவகல்கனம் சிந்திப்பது, ப்ராப்தி பெறுவது. இவள் செய்யும் செயலெல்லாம் பகவான் செய்த செயலை யொத்திருக்கின்றபடியால் இவ்வாறு வர்ணனம் என்றார் டிப்பணியில். இங்கு மூன்று நிலைகளை சாதிக்கின்றார்.

இதன் உட்பொருளை யாராய வேண்டும். அம்பஸ்யபாரே-சயனம்-கிடந்த நிலை. புவநஸ்ய மத்யே-நடந்த நிலை. நாகஸ்ய ப்ருஷ்டே-இருந்த நிலை. இதையே பரமேஷ்டீ என்பதால் பரநிலை. மாதும் ப்ரவ்ருத்தா என்பதால் விபவநிலை. அஜாத நித்ரா என்பதால் வ்யூஹ

நிலை. பாவித என்பதால் அந்தர்யாமி நிலை. கர்ப்பத்தில் எழுந்தருளியிருப்பதால் அர்ச்சா நிலை என்றவாறு கருத்தில் கொள்ளவேண்டும். கர்ப்பத்தில் இருக்கும் சிசுவின் சலனங்களும் இம்மூன்று நிலைகளில் இருக்கலாம். அவை இவள் திருமேனியில் தோன்றலாம் என்றும் கொள்க. தேவகி முன் கல்பத்தில் அதிதியாய் இருந்தாள் அப்பொழுது வாமன ப்ராதுர்பாவம். அதற்கு முன் ப்ருச்னியானாள். அப்பொழுது ப்ருச்னிகர்ப்பன். மூன்றாவதாக தேவகியான நிலையில் க்ருஷ்ண ப்ராதுர் பாவம் என்பதாம்.

परिक्रम-प्रेक्षित-भाषिताद्यैः
अन्यादृशैराप्तविभावनीयैः ।
मदोपपन्ना मदलालसा वा
जितश्रमा वेति जनैः शशङ्के ॥ २०

பரிக்ரம-ப்ரேக்ஷித-பாஷிதாத்யை:
அந்யாத்ருசை: ஆப்தவிபாவநீயை:
மதோபபந்நா மதலாலஸா வா
ஜிதச்ரமாவேதி ஜநை: சசங்கே (20)

(கருத்து) சுற்றிச்சுற்றி வருதல், கூர்ந்து பார்ப்பது, கச்சிதமாகப் பேசுவது முதலான செயல்கள் விலக்ஷணமாய் இருந்தன. ஆப்தர்கள் மெச்சும் வகையில் அமைந்தன. இதைக்கண்ட பரிஜனங்கள் பலவாறு எண்ணத் தொடங்கினர். இவளுக்கு மதம் ஏற்பட்டுவிட்டதோ, அல்லது ச்ரமம் தெரியாமல் இருக்க மத்யபானம் பண்ணி

யிருப்பளோ! மதலாலஸையோ! அல்லது ச்ரமத்தையும் வென்றுவிட்டிருப்பளோ என்றவாறு.

(விரிவுரை) இதற்கு முந்திய ச்லோகத்தில் சயனம், ஆஸனம் கமனம் என்ற மூன்று நிலைகள் அமைந்தமையை பேசினார். இங்கு வெவ்வேறான செய்கைகளால் வெவ்வேறாகவே நினைக்கப்படுகிறாள் என்கிறார். அங்கு வைதிக கதி. இங்கு லௌகிக கதி. அங்கு அவளுடைய நிலைகள் மட்டும் கூறப்பட்டன. இங்கு பார்ப்பவர்களுக்கு ஏற்படும் ஐயப்பாடுகள் எப்படி இருந்தன என்று காட்டப்பெறுகிறது. **பரிக்ரம ப்ரேக்ஷித பாஷிதாத்யை:** பரிக்ரமம் இங்குமங்குமாகச் செல்வது. ப்ரதக்ஷிணமாகச் செல்வது, ஸஞ்சரணம் என்றார் தீக்ஷிதர். விளையாட்டிற்காக நடந்து செல்வது என்றும் விஹாரம்என்றும் பொருள் கூறினார் ஹலாயுதர். ப்ரேக்ஷிதம். ப்ரகர்ஷமாக ஆதரத்துடன் பார்ப்பது. பாஷிதம்-நன்றே தடுமாற்றமில்லாமல் தெளிவாகப் பேசுவது. முன் ச்லோகங்களில் கூறப்பட்டவையே இவை. ஆனால் இதன் வைலக்ஷண்யம் அந்தரங்கர்களுக்கே விளங்கும். பின் ச்லோகத்தில் மாதும் ப்ரவ்ருத்தேவ என்பதை பரிக்ரமம் என்றார். ஆலோகநை: என்பதை ப்ரேக்ஷிதம் என்றார். ந கிஞ்சிதித்யேவ ஜ்காத என்பதை பாஷிதம் என்றார்.

அந்யாத்ருசை: ஆப்தவிபாவநீயை: தனிப்பட்டவை. விலக்ஷணமானவை பூர்வவிலக்ஷண ப்ரகாரை: என்று உரையிட்டார். தோழிகளுக்கே இது விலக்ஷணமாயிருந்தது என்று பொருள். இதுவரை இவ்வாறு இந்த நிலைகளை அவர்கள் கண்டதில்லை. எல்லாவற்றையும் எல்லோரும் அறிந்துகொள்ள முடியாது. அத்யந்த அந்தரங்கர்களுக்கே புரியவல்லதாயிருந்தது என்கிறார்.

மதோபபந்நா மதலாலஸா வா. மதம்பிடித்தவளோ அல்லது மதத்தில் ஊற்றமுள்ளவளோ என்று எண்ணலாயினர். சந்தேகித்தனர் என்று பொருள். இங்கு மத சப்தத்தின் பொருளையும் வஸ்து ஸ்திதியையும் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். கர்வம் என்று பொருள் உண்டு. இது வரை அது இல்லையே இப்பொழுது எப்படி தோன்றியது ஆதலால் ஸந்தேகம். எம்பெருமானை கர்ப்பத்தில் தரித்தவளுக்கு கர்வம் உபபந்நமே. இது ஸாத்விகமான கர்வம். ஸந்தோஷம் என்று பொருள். இதுவரை அநாதரித்திருந்தவள் திடீரென்று பரிக்ரமாதிகளைப் பண்ணினால் ஸந்தேகம். ஸந்தோஷமானால் அது உபபந்நமே. கல்யாண வஸ்து அதில் மதம் இருச்கலாம். ஆமோதம் ஒருவகையான வாஸனை. ஸர்வகந்தனைப் பெற்றவள்-அவனைப் பெறப்போகிறாள். அதுவும் உபபந்நமே. ஹர்ஷேபி ஆமோதவந் மத: என்றான் அமரஸிம்ஹன். உத்வேகம், என்றும் பொருள். மத உத்வேக உத்ப்ரமே. (அமரம்) பூரண கர்ப்பிணிகளுக்கு சில ஸமயங்களில் ஒருவிதமான உத்வேகம் ஏற்படுவது ஸஹஜமே. எதிலும் வேகமில்லாதவளுக்கு உத்வேகம் ஏற்பட்டதால் ஸந்தேகம். மத சப்தத்தின் பொருளை. பாத்மபுராணம் இவ்வாறு விளக்குகிறது. "நான் மஹாத்மா (பெரியவன்) பணக்காரன், எனக்கு சமம் உலகில் யார் இருக்கிறான்!" இத்தகைய எண்ணம் தோன்றுகிறதே இதைத்தான் பெரியோர் மதம் என்பர். அஹம் மஹாத்மா தநவான் மத்துல்ய: கோஸ்தி பூதலே இதி யஜ்ஜாயதே சித்தம் மத: ப்ரோக்தஸ்ஸ கோவிதை: என்று. இப்பொருளை தேவகியினிடம் பார்ப்பது உபபந்நமே. இங்கு மத்யபானம் பண்ணினாளோ என்று நினைக்க

வேண்டியுளதே என்று நினைக்கவேண்டியுளதே என்று வ்யாக்யானம் ஸ்வரஸமா ஆப்தவிபாவநீயங்களான பரிக்ரமப்ரேக்ஷிதபாஷிதங்கள் சீராக அமைந்தவை. எதிலுமே ருசியில்லாதவளுக்கு மதகரத்ரவ்ய ஸேவனம் ஸஹஜமில்லை.

மதலாலஸா லாலஸா என்பதற்கு தோஹதம், ச்ரத்தை பெரிய ஆசை, உத்ஸாகம், யாச்நை, என்று பல பொருள்கள். கர்பிணிகளுக்கு ஏற்படும் ஆசை தோஹதம். **மதேந கிஞ்சித் சடு லாலஸாநாம்** என்று மாககவியின் ப்ரயோகம். மந்தரா என்றார் தீக்ஷிதர். மந்தமான கதி என்று பொருள். வக்ரம் என்றும் பொருள். லாலஸா என்பதற்கு ஹேமசந்த்ரன் கூறிய பொருள் இங்கு மிகவும் பொருத்தம். **லாலஸா ஸூதிமாஸி து** 9 வது அல்லது பத்தாவது மாஸத்தை ப்ரஸவ மாஸம் என்பர். அப்பொழுது உண்டாகும் மஹாபிலாஷைக்கு லாலஸா என்று பெயர். இப்பொருள் இங்கு நன்றே அமையும். ஸாவகர்பபமான ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திரஸ ப்ரஸவத்தில் நமக்கும் லாலஸை ஏற்படுகிறது.

ஜிதச்ரமா வேதி ஜனை: ஸஸங்கே. ச்ரமத்தையும் பொருட்படுத்தாமல் இருப்பளோ என்றபடி. இங்கு ச்ரமம் அவளை ஆட்கொண்டுவிட்டது. அதிக ச்ரமத்துடன் இருக்கிறாள் என்று பொருள் பொருத்தம். ஆனால் ஸந்தேகம் எப்படி உண்டாகும்! ஜித என்கிறபொழுது கர்தரி க்த: என்ற விதியை ஏற்றால் ஜித: ச்ரம: யயா ஸா. என்று கொண்டால் பொருத்தம் அதிகம், ச்ரமம் என்பதையே இவள் எப்படி ஜயித்துவிட்டாள். இது பூரண கர்ப்பிணிக்கு இயலாதே என்றபொழுது சந்தேகம் சேரும். மூவகையான ஸந்தேகம் என்று கொள்ள

வேண்டிய அவசியமில்லை. இவ்வாறு ஆப்தர்கள் உத்ப்ரேக்ஷித்தனர். சங்கா என்ற சப்தம் ப்ரயோகித்த இடத்தில் ஸந்தேகம் என்பதில்லாமல் உத்ப்ரேக்ஷை என்றுகொள்வது ஆலங்காரிகர்கள் கை வண்ணம். இங்கு जातश्रमा என்று வேறுபாடம் உண்டு என்று டிப்பணியில் அஸ்மத் ஸ்வாமி குறிப்பிட்டுள்ளார். ஜிதச்ரமா என்பதில் ரஸம் அதிகம் என்று தோன்றுகிறது. ஜனை: என்பதற்கு பரிஜனங்கள் என்று பொருள். பாமரர்கள் என்றும் கொள்ளலாம். பாமர பரிஜனங்கள் என்றபடி. ஆதலால்தான் ஸந்தேகம். பரிக்ரம ப்ரேக்ஷிதங்கள் அவளுக்குச் சேராதவாறு தோன்றியதால் ஸந்தேகம். அந்யாத்ருசை: என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளலாம். ஆப்தவிபாவநீயங்களானபடியால் பாமர ஜனங்களுக்கு மேலெழுந்தவாரியாக பார்ப்பவர்களுக்கு ஸந்தேகம் ஏற்படலாம். தார்கிக கவியின் ச்லோகத்தில் நமது தர்கம் எம்மாத்திரம்.

शेषे शयानां गरुडेन यान्तीं
पद्मे निषण्णा मधिरत्नपीठम् ।
हयाननैः आश्रितवन्दिकृत्यां
स्वामाकृतिं स्वप्नदृशा ददर्श ॥ २१ ॥

சேஷே சயாநாம் கருடேந யாந்தீம்
பத்மே நிஷண்ணாமதிரத்நபீடம்
ஹயாநநை: ஆச்ரிதவந்தி க்ருத்யாம்
ஸ்வாம் ஆக்ருதிம் ஸ்வப்ந த்ருசா ததர்ச (21)

(கருத்து) ஆதிசேஷனில் சயனத்திருப்பதாகவும், கருடனுடன் செல்வதாகவும், ரத்னஸிம்ஹாஸனத்தில் தாமரை மலரில் அமர்ந்திருப்பதாகவும், கின்னரங்களால் துதிக்கப்படுவதாகவும் தனது உருவம் இருப்பதாக கனவெனும் பார்வையால் பார்த்தாள் என்றபடி.

(விரிவுரை) இதற்கு முன் 19வது சுலோகத்தில் அஜாதநித்ரா அசேத-தூக்கமே வராமல் சயனித்திருந்தாள் என்றார். மேலும் மெள்ள மெள்ள நடந்தாள் என்றும் கூறினார். அந்த ச்லோகத்தின் பரிஷ்காரமாகவும் அதன் பரீவாஹமாகவும் அமைந்ததொரு நிலையை இங்கு கூறுகின்றார். தேவகி உறங்கினாள். அப்பொழுது நல்ல ஸ்வப்நம் அவளுக்குத் தோன்றியது. அது எவ்வாறு இருந்தது என்பதை இங்கு விளக்குகிறார்.

சேஷே சயாநாம் கருடேந யாந்தீம் ஆதிசேஷனில் சயனித்திருப்பதாகவும் கருடனுடன் செல்வதாகவும் என்று பொருள். 19ல் சயனம் மட்டும் கூறப்பட்டது. இங்கு சேஷசயனம் எனப்படுகிறது. கர்ப்பத்தில் எழுந்தருளியிருப்பவன் சேஷசாயி. தனது உருவமே தானே சேஷனில் படுத்திருப்பதாக ஸ்வப்னானுபவம். இவ்வாறே கருடேந-கருடனுடன் அல்லது கருடனால் (சுமக்கப்பெற்று) யாந்தீம் செல்பவளாக கனவில் கண்டாள். உள்ளேயிருப்பவன் இவ்விருவர்களுடன் என்றும் இருப்பவன். சேஷனுக்கும் கருடனுக்கும் ஏற்பட்ட ஸௌபாக்யம் போலும். எம்பெருமானைத் தவிர வேறு எவரையும் சுமக்காத கருடன் தன்னை சுமப்பதாக தேவகி கனவில் கண்டாள். இங்கு காளிதாஸனை நினைக்கிறார்.

ரகு வம்சம் பத்தாவது ஸர்கத்தில் கௌஸல்யை முதலியோர் கர்ப்பம் தரித்திருந்தபொழுது ஸ்வப்நேஷு ஆத்மாநம் வாமநை: குப்தம் தத்ருசு: என்று 60வது சுலோகத்தில் கூறி, 61வது சுலோகத்தில் ''ஹேமபக்ஷப்ரபாஜாலம் ககநேச விதந்வதா, உஹ்யந்தே ஸ்ம ஸுபர்ணேந வேகாக்ருஷ்ட பயோமுசா, கருடனால் சுமக்கப் பெற்றதாக கனவில் கண்டனர் என்று கூறினான் காளிதாஸன். மேலும் 62ல் பர்யுபாஸ்யத லக்ஷ்ம்யா ச பத்மவ்யஜந ஹஸ்தயா என்று பத்மாவின் ப்ரஸங்கத்தையும் பண்ணினான். கௌஸல்யை கர்ப்பிணியாயிருந்த பொழுது கண்ட கனவினை கருத்தில் கொண்டு தேவகியின் ஸ்வப்னத்தை வர்ணிக்கிறார். ஆனால் பரிஷ்கரிப்பது ஸ்வாமியின் இயல்பாதலால், சேஷனுடைய ப்ரஸங்கத்தையும் பண்ணினார். சயநம் கமநம் ஆஸனம் என்ற மூன்று நிலைகள் மூன் போலவே ஆயின.

பத்மே நிஷண்ணும் அதிரத்நபீடம் ரத்ன ஸிம்ஹாஸனத்தில், தாமரைப்பூவில் அமர்ந்தவளாய் என்று பொருள். ச்ரியப்பதி என்பதையும் தோற்றுவிப்பான் போலும். தானே தாமரை மலரில் அமர்ந்துவிட்டதாக ஸ்வப்நம். ஸ்ரீஸ்துதியில் உள்ள ச்லோகசைலி மாறியுளது. ஸரஸிஜமயே பத்ரபீடே நிஷண்ணும் என்றார் அங்கு. இங்கோ பத்மே ரத்நபீடே நிஷண்ணும் என்று கூறினார். பத்ராஸனம் பாவித பாரமேஷ்ட்யா என்றதை அதிரத்நபீடம் பத்மே நிஷண்ணும் என்கிறார். இது தேவகிக்கு விலக்ஷணமானதொரு பட்டாபிஷேகமாகலாம்.

ஹயாநநை: ஆச்ரிதவந்தி க்ருத்யாம் குதிரை முகம் உடையவர்கள் ஸ்துதி பாடுகின்றனர். தும்புரு நாரதர், கந்தர்வர்கள் என்று சொல்லாமல் துதிப்பவர்களின் முகங்களின் அமைப்பைக் கூறுகிறார். கிந்நரர் கிம்புருஷர் என்ற சொல் தெளிவாக இல்லை என்று திருவுள்ளம் இருக்கலாம். ஹயாநநை: என்பதால் அந்த லோகமே வந்து வந்திபாவம் பெற்றது போலும்.

ஸ்வாம் ஆக்ருதிம் ஸ்வப்நத்ருசா ததர்ச தனது உருவத்தை என்று பொருள். ஆத்மாநம் தன்னை என்று சொல்லாமல் ஆக்ருதிம் என்பது பொருத்தம். ஸ்வப்னம் நித்திரை செய்யும் பொழுது நாடீ விசேஷத்தில் மனதின் ப்ரவேசத்தால் ஏற்படும் க்ஞாந விசேஷம். இதில் அநுபவித்த விஷயமானஞானமும் அபூர்வமான ஞானமும் ஏற்படலாம். ஸ்வப்நம் ஸ்த்யம் என்பது நமது ஸித்தாந்தம். காண்பதெல்லாம் பொய் அல்ல. தத்காலாநுபவத்தை புண்யபாபாதிகள் பண்ணிவைக்கும். ஸ்வப்நேபி யத்யஹம் வீரம் பச்யேயம் நாவஸீதேயம் என்றாள் அசோக வனத்தில் பிராட்டி. திருவுள்ளப்படி ஸ்வப்நம் அமைந்ததை விஷ்ணு சித்தர் மகள் வாரணமாயிரத்தில் கூறினாள். ஸ்வப்நோஹ்யத்ய மயா த்ருஷ்ட: என்றாள் த்ரிஜடை. இவ்வாறே தேவகியும் கனாக்கண்டாள். உள்ளே இருக்கும் எம்பெருமானுக்கே யுரிய வாஹன கமநாஸந ஸுகத்தை தமக்கேயமைந்துவிட்டதை உணர்ந்தாள். ஸ்வப்னத்தில் பார்த்தாள் என்று கூறாமல் ஸ்வப்நமாகிற பார்வையால் கண்ணால் கண்டாள் என்பது ரஸம்.

अन्तः स्थितं यस्य विभोरशेषं
जगन्निवासं दधती तमन्तः ।
तदात्मनो विश्वमपश्यदन्तः
तर्कातिगं तादृशमद्भुतं नः ॥ २२ ॥

அந்தः ஸ்திதம் யஸ்ய விபோரசேஷம்
ஜகந்நிவாஸம் தததீ தமந்தः
ததாத்மநோ விச்வம் அபச்யதந்தः
தர்காதிகம் தாத்ருசம் அத்புதம் நः (22)

(கருத்து) எந்தவிதமான எம்பெருமானின் உள்ளே அசேஷமான உலகமும் அமைந்துள்ளதோ அத்தகைய வனை தன்னுள்ளே தரிக்கின்ருள் தேவகி. அந்த கிருஷ்ண னின் வயிற்றில் இருக்கும் ப்ரபஞ்சத்தை தன்னுடைய வயிற்றினுள் கண்டாள். இது எப்படி பொருந்தும்! இது நமது புத்திக்கும் ஊகத்திற்கும் எட்டாத மீறின அதிசய மாகத்தான் உள்ளது.

(விரிவுரை) இதற்கு முன் ச்லோகத்தில் தேவகியின் ஸ்வப்ந விசேஷத்தை கூறினுர். இங்கு அதையும் மீறின அல்லது பரீவாஹமான ப்ரத்யக்ஷஸமாஞகாரமான ஒரு அநுபவம் அல்லது ஒரு காட்சி தேவகிக்கு ஏற்படுகிறது. அதன் பெருமையை நம்மால் ஊகித்தும் பார்க்கவியல வில்லை என்கிருர்.

அந்த : ஸ்த்திதம் யஸ்ய விபோः அசேஷம். எம் பெருமான் விபு-எங்கும் பரந்துளன். அன்றியும் அவனிடம் எல்லாமே அடங்கிவிட்டது. அசேஷம் பாக்கியில்லாதபடி என்று பொருள். அந்த : ஸ்திதம் உள்ளே இருக்கிறதோ என்று பொருள். எப்பொழுதும் என்று சேர்த்துக் கொள்ளலாம். எந்த விச்வம் அடங்கியுள்ளதோ என்று பொருள். இங்கு அவனே சொன்ன கீதா வசனங்களை நினைக்கவேண்டும். மத்ஸ்த்தாநி ஸர்வபூதாநி ந சாஹம் தேஷ்வவஸ்தித:-ஸர்வ பூதங்களும் என்னிடமே உள்ளன என்ருன். வேறு ஒரு இடத்தில் மறுபடியும் சொன்ஞன் ஸர்வாணி மத்ஸ்த்தாநி இத்யுபதாரய - எல்லாம் என் னிடம் உள்ளன என்று அறிந்துகொள் என்று உபதேசித் தான். ஆதரம் பெருக அர்ஜுனனுக்கு இவ்வுண்மையை காண்பிக்கிருன். இஹைகஸ்த்தம் ஜகத் க்ருத்ஸ்நம் பச்யாத்ய ஸசராசரம். இங்கு - மம தேஹே என்று குறித் தான். பச்ய ஆஸ்சர்யாணி என்ருன். ஜகத் க்ருத்ஸ்நம் ப்ரவிபக்தம் அநேகதா என்றவனே தனஞ்சயன் ஸேவித் ததை கூறுகிருர்-அபச்யத் தேவதேவஸ்ய சரீரே பாண்டவ: ததா என்று. ஆதலால் விச்வம் அவனுடைய சரீரத்திற் குள் இருக்கிறது என்று அறியலாம்.

ஜகந்நிவாஸம் தததீ தம் அந்தः ஜகந்நிவாஸஞை அவனே உள்ளே தரிப்பவள் என்று பொருள். முன் பாதத்தில் யஸ்ய விபோ: என்ருர். விபு வ்யாபித்திருப் பவன். ஆகாசத்தையும் காலத்தையும்கூட விபு என்று தார்கிகர் கூறினர். அத்தகைய விபுத்வம் எம்பெருமானு டையது, அவன் விபுவாகிவிட்டபடியால் எல்லாம்

உள்ளேயிருந்தே யாகவேண்டும். ஆதலால் ஜகத்திற்கு நிவாஸஸ்தானமாகி விட்டபடியால் ஜகந்நிவாஸம் என்கிறார். இந்த சப்தம் க்ருஷ்ணனுக்கு உரித்தது என்னலாம்படி இக் கர்ப்பத்தில் இருப்பவனுக்கே சேரும்போலும். ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ என்று அழைத்தான் பார்த்தன். ஜகந்நிவாஸ நிவாஸபூதா என்றார் ஸ்ரீசுகர். மாககவிதன் மஹாகாவியத்தைத் தொடங்கும்பொழுது ஜகந்நிவாஸோ வஸுதேவஸத்மநி என்றார். விபவத்தில் உலகனைத்தையும் பாமரர்களுக்கும் காட்டித் தந்தான் தன் திருவயிற்றில். ஜகத்தில் இவன் வஸிக்கிறான். ஜகத் இவனிடம் வஸிக்கிறது. வாஸுதேவன் இவன்தானே! வாஸநாத் வாஸுதேவஸ்ய வாஸிதம் தே ஜகத் த்ரயம் ஸர்வபூதநிவாஸோஸி வாஸுதேவ நமோஸ்துதே என்றும் கூறினர்.

வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந: என்ற விவரணமும் வாஸுதேவ சப்தத்தைக் கோண்டே கூறப்பட்டது. ஸத்யமாகிற ஜகத் என்ற ஸ்ரீயுடன் நித்யம் வஸிப்பவன் ஆதலால் இவனே ஜகத் ஸ்ரீநிவாஸன். அந்த: உள்ளே தரிக்கிறாள் என்கிறார். அவனுடைய திருவயிற்றில் அகண்ட ப்ரம்ஹாண்டங்களும் ஏக தேசத்தில் எப்படி அடங்கிவிட்டதோ, அப்படியே ஜகந்நிவாஸனையும் தனது கர்ப்பத்தில் உதரைகதேசத்தில் அடக்கிவிட்டனளே என்று ஆச்சரியம். இங்கு அசேஷம் என்பதை முன்னும் பின்னும் சேர்த்துப் பொருள் கொள்ளலாம். ஆசேஷம் ஜகந்நிவாஸம் என்று சேர்க்கவேண்டும். இதில் ஒரு ரஸம். பலராமனை

ப்ரஸங்கித்தபொழுது - எம்பெருமான் தனது மாயையை நோக்கி உத்தரவிடும்பொழுது **சேஷாக்யம் தாம மாமகம் ரோஹிண்யா: உதரே ஸந்நிவேசய** என்றான். இம்மாதிரியில்லாமலும், **பவான் ஏக: சிஷ்யதேசேஷஸம்க்ஞ:** என்று துதிக்கப்பட்டபொழுது ஸம்சயத்திற்கு இடமான சேஷ சப்தம்போல் ஆகலாது என்றும் திருவுள்ளங்கொண்டு, எவன் எப்பொழுதும் சேஷன் ஆகமாட்டானோ அவனை அசேஷம் என்பதால் குறிப்பிடுகிறார். அசேஷ வஹனத்திற்கும் சேஷவஹனத்திற்கும் வாசியுண்டே.

தத் ஆத்மநோ விச்வம் அபச்யத் அந்த: அத்தகைய க்ருஷ்ணனின் வயிற்றில் இருந்த விச்வத்தை ஆத்மந: தனது உள்ளே கண்டாள் என்று பொருள். தத் விச்வம் ஆத்மந: அந்த: அபச்யத் என்று. இதற்கு முன் ச்லோகத்தில் ஸ்வப்நத்ருஷ்டியால் கண்டாள் என்றார். இங்கு எந்த த்ருஷ்டி என்று சொல்லவில்லை. அதே இங்கும் தொடருகிறது என்றும் கொள்ளலாம். ஸ்வப்நத்தில் யாரும் எதையும் காணலாம். அதில் எத்தகைய அத்புதமும் இருக்க வழியில்லை. கண்களால் வெளி உலகத்தவர்போல் பார்த்தாள் என்று சொன்னால் இது எப்படி பொருந்தும்! இது சாஸ்த்ரத்தினால் ஜனார்தனனை அறிகிறேன் என்பதுபோல் என்றால் அது எல்லோருக்கும் பொருத்தம். யோகி ப்ரத்யக்ஷம் என்று சொன்னால் ஸாக்ஷாத்காராவஸ்தைக்கு ஏற்ப இவள் உபாயாநுஷ்டானம் பண்ணவில்லை. இவள் கண்டதோ அதனிலும் விலக்ஷணம் ஆதலால் ஸ்வாமி வியக்கின்றார். தேவகிக்கு அத்புதமாயிருந்ததா இல்லையா என்பதில்லை. நமக்கு ஏற்படும் வியப்பே அலாதியானது என்கிறார்.

தர்காதிகம் தாத்ருசம் அத்புதம் நः எங்களுடைய அல்லது நமது தர்கத்திற்கும் விஞ்சிவிட்ட **அத்புதம்** அது என்று பொருள். இங்கு எந்தவகையில் **அத்புதம்** என்று சொல்லவேண்டியது முக்கியம். அபரிச்சின்னனுன எம் பெருமான் இவளுடைய வயிற்றில் எப்படி இருக்முடியும்! இருந்தானுகில் பரிச்சின்னனுகிவிடுகிறுன். அவள் தன் வயிற்றில் இருக்கும் கர்பத்தை வேண்டுமானுல் பார்க்க லாம். எம்பெருமான் வயிற்றில் இருக்கும் உலகை தன் வயிற்றில் காண்பது என்பது எப்படி !

ஆதலால் இது தர்கத்திற்கு எட்டாதது என்கிறுர். அதாவது சிந்தித்துப்பார்க்கவும் முடியாத மஹிமையுடைய பகவானின் ஸங்கல்பத்திஞல் இவ்வாறு ஆகலாமாதலால் இங்கு அனுபபத்தி ஒன்றுமில்லை என்றுர் தீக்ஷிதர். நம் முடைய தர்கத்திற்கு சக்தியில்லை யென்றபடி. உலகெலாம் அவன் வயிற்றில். அவனே இவள் வயிற்றில். அதை கண்டதோடு நில்லாமல், அவனை தன் வயிற்றில் காணுமல் அவனுள் இருக்கும் உலகை தன் வயிற்றில் கண்டாள். தானும் ஜகத்தில் ஒருவளாயிருக்க, தன்னுள் - ஜகத்தை வயிற்றில் பெற்றவனை பார்க்காமல், அவன் வயிற்றில் உள்ள உலகங்களை தன் வயற்றில் பார்த்தாள். இதை எப்படி நிரூபிப்பது! ஆதலால் வியப்பு என்று அபிநவ தேசிக ஸ்வாமி திருவுள்ளம் பற்றினுர்.

தாத்ருசம் - அப்படிப்பட்டதும் **அத்புதம்** என்று பொருள். தர்கம் ஒருபுறமிருக்கட்டும். அவன் அத்புதன், அவன் இருப்பும் அத்புதம். **தமத்புதம்** என்றுர் ஸ்ரீசுகர். அத்புத சித்ரரூபன் என்றுர் முன்பு ஸ்வாமி. ஆஸ்சர்யவத் பச்யதி கஸ்சித் ஏனம், வேத நசைவ கஸ்சித் என்றுர்

இவரே. அத்புதன் எதைத்தான் செய்யமாட்டான்!! தர்கம் என்பது ஊகம் - ஊகிப்பது அநுமாநம் - அதற்கும் எட்டாதது. யதோ வாசோ நிவர்தந்தே என்ற நிலையில் இருப்பதால் அத்புதம். தார்கிக கேஸரியின் தர்கத் திற்கும் எட்டாத அத்புதம். அதனுல்தான் அத்புதம். பண்டு ஆலிலையில் துயில்கொண்ட பாலகனின் வயிற்றில் ஒரு மூலையில் ஒளிந்திருந்தது வியப்பில்லை. அதே வராஹ ரூபம் கொண்டபொழுது அந்த திருமேனி எப்படி பருத்தது? அதுவும் வியப்பில்லை. உள்ளே இருந்த ப்ரம் மாண்ட மண்டலம் அவனேபோல் பலம் பெற்று தானே பெருகியதா - அவனுல் பெருகியதா ! இரண்டிலும் வியப்பில்லை. மேருமலை நகங்களின் நடுவில் நின்றது அத் புதமா ! உலகம் முழுவதும் கோரைப்பல்லின் நுனியில் கொந்தப்பட்டே கோரைக்கிழங்குபோல் இருந்தது அத்புதமா! ஸ்வாமி அங்கு ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். வாராஹமாஸ்திதவதோ **வபுः அத்புதம்** தே என்று கூறி விட்டார். மேலும் தேஹளீசன் வைபவத்தைச் சொல் லும் பொழுது இந்த திருமேனி பவநைகதேசத்தில் எப்படி அடங்கியது? இதுவன்றே அத்புதம் என்கிறுர், மாதி ஸ்ம மூர்த்திரமிதா ததிஹாத்புதம் நः என்கிறுர் அங்கு. அங்கு அளந்தவன் அளக்க இடமில்லாமல் அடங்கி விட்டானே என்று வியக்கிறுர். அங்கும் மூர்த்தி அத்புதம் என்று முடிவுக்கு வந்துவிட்டார். இங்கு காணப்படும் மூர்த்தி தேவகியே. அவள் உள்ளே இருக்கும் மூர்த்தியை யார் கண்டது! அவளும் காணவில்லை. பிறரும் காண வில்லை. அவ்வாறிருக்க தேவகி அவன் உள்ளே இருச்கும் ஜகத்தைக் கண்டுவிட்டாள், இது எப்படி ! அவனையே

காணுமல் அவன் உள்ளே இருக்கும் ஜகத்தை எப்படி பார்க்கமுடியும்! இங்கு தர்கம்செல்லவில்லை. தேவகி ஜகத்தில் ஒருத்திதான். அவனுள் உலகம் அடங்கட்டும் அடங்காது போகட்டும். தன்னுள் அடங்கிவிட்டது என்று எப்படி பார்த்தாள்! பார்ப்பது என்பது கண்களாலா? அப்படியானுல் வெளியில்தான் பார்க்க முடியும்! உள்ளே இருப்பதை பார்க்க இயலாது. அனுமானம் என்று சொன்ஞல் கர்ப்பசின்னத்தினுல் கர்ப்பத்தை அனுமானம் பண்ணலாமேயன்றி கர்ப்பத்தில் இருக்கும் சிசுவின் வயிற்றில் என்ன என்பதை பார்க்கவியலாது. சப்தப்ரமாணம் என்று சொன்னுல் சாஸ்த்ரயோநித்வாதிகரணம் கொண்டு ஜகத்தை அவனிடம் அறியலாம். ஆனுல் அவன்தான் தன் கர்ப்பத்தில் இருப்பவன் என்று அறிவது இயலாது.

கர்ப்பத்தின் பாரம் இவ்வாறு அவளை நினைக்கச் செய்தது என்ருல் அது பார்த்தாள் என்பதுடன் சேராது. பிறந்தும் இவன் செய்யப்போகும் சித்திரத்தை இப்பொழுதே தேவகிக்குத் தொடங்கிவிட்டான் போலும். வையம் ஏழும் கண்டாள் பிள்ளைவாயுளே என்ருர் பெரியாழ்வார். தேவகி இவ்வாறு ஸேவிதத்தற்கு - கண்டதற்கு நமது தர்கம் பயன்படாது என்கிருர். அகடிதகட நா சக்தன் - ஸர்வநியந்தா, ஸ்வதந்த்ரன் - அவன். தேவகிக்கு இத்தகையதான பார்வையை கொடுத்து பார்க்கச்செய்வான் போலும். தன் வயிற்றுக்குள்ளேயிருக்கும் கண்ணன் வயிற்றிலிருக்கும் ஜகத்துக்குள்ளே தான் இருப்பதாகப் பார்ப்பது விந்தையே, நம்மாழ்வாரும் நீ பெரியை நான் பெரியன் என்பதை ஆர் அறிவார் என்ருர். மற்றும் பல. விரிக்கிற்பெருகும்.

सुरासुराधीश्वर मौलिघातात्
विशीर्णजांबूनदवेत्रशृङ्गम् ।
आलक्ष्यसन्तोष मलक्ष्यमन्यैः
अनीकनेतारमवैक्षतारात् ॥ २३ ॥

ஸுராஸுராதீச்வர மௌளிகாதாத்
விசீர்ண ஜாம்பூநத வேத்ர ச்ருங்கம்
ஆலக்ஷ்ய ஸந்தோஷம் அலக்ஷ்யமந்யைः
அநீகநேதாரம் அவைக்ஷதாராத். (23)

(கருத்து) விஷ்வக்ஸேனர் தன் அருகில் இருப்பதைக் கண்டாள் தேவகி. அவரும் எம்பெருமானை ஸேவிக்க திரண்டுவந்து மேலே விழும் தன்மையுடைய தேவர்களின் தலைவர்களையும் அஸுரர்களின் தலைவர்களையும் நெரிசலைத் தவிர்ப்பதற்கே பிரம்பினுல் கிரீடங்களில் அடிப்பார். அவ்வாறு அடிப்பதாலேயே அவர் கையில் இருந்த பொன் பிரம்பின் நுணி சிதறியிருக்கிறது. ஆனுல் ஸந்தோஷம் தான் தென்படுகிறது. இவரை பிறரால் காணமுடியாது. இவர்தானே ஸேநாபதி. இத்தகைய விஷ்வக்ஸேனரை தன் அருகில் கண்டாள் என்றபடி. ஸேநாபதிக்கு 3 விசேஷணங்கள்.

(விரிவுரை) முன் இரண்டு சுலோகங்களிலும் முறையே ஸ்வப்னத்தில் காண்பதும், அவன் கொடுத்த கண்கொண்டு விலக்ஷணமாக பார்ப்பதும் கூறப்பட்டது. இந்த மூன்ருவது சுலோகத்தில் விஷ்வக்ஸேனரை

பார்த்தாள் என்கிறார். ததர்ச அபச்யத் அவைக்ஷத என்று இம்மூன்று ச்லோகங்களும் அவளுடைய தர்சனப்ரகாரத்தையே சொல்லவந்தன. 20-ல் ச்ருதியின்படியாம். 21-ல் சாஸ்திரங்களின்படியாம். இங்கு ஆகமங்களின்படி என்று உற்று நோக்கினால் விளங்கும். ஆகமங்களில்தான் விஷ்வக்ஸேனருடைய ப்ரஸங்கம் அதிகம்.

ஸுராஸுராதீச்வரமௌளிகாதாத் ஸுரர்கள், தேவர்கள், அவர்களின் தலைவர்கள் இந்திரன் முதலானோர். அஸுரர்கள் தானவர்கள் என்று அழைக்கப்பெறுவர். முதலில் தேவர்களாகவே இருந்து பிறகு குண விசேஷத்தால் அவர்களையே பழித்து அழிக்க முற்படுபவர்கள். அவர்களுக்கும் தலைவர்கள் உண்டு. பலம் மிக்கவன் அங்கு தலைவன் ஆதலால் இந்திரன் என்றது போல் ஒருவனைச் சொல்ல முடியாது. தலைவர்கள் அங்கும் உண்டு. தேவர்களோடு மோதுவதே அவர்களுக்கு நித்யாந்ஹிகம். தேவர்கள் பகவத் ஸேவைக்காக ஓடிவரும்பொழுது அவர்களும் திரண்டு வருவர். நெரிசலை ஸமாளிக்க விஷ்வக்ஸேனர் பிரம்படி நடத்தவேண்டியிருக்கும். அதை அழகான பாணியில் குறிப்பிடுகிறார். தலைகள் தாக்கப்படுகின்றதால் தாக்கும் பிரம்பின் நுனி நசுங்கியது என்கிறார். பகவத் ஸேவைக்காக வாயிற்படியில்வந்து குழுமியிருக்கும் தேவாஸுரப்ரதானர்களின் கிரீடங்களில் அடிப்பதால் என்று பொருள் கூறினார் தீக்ஷிதர். மௌளி என்பதற்கு சிரஸ் என்று பொருள் இருப்பினும் விச்வகோசத்தில் கிரீடம் என்று பொருள் இருப்பதால் இவ்வாறு வ்யாக்யானித்தார். முறைப்படி விடுவதற்காக பொற் பிரம்பின் நுனியால் ஸேனை முதலியார் தட்டுவார் என்றார் டிப்பணியில்.

அதீச்வரர்களுக்கே இந்த நிலை! பெருமாள் ஸேவைக்கு வந்தவர்களுக்கு இந்த நிலை ஏற்படவேண்டுமா! பிறகு சிந்திப்போம்.

விசீர்ண ஜாம்பூநத வேத்ர ச்ருங்கம் விசீர்ணம் சிதிலமாயிற்று என்று பொருள். நுறுங்கியது என்றும் கொள்ளலாம். இது பிரம்பின் தன்மையின் குறையல்ல. ஸாத்விக ஸேனாபதி பண்ணும் தாமஸ காரியத்திலும் அப்ராக்ருதமான பிரம்பு ப்ராக்ருத தசையை அடைந்தது போலும். ஜாம்பூநதம் ஸுவர்ணம். தேவர்கள் அதனாலேயே கிரீட முகுடாதிகளைச் செய்து கொள்வதால் பிரம்பும் அந்த ஜாதியைச் சேர்ந்ததுபோலும். தங்கப் பிரம்பானாலும் பிரம்பு பிரம்புதான். மோதிரக் கையால் குட்டுப்படுவது பெருமை என்று எண்ணுவதுபோல் ஜாம்பூநத வேத்ரப்ரயோகம். பிரம்பின் நுனி சிதறுண்டது என்கிறார். பாத்திரத்தில் தேய்மானம்போல் வேத்ரத்தில் தேய்மானமேயன்றி வேறில்லை. பிரம்பின் அடியோடு ஓங்கி அடிப்பதில்லை. நுனியினால் மட்டும் தட்டுவார் என்பது நயம். மற்றொரு இடத்தில் பிரம்பின் அசைவிலேயே உலகம் அடங்கிக்கிடக்கும் என்றார். வேத்ரசிகர ஸ்பந்தே என்றும், விஷ்வக்ஸேந **விஹாரவேத்ரலதிகா**கம்ப: சிராத் லும்பதி என்றும் கூறினார். விசீர்ணம் என்பதை ஜாம்பூநதம் என்பதிலும் சேர்க்கலாம். அவ்வளவு பளபளப்பாய் இருக்கிறது வேத்ரம் என்றதாகும். கிரீடங்கள் சிதறியதா என்பதைக் கூறாமல் வேத்ரம் மட்டும் சிதறியது என்பதில் கொஞ்சம் நிதானித்துதான் ஏற்க இயலும். ஸுராஸுராதீச்வரர்களையும் தட்டிக் கேழ்க்கும் அந்தஸ்து விஷ்வக்ஸேனருடையது என்பது தேர்ந்த பொருள்.

ஆலக்ஷ்ய ஸந்தோஷம் அலக்ஷ்யம் அந்யை: ஸந்தோஷமுடன் காணப்படுகிறார் விஷ்வக்ஸேனர் என்று பொருள். அபிவ்யக்தானந்தம் என்றார் தீக்ஷிதர். லக்ஷ்யத்தை நன்றே பெற்றுவிட்டதால் அவருக்கு ஸந்தோஷம். ஸந்தோஷம் ஆலக்ஷ்ய-ஸ்திதம் என்றும் கொள்ளலாம். அடிபட்டவர்கள் அழவில்லை-அழியவில்லை. சபிக்கவும் இல்லை. வெறுப்பும் அடையவில்லை. அவர்களிடம் ஸந்தோஷமே இருந்தது என்றபடியாம். இதைக் கண்ட விஷ்வக்ஸேனரின் ஸந்தோஷம் எத்தகையதாயிருக்கும் என்றும் அறியலாம். குறிப்பிடத்தக்க ஸந்தோஷம் என்னலாம். பிரம்மாதிகளுக்குத்தான் அஸுரர்கள் அல்லல் விளைவிப்பதேயன்றி விஷ்வக்ஸேனரிடமல்ல என்பதையும் உணரலாம்.

அலக்ஷ்யம் அந்யை: அந்நியர்கள் அவரைப் பார்த்ததே கிடையாது. அவருக்கு எத்தனையோ பரிஜனங்கள். ஒரு சிலருக்கு ஈச்வரன் என்று பெயர்போலே இவரும் அநீகேச்வரர் என்றார் தயாசதகத்தில். ஸ்ரீவைகுண்ட ஸ்ரீகார்ய துரந்தரர் இவர்.

அநீக நேதாரம் அவைக்ஷத ஆராத் இவருக்கு ஸேநாபதி என்று பெயர். பதிசப்தம் இல்லாமல் நேதாரம் என்கிறார். நடத்திச் செல்பவர் என்பதாம், ராஜாதிராஜன் எம்பெருமான், ஸம்மந்த்ரித ஜகத்ஹிதை (மந்திரி) பிராட்டி. விஷ்வக்ஸேனர் ஸேநாபதி (நித்யஸூரி) என்றதொரு கோப்பு உண்டு என்றறிய வேண்டும். இவரை அருகில் கண்டனள் தேவகி என்றபடி. அவைக்ஷத என்பதற்கு குனிந்து பார்த்தாள் என்றும், அதஸ்தாத்

ஈக்ஷணம் அவேக்ஷணம் அவ்வாறு பார்ப்பதால் விஷ்வக்ஸேனர் விநதராய் இருப்பர் என்று திருவுள்ளம் பற்றினார் அபிநவதேசிகஸ்வாமி. ஆராத் என்பதற்கு ஸமீபம் தூரம் என்று இரண்டு பொருளும் உண்டு. ஸமீபத்தில் கண்டாள் என்று உரையிட்டனர்-தூரத்தில் வரும்பொழுதே பார்த்து விட்டாள் என்றும் கொள்ளலாம்.

இங்கு ஒரு சில விஷயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை. கம்ஸனுடைய காராக்ருஹத்தில் தேவகி. அத்தேவகியின் திருவயிற்றில் எம்பெருமான். இது அத்புதம். இதை ஸேவிக்க அஸுரர்களுக்கும் ஆசையாகலாம். ஸாத்விக அஸுரர்களும் உண்டு. அஸுராம்சம் பெற்ற கம்ஸன் க்ருஹமானதால் அவர்களும் சலுகை உண்டு என்று எண்ணி வந்திருக்கலாம். ஸஹஜசத்ருக்களான ஸுரர்களும் அஸுரர்களும் வாயிற்படியில் சண்டை சச்சரவு செய்யலாம், அதை தவிர்க்க, விஷ்வக்ஸேனர் எழுந்தருளிவிட்டார் என்றால் பொருத்தம். விஷ்வக்ஸேனர் எழுந்தருளினது பிறருக்குத் தெரியாது என்பதை அலக்ஷ்யம் அந்யை: என்பதால் சுட்டிக் காட்டலாம். அந்யசப்தம் உதாஸீனர்களையும் ப்ரதிகூலர்களையும் குறிக்கும். மாயாவிகளுக்கும் புலனாகாது என்றபடி. அன்றியும் அப்பொழுது தேவகியை தவிர மற்ற யாருக்கும் புலனாகாதவர் என்றும் கொள்க. மற்றும் தேவர்கள் கர்ப்பக்ருஹத்தில் துதித்தனர். அங்கு விநாயகாநீகப மூர்த்தஸு என்றார் ஸ்ரீசுகர். அங்கு அநீகப சப்தம் தேவஸேநாபதியை குறிக்கும். வைகுண்ட ஸேநாபதியை குறிக்காது என்பதும் உணரப்படுகிறது. நித்யஸூரியானபடியால் எம்பெருமானை ஸேவிக்கவும், ஸேவை செய்யவும்; தேவகி

யோடு பெருமாளை ஸேவிக்கவும் வந்தார் என்றும் கொள்ளலாம். தேவகி கண்டாள் என்பதுதான் இங்கு முக்கியம்.

ஆதலால் மூன்று ச்லோகங்களாலும் மூன்று விதமான பார்வைகள் கூறப்பட்டன. பிற்காலத்தவர் வரவேத்ரஹஸ்தோத்தமாங்கா: த்வாரே வஸந்தி என்று கூறியதில் சுவை உண்டோ!

त्रिलोक मांगल्य निधेस्त्रिवेद्याः
सञ्जीवनीं वाचमुदीरयन्ती ।
नियोगयोग्यान् अनघप्रसादा
नाकौकसां नामभिराजुहाव ॥ २४ ॥

த்ரிலோக மாங்கல்ய நிதே ஸ் த்ரிவேத்யா:
ஸஞ்ஜீவநீம் வாசம் உதீரயந்தீ
நியோக யோக்யாந் அநக ப்ரஸாதா
நாகௌகஸாம் நாமபி: ஆஜுஹாவ (24)

(கருத்து) மூன்று உலகங்களுக்கும் ஹிதத்தைச் செய்ய அமைந்ததான மூன்று வேதங்களுக்கும் உயிரளிக்கும் வகையில் பேசுகின்றாள் தேவகி, அங்கு தனது பரிஜனங்களை அனுக்ரஹிப்பவளாய் தேவலோக வாஸிகளின் பெயர்களைக் கொண்டே அழைக்கலானாள்.

(விரிவுரை) இதற்கு முன் மூன்று ச்லோகங்களால் பார்வையின் பெருமைகளை விளக்கினார். இது முதல் மூன்று ச்லோகங்களால் அவள் பேசிய பேச்சுக்களின் வைபவத்தை

பேசத் தொடங்குகிறார். தேவகியின் பார்வையிலும் பேச்சிலும் தெய்வீகம் குடிகொண்டிருப்பதால் அழகாக வர்ணனம்.

த்ரிலோக மாங்கல்ய நிதே: த்ரிவேத்யா: மூன்று உலகங்களுக்கும் ஹிதத்திற்கு நிதிபோல் அமைத்தவை மூன்று வேதங்கள் என்று பொருள். மூன்று லோகம் மூன்று வேதம். மூன்று உலகங்களும் நன்மை பெறுவது மூன்று வேதங்களாலேயே என்று கூறியபடி. ஸைஷா த்ரய்யேவ வித்யா தபதி என்று கூறியது தைத்தரீயம். ருங்மண்டலம், ருக்லோகம், ஸாமமண்டலம், ஸாமலோகம் யஜுர்மண்டலம் யஜுர்லோகம் என்று வ்யவஹரிக்கப்பட்டுள்ளது. மூன்று உலகங்கள் மூன்று வேதங்கள் என்று அறியலாம். வேதாந்தங்களுக்கு த்ரய்யந்தம் என்றே பெயர். மற்றும், சிறிய திருவடியின் பெருமையை கூறும்பொழுது, ருக்வேதவிநீதன், யஜுர்வேததாரி ஸாமவேத வித்வான் என்று வியந்து பேசினார். மூன்று வேதங்களுக்கும் ஸமானமாயிருந்தது ஆஞ்சனேயன் வாக்கு என்பது பெருமை. மேலும் மூன்று வேதங்கள் தான் நிதி. ஸா ஹி ஸ்ரீ: அம்ருதா ஸதாம் என்றது வேதம்.

ஸஞ்ஜீவநீம் வாசம் உதீரயந்தீ உயர்ப்பிக்கவல்ல வார்த்தையை சொல்பவளாய் என்று பொருள். த்விஜாதிரிவ ஸம்ஸ்க்ருதாம் என்றார் சிறிய திருவடி. வேதப் பொருளை விளக்கவல்ல வார்த்தைதான் வார்த்தை. தேவகீ வேதத்தை சொன்னாள் இல்லை அதை ஸஞ்ஜீவனம் செய்யும் வார்த்தை என்கிறார். ஸஞ்ஜீவனம் என்பதற்கு உபப்ரும்ஹணம் என்று பொருள்.

இதிஹாஸமும் புராணமும் ஸ்ம்ருதிகளும் இந்த தொழிலைச் செய்கின்றன. அதற்கு நிகராகிவிட்டது இவளுடைய வார்த்தை என்பதாம். இவள் சொல்வதெல்லாம் திருவாய்மொழியாகும். ஸம்ஹிதா ஸார்வபௌமீ என்பது போல் இந்த ஸார்வபௌமியின் வாக்கு அமைந்தது போலும். வேதார்த்தரஹஸ்ய கோசரதயா தத்ப்ராணப்ரதாம் வாசம் என்றார் தீக்ஷிதர்.

நியோக யோக்யாந் அநகப்ரஸாதா ஆணைக்குட்பட்டவர்களுக்கு அருள்பாலிக்கும் எண்ணமுடையவளாய் என்று பொருள். பரிஜனங்களை அழைத்தாள் என்று அன்வயம். ப்ரஸாதம் என்பதற்கு அனுக்ரஹம் என்று பொருள். அவள் அனுக்ரஹம் வீணாகாது. அவிததாநுக்ரஹா என்று பொருள் கூறினார் தீக்ஷிதர். இந்த ப்ரஸாதம் அநகம். அதாவது ஸோபாதிகமல்ல என்பதாம். ப்ரஸன்னனான எம்பெருமான் கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்க இவள் செய்யும் அநுக்ரஹம் அநகமாகத்தானே இருக்கும்! இவள் வார்த்தையில் தூய்மையும் தெளிவும் இருந்தது என்னலாம். கர்ப்பிணி ஏதோ வாயில் வந்தபடியெல்லாம் சொல்கிறாளே என்று நினைக்கலாகாது என்றபடி. ப்ரஸாதம் என்பது வாக்கின் குணம். கலக்கமின்மையையும் குறிக்கும்.

நாகௌகஸாம் நாமபி: ஆஜுஹாவ நாகலோகவாஸிகளின் பெயர்களைச் சொல்லி அழைத்தாள் என்று பொருள். நாகம் என்பதற்கு ஸ்வர்க்கம் என்று பொருள். அங்கு வஸிப்பவர்களின் என்றபடி. தனது பரிஜனங்களை தேவலோகவாஸிவளின் பெயர்களைச் சொல்லி அழைத்தாள். இவர்கள் பெயர் மறந்து விட்டதா! இவர்களை

பெருமையுடன் அழைக்கிறாளா! செல்லமாக அழைக்கிறாளோ, குழப்பத்தினால் அழைக்கிறாளோ, தனது பரிஜனங்களுக்கு அந்த அந்த நாமாக்களைச் சொல்லி அந்த அந்த அந்தஸ்தை அளிக்க அழைக்கிறாளோ, என்ற கேள்விகள் எழுகின்றன. இந்திரா சந்திரா என்றவாறு அழைத்தனள் என்றார் தீக்ஷிதர். பகவத் தாதாத்ம்யபாவனையால் தனது பரிஜனங்களையும், பகவானுடைய பரிஜனங்களைப்போல் அழைத்தாள். அத்தகைய எண்ணமே உண்டாயிற்று என்றார். **नाक** சப்தத்திற்கு வைகுண்டம் என்றும் பொருள். அங்கு வஸிப்பவர்கள் வைகுண்டவாஸிகள். அவர்களுடைய பெயர்களைச் சொல்லி அழைத்தாள் என்றும் கொள்ளலாம். யாகவேதியில் இந்த்ர ஆகச்ச ஹரிவ ஆகச்ச மேதாதிதே என்பதுபோல் அழைத்தனள் என்னலாம்.

अक् அகம் = துக்கம், அது இல்லாத இடம் நாகம்-ஸ்வர்க்கம்.

நாடகாதிகளில் பாத்திரங்களின் பெயர்களே அமைவது போலவும் பாஞ்சராத்ரவிதிப்படி தீக்ஷை பெற்றுக்கொண்டவர்களுக்கு பகவந்நாமங்களேயாமாப் போலவும், தத்பாவபாவனையால் மாதாபிதாக்கள் இட்ட பெயர் வேறு இருக்க, எம்பிரான் திருநாமமே நச்சுமின் என்னுமாப்போலவும் பகவல்லோக நாமங்களைக் கொண்டே அழைத்தாள் என்பதாம். தாஸ்ய நாமகரணம் பஞ்சஸம்ஸ்காரங்களில் ஒன்றாம். இதற்கு முன் ச்லோகத்தில் விஷ்வக்ஸேனரை ப்ரஸங்கித்தாள். இங்கு அனந்தா கருடா - ஸுதர்சனா என்றெல்லாம் கூறினளோ! என்றும் தோன்றுகிறது. இம்மாதிரி அழைத்தது

ப்ரமாதமில்லை - ப்ரஸாதம் என்கிருர். இவளுடைய வாக்கு இவ்வாறு இருந்தது என்றபடி. ருக்குகள்போல் சிறியவையாயும் ஸாமம்போல் ஸுஸ்வரமாகவும். யஜுஸ் போல் ப்ரயோகபோக்யமாகவும் ப்ராம்ஹணங்கள் போல வும் அமைந்தன என்றும் கொள்ளலாம்.

यदृच्छया यादवधर्मपत्नी
यामाह धर्मेषु परावरेषु ।
अदृष्टपूर्वापरयापि वाचा
प्रतिश्रुता नूनं अभावि तस्याः ॥ २५ ॥

யத்ருச்சயா யாதவதர்மபத்நீ
யாமாஹ தர்மேஷு பராவரேஷு
அத்ருஷ்ட பூர்வாபரயாபி வாசா
ப்ரதிச்ருதா நூநம் அபாவி தஸ்யா: (25)

(கருத்து) யாதவதர்மபத்னியான தேவகி தனக்குத் தோன்றியபடி சிறியதும் பெரியதுமான தர்மங்களில் என்ன என்ன சொன்னுளோ அதெல்லாம் வேதவாக் கியம் ப்ரதித்வனிப்பதுபோல் இருந்தது.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் வேதங்களையும் இவ ளுடைய வார்த்தை உயிர்பெறச் செய்தது என்ருர். இந்த ச்லோகத்தில் இவள் வார்த்தைகளை வேதங்கள் ப்ரதித்வனிக்கின்றன என்கிருர். ப்ரதித்வனி - எதிரொலி.

யத்ருச்சயா யாதவதர்மபத்நீ யத்ருச்சயா முன் பின் யோசிக்காமல் அகஸ்மாத்தாக, திடீரென்று, பஹுப்ரயத்னமில்லாமல், தனக்குத் தோன்றியபடி, தன் விருப்பப்படி எதிர்பாராதபடி என்று பொருள். எந்தப் பொருளும் பொருந்தும். இதற்குமுன் வேத ஸாமாந்யம் கூறப்பட்டது. இங்கு அதில் கூறப்படும் அர்த்தங்கள் விஷயமாக விசாரிக்கப்படுகிறது. தர்மபோதனம் தான் வேதங்களின் லக்ஷியம். ஸத்யம் வத தர்மம் சர என்பது போல் பல இடங்கள். யாதவ தர்மபத்நீ வஸுதேவரின் தர்மபத்னி என்று பொருள். வைதிகரின் தர்மபத்நீ என்று சொன்னுல் வேதகந்தம் இருக்கலாம். யாதவ சப்தத்தைச் சொல்லும் பொழுது தர்மவேத வாஸனை யில்லாதவளோ என்று மேல்வாரியாகத் தொன்றச் செய்யும். யாதவர்கள் வேதாதிகாரமற்றவர்கள்தானே! இந்த யாதவனிடம் மாதவன் பிறக்கப்போகிருன்! ஸஹ தர்மசரீ தவ என்னுமாப் போலே சொல்லி திருமணம் செய்துவைக்கப்பட்டவள் என்னலாம். யதோஸ் ச தர்ம சீலஸ்ய என்ருர் ஸ்ரீசுகர். பரம தார்மிகருடைய பத்நீ பரமதார்மிகை. தர்மம் தெரிந்த பத்நீ தர்மபத்நீ என்றும் கொள்ளலாம். இது மேல் பாதத்திற்கு மிகவும் பொருத்தமானது. தர்ம ப்ரதானையானதால்தான் தர்ம ஸ்வரூபியான க்ருஷ்ணன் கர்ப்பவாஸத்தை வரித்தது.

யாமாஹ தர்மேஷு பராவரேஷு தர்மவிஷயத்தில் என்ன சொன்னுளோ என்று பொருள். தாரணுத் தர்ம:. நிர்ணயம் பண்ணுவது மிகவும் கடினம். தர்மங்கள் ஸாமாந்யதர்மங்கள் விசேஷதர்மங்கள் என்று இரண்டு

கூறுகயிருக்கும். பரதர்மம் அவரதர்மம் என்று கூறுகிறார். நிச்ரேயஸ அப்யுதயங்களுக்கு காரணமாய் இருப்பதால் உத்ருக்ருஷ்டாபக்ருஷ்ட ரூபங்களான தர்மங்கள் என்றார் தீக்ஷிதர். ஐஹிக பலன்களையே கொடுப்பவை சில. ஆமுஷ்மிக பலத்திற்கே அமைந்தவை சில. ஆதலால் உயர்வு தாழ்வு. தர்மம் ஒரு மாதிரியே இருப்பதில்லை. அதிகாரிகளுக்கு ஏற்றபடி தர்மம் மாறும். தர்ம்யம் ஸங்க்ராமம் என்றார். அது க்ஷத்திரியனுக்கே. தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம் என்றும் ஸதாம் தர்ம: பரம துர்க்ஞேய: என்றும் கூறுவர். ப்ரவ்ருத்தி தர்மம். நிவ்ருத்தி தர்மம் என்று விவரித்தார் டிப்பணியில். யத்ருச்சயா யாம் ஆஹ என்று சேர்க்கவேண்டும். உள்ளேயிருப்பவன் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம் எனப்பட்டவன். ஆதலால் தேவகி சொல்வது அவன் குரலேயாம் போலும். க்ரீடார்த்தமபி யம் ப்ரூயு: ஸ தர்ம: பரமோ மத: என்பதை நினைக்கவேண்டும். விளையாட்டாக சொல்வதும் தர்மமாகும் என்று பொருள். யோந்த: ப்ரவிச்ய மம வாசம் இமாம் ப்ரஸுப்தாம் ஸஞ்ஜீவயதி என்ற த்ருவனுடைய வார்த்தையையும் நினைக்க. ஆஹ என்பது விபக்தி ப்ரதிரூபகம் அவ்யயம் என்றார் தீக்ஷிதர். வர்த்தமான காலத்திலும் பொருள் கொள்ளலாம். இத்யாஹ என்ற ச்ருதிப்ரயோகத்தை நினைவில் கொண்டபடியும் ஆகலாம்.

அத்ருஷ்டபூர்வாபரயாபி வாசா எதற்கு முந்தியதும் பிந்தியதும் என்று சொல்ல இயலாதோ அத்தகைய வாக்கினால். வேதம் என்றபடி. அது அநாதி

அனந்தம். யாராலும் காணப்படவில்லை என்று பொருள். முன்னம் பராவரம் என்றாற்போல் இங்கு பூர்வாபரயா என்பது. வேதசப்தங்களைக் கொண்டே முதலில் தேவர்களுக்குப் பெயரிட்டான் என்பர். வாசா அபி - வாக்கினாலும் என்றதால் ஸ்ம்ருதி-இதிஹாஸம்-புராணம்-தர்ம சாஸ்த்ரம் இவைபற்றி கேட்கவேண்டுமோ !

ப்ரதிச்ருதா நூநம் அபாவி தஸ்யா: அவளுடைய அந்தவாக்கிற்கு வேதவாக்கு ப்ரதித்வனியாய் அமைந்தது. ப்ரதிபலித்தது என்றபடி. வேதவாக்கென அநுவாத(க)மாயும், புரோவாத(க)மாயும் அர்த்தவாத(க)மாயும் அமைந்தது என்றபடியும் ஆம். இவள் வாக்கு எங்கும் கேட்கப் பெற்றது போலாம். ப்ரதிச்ருதி என்பதற்கு அங்கீகாரம் என்றும் பொருள். வேதவாக்கினாலும் அங்கீகரிக்கப்பட்டதாயிற்று என்றும் கொள்ளலாம். நிரங்குசமான வேதம் கட்டளையிடுவதுபோல் இது இப்படித்தான் என்று சொல்வாள் போலும். வேதங்களுக்கும் இவளுடைய வாக்கு உபஜீவ்யமாக இருந்தது என்று கூறினார் தீக்ஷிதர். உபச்ருதி - அநுச்ருதி, ப்ரதிச்ருதி என்பவற்றில் ப்ரதி ச்ருதிக்கு ஏற்றம் உண்டு.

क्रियामुपादित्सत विश्वगुप्त्या
कृतापराधेऽपि कृपामकार्षीत् ।
मुनीन्द्रवृत्त्या मुखरीभवन्ती
मुक्तिक्षमां वक्तुमियेष विद्याम् ॥ २६ ॥

க்ரியாம் உபாதித்ஸத விச்வகுப்த்யா
க்ருதாபராதேபி க்ருபாம் அகார்ஷீத்
முநீந்த்ரவ்ருத்யா முகரீபவந்தீ
முக்திக்ஷமாம் வக்தும் இயேஷ வித்யாம் (26)

(கருத்து) உலகரக்ஷணத்திற்கு ஏற்றதான செயல்களையே செய்ய நினைத்தாள். தவறு செய்தவரிடத்திலும் க்ருபை பண்ணினாள். வேதாந்த விசாரமுடையவளாய் ஏதோ சொல்பவளாய்-முக்திக்கு ஏற்றதான வித்யையை சொல்ல விரும்பினாள்.

(விரிவுரை) இதற்கு முன் ச்லோகங்களில் வேத த்ரய ஸஞ்ஜீவனமான வாக்கு என்றும் கூறி உபநிஷத் ரூபமாய் அவள் வாக்கு அமைந்தது என்று இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

க்ரியாம் உபாதித்ஸத விச்வகுப்த்யா விச்வத்தை ரக்ஷிக்க ஏற்றதான செயல்களையே செய்ய நினைத்தாள் என்றபடி. உபாதித்ஸத மேற்கொள்ள எண்ணினாள் உலக ரக்ஷணத்திற்கும் இவளுக்கும் என்ன ஸம்பந்தம்? அத்தொழிலை ஏன் இவள் செய்யவேண்டும்? இங்கு விச்வ குப்த்யா என்ற சொல் மிகவும் ரஸமானது. விச்வம் என்பது பகவானுடைய திருநாமம். அவன் செய்யும் தொழில் ரக்ஷணம் தானே! அவனை ரக்ஷிக்கவேண்டும். கர்ப்பத்திற்கு நலிவு ஏற்படாமல் செய்யவேண்டியதைச் செய்தாள். அவன் விச்வத்தை தன்னுள் மறைத்தான், அவனைத் தன்னுள் வைத்துக் காப்பாற்றவேண்டியது கடமையாயிற்று. விச்வத்தை கோபநம்-ரக்ஷணம் பண்ணுகிறவனை ரக்ஷணம் பண்ணுவதே அவள் செய்யும்

செயலாம். விச்வம் செய்யும் குப்தி. விச்வத்தைக் காக்க குப்தி என்று கொள்ளலாம். குப்தி-ரக்ஷணம்-கோபநம் மறைப்பது. கர்ப்பிணிகள் ச்ரமமாயிருந்தாலும் ஏதாவது செய்துகொண்டிருப்பதுதான் நல்லது. ஆசாரம் குன்றாமல் இருந்தாள். ஏழாவது கர்ப்பம் போல் ஆகிவிடுமோ என்று அஞ்சி ஏற்ற செயல்களையே செய்துவந்தாள் என்று அபிநவதேசிகஸ்வாமி திருவுள்ளம் பற்றினார். அவளுக்கு இப்பொழுது கர்ப்பம்தான் உலகமெல்லாம். அதை ரக்ஷிப்பதைக் காட்டிலும் வேறு என்ன செய்யவேண்டும்!

க்ருதாபராதேபி க்ருபாம் அகார்ஷீத் சிறு சிறு தவறு செய்தவரிடமும் இரக்கமே காட்டினாள். இவளுடைய ப்ரக்ருதியை புரிந்துகொள்ளாமல் யாராவது என்ன இவள் இப்படி இருக்கிறாளே என்று வாசிகமாகவோ, மானஸிகமாகவோ, அபசாரப்பட்டாலும், காரியம் செய்வதற்கு நாங்கள் இல்லையோ, எதற்காக இவள் காரியம் செய்யவேண்டும். இவளுக்கு யார் தான் சொல்வது! இனிமேல் நான் ஒன்றும் செய்யப்போவதில்லை என்றவாறு அந்தரங்க பரிஜனங்கள் அபசாரப் பட்டாலும், சக்தியிருந்து, உபத்திரவமில்லாமல் இருந்தால்தானே சாஸ்திரத்தைக் கடைபிடிக்கவேண்டும். பூரண கர்ப்பிணிக்கு ஏன் இந்த ஆசாரவ்யவஹாரம் என்றெல்லாம் சினந்தாலும், அவர்களிடம் கோபம் கொள்ளவில்லை. க்ருபையே பண்ணினாள். ந கஸ்சித் ந அபராத்யதி என்று சொன்ன இனமாதலால் மன்னிக்கிறாள்.

முநீந்த்ர வ்ருத்யா முகரீபவந்தீ மஹாமுனிவர்களின் தொழில் கொண்டதால் உள்ளடங்காமல் பேசு

கின்றுள். மனனம் செய்பவர்கள்தான் முநிவர்கள். வேதாந்த சிந்தைதான் அவர்களுக்கு. அது முற்ற முற்ற வெளியே வராமல் இருக்காது. தொழுதெழு என்மனனே என்று தொடங்கிய சடகோப முநி பத்துப்பத்தாக ஆயிரம் பாடிவிட்டார். அருள்கொண்டு ஆயிரம் இன் தமிழ்ப்பாடினுன் என்றுர் மதுரகவி.

முக்திக்ஷமாம் வக்தும் இயேஷ வித்யாம். முக்திக்கு ஏற்ற வித்யைசொல்ல எண்ணிஞள். மோக்ஷம் இச்சேத் ஜஞர்தநாத் என்பர். அவன் தோன்றும் முன்னமே அவ்வித்தையை சொல்பவள் ஆனுள். த்வே வித்யே வேதிதவ்யே பராச அபராச என்று வேதமே கூறியது, வித்யா என்பது ஸா வித்யா யா விமுக்தயே என்றபடி முக்தியைத் தரும் வித்யையைத்தான். அத்யாத்மவித்யா வித்யாநாம் என்றுன் அவனே கீதையில். முக்திக்ஷமாம் - முத்திதரவல்ல என்று விசேஷித்துக் கூறப்படுவதால் ந்யாஸ வித்யையை குறிப்பிட்டதாகும். ந்யாஸ வித்யாநிஷ்டனுக்குத்தானே மோக்ஷம். இந்த சுலோகத்தில் இரண்டு விருப்பங்கள். ஒன்று தன் செய்கை எவ்வாறு அமையவேண்டும் என்பது - மற்றொன்று முக்திக்ஷமமான வித்யையைதான் சொல்லவேண்டும் என்பது. செய்தது ஒன்று. அதுதான் தயை. பொதுவான சப்த விந்யாஸங்களைப் பார்க்கும் பொழுது க்ருபையும் ந்யாஸ வித்யையும் கொண்டுதான் விச்வகுப்தி நடக்கும் என்பது ஏற்படும். பதரிகாச்ரமத்தில் தபஸ்வியாக இருந்து அஷ்டாக்ஷரவித்யை கொண்டு நிவ்ருத்தி மார்கத்தை பண்ணினதும் கருத்தாகலாம் என்றுர் டிப்பணியில்.

सतां चतुर्वर्गफलप्रसूतौ
नारायणे गर्भगते नताङ्गी ।
अभङ्गुरामुन्नतिमाश्रयन्ती
सर्वस्य सादित्सत सर्वमेका ॥ २७ ॥

ஸதாம் சதுர்வர்கபல ப்ரஸூதௌ
நாராயணே கர்ப்பகதே நதாங்கீ
அபங்குராம் உந்நதிம் ஆச்ரயந்தீ
ஸர்வஸ்ய ஸாதித்ஸத ஸர்வம் ஏகா (27)

(கருத்து) நல்லோர்க்கு நான்குவிதமான புருஷார்த்தங்களையும் நல்குமவனை நாராயணன் கர்ப்பத்தில் நேர்த்தியாய் எழுந்தருளிவிட்ட பொழுது நதாங்கியாய் ஸ்தனபாரத்தால் குனிந்த - வணங்கின அங்கமுடையவளாய் இருந்தாள். அவள் உடல் வணங்கியதே யன்றி உள்ளத்தில் சிதருத உயர்வினைப் பெற்றுவிட்டாள். தான் ஒருத்தியே எல்லோருக்கும் எல்லாவற்றையும் அளிக்க விருப்பங் கொண்டாள்.

(விரிவுரை) இதற்கு முந்திய மூன்று சுலோகங்களால் வாசிக வ்யாபாரத்தை கூறினுர். இப்பொழுது செய்கைகள் எந்த எந்த வகைகளில் அமைந்தன என்று கூறுகிறுர். கர்ப்பிணிகளுக்கு ஆசை நிறைய ஏற்படும். இவளுக்கு ஏற்பட்ட ஆசை தான் எத்தகையது என்பதை இந்த சுலோகத்தில் கூறுகிறுர். முன் சுலோகத்தில் உபாதித்ஸத என்றுர் இதில் ஆதித்ஸத என்பர்.

ஸதாம் சதுர்வர்க பலப்ரஸூதெள நல்லவர்களுக்கு புருஷார்த்த பலங்களை அடைவிப்பவள் என்று பொருள். தர்மம் அர்த்தம்-காமம். மோக்ஷம் என்பவை நான்கு புருஷார்த்தங்கள். இதை சதுர்வர்கம் என்பது. இவையே பலன். புருஷர்களுக்கு விரும்பிப் பெறப்படுவதால் புருஷார்த்தங்கள் என்று பெயர். ஆனால் இவற்றிற்கும் பலம் உண்டு. தர்மம் உபாயமும் பலமும் ஆகும். அவ்வாறே அர்த்தமும் காமமும். ஆதலால் இவை த்ரிவர்கம் எனப்படும். நான்காவதான மோக்ஷம் மட்டும் பலமாகுமேயன்றி உபாயமாகாது. ஆதலால் அது அபவர்கம் எனப்பட்டது. இந்த மூன்று வர்கத்திலும் சேராதது என்பதால். மூன்று வர்கத்திற்குப் பலன் அளிப்பவனும், நான்காவதான மோக்ஷம் என்ற பலன் அளிப்பவனும் நாராயணன் என்றபடி. பலன்களுக்கெல்லாம் உத்பத்திஸ்தானம் அவனே! தர்மோ தர்மவிதுத்தம: என்றும், காம: காமப்ரத: என்றும் அர்த்த: என்றும் அவனுக்கே திருநாமம். பலன்களை கொடுப்பவனும் அவனே! பலனும் அவனே! இவள் அவனை ப்ரஸவித்தால் அவன் பலன்களை ப்ரஸவிப்பான் என்பதாம்.

நாராயணே கர்ப்பகதே நதாங்கீ நாராயணன் கர்ப்பத்தில் எழுந்தருளிவிட்ட பொழுது குனிந்த நிலையை பெற்றாள்-நதாங்கியானாள். நாரங்களுக்கெல்லாம் இருப்பிடமானவன் தானே நாராயணன். அவன் எவ்வளவு பரமாயிருப்பான். அத்தகை பரனை கர்ப்பத்தில் தரித்தால் உடல் குனிவு தட்டும். ஸ்தநபரநமிதாங்கீ என்றார் தீக்ஷிதர். ஸ்தனங்களின் பாரம் என்றுமட்டும் கொள்ள வேண்டாமல்லவா! நாராயணன் சர்பத்தில் எழுந்தருளியிருப்பது தான் காரணம் என்று ச்லோக சய்யையே காட்டுகிறது.

அபங்குராம் உந்நதிம் ஆச்ரயந்தீ அழிவில்லாத உந்நதியை பெற்றுவிட்டாள். நதி என்பதற்கு உந்நதி என்பது எதிர் தட்டில் இருக்கும், நமநம்-வணக்கம் உடலில் ஏற்பட்டது, உள்ளத்தில் உந்நதி உயர்வு ஏற்பட்டது என்றபடியாம். தொழுதால் பழுதுண்டே என்பது போலல்லாமலும் நமந்தி ஸந்த: த்ரைலோக்யாத் அபி லப்தும் ஸமுந்நதிம் என்பது போலுமாகவே அமைந்தது என்பது சிறப்பு.

ஸர்வஸ்ய ஸா தித்ஸத ஸர்வம் ஏகா எல்லோருக்கும் அவளே எல்லாம் கொடுக்க விரும்பினாள். ஸா அதித்ஸத என்று பிரிக்க வேண்டும். எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் எல்லாம் கொடுக்கவேண்டும், தானே கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தின் உந்நதியை வளர்ச்சியை - பெருந்தன்மையை காட்டுவதாம். தாதாதி த்யாயிநாம் நித்யம் அபவர்கப்ரதோ ஹரி: எனப் பெற்றவன் உள்ளே எழுந்தருளியிருக்க இவளுக்கு இந்த எண்ணம் ஏற்படுவது இயற்கை. ஸர்வஸ்மை என்னாமல் ஸர்வஸ்ய என்று கூறியதில் ஒரு ரஸமும் உண்டு. ஸர்வ சப்தம் பகவானை குறிக்கும். ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ: என்பர். ஸர்வனின் ஸர்வஸ்வத்தையும் அளிக்க விரும்பினாள். இவள் விலக்ஷணை ஆதலால் ஏகா நிகரற்றவளாய் விளங்கினாள். அவன் வரதன் என்று பெயர் பெற்றால் இவள் அவனையும் உலகுக்கு ஸர்வருக்கும் அளிக்கப் போவதால் ஸர்வதா என்ற பெயர் பெறுவாள் போலும்! இது உலக விலக்ஷணமான ஆசை, ஸகலபல ப்ரதன் எம்பெருமான் ஆதலால் இவளும் அத்தகையவள் ஆனாள்.

कृशोदर कार्श्यमतीत्य काले
केनापि धाम्ना कृतवृद्धियोगा ।
परां अभिख्यां क्रमशः प्रपेदे
ताराभिनन्द्या तनुरैन्दवीव ॥ २८ ॥

க்ருசோதரீ கார்ச்யம் அதீத்ய காலே
கேநாபி தாம்நா க்ருத வ்ருத்தியோகா
பராம் அபிக்யாம் க்ரமச: ப்ரபேதே
தாராபிநந்த்யா தநுரைந்தவீவ (28)

(கருத்து) இயற்கையாகவே மெல்லிய மேனியுடையவள். இடையும் அப்படியே. கர்ப்பம் வளர வளர மெல்லியநிலை மாறிவிட்டது. ஏதோ ஒரு தேஜோ விசேஷத்தினுல் நாளுக்கு நாள் வ்ருத்தியாகிக்கொண் டிருக்கிறது. நாளடைவில் உயர்ந்த அழகினைப் பெற்று பொலிவுடன் விளங்குகின்ருள். இவளது மேனி தாரை கொண்டாடும் சந்திரனின் மேனிபோலன்ரே இருக்கின்றது !!

(விரிவுரை) தேவகியின் திருமேனிப் பாங்கினை வர்ணிக்கிருர்.

க்ருசோதரீ கார்ச்யம் அதீத்ய காலே மெல்லியதான வயிறுடையாள். கர்ப்பகாலத்தில் முதலில் இளைப்பது ஸஹஜம். பிறகு யுக்தமான காலத்தில் க்ருசத் தன்மை மறைந்துவிடும். காலே என்பதை மேல் வரும் வாக்கியத்தோடும் சேர்த்துக்கொள்ளலாம். க்ருச: என்பது ஸாமுத்ரிகாலக்ஷணம் பொருந்தியபடி என்பதாம்.

க்ருச: என்று எம்பெருமானுக்கு திருநாமம். ஸஹஸ்ர நாமம் காட்டிய திருநாமம். அவன் உதரத்தில் எழுந்தருளினபடியால் க்ருசோதரீ என்றபடி. க்ருச: உதரே யஸ்யா: என்று ஸமாஸம் கொள்ளலாம்.

கேநாபி தாம்நா க்ருத வ்ருத்தியோகா ஏதோ ஒரு வஸ்துவினுல் அல்லது தேஜஸ்ஸினுல் வ்ருத்தியடைந்து இருக்கிருள். இன்னதென்று அறிய முடியாததொரு தேஜஸ் என்பதாம். அதர்க்ய மஹிம்நா என்ருர் தீக்ஷிதர். தாம்நா பகவத் தேஜஸா என்றும் கூறினுர். பகவானையே குறிக்கலாம். க்ருதவ்ருத்தி என்ருல் போதும். யோகா என்பது அவளுக்கு ஏற்பட்ட யோகம் இதுவாம். வ்ருத்தி-வளர்ச்சியும் யோகமும் உண்டு.

பராம் அபிக்யாம் க்ரமச: ப்ரபேதே சிறந்த விலக்ஷணமான சோபையை க்ரமமாக அடைந்தாள் என்று பொருள். அபிக்யா சோபை அழகு. தங்கத்திற்கு மெருகு போன்றதொரு பளபளப்பு. திலீபனும் ஸுதக்ஷிணையும் வஸிஷ்டருடைய ஆச்ரமத்திற்குச் செல்லும் பொழுது, சித்ரை சந்திரன் இரண்டும் சேர்ந்தால் ஏற்படும் சோபையை தம்பதிகள் பெற்றனர் என்ருன் காளிதாஸன். காபி அபிக்யா தயோ: ஆஸீத் சித்ரா சந்த்ரமஸோரிவ என்ருன். இங்கு பராம் அபிக்யாம் என்பர். உத்க்ருஷ்டமான சோபை.

தாராபிநந்த்யா தநு: ஐந்தவீவ தாரைகளால் புகழப்பட்ட சந்திரனின் உடல் போல் இருந்தது என்று பொருள். சந்திரகலை சுக்ல பக்ஷாரம்பத்தில் க்ருசமாக இருக்கும். நாளுக்குநாள் வளர்ந்து பூரண ஒளியைப்

பெறும். அந்த சந்திரன் உருவம் எப்படி இருக்குமோ அப்படி இவளுடைய உடல் இருந்தது என்பதாம். சந்திர கலேயானது சூரிய ஒளியில் வளர்ச்சிபெற்று பூர்த்தியடைவது போலாம். இங்கு தாரா என்பதற்கு கண்ணில் உள்ள தாரை என்று பொருள். எந்த கண்தான் இவள் திருமேனியை பார்த்தால் மகிழாது! தாராஸு அபிநந்த்யா, பல நக்ஷத்ரங்கள் இருந்தாலும் ஒரு சந்திரபிம்ப சோபை ஏற்படுமோ! நக்ஷத்திரங்களால் கொண்டாடப்பெற்றது என்னலாம். தார என்பதற்கு பகவான் என்றே பொருள். ஸஹஸ்ரநாமத்தில் தார: என்பதும் பகவந்நாமமாகப் படிக்கப்பெற்றது. அவளுலும் அபிநந்தனம் பண்ணப்படும் மேனிப்பொலிவு, கண்ணுக்குள் இருக்கும் க்ருஷ்ண தாரை என்றே பொருள் உரைத்தனர். தாரை ப்ருஹஸ்பதி பத்நி, அவள் மோகித்து மகிழ்ந்த மேனிபோல் என்றும் கொள்ளலாம். ப்ரஸவித்த பிறகு கொஸல்யையை சாதோதரீ என்ருன் காளிதாஸன். பூர்வ தசையில் கார்ச்யத்தை குறிப்பிடும் பொழுது க்ருசோதரீ என்ருர் ஸ்வாமி. இவளுடைய தேஜஸ்ஸுக்கு பகவான் காரணம், சந்திரனின் தேஜோவ்ருத்திக்கு சூரியன் காரணம். இங்கு ச்லோகம் வேறு விதமாகவும் சில கோசங்களில் இருப்பதை டிப்பணியில் குறிப்பிட்டுள்ளார்.

कृशोदरी तारकयाभि नन्द्या
केनापि धाम्ना कृतवृद्धियोगा
अतीत्य कार्श्यं क्रमशः प्रपेदे
परां अभिख्यां तनुरैन्दवीव.

என்று தாரா என்பதற்கு முத்து என்றும் பொருள். தாராவத் அபிநந்த்யா என்றும் கொள்ளலாம்.

निगूढं अन्तर्दधता निविष्टं
पद्मापरिष्कारमणिं प्रभूतम् ।
मध्येन तस्याः प्रचितेन काले
मञ्जूषया रूप्यभुवा बभूवे ॥ २९ ॥

நிகூடம் அந்தர்ததா நிவிஷ்டம்
பத்மாபரிஷ்காரமணிம் ப்ரபூதம்
மத்யேந தஸ்யா: ப்ரசிதேந காலே
மஞ்ஜூஷயா ரூப்யபுவா பபூவே (29)

(கருத்து) உள்ளே மறைந்ததாய் இருப்பதும், உன்னதமானதும் லக்ஷ்மிக்கு அணிகலமான ரத்னம் போன்றதையும் தரிக்கின்றது தேவகியின் இடைப்பகுதி. அதுவும் காலத்தோடு புஷ்டமாய் வளர்ந்துள்ளது. அவ்விடை வெள்ளிப் பேழையோ என்னலாம்படி ஆகிவிட்டது.

(விரிவுரை) 28 முதல் மூன்று சுலோகங்களால் பிறருடைய பார்வையில் தேவகி காக்ஷியளிக்கிருள் என்பதை விளக்குகின்ருர். எல்லோருடைய கண்களில் படும் அழகையும், அவளது கண்ணின் ஸ்நேஹ அமைப்பையும் முந்திய சுலோகத்தில் கூறினுர். ஸமுதாயசோபை கூறப்பட்டது இங்கு திருவுதரம் அமைந்த பாந்தத்தை விளக்குகின்ருர்.

நிகூடம் அந்தர் ததா நிவிஷ்டம் உள்ளுக்குள்ளே நிகூடமாக வைக்கப்பட்டது என்று பொருள். நிகூடமான வஸ்து இதுவரை யாருமே பார்த்திராதது.

இவளாலும் அறியப்பட்டதில்லை. நிகூடமாகவே வைக்கப்பட்டது. இதற்கு காரணம் மேல் பாதத்தில் கூறப்படுகிறது. அந்த: நிகூடம் என்று உரையிட்டார் தீக்ஷிதர். கூடமாகவே வைக்கப்பட்டதை உள்ளேயே தரிக்கிறாள் என்றும் பொருள் பெறலாம். அந்வேஷ்டவ்ய: என்ற நிலையில் இருப்பது. அந்வேஷணம் பண்ணினாலும் புலனாகாமல் உள்ளேயே உறைந்திருக்கும் என்றபடியாம். மாயா நிகூடமநபாய மஹாநிதிம் த்வாம் என்றார் வரதராஜ பஞ்சாசத்தில். அங்கு உபர்யுபரி ஸஞ்சரதாம் அத்ருச்யம் என்றும் விளக்கினார். குஹாஹிதமான வஸ்து கர்ப்பாஹிதமாகவுள்ளது. இங்கு அந்த. என்பதை நிகூடம் நிவிஷ்டம் ப்ரபூதம் என்ற மூன்று சொற்களோடும் சேர்க்கலாம்.

பத்மா பரிஷ்காரணிம் ப்ரபூதம் லக்ஷ்மிக்கு அலங்கார ரத்னமாயிருக்கிறான் என்கிறார். ப்ரபூதம் என்பதற்கு உன்னதம் என்று பொருள். எம்பெருமானை மணியாக நிரூபணம் பண்ணுவது ஸர்வஸம்மதம். பொன்னை மாமணியை என்றும், சிந்தாமணியே திருவேங்கடம் மேய வெந்தாய் என்றும், பச்சைமாமலைபோல் மேனி என்றும் மாணிக்கமே என் மணியே என்றும் கருமாணிக்கம் என்றும், என் மணியினை என்றும் கருமணியைக் கோமளத்தை என்றும், கருமணியே என்றும் முத்தொளி மரகதமே என்றும், மணியுருவம் கண்டோர் என்றும், திருமாமணிவண்ணன் தேசு என்றும், மாணிக்கமே என் மரகதமே என்றும் பச்சைமேனி என்றும், பலவாறு ஆழ்வார்கள் மணியாகவே எம்பெருமானை அனுபவித்துள்ளனர். ஆனால் பத்மாபரிஷ்காரமணியாக ஸ்வாமி ரூபணம் பண்ணியது

அத்யத்புதம். கோசலை தன் மணிவயிறு வாய்த்தவன் என்றார் குலசேகரப் பெருமாள். தேவகியின் திருவயிற்றின் பெருமை இம்மணியால் என்பதோடு திருவுக்கும் பரிஷ்காரமணியாய் இருப்பவன் என்கிறார். கருவிலே திருவின் பார்வை தேவை. ஆனால் அத்திருவுக்கும் அலங்கார மணியாக இருப்பன் என்கிறார். திருவுக்கும் திருவாகிய செல்வா தெய்வத்துக்கரசே செய்ய கண்ணா என்பதையும் நினைக்கலாம்.

மத்யேந தஸ்யா: ப்ரசிதேந காலே நாளடைவில் கர்ப்பம் வளர திரு இடையும் பருத்து இருப்பது என்று பொருள். கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நிற்பவன் தேவகியின் வயிற்றில் மணியாய் இருக்கிறான். ப்ரசிதேந மத்யேந என்று கூறுகிறார். ப்ரசிதம் - புஷ்டமானது.

மஞ்ஜூஷயா ரூப்யபுவா பபூவே வெள்ளியாலான பேழை போல் ஆயிற்று என்றபடி. இதற்கு முன் அவள் திருமேனி கலதௌத லக்ஷ்மியைப் பெற்றிருந்தது என்று கூறினார். இப்பொழுது தேவகியின் இடை வெள்ளிப் பேழையாகிவிட்டது என்கிறார். திருமேனியின் இடுப்பின் வெளுப்பு கவர்ச்சியாகவுளது. கர்ப்பமானதால் திருமேனி புஷ்டியாக இருப்பதால் இது பந்தோபஸ்தான பெட்டியாகுமோ என்று வியந்து, பெட்டியில் ஒன்றுமில்லையென்றால் அழகின் பயனில்லை. உள்ளே இருப்பது மணி என்று நிரூபணம் பண்ணுகிறார். அசேதனமான சிந்தாமணி போன்றதாக இராமல் பத்மாபரிஷ்கார மணியாக இருக்கிறது என்கிறார். மணியினால் பெட்டிக்கு ஏற்றம். பெட்டியால் மணிக்கு ரக்ஷை. பத்மாபரிஷ்கார

மணி என்பது நிரூபணம். வரைமேல் **மரகதமேபோல** என்றனர். மஞ்ஜூஷிகா மரகதம் பரிசிந்வதாம் **த்வாம்** என்றும் வரதாஜபஞ்சாசத்தில் அருளிச்செய்தார். உப நிஷத்துக்களை மஞ்சூஷை என்றூர் அங்கு. இங்கு தேவகி யின் இடையே உபநிஷத் ஸாம்யத்தைப் பெறும் போலும்! ரூப்யம் - வெள்ளி - அழகு என்று பொருள். ஸாலக்ராமங்களை பெட்டியில் - வெள்ளி கோயிலாழ் வாரில் எழுந்தருளப் பண்ணுவதும் உண்டு. அருவிலே மணியென அடியவர் அடைவர்கள் அருகணை யிறைவனை அருகணையுடனே என்றதையும் நினைக்க.

शनैश्शनैस्तां उपचीयमानां
दर्शान्तदीप्तामिव चन्द्रलेखाम् ।
अन्तःस्थकृष्णामवलोकयन्तः
चक्रुश्चकोरायितं आत्मनेत्रैः ॥ ३० ॥

ஶநை: ஶநைஸ்தாம் உபசீயமாநாம்
தர்சாந்த தீப்தாமிவ சந்த்ரலேகாம்
அந்தஸ்த்த க்ருஷ்ணம் அவலோகயந்த:
சக்ருஸ் சகோராயிதம் ஆத்ம நேத்ரை: (30)

(கருத்து) அமாவாஸ்யை கழிந்த பிறகு சந்திரனின் கலை ஒளி பெற்று மெள்ள மெள்ள வளர்ச்சியடையும். வளர வளர சந்திரனின் கலைகளில் கறுப்பு நிறம் தெரியும். அம்மாதிரி வளர்ச்சியடைந்துவரும் தேவகியை சகோர பக்ஷிகள் போல் தங்கள் கண்களால் கண்டனர்.

(விரிவுரை) இதற்கு முந்திய ச்லோகத்தில் **தேவகி** யின் திருமேனி ரத்னம் வைத்துள்ள வெள்ளிப் பேழை போல் இருந்தது என்றூர். அதிலும் ஜனங்களின் பார்வை யில் தேவகியின் தோற்றமே குறிக்கப்பெற்றது. இந்த ச்லோகத்தில் தேவகியை காணும் ஜனங்களின் ஆத்ம த்ருப்தியை கூறுகிறூர்.

சநை: சநை: தாம் உபசீயமாநாம் மெள்ள மெள்ள வளர்ச்சி யடைபவள் என்று பொருள். அடைவது என்றும் கொள்ள வேண்டும். சந்திரன் கலை மெள்ளத் தான் வ்ருத்தியடையும்.

தர்சாந்த தீப்தாமிவ சந்த்ரலேகாம் தர்சம் மறைந்த பிறகு. தர்சம் என்று அமாவாஸ்யைக்குப் பெயர். என்று சந்திரன் சூரியனேடு கலந்து காணுமல் போகிறுனே அதை தர்சம் என்று விசித்திரமாக வ்யவஹரிப்பர். இப்பொழுது தர்சம் அதர்சமாகிவிட்டது. சுக்லபக்ஷம் தொடங்கி விட்டது. க்ருஷ்ணபக்ஷம் போனபிறகு என்று சமத்கார மாக சாதிக்கப்பட்டது டிப்பணியில். அப்பொழுது தீப்த மான ஒளி பெறுவதான சந்த்ரலேகை போல் என்கிறூர். லேகா என்பதற்கு கோடு பங்க்தி லிபி என்று பொருள். இங்கு ரேகை என்பது. ரலயோர் அபேதம் என்னலாம். சந்த்ரலேகா என்றே உலக வழக்கு.

அந்தஸ்த்தக்ருஷ்ணம் அவலோகயந்த: உள்ளே யிருப்பவன் க்ருஷ்ணன். இந்த ரஹஸ்யத்தை தெரிந்து கொண்டனர் போலும். க்ருஷ்ணம் என்பது கறுப்புநிறம் சந்திரனில் இது காணப்படும். க்ருஷ்ணம்ருகம் என்று இதை கூறுவர். தேவகி சந்திரலேகை போல் காணப்

படுவதால் அந்தஸ்த்த க்ருஷ்ணும் என்று ச்லேஷையாக சாதிக்கின்றார்.

சக்ரு: சகோராயிதம் ஆத்ம நேத்ரை: தங்கள் கண்களை சகோர பக்ஷியாகச் செய்து கொண்டனர். சந்திர னின் கிரணத்தை தான் அது உண்டு உயிர்வாழும். அது போல் பார்வையாளர்கள் உன்முகர்களாய் இருந்தனர். அநந்ய பரதயா தல்லாவண்ய ஸுதாபாநம் சக்ரு: என்று விளக்கினார் தீக்ஷிதர். சந்திரனின் உள்ள கறுப்பு ரேகை யை க்ருஷ்ணம்ருகம் என்பதுண்டு. காண்பவர் எல்லோ ருக்கும் க்ருஷ்ணன் அந்தஸ்தன் என்ற பார்வையும் ஏற்பட்டுவிட்டது போலும்.

मयि स्थिते विश्वगुरौ महीयान्
माभूत् भुवो भार इतीव मत्वा ।
सखीजनानां अवलम्ब्य हस्तान्
सञ्चारलीलां शनकैश्चकार ॥ ३१ ॥

மயி ஸ்திதே விச்வகுரௌ மஹீயாந்
மாபூத் புவோ பார இதீவ மத்வா
ஸகீஜநாநாம் அவலம்ப்ய ஹஸ்தாந்
ஸஞ்சாரலீலாம் சநகைஸ் சகார **(31)**

(கருத்து) விச்வகுரு என்னிடம் வசிக்கிறான். அவன் அவனையும் என்னையும் தாங்கவேண்டுமானால் பூமிக்கு பாரம் எவ்வளவு அதிகமாகும் என்று எண்ணுவாள் போல் தோழிகளின் கைகளைப் பிடித்துக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து ஸஞ்சாரம் செய்தாள். இது லீலை என்ன லாம்படி இருந்தது.

(விரிவுரை) இதற்குமுன் மூன்று ச்லோகங்களால் பிறரின் பார்வைகளில் அவள் எப்படி தோற்றம் அளித் தாள் என்று கூறினார் - இனி ஒரு சில குறிப்பிடத்தக்க ஸம்பவங்களை கூறுகிறார்.

மயி ஸ்திதே விச்வகுரௌ மஹீயாந் விச்வகுரு என்னிடம் இருக்கும்பொழுது என்று பொருள். விச்வத் திற்கு குரு - தந்தை என்றும், உலகைக்காட்டிலும் பளு வான என்றும் பொருள் கூறினார் தீக்ஷிதர். குரு சப்தத் திற்கு பிதா என்று பொருள் என்பதைவிட மஹீயான் பார: என்பதற்குச் சேர பளுவுடைய என்ற பொருள் பொருத்தம். விச்வமாயும் குருவாயும் இருப்பவன் அவன். விச்வம்போல் குருவாய் இருப்பவன். விச்வத்தில் ஒரே குருவாயிருப்பவன் விச்வஸாக்ஷிகமாய் குருவாய் இருப் பவன். விச்வத்திற்கெல்லாம் குருவாய் இருப்பவன். மஹதோ மஹீயாந் என்ற ச்ருதிபாகத்தை நினைவுபடுத்து கிறார். நீ பெரியை என்றார் நம்மாழ்வார். பூபாரத்தை இறக்கவே வந்திருக்கிறான். அவனால் பாரமில்லை. ஆனால் என்னிடத்தில் அவன் இருக்கிறபொழுது நான்தான் பூமிக்கு பாரமாகிவிடுவேன்!

மாபூத் புவோ பார இதீவ மத்வா பூமிக்கு பாரம் அதிகமாகக் கூடாது என்னுமாப் போல் நினைப்பவள் என்று பொருள்.

ஸகீ ஜநாநாம் அவலம்ப்ய ஹஸ்தாந் தோழிமார்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு என்று பொருள். நான் அழுத்தி நடந்தால் பூமிக்கு பாரம் அதிகமாகாதோ என்று எண்ணுவாள்போலும். அதனால்தான் ஸஞ்சார லீலாம் சநகை: சகார ஸஞ்சாரம் என்பது நடப்பது. இது அவள் செய்ததொரு ஸஞ்சாரம் என்ற லீலையாகும். சநகை: மெதுவாக-ஸஞ்சாரமே லீலை. ஸஞ்சாரத்தில் ஒரு விதமான லீலை. தள்ளாடி நடப்பதும் எங்கு பூமிக்கு நோகுமோ என்று அடிமேல் அடிவைத்து நடப்பதும் விளையாட்டே போல் இருந்தது.

मुकुन्दगर्भा मुकुरेषु देवी
नापश्यदात्मानं अवाप्तभूषा ।
नाथत्विषा नन्दकदर्पणेना-
दिदृक्षतात्मानं अदृश्यमन्यैः ॥ ३२ ॥

முகுந்த கர்ப்பா முகுரேஷு தேவீ
நாபச்யத் ஆத்மாநம் அவாப்தபூஷா
நாதத்விஷா நந்தகதர்பணேந
அதித்ருக்ஷதாத்மாநம் அத்ருச்யம் அந்யை: 32

(கருத்து) முகுந்தனை கர்ப்பத்தில் கொண்டுள்ள தேவகி நன்கு ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்று தன்னை கண்ணாடிகளில் காணவில்லை. பிறராலே காண இயலாத தன்னை நாதன் வைத்திருக்கும் நந்தகம் என்ற கண்ணாடியினால் பார்க்க எண்ணினாள்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் ஸஞ்சார க்ரமத்தை வர்ணித்தார். இதில் தன்னை லோகவிலக்ஷணமாகப் பார்க்க ஆசைப்பட்டாள் என்பதை அழகாக நிரூபணம் பண்ணுகிறார்.

முகுந்தகர்ப்பா முகுரேஷு தேவீ முகுந்தனை கர்ப்பத்தில் கொண்டவள். கண்ணாடிகளில் என்று பொருள். ஐஹிகமாயும் ஆமுஷ்மிகமாயுமுள்ள ஆனந்தத்தை அளிப்பதால் பகவானுக்கு முகுந்தன் என்று பெயர். சாச்வதிகம் முகுந்த: என்றும் முக்தாநுபூதிம் இஹ தாஸ்யதி மே முகுந்த: என்றும் வேறு இடங்களில் ப்ரயோகித்தார். கஸ்மாந் முகுந்தோ பகவான் என்கிறார் ஸ்ரீசுகர். க்ருஷ்ணன் முகுந்தனே. அவன் கர்ப்பத்தில் எழுந்தருளியிருக்கிறான். தேவி என்பதற்கு ஒளிமிக்கவள் அழகானவள் என்று பொருள். முகுரேஷு-கண்ணாடிகளில் இது மேலே வரும் சொல்லுடன் சேரும். அரண்மனையானபடியால் எங்கும் கண்ணாடிகள் இருக்கலாம் ஆதலால் பன்மை. கண்ணாடிகளும் சித்திரமாக இருக்கலாம். முகு-என்பது இரண்டுக்கும் ஸமானம். முகுந்தனை கர்ப்பத்தில் பெற்றதால் மிக்க ஒளியுடையவளாய் இருப்பவள் என்று கூறியபடி. முகுந்த என்று ஒருவிதமான ரத்னத்திற்குப் பெயர். எட்டு நிதிகளில் ஒன்றுமாம். அதை கர்ப்பத்தில் கொண்டவளுக்கு வேறு ஆபரணமும் தேவையோ!

ந அபச்யத் ஆத்மாநம் அவாப்தபூஷா நகையணிந்து தன்னை அவள் பார்க்கவில்லை என்று பொருள். அவாப்தபூஷா பூஷணத்தில் பெண்களுக்கு இருக்கும் ஆசை அலாதியானது. ஆபரணம் பூண்ட பெண்கள்

தங்களைக் கண்ணாடிகளில் பார்ப்பதும் இயல்பு. ஆபரணம் அணியவில்லை என்று பொருள் கூறினர். முகுந்தனை கர்ப்பத்தில் பெற்றதுதான் அவள் அடைந்த ஆபரணம். ஆதலால் தன்னை அவள் நிலைக்கண்ணாடிகளில் பார்க்கவில்லை என்பதாம். புறத்தில் நோக்கில்லையே, இங்கு ஆத்மானம் என்பது உருவத்தை. முகுந்தகர்ப்பையான படியால் பல ஆபரணங்கள் அணிந்திருந்தும் கண்ணாடிகளில் பார்க்கவில்லை. அதை பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் அவள் தன்னைப் பார்க்க விரும்பினாள்.

நாதத்விஷா நந்தக தர்பணேந நாதனின் ஒளியான அவனுடைய வாள் என்ற கண்ணாடியின் மூலம் தன்னைக் காண விழைந்தாள். நாதன் நான்கு கரங்களும் ஐந்து ஆயுதங்களும் உடையவன். அவற்றுள் ஒன்று நந்தகம் என்ற வாள். மிகவும் பளபளப்பாயிருக்கும். நந்தகம் நாம ஹரே: ப்ரதீப்தம் கட்கம் என்பர். ப்ரதீப்தம் என்பதால் அது கண்ணாடிபோல் பளபளக்கும், பார்ப்பதற்கே மகிழ்ச்சியைத் தருவதால் அதற்கு நந்தகம் என்று பெயர். நாதன் ஒளியினால் அது மிகவும் விளங்குமாம். நாதனிடம் விளங்குவதால் என்றும் பொருள் உரைத்தனர். நந்தகம் என்ற (த)தர்பணம் நாதன் ஒருவனையே காட்டித்தரும். இங்கு த்விஷா என்பதை கவனிக்கவேண்டும். தமத்புதம் என்ற ச்லோகத்தில் நந்தகம் இடம்பெறவில்லை. வைடூர்ய கிரீட குண்டலத்விஷா என்பதை நினைவுறுத்தி அங்கு நந்தகத்தின் த்விஷா என்றும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் பணிப்பர்போலும்! முகுரேஷு கண்ணாடிகளில் என்று ஸப்தமியிலும், நந்தகதர்பணேந என்று த்ருதீயா விபக்தியிலும் கூறியது ரஸம். கண்ணாடிகளில் பார்ப்பது, கண்ணாடியால் பார்ப்பது என்று வேற்றுமை. நந்தகம் ஒன்றானதால் ஏகவசனம்.

அதித்ருக்ஷத ஆத்மாநம் அத்ருச்யம் அந்யை: பிறரால் காணமுடியாத தன்னுருவை நந்தகத்தில் காண விரும்பினாள் என்று பொருள். அபச்யத் என்று முதலில் பரஸ்மைபதம், அதித்ருக்ஷத என்பது ஆத்மநேபதம். த்ருச்-ஸந்நந்தமானால் ஆத்மநேபதம்தான் வரும் என்பது அநுசாஸனம். பிறருக்கு காண இயலாததாய் தன்னுள்ளே தன்னைக்காண விரும்பியதால் ஆத்மநேபதம் ஆகலாம்.

இங்கு அபிநவதேசிக ஸ்வாமியின் விவரணம் இவ்வாறு. தேவகீ முன்போல் ஆபரணம் அணியவில்லை. கர்ப்பிணிகள் ச்ரமமாயிருப்பதால் அதிகமாக தரிப்பதில்லை. தரித்தாள் என்று கொண்டாலும் அவ்வாபரணங்களுடன் தன்னைக் கண்ணாடிகளில் காண விரும்பவில்லை. முகுந்தனை கர்ப்பத்தில்கொண்ட எனக்கு வேறு பூஷணங்கள் ஏன் என்று எண்ணினாள். இந்த பூஷணங்களால் கண்ணனைக் காண இயலாது. கண்ணனையே ஒளியாகக் கொண்ட நந்தகம் என்ற கண்ணாடியில் பார்த்தால் கண்ணனையும் பார்க்கலாம் என எண்ணினாள் என்பதாம்.

அத்ருச்யம் அந்யைரதித்ருக்ஷதார்யா நாதத்விஷா நந்தகதர்பணேந என்று பாடாந்தரம் உண்டு (டிப்பணி).

स्रजः प्रभूता न शशाक वोढुं
दूरे कथा रत्नविभूषणानाम् ।
भविष्यति क्षोणिभरापनोदे
प्रत्यायनं प्राथमिकं तदासीत् ॥ ३३ ॥

ஸ்ரஜ: ப்ரபூதா ந சசாக வோடும்
தூரே கதா ரத்நவிபூஷணாநாம்
பவிஷ்யதி க்ஷோணி பராபநோதே
ப்ரத்யாயநம் ப்ராதமிகம் ததாஸீத் (33)

(கருத்து) மாலைகளை தரிக்க இயலாதவளானாள், எனில் ரத்னபராணங்களைபற்றி பேசத்தான் வேண்டுமோ! அவ்வளவு பலமின்மை ஏற்பட்டுளது, இது எவ்வாறு இருக்கின்றது எனில், பிறக்கும் மகனால் பூமியின் பாரம் குறையப்போகிறது. அதை முன்கூட்டியே உறுதிபடுத்தும் அடையாளமாக இருந்தது என்பதாம்.

(விரிவுரை) இதற்கு முந்திய ச்லோகத்தில் ஆபரணம் அணிந்தாள் இல்லை என்று கூறப்பட்டது. இங்கு ஆபரணங்களைக்காட்டிலும் மெல்லியவையான மாலைகளையே அணியவில்லை என்று கூறுகிறார்.

ஸ்ரஜ: ப்ரபூதா ந சசாக வோடும்-அதிகமாக மாலைகளை அணிய சக்தியற்றவளாக இருந்தாள் என்று பொருள். மாலைகளை என்கிறார். பெண்கள் மலர்களைக் கொய்து தொடுத்து கூந்தலில் வைத்துக்கொள்வது மரபு, ஆனால்

பண்டைய நாட்களில் மாலைகளை அணிந்து ஸஞ்சரிப்பது வழக்கம். ஸ்ரக்விண: ஸஞ்சரந்தி என்கிறார். பெண்டிரும் அவ்வாறே மாலைகள் அணிவதும் இயல்பே, அரண்மனையில் இருப்பவர்களுக்கு கேட்கவேண்டுமா! இங்கு பல மாலைகளை என்பதால் மெல்லிய ஒரு சிறு மிகழ மாலைகளை அணிந்திருக்கலாம். கர்ப்பபாரம் தவிர்க்கமுடியாதது. மாலைகளின் பாரம் வேறு வேண்டுமோ! ஆதலால் மாலைகளை அணிவதை தவிர்த்தாள். தௌர்பல்யத்தால் என்றார் தீக்ஷிதர். ப்ரபூதா: என்பதற்கு ஆகாரத்தாலும் சுமையாலும் பெரியது என்று பொருள். உந்நதங்கள் என்றும் கொள்ளலாம்.

தூரே கதா ரத்ந விபூஷணாநாம் ரத்தினங்களாலாகிய ஆபரணங்களின் பேச்சே வெகுதூரத்தில் நின்றுவிட்டது என்று பொருள், ரத்னங்களினால் இயற்றப்பட்ட ஆபரணங்கள் சுமையாகாதோ. அதனால்தான் ஆபரணங்கள் அணியவில்லை. இங்கும் சுமக்கத்தக்க சிறிய மங்களாபரணங்களை அணிந்திருந்தாள் என்பதும் உண்மை. சுமையாயிருப்பவைகளை அகற்றிவிட்டாள் என்றுதேரும்.

பவிஷ்யதி க்ஷோணி பராபநோதே பூமியின் பாரத்தைப் போக்குவதில் (சான்றாக) ஆகப்போகிறது. பூபாரத்தைப் போக்கத்தானே அவதரிக்கப்போகிறான். பூபாராவதரணவ்யாஜேந என்றார் பாஷ்யகாரர். பூபாரோத்தரணாயச ஜாத: என்பர். ஆதலால் பிறக்கப்போகும் க்ருஷ்ணன் செய்யவிருக்கும் செயல் பூபாரத்தை இறக்குவதுதான். ஆதலால் [இவள்-பூ-பாரத்தை-பாரமான பூவை மலர் மாலையை இறக்கிவிட்டாள் போலும்.]

ப்ரத்யாயநம் ப்ராதமிகம் தத் ஆஸீத் முதலாவதான அடையாளமாக அது ஆயிற்று என்று பொருள். நம்பிக்கையூட்டும் அடையாளத்தை ப்ரத்யாயநம் என்பது. அடையாளமாக இருந்தது என்றபடி. மாலைகளை அகற்றுவதும், பூஷணங்களை அகற்றுவதும் பாரம் என்கிற காரணத்தால்தான். இந்த எண்ணம் உள்ளே இருப்பவன் செயலை ப்ரதிப்லிக்கச் செய்கின்றது என்று கூறியபடி. ப்ரபூதா: ஸ்ரஜ: என்பதும் விபூஷணநாம் என்கிற பன்மையும், மாலைகள் எல்லாவற்றையுமோ பூஷணங்கள் அனைத்தையுமோ கழற்றிவிட்டாள் என்று சொல்ல அமையாது.

दिवौकसो देवकवंशलक्ष्मीं
विलोक्य तां लोकनिधान गर्भाम् ।
विभूतिमग्रेसरवेदवादाः
व्याचख्युरस्या विविधप्रकाराम् ॥ ३४ ॥

திவௌகஸோ தேவக வம்சலக்ஷ்மீம்
விலோக்ய தாம் லோகநிதாந கர்ப்பாம்
விபூதிம் அக்ரேஸர வேதவாதா:
வ்யாசக்யுரஸ்யா விவிதப்ரகாராம் (34)

(கருத்து) தேவர்கள் தேவக வம்சத்தின் லக்ஷ்மியெனத் திகழ்ந்த தேவகியை - உலகங்களின் ஆதிகாரணமான வஸ்துவை கர்ப்பத்தில் கொண்டிருப்பதைக் கண்டு, வேதவாக்யங்களை முன்மொழிபவர்களாய் பலவகையான இவளுடைய வைபவத்தை எடுத்துரைக்கலாயினர் - துதிக்கலாயினர்.

(விரிவுரை) இதற்கு முன் ச்லோகம் வரை தேவகியின் கர்ப்ப லக்ஷணங்களும் அதன் பரீவாஹமாக பல அபூர்வ பரிஸ்திதிகளையும் கூறினார். இப்பொழுது தேவர்களுக்கு ஏற்பட்ட பெருமையை பேசுகிறார்.

திவௌகஸோ தேவக வம்ச லக்ஷ்மீம் தேவதேவன் கர்ப்பத்தில் எழுந்தருளிவிட்டான். இதை உணர்ந்த தேவலோக வாஸிகள் தேவகியின் நிலையைக்கண்டு என்று சேர்த்துக் கொள்ளவேண்டும். பிரமன் முதலிய தேவர்கள் என்று டிப்பணியில் கூறினார். ப்ரம்ஹா பவஸ்ச தத்ரேத்ய கீர்ப்பிர் வ்ருஷணம் ஐடயந் என்றார் ஸ்ரீசுகர். அங்கு அவர்கள் பகவானை துதித்தனர் என்று கூறப்பட்டது. இங்கோ தேவகியை துதித்ததாக ஸாதிக்கின்றார். உண்மையில் ஸ்ரீவிஷ்ணு புராணத்தைக் கொண்டு இவ்வாறு கூறியபடியாம். ''தேவகீம் தேவதாகண: பிப்ராணம் வபுஷா விஷ்ணும் துஷ்டு வுஸ்தாம் அஹர்நிசம் என்பதை நினைக்க. வம்சத்தில் பெண் பிறந்தால் அவளை லக்ஷ்மீ என்றே அழைப்பது வழக்கம். தேவகனின் வம்சத்திற்கு லக்ஷ்மியாய் ஸம்பத்தாய் செல்வமாய் திகழ்ந்தவள் என்றபடி. கம்ஸனின் தகப்பனாரான உக்ரஸேனரின் உடன்பிறந்தவர் தேவகர், தேவகியால் தானே அவ்வம்சம் விளங்கியது! எம்பெருமானை ஈன்றெடுக்கும் பேறு யாருக்கு கிடைக்கும்! ஸந்தானகோபாலன் என்னுமாப் போலே ஸந்தானலக்ஷ்மியும் உண்டு. பெண் ஸந்ததியானாலும் அதுவே, **விலோக்ய தாம் லோக நிதாந கர்ப்பாம்**. உலகங்களுக்கு காரணமான வஸ்துவை கர்ப்பத்தில் பெற்றதைக் கண்டு என்றுபொருள்

விபூதிம் அக்ரேஸர வேத வாதா: வேதவாக்யங்களை முன்னிட்டுக் கொண்டு இவனுடைய வைபவத்தை என்று

பொருள். பலவிதமான ஐச்வர்யம் என்று கூறினார் தீக்ஷிதர். வேதோக்திகளை முன்னிட்டுக் கொண்டு என்றும் விவரித்தார். ப்ரசஸ்தாபி; கீர்ப்பி: என்றார் சுகர். வேதவாதங்களை முன்னிட்டு என்று பொருள். வேதார்த்தத்தை அனுஸரித்துப் பேசுவோர் என்றும் கொள்ளலாம். ப்ரம்ஹவாதிநோ வதந்தி என்பது போலவுமாம். சொல்பவர்களுக்கு ஏற்றம் ஏற்படும். ஆதலால் பராசரர் முதலிய பெரியோர்களை குறிக்கும். நான் முன்னம் நான் முன்னம் என்று முந்திக் கொண்டு வரும் வேத வாதங்களைக் கொண்டு என்றும் பொருள் கொள்ளலாம். திவௌகஸ: என்பதற்கு நித்யஸூரிகள் என்று பொருள் கொண்டால் ஆழ்வாராதிகள் திவ்ய ப்ரபந்த ப்ரகாரத்தையும் கொள்ளலாம்.

வ்யாசக்யு ரஸ்யா: விவித ப்ரகாராம். இவளுடைய வைபவத்தைப் பலவிதமாகப் புகழ்ந்து பேசினர். இங்கு ஸ்வாமி ஸ்ரீவிஷ்ணு புராணத்தை திருவுள்ளம் பற்றியுள்ளார் என்பது தெளிவு. அங்கு பராசரர் அக்ரேஸர வேதவாதீ. அவர் கூறும் வகை: தேவகியை 15 ச்லோகங்களால் தேவர்கள் துதித்தனர் என்கிறார்:— பிப்ராணும் வபுஷா விஷ்ணும் துஷ்டுவுஸ்தாம் அஹர்நிசம். ப்ரக்ருதிஸ் த்வம் என்று தொடங்கி ப்ரஸீத தேவி ஸர்வஸ்ய ஜகத: சம் சுபே குரு என்று. இங்கு சில விவித, ப்ரகாரமான வசனங்களைச் சொல்வது பொருத்தம்:— ப்ரம்ஹகர்ப்பா, வேதகர்ப்பா, ஸ்ருஜ்ய ஸ்வரூபகர்ப்பா, யக்ஞ சர்ப்பா, (ஃப)பலகர்ப்பா, வந்ஹிகர்ப்பா, தேவகர்ப்பா, தைத்ய கர்ப்பா, வாஸரகர்ப்பா க்ஞானகர்ப்பா, நயகர்ப்பா காம கர்ப்பா, ஸந்தோஷகர்ப்பிணீ, போதகர்ப்பா, தைர்ய

கர்ப்பா, க்ரஹர்க்ஷ தாரகாகர்ப்பா,-விஷ்ணுக: கர்ப்ப: தவ என்று 17 விதங்களில் துதித்தனர். இங்கு ஏதா **விபூதயோ தேவி ததாந்யாஸ்ச** ஸஹஸ்ரச: என்றதில் விபூதி சப்தம் உளது. அதையே இங்கு விபூதிம் என்றார் போலும்.

पतिः ससत्वामपि तत्प्रभावात्
अदुःखशीलां समये भवित्रीम् ।
सुखैकतानां अवलोक्य देवीं
स्वसंपदं सूचयतीति मेने ॥ ३५ ॥

பதி: ஸஸத்வாமபி தத்ப்ரபாவாத்
அதுக்கசீலாம் ஸமயே பவித்ரீம்
ஸுகைகதாநாம் அவலோக்ய தேவீம்
ஸ்வஸம்பதம் ஸூசயதீதி மேநே (35)

(கருத்து) தேவகியின் பதியான வஸுதேவர் பூரண கர்ப்பிணியாயிருந்தும் அந்த கர்ப்பத்தின் ப்ரபாவத்தினால் எந்த விதமான ச்ரமமோ, துக்கமோ இல்லாமல் இருந்து ப்ரஸவ ஸமயத்தில் ஸுகமே இருப்பள் என்றும் கண்டு, தனது செல்வத்தை இந்த நிலை காண்பிக்கிறது என்றும் எண்ணினார்.

(விரிவுரை) இதுவரை தேவகியின் கர்ப்பலக்ஷண ப்ரபாவங்கள் கூறப்பட்டன. இப்பொழுது பூரண கர்ப்பிணியாய் ப்ரஸவகாலம் நெருங்கும் ஸமயத்தில் தேவகியின் நிலையும் அப்பொழுது வஸுதேவரின் மனோநிலையும் எப்படி இருந்தன என்று கூறுகிறார்.

பதி: ஸ ஸத்வாமபி தத்ப்ரபாவாத் ஸத்வத்தோடு கூடியிருப்பினும், அதன் மஹிமையால் என்று பொருள், ஸத்வம் என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. ஸத்வம் குணங்களில் ஒன்று தலையானது. ப்ராணி என்றும் பொருள் உதரத்துக்குள் ஒன்று உளது. அது உயிருடன் உள்ளது என்று கொண்டு கர்ப்பவதி என்று கொள்ளவேண்டும். ஸத்வம் ஞான ஜனகம் ஸுகம் சாந்தி இருக்குமிடம். இது ரஜோ கர்ப்பமும், தமோ கர்ப்பமுமில்லை. ஸத்வ கர்ப்பம். அபி என்பது வியப்பைக் குறிக்கும். அஸ்தி என்ற ப்ரத்யயத்திற்கு இலக்கான ப்ரம்ஹம் கர்ப்பத்தில் உளது. பதி என்பது வஸுதேவரை குறிக்கும். ஜகத்பதியை ப்ரஸவிக்க இருக்கும் **தேவகிக்கு பதி** என்பதைக்காட்டிலும் வேறு பேறுதான் உண்டோ. தேவகி என்பதைச் சேர்த்துச் சொல்லாமல் பதி என்று மட்டுமே சொன்னது அழகு. (அரசு மரபுக்கு இணங்க வஸுதேவர் தேவகியை தேவி என்றால் மிகையாகாது.) பதி என்பதற்கு பர்தா என்கிற பொருளைவிட்டு ஸர்வலோக நாதன் நிருபாதிக பதி என்று கொண்டால் ஸத்வத்துடனிருந்தும் அதுக்க-சீலையாயிருப்பதைக் கண்டு இந்த அவதாரகாலத்தில் தன் விபவத்திற்கு ஒரு குறையுமில்லை என்று எண்ணி கர்ப்பத்திலேயே மகிழ்ந்தான் க்ருஷ்ணன் என்றும் கொள்ளலாம். தத்ப்ரபாவாத் என்பதற்கு கர்ப்பத்தின் ப்ரபாவத்தினால் என்று பொருள் கூறினார் தீக்ஷிதர். அவளுடைய தவத்தின் பெருமையால் என்னலாம். ஸத்வ குணத்தின் ப்ரபாவத்தினால் என்றும் ஸத்வ சப்தத்தினால் உணர்த்தப்படும் பகவானின் ப்ரபாவத்தினாலும் என்றும் கொள்ளலாம்.

அதுக்கசீலாம் ஸமயே பவித்ரீம் துயரமே இல்லாமல் இருந்தாள். கர்ப்ப பரணக்லேசம் இல்லாமல் இருந்தாள் என்று விளக்கினார் தீக்ஷிதர். ஸத்வம் இருக்குமிடத்தில் துக்கம் இருக்காது என்பதையும் காட்டுகின்றது. ஸத்வ ஸமாச்ரயன் உள்ளேயிருப்பவன். ஸத்வ ப்ரவர்த்தகனான மஹாபுருஷன் உள்ளேயிருப்பவன். அதனுடைய அல்லது அவனுடைய ப்ரபாவத்தினால் துக்கம் என்பதே அவளுக்குத் தெரியவில்லை. தரிக்கிறபொழுதே துக்கமில்லையென்றால் ப்ரஸவ ஸமயத்தில் அது இருக்க இடமில்லை என்று வஸுதேவர் நினைத்தார் என்றும் கொள்ளலாம். பவித்ரீம் வரவிருக்கும் என்று பொருள். ஸுகைகதாநாம் பவித்ரீம் என்று சேர்ந்து உரையிட்டார். அதுக்கசீலாம் அவலோக்ய-பார்த்து, ஸுகைகதானையாக ஆகப்போகிறாள் என்றும் நினைத்தார். பவித்ரீம் என்பதை ஸ்வஸம்பதம் என்பதோடும் சேர்க்கலாம்.

ஸுகைகதாநாம் அவலோக்ய தேவீம், ஸுகமாகயிருக்கும் தனது பத்னியைப் பார்த்து என்று பொருள். பவந்தீம் என்னாமல் பவித்ரீம் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். அவளுக்கு துக்கமில்லை என்பதுமட்டுமில்லை ஸுகமாகவும் இருந்தாள். ஸுகத்துக்கு ஒரேயிருப்பிடமாக இருந்தாள் என்று கொள்ளவேண்டும். வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து என்று இரண்டு நிலைகளையும் காட்ட வேண்டும். துக்கமின்மையே ஸுகமாகாது, ஸமயே என்பதற்கு ப்ரஸவ ஸமயத்திலும் என்றார் தீக்ஷிதர். அவதரித்தபிறகு என்றும் கொள்ளலாம். ஆறு கர்ப்பங்கள் போலும், ஏழாவது கர்ப்பம் போலவுமன்றிக்கே இது ஸுகைகதானமாயிருக்கும் என்று தேரும்.

ஸ்வஸம்பதம் ஸூசயதீதி மேநே தனது செல்வத்தை காண்பிக்கிறது என்று எண்ணினார் என்று பொருள். பவித்ரீம் தேவீம் அவலோக்ய மேநே. தேவியை பார்த்து அவர் நினைத்தார். என்ன நினைத்தார் என்பதை உணர்த்தும் பாகம்-பவித்ரீம் ஸ்வஸம்பதம் ஸூசயதி வரவிருக்கும் தனது செல்வத்தை காண்பிக்கிறாள். தேவீம் மேநே தேவகியை பஹுமானித்தார். அபிமானித்தார் அகமகிழ்ந்தார் என்றும் கொள்ளலாம் அப்பொழுது (இதி) என்பதற்கு என்கிற காரணத்தினால் என்று பொருள்.

पितृत्वमासाद्य सुरासुराणां
पितामहत्वं प्रतिपत्स्यमानः ।
अनन्तगर्भामवलोक्य देवीम्
अतुष्यदन्येषु गताभिलाषः ॥ ३६ ॥

பித்ருத்வம் ஆஸாத்ய ஸுராஸுராணாம்
பிதாமஹத்வம் ப்ரதிபத்ஸ்யமாநः
அநந்த கர்ப்பாம் அவலோக்ய தேவீம்
அதுஷ்யதந்யேஷு கதாபிலாஷः (36)

(கருத்து) தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் முன்பு பிதாவாக இருந்தார். இப்பொழுது அவர் பிதாமஹன் என்ற பெருமையை அடையப்போகிறார். அனந்தனை கர்ப்பத்தில்கொண்ட தனது தேவியை பார்த்து வேறு எதிலும் அபிலாஷை இல்லாதவராய் அகமகிழ்ந்தார் வஸுதேவர்.

(விரிவுரை) தனக்கு சிறந்த ஸம்பத்து—சிறப்பு வரவிருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டார் என்று முன் ச்லோகத்தில் கூறினார். இதில் தேவகி அனந்த கர்ப்பையானபடியால் தான் தந்தையாகப்போகிறோம் என்பதில்லாமல் பாட்டனாராகவே ஆகிவிட்டதாக நினைத்து மகிழ்கிறார் என்கிறார்.

பித்ருத்வம் ஆஸாத்ய ஸுராஸுராணாம் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் தகப்பனார் என்ற பெருமையை பெற்றார். அப்பொழுது அவருக்கு கிடைத்தது பித்ருத்வம் மட்டும்தான். முன்னம் கச்யபராக இருந்தவர் தான் இப்பொழுது வஸுதேவர். கச்யபராக இருந்த காலத்தில் திதி, அதிதி என்ற இரு மனைவிகளிடம் பிறந்தவர்கள்தான் தேவர்களும் அஸுரர்களும். ஸ்ரீபாகவதத்தில் இதை ஸ்ரீசுகரே கூறினார். பகவான் உபேந்த்ரனாக அவதரித்தது கச்யபருக்குத்தான். சங்கசக்ராதிகளுடன் ஸேவை ஸாதித்தது இதை உங்களுக்கு உணர்த்தவே என்று பிறந்த கண்ணன் சொல்வதாகச் சொன்னார் சுகர். வாமனனுக்கோ த்ரிவிக்ரமனுக்கோ க்ருஹஸ்ததர்மமோ ஸந்ததியோ சிந்திக்கப்படுவதில்லை. க்ருஷ்ணாவதாரம் இவ்விஷயத்தில் முற்றிலும் மாறுபட்டது. அப்பொழுது பிதாமஹத்வ ப்ரஸக்தி இல்லை, இப்பொழுது அதைப் பெற்றுவிட்டதாகவே உணர்ந்து மகிழ்ந்தார் என்றபடி.

பிதாமஹத்வம் ப்ரதிபத்ஸ்யமாநः பாட்டனாராகும் தன்மையை அடையப்போகிறவராய் என்று பொருள். இப்பொழுது இவருக்கு பித்ருத்வம் ஸித்தித்துவிட்டது.

ஆறு ப்ரஜைகளுக்கும் ஏழாவது ப்ரஜைக்குமாகப் பார்க்கிறபொழுது இவர் பிதா என்பது மூதலிக்கப்பெற்றுவிட்டது. ஆனுல் ஆறும்-ஏழாவதும் அழிந்தும் அபூர்ணமாயும் ஆகிவிட்டபடியால் அவர்களைக்கொண்டு பிதா மஹத்வம் சித்திக்கவில்லை. இப்பொழுது பிறக்கப்போகும் ஸந்ததி பூரணமானது, ஸந்ததிகளை அளிக்கப்போகிறது என்று அறிந்துகொண்டு விட்டபடியால் தனக்கு பிதா மஹத்வம் வரப்போவதையறிந்து மகிழ்கிறுர் என்று கொள்க.

அநந்த கர்ப்பாம் அவலோக்ய தேவீம் அனந்தனை கர்ப்பத்தில் கொண்டவளான தேவியை பார்த்து என்று பொருள். அவனுக்கு அழிவில்லாததால் அப்பெயர். நாந்தோஸ்தி மம என்று சொன்னபடியால் அவன் அனந்தன். அனந்தன் என்று பலராமனுக்கும் பெயர் இருப்பினும் இரண்டு கர்ப்பவாஸமன்ரே அவருக்கு! இதற்குமுன் கர்ப்பங்கள் எல்லாம் அந்தவத்தாக இருந்தன. கர்ப்ப தோஷத்தினுல் அவை பிறந்து அழிந்தன! அவ்வாறு இல்லை என்பதாம். அனந்த: கர்ப்ப: யஸ்யா: ஸா என்று ஸமாஸம் கொண்டால் அழிவில்லாத கர்ப்பத்தையுடையவள் என்று பொருள்தேரும். இது ப்ரகரணத்திற்குச் சேரும். பூரண கர்ப்பாம் என்றும் பொருள். ஹிரண்ய கர்ப்பனையும் கர்ப்பத்தில் கொண்டவனை கர்ப்பத்தில் கொண்டபடியால் தேவகிகர்ப்பம் அனந்தகர்ப்பம். இங்கு ஒரு விஷயம் ப்ராஸங்கிகமாக கூறப்படுகிறது. அச்யுதன் அனந்தன் கோவிந்தன் என்பதை சேர்த்தே சொல்வது மரபு. ஆசமனம் இதைக்கொண்டேயாம். இம்மூன்று திருநாமங்களும் க்ருஷ்ணனையே குறிப்பதாகும். ஸத்யம் க்ஞானம் அநந்தம் என்றது தைத்தரீயம். ஸத்யம் அச்சுதனையும் க்ஞானம் என்பது கோவிந்தனையும், அனந்தம் என்பது க்ருஷ்ணனையும் குறிக்கும் பாங்குடையது. ஆதலால் அனந்தம் என்று ச்ருதியில் சொல்லப்பட்ட பரம்பொருளை கர்ப்பத்தில் கொண்டவள் என்பதாம் கம்ஸாதி பயத்தால் எத்தகைய கோளாறுகளும் இல்லாததைக் கண்டு என்றும் தேரும். எட்டாவது கர்ப்பம் அழிவில்லாதது என்பதை உணர்ந்தவராய் என்றும் கொள்ளலாம்.

அதுஷ்யத் அந்யேஷு கதாபிலாஷ: வேறு எதிலும் ஆசையில்லாதவராய் மகிழ்ச்சியடைந்தார் என்று பொருள். பாட்டனுகப் போய்விட்டோம் என்று எண்ணுபவன் மேலும் தகப்பனுராகும்படியான செயலை விரும்பமாட்டான் என்று விளக்கினுர் டிப்பணியில். வஸுதேவர் மஹாக்ஞாநி. எம்பெருமானே கர்ப்பத்தில் எழுந்தருளியிருப்பவன் என்று உணர்ந்தபின்பு அபர மாத்ம விஷயத்தில் அபிலாஷையை இழந்து நின்ருர் என்பது பொருத்தம்.

இங்கு விலக்ஷணமான பிதாமஹத்வம் கூறப்படுகிறது. பிதா என்று சொன்னவனை கர்ப்பத்தில் பெற்றுதான் பிதாமஹனுகிருன். பிதாமஹன் என்று சொல்லிக் கொள்பவனை கர்ப்பத்தில்பெற்று பிதாமஹனுக்குப் பிதாவாயும், பிதா மஹனுயும் ஆகும் தன்மை பெற்று மகிழ்ந்தார் வஸுதேவர்.

तापोपशान्तिं जगतां दिशन्ती
सन्ध्यापरा साधुजनप्रतीक्ष्या ।
तामीदृशीं विश्वपितुः प्रसूतिं
संवेदयन्तीव समाजगाम ॥ ३७ ॥

தாபோபசாந்திம் ஜகதாம் திசந்தீ
ஸந்த்யாபரா ஸாதுஜந ப்ரதீக்ஷ்யா
தாம் ஈத்ருசீம் விச்வபிது: ப்ரஸூதிம்
ஸம்வேதயந்தீவ ஸமாஜகாம (37)

(கருத்து) உலகங்களின் தாபத்திற்கு சாந்தியை அளிப்பதாய் ஸாது ஜனங்களால் எதிர்பார்க்கப்படுவதாய் மாலைவேளை விச்வபிதாவின் இத்தகைய அவதாரத்தைக் காண்பிப்பதுபோல் வந்து சேர்ந்தது.

(விரிவுரை) இதற்குமுன் 36 ச்லோகங்களால் தேவகி யின் கர்ப்ப லக்ஷணங்களைக் கூறினார். எல்லாம் பா(भा)வ கர்ப்பமான ஹிரண்யகர்ப்பமான ச்லோகங்கள். (எழுதத் தொடங்கினால் நிறுத்தமுடியாமல் ரஸம் பெருகும் பாங் கான ச்லோகங்கள். பக்கங்கள் பெருகுவது அச்சத்தை யுண்டுபண்ணியதால் முடிக்க மனமில்லாமல் ஒவ்வொரு ச்லோகத்தின் கருத்தினையும் சுருக்கிவிட்டேன். ச்லோ கார்த்தங்களுக்கு ஏற்றவாறு அர்த்தம் பெற இயலவில்லை. இயன்றவரை விளக்குவது என்று முனிந்து சுருக்கமாகவே வரைகிறேன். ரஸிகர்களுக்குப் பெருவிருந்து அளிக்க முடியவில்லை.)

ஸாயங்காலம் தொடக்கமாக நள்ளிரவு வரையிலான வர்ணனங்கள் வரிசையாக இடம்பெறுகின்றன. (பல கவி களை சந்திக்கவேண்டும்.)

தாபோபசாந்திம் ஜகதாம் திசந்தீ உலங்க ளுக்குத் தாபத்தைப் போக்குகின்றது அந்திவேளை என்றுபொருள். தாபங்கள் மூன்று. ஆத்யாத்மிகம் ஆதி பௌதிகம் ஆதிதைவிகம் என்றனர். பௌதிகமான தாபம் எப்படி தணிகின்றது மாலையில் என்பதை அறிவோம். இச்சந்தி முத்தாபங்களையும் போக்கவல்லது என்பதாம். அந்த இரவில்தான் தாபத்ரயாதுரர்கள் ஏங்கி எதிர்பார்க்கும் எம்பெருமான் அவதரிக்கப் போகிறான். ஸர்வகுணோபேத: கால: என்றார் ஸ்ரீசுகர். ஸந்தியாகாலம்தான் அந்த இரவுக்கு த்வாரமானதால் வர்ணனம். தாபங்கள் சமிக்கும்படி ஆணையிடுவாள் போலும். சாந்தி ப்ரசாந்தி உபசாந்தியில் ஸூக்ஷ்மமாக நோக்கினால் பொருள்வேறுபடும். ஸாயங்காலம் ஸந்த்யா காலம் எனப்படும். ஸந்த்யா என்ற சொல் ஸ்த்ரீ லிங்க மானதால் அதைக்கண்டு அழகான ரூபணம்.

ஸந்த்யாஅபரா ஸாதுஜநப்ரதீக்ஷ்யா ஸந்த்யா - இணைப்புக்காலம். பகலையும் இரவையும் இணைப்பது அதன் செயல். கடகச்ருதிபோன்று இதற்கு ஏற்றம் உண்டு. ஆதலால்தான் இக்காலத்தில் உபாஸனம் பண்ணுவது. ஸந்தாத்ருத்வேந ஸர்வேஷாம் ஸந்த்யேதி பரிகீர்திதம் என்றபடி பகவானே ஸந்த்யை ஆகிறான். பெண் உருக்கொண்டு பிறவியை உணர்த்த வந்தான் போலும். காலத்திற்கு மூன்று மனைவிகள். அவை

ஸந்த்யை - ராத்ரி - பகல் எனப்படும் என்று ப்ரம்ஹ வைவர்த்த புராணம் கூறும். இங்கு அபரா ஸந்த்யா என்று கொண்டு மாலை வேளை எனப்பட்டது. தாபம் பெருகும் காலை சந்தியினால். தாபம் தணியும் மாலை சந்தியினால் ஆதலால் அபரா என்பதை பூர்வா என்ப தற்கு எதிர்தட்டில் கொண்டு மாலை என்று பொருள் கொள்ளவேண்டும். தேவகியை பூர்வஸந்த்யை என்றார் பராசரர். ஆதலால் காலரூபமான ஸந்த்யை மாலை யெனப்பட்டது. உள்ளே இருப்பவன் பரஸந்த்யையானால் இது அபரஸந்த்யையாகலாம். ஆனால் இதுவரை இம் மாதிரி ஸந்த்யை அமைந்ததில்லையாதலால் பராஸந்த்யா என்றே கொள்ளலாம். மற்ற விசேஷணங்களாலே மாலை என்பது புலப்பட்டுவிடும், ஸாது ஜனங்கள் எதிர்பார்த்திருப்பது என்கிறார். ஸாயம் ஸந்த்யா பஹிர் ஜலே என்பர். ப்ரக்ருதி ராமணீயகத்தோடு அப்ரா க்ருத பகவதாராதனமும் - உபாஸனமும் அமைவதால் இவ்வாறு கூறப்படும். ஸாது ஜனங்கள் என்பதால் கம்ஸனைக் கழிக்கிறார். பகவதாக்ஞாபாலனம் பண்ணி அவ்வழியே நிற்பவர் ஸாதுக்கள். காலஸ்வரூபியான பகவானை ஆராதிப்பவர் அக்காலத்தையே நோக்கி நிற்பர். காமிஜனப்ரதீக்ஷ்யா என்னுமல் ஸாதுஜன என்பது ஏற்றம். ஸந்த்யா என்ற ஒரு பெண் வந்து செய்தி சொல் வதுபோல் உள்ளது என்று விசித்ரமான சைலியால் உணர்த்துவர்.

தாம் ஈத்ருசீம் விச்வபிது: ப்ரஸூதிம் அப்படிப் பட்டதும் இத்தகையதுமான விச்வபிதாவின் ப்ரஸ வத்தை - உதயத்தை என்றபடி. ப்ரஸவ ஸமாசாரத்ஸத

ஸ்த்ரீதானே சொல்லவேண்டும். ஆதலால் எல்லா சப்தங் களும் ஸ்த்ரீலிங்கத்திலேயே ப்ரயோகிக்கப்பட்டன. ஈத்ருசீம் - இத்தகையது. தாம் அந்த ப்ரஸூதிம் ப்ரஸ வத்தை. தாம் ஈத்ருசீம் என்றும் ஈத்ருசீம் தாம் என்றும் அன்வயிக்கவேண்டும். ப்ரஸவகாலம் நெருங்கியிருப்ப தால் இவ்வாறு கூறப்பட்டது.

ஸம்வேதயந்தீவ ஸமாஜகாம தெரிவிப்பது போல் வந்து சேர்ந்தது. அறிவிப்பாளர் என்று உண்டு. ஸந்த் யையே அறிவிப்பாளராயிற்று. தொழிற்பெயர். ஆஜகாம- வந்து சேர்ந்தது. விச்வபதியானதால் ஸாதுக்கள் பலர் ப்ரதீக்ஷிக்கின்றனர். விச்வபதியின் ப்ரஸவமானதால் முன்கூட்டியே சுவடறிந்த ஸந்த்யை என்ற பெண் அறிவிப்பாள்போலும்.

सुवर्णपीताम्बरवासिनी सा
स्वधामसंच्छादितसूर्यदीप्तिः ।
उपासनीया जगतां बभासे
मुरद्विषो मूर्तिरिव द्वितीया ॥ ३८ ॥

ஸுவர்ண பீதாம்பர வாஸிநீ ஸா
ஸ்வதாம ஸஞ்ச்சாதிதஸூர்யதீப்தி:
உபாஸநீயா ஜகதாம் பபாஸே
முரத்விஷோ மூர்த்திரிவ த்விதீயா (38)

(கருத்து) அழகான பீதாம்பரம் அணிந்திருப்பவ ளாய் . தனது ஒளியினால் ஸூரியனுடைய ஒளியை

மறைத்து விடுபவளாய், முரன் என்ற அஸுரனைக் கொன்ற பகவானின் இரண்டாவது உருவமோ என்னும் வகையில் அமைந்தவளாய் உலகங்களுக்கு உபாஸிக்க வேண்டியவளாகி விட்டாள். (ஸந்த்யா காலத்தைப் பெண்ணாக நிரூபணம் பண்ணும் பாங்கு இது).

(விரிவுரை) முந்திய ச்லோகத்தில் ஸாயம் ஸந்த்யயின் வருகையை வர்ணித்தார். இதில் ஸந்தியா என்பவளைப் பெண்ணாகவே கொண்டு அழகான முறையில் வர்ணிக்கமுர். பாங்கான ச்லோகம்.

ஸுவர்ண பீதாம்பரவாஸிநீ ஸா மனோஹரமான பீதாம்பரத்தை உடுத்தியவள் என்று பொருள். ஸா என்பது ஸந்த்யா காலத்தைக் குறிக்கும். ஸுவர்ணம் என்பது தங்கத்தை. அதுபோல் மஞ்சளான அம்பரம்—வஸ்த்ரம். ஸுவர்ணத்தோடு கூடிய பீதாம்பரம் சரிகை போட்ட பட்டுப்புடவை போல் என்றும் கொள்ளலாம். ஸுவர்ணம் மாலை வேளை சிகப்பு, அதனாலே பீதம் விழுங்க ப்பட்டது அம்பரம்—ஆகாசம்—அங்கு வஸிக்கும் தன்மை யது என்று கூறினார் தீக்ஷிதர். மூர்த்தி என்கிற பக்ஷத்தில் தங்கம் போல் மஞ்சளான வஸ்த்ரம் உடையது என்றும் கூறினர். வஸ—நிவாஸே, வஸ ஆச்சாதநே என்கிற இரண்டு தாதுக்களால் அமைந்த சொல். மேலும் ஸுவர்ண சப்தம்—ஸர்வ ஏவ ஸுவர்ண: என்றதை நினைக்கச் செய்யும். ஸுவர்ணனுடைய பீதாம்பரம்போன்ற வஸ்த்ரம் தரித்தவள். அந்தி போல் நிறத்தாடை என்றூர் பாணநாதன். எம்பெருமானுடைய பீதாம்பரத்தின் நிறம் அந்திக்கு என்கிறுர் ஸ்வாமி.

ஸ்வதாம ஸஞ்ச்சாதித ஸூர்ய தீப்தி: தனது ஒளியினல் மறைந்துபோன ஸூரியனுடைய ஒளியுடைய தாய் என்று பொருள். இது ஸந்த்யைக்கும் மூர்த்திக்கும் விசேஷணம். சாயங்கால ஒளி சூரிய ஒளியையும் மறைத்து விட்டது. ஸாயங்காலத்தில் சூரிய ஒளிக்கு சக்தியில்லையே! ஒரு சோதியில் மற்றது மறைந்துபோவது இயற்கை. ஸந்த்யாப்ரகாசத்திலே சூரியப்ரகாசம் மறைவது ஸஹஜம். பெருமாள் திருமேனியொளியில் சூரியஒளி எம் மாத்திரம். பாஸஸ்தஸ்ய மஹாத்மந: என்றும், ந தத்ர ஸூர்யோ பாதி என்றும் சொல்வர் மேலும் ஸ்வதாம என்பதற்கு தன்னிருப்பிடம் என்று பொருள். தன்னிடத்தில் மறைத்து வைத்துவிட்டது என்பதாம். சக்ஷோ: ஸூர்ய: என்பதால் ஸூரியன் எம்பெருமான் திருமேனி ஏகதேசத்தில் தானே பிறந்தவன். ஸூரியனையும் மறைக்கும் சக்தி ஒரு பெண்ணுக்கு இருப்பது ஸஹஜமே.

உபாஸ நீயா ஜகதாம் பபாஸே உலகங்களுக்கெல்லாம் வழிபடத்தக்கதாய் அமைந்தது, ஸந்த்யை-மூர்த்தி இரண்டும். ஸந்த்யா காலத்தில்தானே ஸூரியனை உபாஸிப்பது. பாமரர்களும் ஸந்த்யா வந்தனம் என்று தானே சொல்வது. பொதுவாக இருப்பினும் ஜயந்தியின் மாலை வேளை அப்படியிருந்தால் வியப்பில்லை. முராரியின் மூர்த்திபோல் உபாஸநீயா என்பது ரஸம். பபாஸே—பாஸித்தது. தீக்ஷிதர் ஆதராதிசயத்தால் ஆபபாஸே என்று விவரித்தார்.

முரத்விஷோ மூர்த்திரிவ த்விதீயா முரனின் எதிரியின் மூர்த்தி போல் என்றும், அவனுடைய இரண்டாவது

உருவம் போல் என்றும் பொருள். முரன் அஸுரன். ஐந்துதலையுடையவன். ப்ராக் ஜ்யோதிஷ புரத்தில் வஸிப்பவன்-நீரில் படுப்பவன். கருடவாஹனனாய் கிருஷ்ணன் அங்கு சென்ற பொழுது கிருஷ்ணனை எதிர்த்துப் போரிட்டான். அவனை சக்ரத்தினால் கிருஷ்ணன் கொன்றார். ஆதலால் கிருஷ்ணனுக்கு முராரி என்று பெயர். இந்த அவதாரத்தில் ஸம்பாதித்த திருநாமங்களில் ஒன்று. ஆதலால் முராரியை இங்கு ஸ்மரிக்கிறார் என்று கொள்ளலாம். நின் மூர்த்தி பரப்பி வைத்தாய் என்றனர். இன்னும் அவதரிக்கவில்லை. அம்மூர்த்தி எப்படி இருக்கும் என்பதே தெரியவில்லை. ஆனால் இதன் இரண்டாவது உருவமாக இது அமைந்து விட்டது. ஸந்த்யையே எம்பெருமான்—இதை ரூபிப்பதுபோலவே உருவமும் அமைந்தது பாங்கு.

प्रसक्तपातश्चरमांबुराशौ
रक्तोरुबिंबो रविरस्तशैलात् ।
दिनान्तनागेन दृढप्रणुन्नं
मनश्शिलाशृंगमिवाबभासे ॥ ३९ ॥

ப்ரஸக்தபாதஸ் சரமாம்புராசௌ
ரக்தோருபிம்போ ரவிரஸ்தசைலாத்
திநாந்த நாகேந த்ருடப்ரணுந்நம்
மநஶ்ஶிலா ச்ருங்கமிவாபபாஸே **(39)**

(கருத்து) மாலையில் அஸ்தமன மலையிலிருந்து மேற்கு கடலில் சிவந்த பெரிய உருவத்துடன் விழத்தொடங்கி-

விட்டான். சூரியன். பகலின் முடிவு- (மாலை என்றதொரு யானையினால் வேகமாக ஏறியப்பட்ட மனச்சிலா ச்ருங்கம் போல் விளங்கினான்.

(விரிவுரை) இதற்கு முன் ச்லோகத்தில் எம்பெருமானின் மூர்த்தி போல் உபாஸிக்கத்தக்கதாயிருந்தது என்று கூறினார். மாலை வேளையொளி சூரிய ஒளியையும் மறைத்தது என்றும் குறிப்பிட்டார். இந்த ச்லோகத்தில் சூரியபிம்பம் வேகமாக உருண்டு விழுவதை கருத்தில் கொண்டு பிறரால் உந்தப்பட்டு விழுபவினின் நிலையை சூரியன் அடைந்துவிட்டான் என்கிறார்.

ப்ரஸக்தபாத: சரமாம்புராசௌ மேற்கு கடலில் விழத்தொடங்கினான் என்று பொருள். அவனே விழுகிறானே, பலாத்காரமாக வீழ்த்தப்படுகிறானே! இரண்டும் இல்லை. அத்தகைய ப்ரஸங்கம். வேளை வந்து விட்டது. அந்த நிலை ஏற்பட்டு விட்டது. ப்ரஸக்த சப்தம். நித்யம் என்றபொருளையும் உடையது. காலத்தினால் தள்ளப்பட்டது. சரமாம்புராசி என்பதற்கு மேற்கு ஸமுத்ரம் என்று பொருள். சரம என்பது முடிவு என்ற பொருளுடையது. ஸமுத்ரத்திற்கு முடிவில்லை. ஆனால் தினமும் ஒளியோடு விளங்கி அட்டகாசம் செய்து வருபவனுக்கு முடிவுகட்டும் சக்தி இக்கடலுக்கு உண்டு. ஆதலால் இக்கடல் சரமாம்புராசி எனப்பட்டது. ரமா இருக்கும் அம்புராசியானால் பாதமோ அஸ்தமனமோ ஏற்படாது. இது சரமாம்புராசி. ஆகாசசாரியும் அம்புராசியில் விழுவான்.

ரக்தோரு பிம்போ ரவி ரஸ்தசைலாத் சிவந்ததாயும் பெரியதாயும் உள்ள உருவத்தையுடைய சூரியன் அஸ்தமன மலையிலிருந்து என்று பொருள். பகலில் சூரியனுடைய உருவம் சிறியதாக இருக்கும் ஆனால் மாலையில் அது பெரியதாகவே தோன்றும். சிகப்பும் அதிகமாகும். உதயத்திலும். அஸ்தமனத்திலும் சூரியன் சிகப்பாகவே இருப்பன். அஸ்தசைலம். மாலையில் சூரியன் மறையும் மலை. உதயாசலம் என்பது போல் இதற்கு காரணப் பெயர். அஸ்தசைலம் என்றால் அழிக்கும் மாலை. அதன் மீது சூரியன் ஏறினால் அம்மலை அவனைத் தள்ளாது விடுமோ! சாதாரணமாகத் தரையிலிருந்து கடலில் விழுபவர்களைக் காட்டிலும் மலையுச்சியிலிருந்து விழுவது என்றால் யாருக்குத் தான் அனுதாபம் ஏற்படாது இவனை எப்படி பார்ப்பது! விழுந்து கொண்டிருப்பவனை பார்ப்பது கூடாது. நேக்ஷேத உத்யந்தம் ஆதித்யம். நாஸ்தம் யந்தம் கதாசந என்றனர். கவிஸமயத்தில் கவியின்கண் கொண்டு பார்க்கலாமாதலால் இங்கு வர்ணனம்.

திநாந்தநாகேந த்ருடப்ரணுந்நம் மலையாகிற யானையினால் திடமாகத்தள்ளப்பட்டுவிட்டதாய் என்று பொருள். திநாந்தம் தினத்தின்—பகலின் முடிவு-மாலை. இதையே யானை என்கிறார். யானையின் நிறமும் கறுப்பு. யானைபலம் என்பர். அழகான ரூபணம். மலைச்சாரலில் மேகங்களை விளையாடும் யானைகள் என்றான் காளிதாஸன். மலைச்சிகரத்தையே வீழ்த்தும் யானை என்கிறார் திகந்த நாகங்களைக் காட்டிலும் திநாந்த நாகம் உயர்ந்தது.

த்ருடமான யானை என்னாமல் திடமாக எழுந்திருக்க முடியாமல் தள்ளியது என்கிறார்.

மநச்சிலாச்ருங்கமிவ ஆபபாஸே மலையில் ஓர் வகையான தாதுப்பொருள் உண்டு. அதை கைரிகதாது என்பர். அதன் நிறம் சிகப்பு. அதை மனச்சிலா என்பர் அது பெரிய பெரிய குன்றுகளாக இருக்கும். சிலா சிருங்கம் சாதாரணமானது. மனச்சிலா சிருங்கம் சிவந்தது சிலாக்யமானது. அஸ்தசைலத்தின் சிகரத்தில் இருந்த மனச்சிலாசிருங்கத்தை தினாந்தம் என்கிற யானை கொந்தி தள்ளியது போல் இருந்தது. ஆ-பபாஸே-வெகுவாக பிரகாசித்தது. ஸௌரியன்தான் பிரகாசத்திற்கு அதிபதி, ஆனால் இப்பொழுது அவனை மறைத்திடும் திநாந்தம் எவ்வளவு பலம் உள்ளதாக இருக்கவேண்டும்! அதனால் தான் ஆபபாஸே என்றது.

निमज्जता वारिनिधौ सवित्रा
को नाम जायेत करग्रहीता ।
तदेति संभावनयैव नूनं
दूरादुदक्षेपि कराग्रं उच्चैः ॥ ४० ॥

நிமஜ்ஜதா வாரிநிதௌ ஸவித்ரா
கோ நாம ஜாயேத கரக்ரஹீதா
ததேதி ஸம்பாவநயைவ நூநம்
துராத் உதக்ஷேபி கராக்ரம் உச்சை: (40)

(கருத்து) பெருங்கடலில் ஸூரியன் மூழ்கிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு கை கொடுப்பவர் யார்? யாராவது தனக்கு கை கொடுக்கமாட்டார்களா என்று எண்ணிதான் தனது கைகளை வெகுதூரம் வரைக்கும் மேல் நோக்கியவாறு நீட்டுவான் போலும்.

(விரிவுரை) முந்திய சுலோகத்தில் ஸந்த்யை என்ற யானையினால் தள்ளப்பட்ட கைரிகதாதுவின் குன்றென விளங்கினான் சூரியன் என்று கூறினார். இந்த சுலோகத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் தன்னைக் காப்பாற்றுவார் உண்டோ என எண்ணி தனது கைகளை வெகுதூரம் வரை தூக்கி நிற்கிறான் என்கிறார்.

நிமஜ்ஜதா வாரிநிதௌ ஸவித்ரா பெருங்கடலில் மூழ்கும் ஸூரியனால் என்று பொருள். நிமஜ்ஜதா— மூழ்கிக் கொண்டிருப்பவனால், ஆரப்த-அஸமாப்த மஜ்ஜனன் என்றார் தீக்ஷிதர். குளத்திலோ கிணற்றிலோ மூழ்க இயலாது. வ்யக்திக்கு அனுகுணமான நீர்நிலை. கிணற்றில் விழுவாரை எடுத்துப்போடலாம் நடுக்கடலில் விழுவாரை யார் கை கொடுத்துத் தூக்குவது! குத்ருஷ்டி குஹநாமுகே நிபதத: பரப்ரம்ஹண: கரக்ரஹவிசக்ஷண: ஜயதி லக்ஷ்மணோயம் முநி: என்பது போல் ஒருவராலும் கை கொடுக்க முடியாத இடம். ஸவிதா சூரியன். தனது பெயராலேயே விளங்கியவன். இப்பொழுது என்செய்வது! பவித்ர தீர்த்தஸ்நாநம் பண்ணினால் லாபமுண்டு.

கோ நாம ஜாயேத கரக்ரஹீதா கைபிடித்து எடுத்து விடுபவர் யாரோ! சூரியன் இவ்வாறு எண்ணு

கிறான். ஜாயேத என்பதற்கு ஸ்யாத் என்று உரையிட்டார். இனிமேல் யார்தான் பிறக்கப் போகிறானோ என்றும் கொள்ளலாம். கரம் என்பதற்கு கை - கிரணம் என்று இரண்டு பொருள்.

ததேதி ஸம்பாவநயைவ நூநம் அப்பொழுது இவ் விதமான எண்ணம் தோன்றியதாலேயே என்று பொருள். இதி என்பதால் இரண்டாம்பாதத்திய வாக்கியத்தை எடுத்துச்கொள்ளவேண்டும். ததா - அப்பொழுது மேல் வரும் வாக்கியத்திற்கு காரணம் கூறுவதாம்.

தூராத் உதக்ஷேபி கராக்ரம் உச்சை: வெகு தூரத்திலிருந்தே கைகளின் நுனி நீட்டப்பட்டது - உயர்ந்த ஆகாயவெளியில் கிரணங்கள் தெரிக்கப்பட்டன. மூன்றுமடியில் **இதீவ ஸம்பாவநயாந்தரிக்ஷே** என்ற பாடம் குறிப்பிடப்பட்டுள்ளது. 38-வது சுலோகத்தில் ஸந்த்யாகால ஸௌஷ்டவம், 39-ல் வேகமாக விழும் நிலை 40-ல் பாதி மூழ்கும்பொழுது கிரணங்கள்மேல் படர்வது போன்ற க்ரமம் கையாளப்பட்டது கவனிக்கத்தக்கது. இங்கு உத்ப்ரேக்ஷை - ஸமாஸோக்தி அதிசயோக்தி என்று மூன்று அலங்காரங்கள்.

स्फुरत्प्रभाकेसरमर्कबिंबं
ममज्ज सिन्धौ मकरन्दताम्रम् ।
सन्ध्या कुमार्या गगनांबुराशेः
क्रीडाहतं क्षिप्तमिवारविन्दम् ॥ ४१ ॥

ஸ்ப்புரத் ப்ரபா கேஸரம் அர்கபிம்பம்
மமஜ்ஜ ஸிந்தௌ மகரந்ததாம்ரம்
ஸந்த்யாகுமார்யா ககநாம்புராசே:
க்ரீடாஹ்ருதம் க்ஷிப்தமிவாரவிந்தம். (41)

(கருத்து) சூரியனுடைய பிம்பமானது தனது ஒளியாகிற கேஸரத்தினால் விளங்குவது. அது தாமரை மலர் போல் சிவந்த நிறமுடையது. அது கடலில் மூழ்கிவிட்டது. ஸந்த்யை என்ற சிறுமி ஆகாயம் என்ற கடலிலிருந்து விளையாட்டாகப் பறித்து எறிந்துவிட்ட தாமரைப் பூப் போலேயாயிற்று.

(விரிவுரை) **ஸ்புரத்ப்ரபாகேஸரம் அர்கபிம்பம்.** கேஸரங்கள் பூவின் தாதுக்கள். அவைபோல் விளங்குகின்ற ஒளிகளையுடைய சூரியபிம்பம் என்று பொருள். தாமரைப்பூவை குறிக்கும்பொழுது சூரியன் ஒளி போன்ற கேஸரங்கள் என்று பொருள். (முதலில் உபமித ஸமாஸ கர்ப்பமான பஹுவ்ரீஹி பிறகு மத்யமபதலோபி ஸமாஸ கர்ப்பமான பஹுவ்ரீஹி.)

மமஜ்ஜ ஸிந்தௌ மகரந்த தாம்ரம். தேன்போல் சிவந்த அந்த பிம்பம், தேனால் சிவந்த அந்த தாமரைப்பூ. கடலில் மூழ்கிவிட்டது. **मकरमपि अन्दति - बध्नातीतिवा** என்கிற வ்யுத்பத்தியினால் ஏற்பட்ட சொல் மகரந்தம் என்பது. புஷ்பரஸம் அல்லது மது.

ஸந்த்யாகுமார்யா ககநாம்புராசே: ஸந்த்யை என்ற பெண்ணினால் ஆகாயம் என்ற நீரோடையிலிருந்து என்று பொருள். ஸந்த்யை என்ற சிறுமியினால் என்கிறார்.

இவளுக்கு முதிர்ச்சியில்லை. எப்பொழுதும் கௌமாராவஸ்தைதான். ராகம் ஆசை இவளுக்கு அதிகம். விளையாட்டு புத்தி மிக்கவள். அழகான தாமரைப்பூ. அது அங்கேயே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! பறித்துவிட்டாள். கையில் வைத்துக்கொண்டு ரஸித்தாலும் பரவாயில்லை. ஆகாயத்தில் தாமரைப்பூ. என்ன அதிசயம்! அப்படியிருக்குமோ என்றுதானே நாம் நினைப்பது! தாமரைப்பூவிற்கு சொந்தக்காரனே தாமரைப்பூ ஆகிவிட்டான்போலும்! தாமரைப்பூவிற்கும் அவனுக்கும் எவ்வளவு ஒற்றுமை!

க்ரீடாஹ்ருதம் க்ஷிப்தம் இவ அரவிந்தம் விளையாட்டாக எரிந்துவிடப்பட்ட தாமரைப்பூபோல் என்று பொருள். அரங்கள் போன்ற இதழ்களை அடைவதால் தாமரைப்பூ அரவிந்தம் எனப்படும். விளையாட்டாக அபஹரிக்கப்பெற்றது அல்லது கொண்டுவரப்பெற்றது. எறிவதும் விளையாட்டாயிற்று. ஆகாயத்திலிருந்து கொய்ததுதான் மிச்சம். குமாரிகளின் விளையாட்டு எப்படித்தான் இருக்கிறது! ஸிந்துவில் எறியப்பட்டது. அது மூழ்கித்தானேயாகவேண்டும்! சூரியபிம்பத்தை தாமரைப் பூவாக நினைப்பது நெருங்கிய பொருத்தமுடையது. மேலும் இது அத்புதமான ச்லோகம். ஸந்த்யாகாலத்தை குமாரியாகவும், சூரியபிம்பத்தை தாமரைப்பூவாகவும், ஆகாயத்தை கடலாகவும் நிருபணம் செய்தது தனிப் பாங்கு. சூரியன் மறைந்தால் தாமரைப்பூ மூடிக் கொள்ளும். சூரியனே தாமரைப்பூவானால் மூழ்குவது என்ற நிலையாம். க்ஷிப்தம் அரவிந்தமிவ அர்கபிம்பம் மமஜ்ஜ என்று அந்வயம். முந்திய ச்லோகத்தில் மூழ்கிக் கொண்டிருக்கிற என்றும் இந்த சுலோகத்தில் மூழ்கி விட்டது என்றும் கூறியதை கவனிக்கவேண்டும்.

फणामणिप्रक्ष्यखरांशुबिम्बः
सन्ध्यासुपर्णी अवलोक्य भीतः ।
तापाधिको वासरपन्नगेन्द्रः
प्रायेण पातालबिलं विवेश ॥ ४२ ॥

பணாமணிப்ரேக்ஷ்ய கராம்சுபிம்ப:
ஸந்த்யா ஸுபர்ணீம் அவலோக்ய பீத:
தாபாதிகோ வாஸரபந்நகேந்த்ர:
ப்ராயேண பாதால பிலம் விவேச (42)

(கருத்து) பகல் என்கிற பெரியதொரு பாம்பு தாபம் அதிகமாகி தனது தலையில் உள்ள மணியினால் கதிரவனோ என அமைந்து ஸந்த்யை என்ற கருடபக்ஷியின் தாயைக் கண்டு நடுங்கி பாதாளம் என்ற பொந்தில் புகுந்து விட்டதுபோல் ஆயிற்று.

(விரிவுரை) சூரியன் மறையும்பொழுது அவனுடைய உருவம் மூழ்கும் தலைபோல் இருக்கும். உடனே இருட்டி விடும். இதை அழகாக விவரிக்கிறார் இந்தச் லோகத்தில்.

பணா மணி ப்ரேக்ஷ்ய கராம்சு பிம்ப: பாம்பின் அகன்ற தலையில் உள்ள மாணிக்கம்போல் காணப்படும் சூரியபிம்பத்தையுடையது. இது வாஸர பந்நகேந்த்ர: என்பதற்கு விசேஷணம். ஸர்பவிஸ்த்ருத மஸ்தகம் பணா என்பர். படம் எடுத்தாடுவது என்பது உலக வழக்கு. கராம்சு என்பதற்கு கொடூரமான கிரணமுடையவன் என்று பொருள். ப்ரேக்ஷ்ய என்பதற்கு சோபை என்றும் பொருள்.

ஸந்த்யா ஸுபர்ணீம் அவலோக்ய பீத: ஸந்த்யை (மாலை) என்பதொரு கருடனைக்கண்டு பயந்ததாய் என்றபடி. ஸந்த்யாகாலத்தை கருடபக்ஷியாக வர்ணிக்கிறார். ஸுபர்ணீம் என்று பெண்பால். ஸந்த்யா என்பதற்கு ஏற்றவாறு இங்கு கருடனுடையதாய் என்று உரை கூறினார் தீக்ஷிதர். கருடனிடத்தில் போல் கருடனுடைய தாயைக் கண்டாலும் பாம்புகள் பயப்படக்கூடும். ஸுபர்ண சப்தத்திற்கு விவரணம் செய்யும்பொழுது ஸுபர்ணீ தநய: என்று விவரணம் கூறினான் ஹலாயுதன் ஆதலால் ஸுபர்ணீ என்று விநதைக்கு வேறு பெயர் இருக்கலாம். கருடன் கண்களில் பட்டுவிட்டால் பாதாளத்திலும் ப்ரவேசிக்கவிடமாட்டான். ஆதலால் இவ்வாறு அவனுடைய தாயை கூறியதாகலாம். கருட பக்ஷி ஸ்த்ரீ பரம் என்று டிப்பணியில் குறிக்கப்பெற்றது. தமையனால் உதயம். தம்பியால் அஸ்தமனம் என்றும் நினைக்கலாம். பாம்பு சிங்கம், புலி முதலியன ஆண் ஆனால் என்ன, பெண் ஆனால் என்ன, நெருங்கமுடியாதே! அவ்வாறே பாம்புகளுக்கு கருடபக்ஷி மாத்திரத்திலேயே பயம் ஏற்படுவது ஸ்ஹஜம். மேலும் ஸுபர்ணன் என்பதற்கு அழகான இறகுகளையுடையவன் என்று பொருள். ஸுபர்ணன் என்ற பெயர் தேவர்களால் பிறகு வழங்கப்பெற்றது. ருத்ரா ஸுகிர்த்திகளில் ஒருவராயும் இருக்கலாம் ஆலோகனம் என்னாமல் அவலோகனம் என்பது அழகு. தலை நிமிர்ந்து பார்க்காமல் குனிந்தவண்ணம் பார்ப்பதேயாம். பயந்தவன் ஒளிந்துதான் ஆகவேண்டும்.

தாபாதிகோ வாஸரபந்நகேந்த்ர: அதிகமான தாபத்தை உடையவன், உடையது. பகல் அதிகமான தாபத்தைப் பெற்றிருப்பது இயற்கை. தாபம் தணிய வேண்டும். விஷம் மிஞ்சியிருப்பதால் கொதிப்பு அதிகம் உடையது பாம்பு. கொதிப்பு குறையும் இடத்தை நாடவேண்டும். வாஸரம் - தினம் - பகல். இதுவே சிறந்த பாம்பு. தலைவர்கள் கூட்டத்தில் சேர்ந்தது. ஆதலால் பந்நகேந்த்ர: என்கிறார். இங்கு இது அழகான ப்ரயோகம். ஸர்பயாகத்தில் வந்து விழுந்த பாம்புகளின் பெயரைக் குறிப்பிடும்பொழுது பந்நகம் என்று ஒரு பாம்பு என்று பாரதம் குறிப்பிட்டது. மேலும் வாஸர என்பதும் ஒரு பாம்பின் வகை. ஸர்பவிசேஷம் என்றது அபிதாநரத்ன மாலை,

ப்ராயேண பாதாள பிலம் விவேச பாதாளத்தில் அங்கும் ஒரு பொந்தில் நுழைந்துவிட்டது. ப்ராயேண வெகுவாக. உத்ப்ரேக்ஷைக்கு அடையாளம். ஒளிந்து கொள்பவன் வெகுதூரம் செல்லவேண்டும். அதலாதிகளில் இல்லாமல், கடைசியான பாதாள லோகத்தில் சென்று ஒளிந்துவிட்டது என்பது ரஸம். அங்கும் தலத்தில் இல்லாமல் பிலத்தில் நுழைந்தது.

முன் ச்லோகத்தில் ஸந்த்யையை குமாரியாக வர்ணித்தார். இதில் கருடபக்ஷியாக வர்ணிக்கிறார். பாம்பின் தலையில் இருக்கும் மணியாக சூரியனைக் கூறியது ரஸம்.

प्रदोषरागारुणसूर्यलक्षात्
दिशागजो दृप्त इवातिघोरः ।
कालोपनीतं मधुना समेतं
अभुँक्त मन्ये कवलं पयोधिः ॥ ४३ ॥

ப்ரதோஷராகாருண ஸூர்யலக்ஷாத்
திசாகஜோ த்ருப்த இவாதிகோர:
காலோபநீதம் மதுநா ஸமேதம்
அபுங்க்த மந்யே கபலம் பயோதி: (43)

(கருத்து) மாலை வேளை-சிவந்த நிறம், அப்பொழுது கதிரவன் கடலில் மூழ்கி மறைகின்றான். இதை வர்ணிக்கிறார். கடல் என்கிற ஒரு பெரிய மதம் மிகுந்த திக்கஜமொன்று காலம் கொடுத்து தேனில் தோய்ந்த கவளம் போலே சூரியனை (உருண்டையை) விழுங்கி விட்டது என்று நினைக்கிறேன்.

(விரிவுரை) ஒவ்வொரு படியாக மாலை வேளையை வர்ணிக்கிறார். கதிரவன் கடலில் மூழ்கும் நிலையை கூறுகிறார். இங்கு அமைந்த சப்தங்கள் மிகவும் அழகானவை.

ப்ரதோஷராகாருண ஸூர்ய லக்ஷாத் மாலைக்கு ப்ரதோஷம் என்று பெயர். தோஷா என்ற இரவைப் புகுத்துவதால் தோஷமாகலாம். த்ரயோதசி ப்ரதோஷத்தை மட்டும் சிலர் புண்யகாலமாக்கினர். ப்ரபாதம் - நல்லது-ப்ரதோஷம் அவ்வாறில்லை, அஸ்தமனமாகிற சூரியனைப் பார்க்கலாகாது. அது கண்களில் படாது

இருப்பதில்லை. ஆதலால் காலமே ப்ரதோஷமாயிற்று. இரவு எனப்படும் தமஸ்ஸிற்கு முன் ப்ரதோஷம் என்கிற ரஜஸ் தோன்றும். ஸத்வப்ரகாசம் மறைந்தால் வரிசையாக இவை புக வேண்டியதுதானே! ராகம்-என்பதற்கு ஆசை சிகப்பு எனப் பொருள். ரக்த ஸம்பந்தம் உடைய காலம். அருண ஸூர்ய என்பதை உற்று நோக்க வேண்டும், அருண சிவந்தது. அருணுதிகரணம் ஆருண்யமுடையது என்று விளக்கும். ஆனுல்-அருணஸ்ய ஸூர்யஸ்ய லக்ஷாத் வ்யாஜாத் என்றூர் தீக்ஷிதர். அருணன் என்ற சொல்லுக்கே சூரியன் என்றும் பொருள். அருண ஸூரியன் அருணனேடு கூடிய சூரியன் என்னலாம். உதய காலத்தில் மட்டும் முந்திக் கொள்பவன் அஸ்தமனத்தில் முந்திக் கொள்ளலாம் அல்லது பின்னுல் விழலாம். ப்ரதோஷம் எதைத்தான் செய்யாது! லக்ஷாத் என்பதற்கு வ்யாஜம் என்று பொருள்.

திசாகஜோ த்ருப்த இவாதிகோர: அதிகோரமானதும் மதம் பிடித்ததுமான திக்கஜம் போலே என்று பொருள். இங்கு பெயர் குறிப்பிடப்படவில்லை. மாலையானதால் மேற்குத் திக்கில் இருக்கும் யானைக்கு அஞ்சனம் என்று பெயர். கிழக்கில் ஐராவதம், மேற்கில் அஞ்சனம் கறுப்பு நிறமானது. அது உருவத்தாலும் செயலாலும் கொடூரமானது இது பயோதி என்பதற்கு உவமானமாகக் கூறப்பட்டது.

காலோபநீதம் மதுநா ஸமேதம் சமயத்தில் கொண்டு வரப்பட்டது. மேலும் தேன் கலந்தது என்று பொருள். காலசப்தத்திற்கு மாவுத்தன் என்று டிப்பணியில் பொருள் கூறப்பட்டது. காலத்திலே கொடுக்கப்

பட்டது காலனுல் கொடுக்கப்பெற்றது. மது சிகப்பாயிருக்கும். சூரியனும் சிகப்பு. தேன் பூச்சு, அல்லது தேனில் தோய்த்த கபலம் என்று தேரும். திக்கோ வாருணீ, யானையின் பெயரோ அஞ்சனம், அங்கு வாருணீ_ மதுவிற்கு குறையில்லை, மதுவை குடிக்காமல் மது கலந்த உருண்டையை விழுங்கியது என்பது ரஸம்.

அபுங்க்த மந்யே கபலம் பயோதி: கடல் கபலத்தை விழுங்கி விட்டது என்று எண்ணுகிறேன் என்று பொருள். சாயங்காலமும் மதுவும் கோரமான இடத்தில் விழுந்து விடுவதும் இயற்கையாம். இங்கு ''மந்யே பயோதி கபலம் த்யபுங்க்த'' என்று வேறு பாடம் உளது என்று குறிப்பிட்டுள்ளார்.

तदा तमः प्रोषितचन्द्रसूर्ये
दोषामुखे दूषित सर्वनेत्रम् ।
वियोगिनां शोकमयस्य वन्हेः
आशागतो धूम इवान्वभावि ॥ ४४ ॥

ததா தம: ப்ரோஷித சந்த்ரஸூர்யே
தோஷாமுகே தூஷித ஸர்வ நேத்ரம்
வியோகிநாம் சோகமயஸ்ய வந்ஹே:
ஆசாகதோ தூம இவாந்வபாவி (44)

(கருத்து) அந்த சமயத்தில் சந்திரனும் சூரியனும் இல்லை. இரவு தொடங்குகிறது. எல்லோருடைய பார்வை

யும் தெளிவில்லாத நிலையை அடைகிறது. இது பிரிந்தவர் உள்ளங்களில் ஊன்றியிருந்த துயரங்களாகிற நெருப்புக்கு திக்கெட்டும் பரவின புகைபோல் அவ்விருள் காணப்பட்டது.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் கதிரவன் மறைந்ததைக் கூறி இப்பொழுது இருள் படருவதை விவரிக்கிறார். அழகானதொரு உத்ப்ரேக்ஷை.

ததா தம: ப்ரோஷித சந்த்ரஸூர்யே அப்பொழுது சந்திரனும் சூரியனும் இல்லாத சமயத்தில் என்றபடி, ததா என்பதற்கு விவரணம் ப்ரோஷிதசந்த்ரஸூர்யே என்பது. வெளிச்சத்தைத் தரவல்லவன் ஒருவனும் இல்லை.

தோஷாமுகே தூஷித ஸர்வநேத்ரம் சாயங்காலத்தில் எல்லோருடைய கண்களையும் மறைக்கக்கூடியது என்று பொருள். இது தம: என்பதற்கு விசேஷணம். தோஷா-இரவு-அதன் முகம்-தொடக்கம். தோஷா என்ற சொல் அவ்யயமாகும். அவ்வாறின்றி பெண்பாலிலும் உண்டு. மஹாகவிகள் இவ்வாறு ப்ரயோகித்துள்ளனர். ஆதலால் தோஷாமுகம் என்பதற்கு இரவின் தொடக்கம் எனப் பொருள். எல்லோருடைய கண்களையும் மறைப்பது தோஷாமுகத்தின் ப்ரபாவம். வஸ்துக்களும் உள்ளன. கண்களும் உள்ளன. ஆனால் அக்கண்களால் வஸ்துக்களைக் காண இயலவில்லை. இது இருளின் பெருமை. இது சூழ்ந்து கொண்டது,

வியோகிநாம் சோகமயஸ்ய வந்ஹே: ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தால் அவர் வியோகியாவார். நல்ல வயதுடைய ஆண்களும் பிரிந்திருப்பதை இவ்வாறு

கூறுவர். ஒருவரோடு ஒருவர் சேரவேண்டும் என்று தீவிரமான ஆசையுடையவர்கள் அவ்வாறு இணையாமல் பகலால் பாதிக்கப்பட்டவர்கள் எப்பொழுது சேருவோமோ என்று ஏங்கி துடித்துக்கொண்டிருப்பவர்கள். சோகமே பெருகுவது, அது நெருப்பு போல் எரிக்கிறது. வெளியில் ஜ்வாலை படராத நெருப்பு என்று கொள்ளலாம். உள்ளேயே குமுறிக்கொண்டு எரித்து வருவதாம். சோகத்தை நெருப்பாக வர்ணிப்பது கவிமரபு.

ஆசாகதோ தூம இவ அந்வபாவி எங்கும் பரவின புகைபோல் எண்ணப்பெற்றது. இருள் புகையெனக் கருதப்பட்டது என்பதாம். ஆசை என்பதற்கு திக்கு என்றும் வேறு பொருள் உண்டு. புகை எங்கும் சூழ்ந்து கொண்டால் பகலிலும் கண் தெரியாது, கண்களைத் திறந்து பார்க்கவும் இயலாது. பிரிவினால் ஏற்பட்ட சோகத்தை தணிக்குமா! அதை வெளிக் கிளப்புமா! வெளிக்கிளப்பி தணிக்கலாம். ஆதலால் அது புகைக்க ஆரம்பித்தது. அப்புகையே இருள் என்பர். இந்த நிலை இரு பாலிலும் இருப்பதால் எங்கும் பரந்தது. நீண்டதொரு ஆகாங்க்ஷைதான் ஆசை. சூரியனுக்கு அருணன் போல் நெருப்புக்கு புகை. முன் நிற்கும் அப்புகையோ இருள் என்று அழகான வர்ணனம்.

இங்கு ப்ரோஷித - தோஷாமுக, தூஷித ஸர்வநேத்ர வியோகி ஆசாகத என்கிற சப்தங்களின் இணைப்பு மிகவும் உயர்ந்தது, தம்பதிகள் - அல்லது காதலர்கள் காலவசத்தால் பிரிந்து இருக்கின்றனர். ஒருவரையொருவர் அடையவில்லை. அவர்களுடைய சோகம் பெருகி பாதிக்கிறது.

இரவு வந்தவுடன் அது புகைக்க ஆரம்பிக்கும் நெருப்பென அவர்களை வாட்டும். இரவு தொடக்க மாதலால் இரண்டு எதிர் திக்குகளில் கிளம்பின சோகப் புகையே எங்கும் பரவி விட்டதோ என்னலாம்படி யுள்ளது.

இந்த ச்லோகத்தில் சப்தங்களின் அமைப்பு அத்புதம். விரிக்கிற் பெருகும்.

सतारपुष्पा धृतपल्लवश्रीः
प्रच्छायनीरन्ध्रतमःप्रताना ।
विश्वाभिनन्द्या ववृधे तदानीं
वैहायसी कापि वसन्तवन्या ॥ ४५ ॥

ஸதாரபுஷ்பா த்ருதபல்லவஸ்ரீ:
ப்ரச்சாய நீரந்த்ரதம: ப்ரதாநா
விச்வாபிநந்த்யா வவ்ருதே ததாநீம்
வைஹாயஸீ காபி வஸந்த வந்யா (45)

(கருத்து) நக்ஷத்திரங்களாகிற பூவணிந்து கறுத்தும் சிவந்தும் இருக்கும் நிறமாகிற தளிர் விட்டு, இருளாகிற நிழலாகி உலகு வியக்க வல்லதாய் ஆகாயத்தில் விளங்கும் வஸந்தவன சோபையோ என்னலாம்படி ஒரு சோபை அப்பொழுது பெருகலாயிற்று.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் இருள் பரவியதைக் கூறினர். இங்கு அப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக நக்ஷத்திரங்கள் தோன்றுவது முதலான அழகினை வர்ணிக்கிறார்.

ஸதாரபுஷ்பா த்ருதபல்லவஸ்ரீ: நக்ஷத்திரங்களாகிற பூக்களுடன் கூடியதும், ஸந்த்யையின் ஒளியினால் தளிரின் அழகை உடையதும் என்று பொருள். ஆகாயம் என்பது ஒரு வனம். அதில் நக்ஷத்திரங்கள் பூக்கள் போல் உள்ளன. மாலை வேளையில் உள்ள சிகப்பு நிறம் தளிரின் நிறம் போன்றது, வஸந்தகாலத்தில் எல்லாம் ஒரே சமயத்தில் தளிர்விடும். அதுவே வனத்தின் வனப்பு.

ப்ரச்சாய நீரந்த்ர தம: ப்ரதாநா அடர்த்தியான இருட்டின் பரப்பு நிழல் மாதிரியுள்ளது என்று பொருள்.

விச்வாபிநந்த்யா வவ்ருதே ததாநீம் அப்பொழுது உலகெலாம் கொண்டாட வல்லதாய் வளர்ந்தது என்றபடி.

வைஹாயஸீ காபி வஸந்தவந்யா: ஆகாயத்தில் விலக்ஷணமானதொரு வஸந்தவன சோபை என்று பொருள். காபி என்பதற்கு விலக்ஷணமான என்று பொருள். வனத்தின் சோபையை வானத்திலிருந்து தான் பார்க்க இயலும். அவ்வாறே வானத்தில் ஏற்படும் அந்த வனத்தின் சோபையை இங்கிருந்தே நாம் அனுபவிக்கலாம்!

अलक्ष्यत श्यामलं अन्तरिक्षं
ताराभिरादर्शितमौक्तिकौघम् ।
निवत्स्यतो विश्वपतेरवन्यां
कालेन भृत्येन कृतं वितानम् ॥ ४६ ॥

அலக்ஷ்யத ச்யாமலம் அந்தரிக்ஷம்
தாராபிர் ஆதர்சித மௌக்திகௌகம்
நிவத்ஸ்யதோ விச்வபதேர் அவந்யாம்
காலேந ப்ருத்யேந க்ருதம் விதாநம் (46)

(கருத்து) வானம் கறுத்து காணப் பெற்றது. அங்கு முத்துக் குவியல்கள் குவிந்த வண்ணமிருப்பதை நக்ஷத்திரங்களே காண்பித்துக் கொடுக்கின்றன. பூமியில் விச்வ பதி வசிக்க வந்த பொழுது காலம் என்கிற தொண்டன் அமைத்த மேல்பரப்பு போல் இருக்கிறது என்றவாறு.

(விரிவுரை) வஸந்தவன சோபையை வானம் பெற்றது என்றூர் முன் ச்லோகத்தில். இதில் மேலும் நக்ஷத்திரங்கள் கூட்டம் கூட்டமாகத் தெரிகின்றபொழுது அதை ஆதாரமாகக் கொண்டு அத்புதமாக நிரூபணம் பண்ணுகிறூர்.

அலக்ஷ்யத ச்யாமளம் அந்தரிக்ஷம் ஆகாயம் கறுப்பாக காணப்படுகிறது. அந்தரிக்ஷம் ஆகாயம். ருக்ஷங்கள் உள்ளே அடங்கியிருப்பதால் ஆகாயத்திற்கு அந்தரிக்ஷம் என்று பெயர். அந்தரிக்ஷம் என்ற சொல்லின் விவரணமாக இந்த ச்லோகம் நிறம் பெறுகிறது. அந்தரிக்ஷம்- வைதிக சப்தம். கறுநிறமுள்ள ஆகாயம் விதானமாக காட்சியளித்தது.

தாராபி: ஆதர்சித மௌக்திகௌகம்: நக்ஷத்திரங்களால் முத்துக் குவியல்கள் எனக் காட்டப்பெற்றது என்பதாம். விதானத்தில் மேற்பரப்பில் அழகான முத்துக்களை அமைப்பது உண்டு. இங்கு தாரைகளே முத்துக்களாய் அமைந்தன. மொக்திகௌகம் என்பதால் வரிசையாக கோர்க்கப்பட்டவை என்று சொல்ல வேண்டியதில்லை. நக்ஷத்திரங்கள் சிதறிய வகையிலும், குவிந்தும் காணப்படுவதால் ஓகம் என்று கூறியபடி.

நிவத்ஸ்யதோ விச்வபதே: அவந்யாம் பூமியில் வாஸம் செய்ய விருக்கும் விச்வபதிக்கு என்று பொருள். பதிம் விச்வஸ்ய என்று ஸூக்தம் கூறியது. விச்வம் பூமி ஆகாயம் இரண்டும் சேர்ந்ததுதான். வானவீதியில் ஸஞ்சரிக்காவிட்டாலும் - பூமியில் வஸிக்கப் போவதால் வானம் விதானம் ஆயிற்று. ப்ரபு வருவதற்கு முன்னம் தான் ஆதரம் பெருக பந்தல் போடுவது விதானம் கட்டுவது வழக்கம். காலாதிக்ரமம் தோஷம்.

காலேந ப்ருத்யேந க்ருதம் விதாநம் காலம் என்கிற சேவகனுல் அமைக்கப்பெற்ற மேற்பரப்பு என்று பொருள். விதானமாக வானம் தோற்றமளித்தது. ப்ருத்யன் பணியாள். காலத்தோடு செய்தது என்றும் கொள்ளலாம். காலம் என்கிற பணியாள் என்பர்.

இங்கு கவிமரபின் அழகினைக் காணலாம். வானம் மேற்பரப்பு. நக்ஷத்திரங்கள் முத்துக்கள், காலம் பணியாள் என்று ரூபணங்கள். விதானத்தையும் வேண்டினுள் கோதை. மேலாப்பு என்பர்.

अभृङ्गनाद प्रतिपन्न मौना
निमेषभाजो नियतं वनस्थाः ।
दूरंगते स्वामिनि पुष्करिण्यः
तत्प्राप्तिलाभाय तपो वितेनुः ॥ ४७ ॥

அப்ருங்கநாத ப்ரதிபந்ந மௌநா
நிமேஷபாஜோ நியதம் வநஸ்த்தா:
தூரம் கதே ஸ்வாமிநி புஷ்கரிண்ய:
தத்ப்ராப்தி லாபாய தபோ விதேநு: (47)

(கருத்து) புஷ்கரிணிகள் தங்கள் நாதன் கண் காணாத இடத்தை நோக்கிச் சென்றுவிட்ட படியால் துறவறம் பூண்டு விட்டன. எப்படியும் மறுபடியும் நாதனைப் பெற தவம் கிடப்பனவோ! வண்டினம் முரலவில்லை. அமைதி, வளத்திலேயே நிலை. கண்களையும் மூடிக்கொண்டன, இதைக் காட்டிலும் வேறு தவக்கோலம் உளதோ!

(விரிவுரை) சூரியன் மறைந்தபொழுது இயற்கையாகவே தாமரை மலர்கள் வாய் கூம்புமவை; அமைதியான ஒரு சமயம் இதை கவிசமயத்தின் கண் கொண்டு வர்ணிக்கிறார். புஷ்கரிணிகள் எல்லாம் தவக்கோலம் பூண்டுவிட்டன என்கிறார்.

அப்ருங்கநாத ப்ரதிபந்தமௌநா தாமரை ஓடைகளில் எப்பொழுதுமே வண்டினம் முரலும். மலர்கள் மூடிவிட்டதால் அவையும் அவற்றுள் அடங்கிவிட்டன. இனி நாதம் இல்லை. மௌனம் எங்கும் நிலவும். மனனம் முநிவரின் செயல். ப்ருங்கம்-வண்டு, அதன் நாதம் இன்மையால் மௌனம் மேற்கொள்ளப்படும் நிலையாம்.

நிமேஷபாஜோ நியதம் வநஸ்த்தா: கண்களை மூடிக் கொண்டும் காட்டில் வசித்தும் (தவம் கிடந்தன) என்பதாம். தவம் புரிவோர் கண்களை மூடிக்கொண்டிருப்பர். இங்கு அவ்வண்ணம் மலர்களும் மூடிக்கொண்டு விட்டன. அசைவில்லாமல் இருப்பதும் தவத்தின் சிறப்பாம். காட்டிலே வசிப்பது நலம். ஒரு சிலர் நீரில் நின்றும் அசைவுற்று தவம் கிடப்பர். இங்கு வநம் என்ற சொல்லிற்கு காடு-நீர் என்ற இரண்டு பொருளும் கொள்ளப்படும். இங்கு நியதா என்று பாடம் ஊகிக்கப்படுகிறது.

தூரம் கதே ஸ்வாமிநி புஷ்கரிண்ய: தனது கணவன் வெகுதூரம் சென்றுவிட்ட பொழுது, அத்தாமரைத் தடாகங்கள் என்று பொருள். தாமரைகளுக்கும் சூரியனுக்கும் பதிபத்நீ பாவம் என்பர். தனது ஸ்வாமி எங்கோ சென்று விட்டார். கூப்பிடு தூரத்தில் இல்லை. அவரை அடையாமல் வாழ்வு இல்லை. இனி காட்டிலும் இருந்து நீரிலும் இருந்து கடுந்தவம் புரிந்து தான் கணவனை அடைய இயலும். சுத்தமான தீர்த்தத்தை புஷ்கரிணி என்பர். தூய்மையும் தவமும் கொண்டபடியால் தாமரை ஓடைகளை ஸ்வாமி புஷ்கரிணிகள் என்பர்.

தத் ப்ராப்திலாபாய தபோ விதேநு: அவனை அடைய தவம் செய்தன என்று பொருள். ப்ராப்தி மறுபடியும் நன்றாக அடைதல், அதுவே லாபம், ப்ராப்தயே என்று சொல்லாமல் ப்ராப்திலாபாய என்பது ரஸம். பதிபத்நீ பாவமானதால் தத் ப்ராப்தி தான் லாபம். ப்ரணஷ்டஸ்ய யதா லாப: என்றார் வான்மீகி. ப்ர என்பதை ஆப்தியுடன் சேர்த்தது ரஸம். தவம் கிடந்தன என்பதாம். அழுது கொண்டிருக்கவில்லை. தபஸா ப்ரம்ஹ விஜிக்ஞாஸஸ்வ என்ற படியாம்.

இங்கு ப்ரதிபத்தி-மௌனம், நியமம், வனத்திலிருப்பது முதலிய சொற்கள் முனிவரின் நிலைகளை உணர்த்தும் பாங்குடையவை.

निमीलितानां कमलोत्पलानां
निष्पन्न सख्यैरिव चक्रवाकैः ।
विमुक्त भोगैर्विदधे विषण्णैः
विबोधवेलावधिको विलापः ॥ ४८ ॥

நிமீலிதாநாம் கமலோத்பலாநாம்
நிஷ்பந்த ஸக்யைரிவ சக்ரவாகை:
விமுக்த போகைர் விததே விஷண்ணை:
விபோத வேலாவதிகோ விலாப: **(48)**

(கருத்து) தாமரைப் பூக்களும் கருநைதல்களும் கண்களை மூடிக்கொண்டு விட்டன. அப்பொழுது சக்ரவாக பக்ஷிகள் தமக்குள் பிரிந்து அழுகின்றன. இரவில் சக்ரவாகம் பிரிந்தே இருக்கும், இதை அழகான சைலியால் உணர்த்துகிறார். தங்களுடைய நண்பர்களான தாமரை மலர்களும் செங்கழுநீர்களும் உறங்குகின்றனவே என எண்ணி தாமும் அழுகின்றன என்கிறார். இவ்வழுகை உதயம் வரையில் தொடரும். அதுவரை வருத்தம் காப்பவர் போகங்களை விடுவது போலவே அவைகளும் துயரம் மிகுதியால் அங்ஙனேயாம்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் நாதமே இல்லாத சூழ்நிலையை வருணித்தார். இங்கு சக்ரவாக பக்ஷிகளின் அழுகை மட்டும் செவியிற்படுகின்றன என்றும், விடியும் வரை இது ஓயாது என்பதையும் உணர்த்தி அழுகைக்கு காரணம் வேறுயிருந்தும், நண்பர்களோடு துயரத்தைப் பகிர்ந்து கொள்வது என்று கவி மரபில் கூறுகிறார். மேலும் பத்மிநிகள் தவம் கிடந்தன என்றார். அந்த ஓடைகளில் இருக்கும் தாமரை மலர்களும் மூடிக்கொண்டு விட்டன என்பதைக் காரணமாக்க சக்ரவாக பக்ஷியின் விலாபத்தை விளக்குகிறார்.

நிமீலிதாநாம் கமலோத்பலாநாம் தாமரை மலர்களும் கருநைதல்களும் உறங்கிக் கிடக்கின்றன என்று

பொருள். இரவில் கருநைதல்கள் மலரவேண்டுமே. மலர்களைக் கொண்டே காலத்தை யுணரலாமே. செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின என்றல்லவோ பெரியோர் அனுபவம்! இரவில் கருநைதல் மலரத்தானே செய்யும் என்று ஆக்ஷேபித்துக்கொண்டு, கமலத்துடன் உத்பலமும் பகலிலேயே மலரும் என்று விளக்கினார் தீக்ஷிதர். ராமாயணத்தில் இவ்வாறு கங்கையை வர்ணிக்கும் சமயத்தில் பகலிலேயே இரண்டும் மலர்ந்துள்ளன என்று கூறியுள்ளபடியால் ஸ்வாமியும் இவ்வாறு பிரயோகித்தது என்றும் கூறினார். யமுனை வர்ணனத்திலும் இவ்வாறே.

நிஷ்பந்ந ஸக்யைரிவ சக்ரவாகை: தோழமை ஏற்பட்டு விட்டதோ என்று கூறும் நிலையில் உள்ள சக்ரவாக பக்ஷிகளால் என்று பொருள். பகலில் புணர்ந்து இரவில் பிரிந்த சக்ரவாகபக்ஷிகள் வாய்விட்டு அழுதவண்ணம் இருக்கும்.

விமுக்தபோகை: விததே வி[illegible]ண்ணை: போகங்களை விட்டு துயரம் மேலிட்டு இவ்வாறு செய்தன என்றபடி. நெருங்கிய ஒரு நண்பன் துயரத்துக்குள்ளாகி மூச்சு பேச்சற்றுக் கிடக்கும் பொழுதும் அவன் பிழைப்பனோ மாட்டானோ என்று எண்ணம் உண்டாகும் பொழுதும் நண்பன் பெண்டிரோடு கெஞ்சிக் குலாவிக் கொண்டிருப்பனோ! அல்லது ருசிகரமான வஸ்துக்களை உண்டு களிப்பனோ! என்ன ஆகுமோ என்ன ஆகுமோ என்று நினைத்து அருகிலேயே துயரத்துடன் இருக்கமாட்டானோ! தாமரை மலரும் கருநைதலும் கண்மூடிக்கிடக்க இந்த நிலையை சக்ரவாகங்கள் அடைந்து, உயிர் பெற்று எழவேண்டுமே என்று வாய் ஓயாமல் கூவும் போலும்.

விபோதவேலாவதிகோ விலாப: மலரும் சமயம் வரை இந்த அழுகை தொடரும் போலும். நோய்வாய் பட்டு மரணத் தருவாயில் இருப்பவன் கண்விழித்துக் கொண்டால் அருகில் இருப்பவர் அழுகையை நிறுத்துவது இயற்கைதானே! அழுகைக்காக மலர்கள் மலரப் போவதில்லை. அதற்கு ஏற்ற வேளையில் தான் அது மலரும். அது தான் இவ்வழுகைக்கு எல்லை என்றபடி.

கணவன் திரும்பிவர வேண்டுமே என்று புஷ்கரிணிகள் தவம் கிடந்தன. நண்பர்கள் கண் விழிக்க வேண்டுமே என்று சக்ரவாகங்கள் புலம்புகின்றன என்பது ரஸம்.

तमिस्रनीलांबरसंवृताङ्गी
श्यामा बभौ किञ्चिदतीत्य सन्ध्याम् ।
प्राचीनशैले समयान्निगूढं
समुद्यता चन्द्रमिवाभिसर्तुम् ॥ ४९ ॥

தமிஸ்ர நீலாம்பர ஸம்வ்ருதாங்கீ
ச்யாமா பபௌ கிஞ்சித் அதீத்ய ஸந்த்யாம்
ப்ராசீநசைலே ஸமயாந் நிகூடம்
ஸமுத்யதா சந்த்ர மிவாபிஸர்தும் (49)

(கருத்து) இருளாகிற கறுப்பு சேலை அணிந்து அதனால் தன்னை போர்த்திக் கொண்டு நல்லவயதுடைய பெண் ஸந்த்யா காலம் கழிந்ததும் சிராவனும் தன் ஆசை நாயகன் கிழக்குமலையில் ஒரு ஸங்கேதம் செய்து கொண்டு மறைந்து ஒளிந்திருக்க, அவனிடம் காதல் கொண்டு

குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லும் அபிஸாரிகையை போல் சந்த்ரனை அணுக பெரிதும் முயற்சி செய்தாள் என்பதாம்.

(விரிவுரை) இருள் நன்றாகப்படர ஆரம்பித்தது. இதை வர்ணிக்கிறார். ச்லேஷையால் அபூர்வமான வர்ணனம்.

தமிஸ்ர நீலாம்பர ஸம்வ்ருதாங்கீ இருள் என்ற கறுப்பு சேலை போர்த்திக் கொண்டவளாய் என்று பொருள். இது ச்யாமா என்பதற்கு விசேஷணம். பெண்களுக்கு கறுப்புச்சேலை அணிவதில் இயற்கையாகவே ஆர்வம் உண்டு. இங்கு இருளில் ஆசை நாயகனிடம் செல்லுகின்ற பெண் தன்னைப் பிறர் அறியாவண்ணம் தன்னைக் காத்துக் கொள்ள கறுப்பு சேலை அணிந்தவளாய் எனப்பட்டது. நீலாம்பரா என்றாலே போதுமே! ஸம்வ்ருதாங்கீ என்பானேன்! உடல் முழுவதையும் முகத்தையும் சேர்த்து மறைத்துக் கொண்டாள் என்பதில் நோக்கு. அவகுண்டிதாவயவா என்று விவரித்தார் தீக்ஷிதர். இன்றும் சில ஜாதிகளில் உடல் முழுவதையும் பெண்கள் மறைத்துக் கொண்டு தான் தெருவில் வருவதைக் காண்கிறோம். அபிஸாரிகை என்ற நாயகியைப் பற்றி கேட்கவேண்டுமோ !

ச்யாமா பபௌ கிஞ்சித் அதீத்ய ஸந்த்யாம் ஸந்த்யா காலம் கழிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ச்யாமா விளங்கினாள். ச்யாமா என்பதற்கு இரவு என்றும் வயதுடைப் பருவப்பெண் என்றும் பொருள். श्यामा षोडशवर्षा स्त्री त्रियामा शारिवा निशा என்று ரத்ன மாலை என்ற நிகண்டு கூறியது. ஸந்த்யா காலத்திற்குப்

பிறகு தான் இருள் படரும். இங்கு ஸந்த்யா என்பதும் ஒரு பெண்ணைக்குறிக்கும். அவளுக்கும் தெரியாமல் அவளை யும் மீறி சென்று விட்டாள் இந்த இரவு என்ற யுவதி.

ப்ராசீநசைலே ஸமயாந் நிகூடம் கிழக்கு திக்கில் உள்ள மலையில் வேளைபார்த்துக் கொண்டு ஒளிந்து கொண்டிருக்கும் என்று பொருள். இது சந்த்ரனுக்கு விசேஷணம். ஒளிந்திருப்பவன் சந்த்ரன் என்றபடி. ப்ராசீந சைலம் என்பதற்கு கிழக்கு மலை என்று பொருள். க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியில் அர்த்த ராத்திரியில் கிழக்கில் தானே சந்திரன் தோன்றுவது? ப்ராசீந சைலம். புரா தனமான மலை. மேலும் முன்பெல்லாம் கூடிக் கலந்து கலந்து பழகின இடம். முன்னமே பழகின ஸங்கேத ஸ்தானம் என்றார் தீக்ஷிதர். ஸமயம் என்பதற்கு பல பொருள்கள் உண்டு. அஷ்டமியாதலால் குறிப்பிட்ட காலத்தில் தான் வெளிவரலாம். ஆதலால் ஸமயம்— நேரம் பார்த்து என்று பொருள். மேலும் ஸமயம் என்பதற்கு ஸங்கேதம் என்று பொருள். இன்று இரவு இத்தனை மணிக்கு இந்த இடத்தில் நாம் சேர வேண்டும் என்று முன்னேற்பாடு பண்ணிக் கொண்டபடி என்றும் பொருள். மேலும், ஸமயம் என்பதற்கு காலம் ஸித் தாந்தம், ப்ரதிக்ஞை, சபதம், ஸங்கேதம் ஆசாரம் என்ற பொருள்களும் உண்டு. நிகூடம், மறைந்திருப் பவன் என்றபடி. ஸங்கேதம் அப்படிப்பட்டது என்பதாம். பிறர் கண்களில் படாதபடி ஜாக்ரதையாக இருப்பது.

ஸமுத்யதா சந்த்ரமிவாபிஸர்தும் சந்திரனை நோக்கிக் கள்ள நட்புடன் ஒளிந்து பெரு முயற்சி செய்துச் சென்று கொண்டிருக்கும் யுவதி போலே இரவு

விளங்கியது. உத்யதா என்றால் ப்ரயத்னம் ஸமுத்யதா என்றால் நல்ல முயற்சி-அதாவது பிறர் கண்களில் எப்படியும் படலாகாது என்று செல்வது. அபிஸர்தும்- நெருங்க என்று பொருள். அபிஸாரிகை என்று ஒரு வகையான நாயிகை உண்டு. இந்த ச்யாமா அபிஸாரிகை யானாள். சந்த்ரோதயம் ஆவதற்கு முன்புள்ள நிலையை இவ்வாறு நிரூபித்தாம்.

निशाकरेण प्रतिपन्नसत्वा
निक्षिप्तदेहेव पयोधितल्पे ।
जगत्समीक्ष्या जहती च कार्श्यं
प्राची दिशा पाण्डरतामयासीत् ॥ ५० ॥

நிசாகரேண ப்ரதிபந்நஸத்வா
நிக்ஷிப்ததேஹேவ பயோதிதல்பே
ஜகத் ஸமீக்ஷ்யா ஜஹதீச கார்ச்யம்
ப்ராசீ திசா பாண்டரதாம் அயாஸீத் (50)

(கருத்து) சந்திரனோடு சேர்ந்துவிட்டாள் ஒரு பெண். பும்யோகம் ஏற்பட்டால் கர்ப்பம் தரிக்க நேரமாகுமோ! கடலெனும் படுக்கையில் கிடக்கிறாள் போலே இருக்கிறாள். சந்த்ரோதயம் ஆகப்போகிறது. அதனால் தனது க்ருசத் தன்மையை விட்டு உலகெலாம் காணத் தகுந்தவளாய் ஆகப் போகிறாள். எவ்வளவு உடல் வெளுத்து விட்டது! இது வேறு யாரும் இல்லை கிழக்கு திக்கு என்கிற பெண்ணையாம்.

(விரிவுரை): இதற்கு முன் ச்லோகத்தில் இருள் என்ற பெண் சந்திரனைத் தேடி கிழக்கு மலையை நோக்கிச் சென்று அபிஸாரிகை ஆனாள் என்றார். இந்த ச்லோகத்தில் கிழக்கு திக்கு என்ற பெண்ணுக்கு ஏற்பட்ட நிலையை வர்ணிக்கிறார்.

நிசாகரேண ப்ரதிபந்நஸத்வா நிசாகரன் என்பது சந்திரனை. நிசையில் இரவில் தானே அவனுக்கு எல்லாம் ஆதலால் ஆகலாம். திவாகரன் என்று சூரியனைக் கூறுவது போலாம். நிசையையும் தனது கிரணத்தினால் விளங்கச் செய்பவன். காதலர்களுக்கு மிகவும் ப்ரிய மானவன். நிசை என்ற பெண் அபிஸாரம் பண்ணினாள் என்றார் முன் ச்லோகத்தில், ஆனால் அபிஸரித்தவளுக்கு கிடைக்கவில்லை. அதற்கு முன்னமே ப்ராசீ என்ற பெண் அவனைப் பெற்று விட்டாள். ஸத்வம் பெற்று விட்டாள் ஸத்வம் என்பது கருவை. சந்திரனால் கருதரித்து விட்டாள் என்பதாம். ஸஞ்சாரசக்தியில்லை.

நிக்ஷிப்த தேஹேவ பயோதி தல்பே பால் போல் வெளுத்த படுக்கை போன்றது அக்கடல். அதில் உடலை வைத்தவளாய் என்றபடி.

ஜகத் ஸமீக்ஷ்யா ஜஹதீ ச கார்ச்யம் உலகை மெலாம் காணத் தக்கவளாய், இளைத்திருக்கும் நிலையை விடுபவளாய் என்று பொருள். சந்திரோதயம் ஆகப்போவ தால் இருள் மறைய ஆரம்பிக்கிறது. அது இளைப்பின் முறிவு என்னுமாப் போல் உள்ளது. கர்ப்பிணிகளுக்கு ஆரம்பகாலத்தில் க்ருசமான நிலை இருக்கலாமேயல்லது கரு பெருகும் பொழுது அந்த நிலை கூடாதே! கர்ப்பிணி

யானவள் படுக்கையில் படுத்திருக்கும் பொழுது ஒளியேற் படுவதால் உலகம் கண்டு மகிழும் நிலையை அடைவதுடன் தானும் வெளுத்திருப்பாள் என்பதாம். ஸுகப்ரஸவத் திற்கு அறிகுறி என்றார் டிப்பணியில்.

ப்ராசீ திசா பாண்டரதாம் அயாஸீத் கிழக்கு திக்கு என்ற பெண் என்பதாம். பாண்டரதாம் சுப்ரமான தன்மையை அடைந்தாள் என்றபடி. ப்ராசீந சைலம் என்றார் முன்ச்லோகத்தில். ப்ராசீ என்கிற பெண்ணே சந்திரனால் அடைய வேண்டியதை அடைந்து விட்டாள் என்பது ரஸம். ஒருத்தி அபிஸரிக்கிறதும் ஒருத்தி வெளுத்த நிலையடைவதும் விந்தை !

तमःप्रसङ्गेन विमुच्यमाना
गौरप्रभा गोत्रभिदाभिनन्द्या ।
विधूदयारंभ विशेषदृश्या
प्राची दिशाऽभासत देवकीव ॥ ५१ ॥

தம:ப்ரஸங்கேந விமுச்யமாநா
கௌரப்ரபா கோத்ரபிதாபி நந்த்யா
விதூதயாரம்ப விசேஷத்ருச்யா
ப்ராசீ திசா பாஸத தேவகீவ **(51)**

(கருத்து) இருள் என்கிற ப்ரஸங்கமே இல்லாததாய் வெளுத்த ஒளியுடையதாய், மலைகளைப் பிளந்தவனால் கொண்டாடப்படுவதாய், சந்திரனுடைய உதயம்

ஆரம்பமாவதால் நன்ருக காணப்படுவதாய் கிழக்கு திக்கு தேவகி போல் விளங்கியது.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் ஒரு வகையில் சந்திரோதயம் குறிக்கப் பெற்றது, கிழக்கு திக்கு கர்ப்பவதியாயிற்று என்றும் வெளுக்கத் தொடங்கியது என்றும் குறிக்கப் பெற்றது. இங்கு கிழக்கு திக்கு மேலும் அடைந்த பெருமைகளை விளக்குவர்.

தம:ப்ரஸங்கேந விமுச்யமாநா தமஸ் என்பதற்கு தமோ குணம் என்றும் இருள் என்றும் பொருள். அதனுல் விடுபட்டதாய் என்று பொருள். இந்த ச்லோகத்தில் கூறப்படும் ஒவ்வொரு விசேஷணமும் இரண்டு அர்த்தங்கள் கொண்டது. கிழக்கு திக்கிற்கும் தேவகிக்கும் பொருந்தும் வகை கையாளப்பட்டுளது. ப்ராசீ திசா என்பது விசேஷ்யம்.

கௌரப்ரபா கோத்ரபிதா அபிநந்த்யா வெளுத்த ஒளியுடையதும், இந்திரனுல் கொண்டாடப் பெற்றதும் என்று பொருள். இதற்கு முன் ச்லோகத்தில் பாண்டரதாம் அயாஸீத் என்பதையே இங்கு கௌரப்ரபா என்று கூறுவர் தீக்ஷிதர். கோத்ரம் என்பதற்கு மலை என்றும் வம்சம் என்றும் பொருள். மலைகளை வஜ்ராயுதங் கொண்டு பிளந்தவன் இந்திரன். அவனது திசை கிழக்கு. தனது திசைக்கு ஏற்படும் வெண்மையை அவன் கொண்டாடுவான் போலும்.

விதூதயாரம்ப விசேஷத்ருச்யா சந்திரன் உதிக்க ஆரம்பித்ததாலே விசேஷமாக காணப்பட்டது என்பதென பொருள். க்ருஷ்ண பக்ஷ அஷ்டமியில் சந்த்ரோதயம் ஆர்த்த

ராத்திரியில் தான். சந்திரன் உதயமாகும் பொழுது இருள் அகன்று கிழக்கு தனி ஒளியைப் பெறுவது இயற்கை கிழக்கு அதிசயமான ஒரு ப்ரகாசத்தைப் பெற்று விட்டது.

ப்ராசீ திசா அபாஸத தேவகீவ தேவகியைப்போலவே கிழக்கு திக்கு ஒளிமிக்கதாயிருந்தது என்று பொருள். தேவகியை உபமானமாக கூறினர். தேவகிக்கும் கிழக்கு திக்கிற்கும் இவ்வாறு ஒற்றுமைகள் ஏற்பட்டு விட்டன. எம்பெருமான் கர்ப்பத்தில் எழுந்தருளி விட்டபடியால் தமஸ் ப்ரஸங்கமே இல்லை. அன்றியும் தமோ குணத்தின் பலிதமான சோகமோ பயமோ இல்லாமல் இருந்தாள் தேவகி. பூரண கர்ப்பிணியான படியால் வெளுத்த திருமேனி பெற்றிருந்தாள். கோத்ரபிதா என்பதற்கு கண்ணனுல் என்றும் பொருள். ஒருத்தி மகனுய் பிறந்து ஒருத்தி மகனுய் வளருவதே அவன் கோத்ரத்தை பேதித்து வாழ்பவன் என்று தெரியவரும். மேலும், கோத்ரர்கள் என்பது கோபர்களைக் குறிக்கும் கோப விசேஷர்கள் என்றும் கொள்ளலாம் என்று விவரித்தார் டிப்பணியில். மேலும் விதூதயம் என்பது சந்த்ரோதயத்தைக் குறிக்கும். விது என்ற சொல் ஹ்ருஷீகேசனையும் குறிக்கும் என்று விச்வ கோசம் கூறும். விதூதயம் என்பதற்கு க்ருஷ்ணன் சமீபத்தில் அவதரிக்கப் போவதால் மிகுந்த அழகுடையவளானுள் என்றும் கொள்ளலாம். யதா ப்ராச்யாம் திசி இந்துரிவ புஷ்கல: முதலிய வசனங்கள் திருவுள்ளத்தில் உள்ளன. ஸர்வகுணேபேதமான காலம் என்ருர் சுகர். அதை விவரிப்பதாயும் அமையும். தேவகி கிழக்கு திக்கு போல் இருந்தாள் என்று கூருமல் கிழக்கு தேவகி போல் இருந்தது என்பது ரஸம்.

अपत्यलाभं यदुवीरपत्न्याः
महोदधौ मग्नसमुत्थितेन ।
तद्वंशमान्येन समीक्ष्य पूर्वं
प्राप्तं प्रतीतेन पुरोधसेव ॥ ५२ ॥

அபத்யலாபம் யது வீரபத்ந்யா:
மஹோததௌ மக்ந ஸமுத்திதேந
தத்வம்சமாந்யேந ஸமீக்ஷ்ய பூர்வம்
ப்ராப்தம் ப்ரதீதேந புரோதஸேவ (52)

(கருத்து) யதுவின் வம்சத்தில் மிகவும் ச்ரேஷ்டராய் விளங்கும் வஸுதேவரின் பத்நியான தேவகிக்கு புத்திரன் பிறக்கப் போகிறுன் என்பதை அறிந்து கொண்டு கடலில் நீராடிவிட்டு வெளியே வரும் சந்திரன் முன்னமே விஷயம் தெரிந்து வரும் புரோஹிதன் போல் வந்து விட்டான். யதுவம்சம் சந்திர வம்சம்தானே. அதில் கௌரவத்துடன் விளங்குவதால் அவனே வருவது பெருமை எனப்பட்டது.

(விரிவுரை) கிழக்கு திக்கின் வெளுத்த தன்மையையும், விசேஷ காட்சியையும் முன் ச்லோகத்தில் கூறினுர். இங்கு சந்திரன் உதயமாவதை வர்ணிக்கிறுர். அத்புதமான நிரூபணம்.

அபத்ய லாபம் யதுவீரபத்ந்யா: தேவகிக்கு புத்ரன் பிறக்கப் போவதை என்று பொருள். வஸுதேவர் யது வீரன். வீரன் என்பதற்கு ஸௌபாக்யமுடையவன்

ச்ரேஷ்டன் என்று இரண்டு பொருள்கள் உண்டு. யது வம்சத்தில் பிறந்தவர்களில் மிகவும் சிறந்தவர் என்றபடி. எட்டாவது அபத்யம் தான் அவளுக்கு லாபமாக அமைந்தது. வஸுதேவரைக் காட்டிலும் அவருடைய பத்நிக்கு என்று குறிப்பிட்டது ப்ரகரணத்துக்குச் சேர்ந்த ரஸம்

மஹோததௌ மக்நஸமுத்திதேந பெருங்கடலில் மூழ்கி எழுந்தவர் என்றபடி. மஹோததியில் ஸ்நாநம் பண்ணி வருவது குறிப்பிடத்தக்கது. புண்ணியன் பிறக்கப் போவதை அறிந்து விட்டபடியால் புரோஹிதரும் புண்ய ஸ்நானம் பண்ணி வருவார் போலும். இதுவரை எந்த புரோஹிதரும் இவ்வாறு வந்ததில்லை என்றும் கொள்ளலாம். மூழ்கி முடிந்துவிட்டது மேலே வந்து விட்டார் என்றும் கூறியபடி.

தத்வம்ச மாந்யேந ஸமீக்ஷ்ய பூர்வம் தனது வம்சத்தைச் சேர்ந்த வஸுதேவருக்கு புத்ரன் பிறக்கப் போவதால் வம்சப்ரவர்த்தகனே வந்து விட்டார் என்பது ரஸம். யதுவம்சகூடஸ்தரானபடியால் எல்லோருக்குமே அவர் பூஜ்யராகிறுர். தனது வம்சத்தில் பகவான் அவதரித்துப் பெருமையளிக்கப்போவதால் அவருக்கு மதிப்பு மேலும் அதிகமாயிற்று என்னலாம். ஸமீக்ஷ்ய பூர்வம் நன்ருக தெரிந்து கொண்டு முன்னமே வந்து விட்டார் என்று பொருள். ஒவ்வொரு திருமாளிகையிலும் நடக்கும் சுபாசுபங்களை அந்த அந்த திருமாளிகை ப்ருஹஸ்பதிகள் முன் கூட்டியே பார்த்து கணித்து வைத்துக்கொண்டு முன்னமேயே வந்து ஞாபகப்படுத்துவதை இன்றும் பார்க்கிறேம். ஆதலால் தான் அவர்கள் புரோ-ஹிதர்கள்.

ப்ராப்தம் ப்ரதீதேந புரோதஸேவ முன்னமேயே ஆதரத்துடன் வரும் புரோஹிதரைப் போலே என்று பொருள். ப்ருஹஸ்பதிக்கு அந்த ஸௌபாக்யம் கிடைக்கலாமோ என்று சந்திரனே வருவான் போலும். ப்ருஹஸ்பதி போலல்லாமல் பிறக்கு முன்னமே வந்தது குறிப்பிடத்தக்கது. கர்காசாரியர் போல் பயந்து ஜாதகர்மாதிகளைப் பண்ணுவித்தது போல் இல்லை எனவும் கொள்ளலாம். கடலில் நீராடி வரும் ப்ருஹஸ்பதி போல் என்றது ரஸம். ப்ரதீதன் என்பதற்கு ஆதரமுடையவன் என்றும் புகழ் பெற்றவன் என்றும் பொருள்.

क्ष्वेलोपमे सन्तमसे निरस्ते
सोमं सुधास्तोममिवोद्वमन्ती ।
दुग्धोदवेलेव दुदोह लक्ष्मीं
आशा मनोज्ञाममरेन्द्रमान्या ॥ ५३ ॥

க்ஷ்வேலோபமே ஸந்தமஸே நிரஸ்தே
ஸோமம் ஸுதாஸ்தோம மிவோத்வமந்தீ
துக்தோத வேலேவ துதோஹ லக்ஷ்மீம்
ஆசா மநோக்ஞாம் அமரேந்த்ரமாந்யா (53)

(கருத்து) விஷம் போன்றதொரு காரிருள் நீங்கி விட்டது. சந்திரன் தோன்றுகிறான். இது அமுதப்பெருக்கு என்னலாம்படி யுள்ளது. க்ஷீரஸமுத்திரத்தின் கரை போன்ற அழகான கிழக்கு திக்கு அழகான லக்ஷ்மியை-

சோபையை சொரிந்து விட்டது. ஒருக்கால் கிழக்கு சந்திரனை வாந்தி எடுத்ததாக இருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

(விரிவுரை) முன் சுலோகத்தில் சந்திரனை புரோஹிதராகக் கூறினார். சந்திரனுக்கு ஸுதாம்சு என்று பெயர். ஸுதையை அமுதத்தை மட்டும் குறிப்பிடலாமா ! லக்ஷ்மியுமல்லவா தோன்றிவிட்டாள் என்று வர்ணிக்கிறார்.

க்ஷ்வேலோபமே ஸந்தமஸே நிரஸ்தே க்ஷ்வேளம் என்பது விஷம். அதுவும் கறுப்பாக இருக்கும். விஷத்தையுண்பவனுக்கும் இருளில் செல்பவனுக்கும் நிலைகளும் தடுமாறும். முடிவும் ஏற்படும். முதலில் தோன்றிய சந்திர கிரணங்கள் செய்த செயல் இது. பாற்கடல் கடைந்த பொழுது முதலில் விஷம் தான் தோன்றியது. அது நீங்கியவுடன் என்றும் குறிப்பிட்டதாம்.

ஸோமம் ஸுதாஸ்தோமமிவ உத்வமந்தீ சந்திரனை அமுதக்குவியல் போல் உமிழ்வதாய் 'என்று பொருள். ஸோமனும் தோன்றினான். அமுதமும் தோன்றியது. இது ஸஹஜம். ஆனால் இங்கு வேறு மாதிரி கூறப் படுகிறது. ஸோமனையே ஸுதாஸ்தோமம் போல் என்பது ரஸம்.

துக்தோத வேலேவ துதோஹ லக்ஷ்மீம் பாற்கடலின் கரை போலே சோபையை பொழிந்தது என்று பொருள். இங்கு சோபை என்பதற்கு பதிலாக லக்ஷ்மீம் என்பது ரஸம். க்ஷீரஸமுத்ரத்தில் தோன்றினாலும் அதன் கரையில் இருந்த கணவனையே நாடி வந்து திருமார்பில் ஏறி அமர்ந்தாள். ஆதலால் லக்ஷ்மீ கரையில் தான் எனப்பட்டது. அக்கரை சோபை அடைந்தது போலவே என்பதாம்.

ஆசா மநோக்ஞாம் அமரேந்த்ரமாந்யா அமரேந்த்ரன் இந்திரன். அவனுடைய மதிப்புற்குரிய திக்கு கிழக்கு. மனோகரமான சோபை என்பதாம். இந்த சுலோகத்தில் ஒவ்வொரு சொல்லும் ரஸமானது. வேலா என்பதற்கு சமயம் என்றும் பொருள். ஆசை என்கிற பெண் வாந்தி எடுக்கிறாள் என்பதும் ரஸம். புத்ரோத்பத்தி ஏற்படும் வரையில் அது ஸஹஜம். அமரேந்திரனுக்கு லக்ஷ்மியிடம் ஆசையிருந்தது. ஆனால் லக்ஷ்மீ நாராயணனை அடைந்து விட்டாள். இந்த சுலோகத்தில் அபூர்வமான ஸமுத்ர மதனவ்ருத்தாந்தமே கூறப்படும் பாங்கான சொற்கள். க்ஷ்வேளம்-விஷம், சந்திரன்-அப்பொழுது பிறந்தவன், ஸுதா-அப்பொழுது தோன்றியது. லக்ஷ்மீ அப்பொழுது தோன்றினாள். லக்ஷ்மியை இந்திரன் துதித்து மறுபடியும் செல்வம் பெற்றமையும் கூறாமல் கூறப்பட்டது என்றும் கொள்ளலாம். கடைகின்ற பொழுது நீரின் எழுச்சியும் வேலாசப்தத்தின் பொருள் என்று விவரித்தார் தீக்ஷிதர். உத்வமந்தீ என்பது பொருத்தம் என்றும் கூறினார்.

तमस्समाक्रान्तिवशेन पूर्वं
जज्ञे निमग्नैरिव भूतधात्र्याम् ।
ततस्तुषारांशुकरावगूढैः
उत्तम्भ्यमानैरिव शैलशृंगैः ॥ ५४ ॥

தமஸ் ஸமாக்ராந்திவசேந பூர்வம்
ஜக்ஞே நிமக்நைரிவ பூததாத்ர்யாம்
ததஸ் துஷாராம்சுகராவகூடை:
உத்தப்யமாநைரிவ சைலச்ருங்கை: **(54)**

(கருத்து) முன்னம் இருள் பரவியதன் காரணமாக பூமியில் மலைகளின் சிகரங்கள் மூழ்கி விட்டன போல் இருந்தன. பிறகு சந்திரனின் கிரணங்கள் படிந்தபொழுது மறுபடியும் அவை வெளிக் கிளம்புவன போல் ஆயின.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் கிழக்கு திக்கின் சோபையை வர்ணித்தார். சந்திரகிரணங்கள் மலைகள் மீது விழுகின்றன அவற்றின் அழகை இதில் வர்ணிக்கிறார்.

தமஸ் ஸமாக்ராந்தி வசேந பூர்வம் முன்பு இருள் சூழ்ந்து விட்டதன் காரணமாக என்று பொருள். இங்கு ஸங்க்ராந்தி என்னாமல் ஸமாக்ராந்தி என்பது ரஸம். ஸம்யக் ஆக்ரமணம் என்று தேரும். இருள் ஆக்ரமித்துக் கொண்டது என்றால் அதன் அட்டூழியம் சொல்லிய படியாம். இங்கு வசேந என்றது ரஸம்.

ஜக்ஞே நிமக்நைரிவ பூததாத்ர்யாம் பூததாத்ரி என்பதற்கு பூமி என்று பொருள். பூமியில் மூழ்கி விட்டன போலாயின. பூமியை தரிக்கின்ற மலைகளே மூழ்கி விட்டன என்பதாம்.

ததஸ் துஷாராம்சு கராவகூடை: துஷாராம்சு-சந்திரன். அவனுடைய கிரணங்களால் மூடப்பட்டன. இது சைலச்ருங்கை: என்பதற்கு விசேஷணம். சந்திரன் கைகளால் தூக்கி விடுவான் போலும்.

உத்தப்யமாநைரிவ சைலச்ருங்கை: மலைகளின் சிகரங்கள் மேலே கிளம்புவது போல் இருந்தபடி என்பதாம்.

दिशस्तदानीं अवनीधराणां
सगैरिकैः पारदपङ्कलेपैः ।
चकाशिरे चन्द्रमसो मयूखैः
पञ्चायुधस्येव शरैः प्रदीप्तैः ॥ ५५ ॥

திசஸ் ததாநீம் அவநீதராணும்
ஸகைரிகை : பாரதபங்கலேபை :
சகாசிரே சந்த்ரமஸோ மயூகை:
பஞ்சாயுதஸ்யேவ சரை : ப்ரதீப்தை : (55)

(கருத்து) அப்பொழுது திக்குகள் எல்லாம் மிகவும் விளங்கின. காரணம் - சந்திரனின் கிரணங்கள் மலைகளின் சிகரங்களில் படுகின்றன. கைரிகம் முதலான தாதுப் பொருள்கள் படிந்ததாலும் ரஸப் பூச்சுகளாலும் மன்மதனின் பாணங்களிலிருந்து கிளம்பும் அம்புகள் போல்-பூக்கள் போல் தோற்றமளித்தன என்பதாம்.

(விரிவுரை) இதற்கு முன் ச்லோகத்தில் சைல ச்ருங்கங்கள் எல்லாம் பூமியின் அடித் தளத்திலிருந்து மேலே கிளம்புவன போல் காணப்பட்டன என்றார். இங்கு அச்சிகரங்களில் படும் சந்திர கிரணங்களால் திக்குகள் எல்லாம் எவ்விதம் ஒளிபெற்று விளங்குகின்றன என்று சாதிக்கின்றார்.

திச : ததாநீம் அவநீதராணும் அப்பொழுது மலைகளின் என்றபடி. இதற்கு முன்பு ப்ராசீ திக்கு என்றே வருணித்து வந்தார். இப்பொழுது திச : என்று பன்மையில் கூறுவர். திச : ப்ரஸேது : என்றார் ஸ்ரீசுகரும், சகாசிரே என்பதோடு சேரும்.

ஸகைரிகை : பாரதபங்கலேபை : கைரிகம் என்பது தாதுப் பொருள். அது இயற்கையாகவே ஏற்படுவது. கைரிகம் என்பது தங்கத்தையும் குறிக்கும். கைரிகே கநகே தாதௌ என்று நிகண்டு கூறியது. பாரதம் என்பது ரஸத்தைக் குறிக்கும். ரஸம் பூச்சுக்கு உபயோகப் படும். பாதரஸத்தில் கலந்து தங்கம் பூசப்பட்டது போல் காணப்படுவதாம். ரஸஸ்து பாரதே ஸூதே என்பது நிகண்டு.

சகாசிரே சந்த்ரமஸோ மயூகை : சந்திரனுடைய கிரணங்களால் விளங்கின என்று பொருள்.

பஞ்சாயுதஸ்யேவ சரை : ப்ரதீப்தை : மன்மதனின் பாணங்கள் போல் ஜொலித்தன என்று பொருள். மன்மதனுக்கு புஷ்ப பாணன் என்று பெயர். திக்குகளாகிற பெண்கள் சந்திர கிரணங்களாகிற பூக்களை சூட்டி மகிழ்வதுபோலும். சந்திர கிரணங்கள் மன்மத சரங்களாயிருந்தன என்பது ரஸம்.

समुन्नमन्ती कुटिलायतात्मा
शशाङ्कलेखोदयदृश्यकोटिः ।
वियोगिचेतोलवने प्रवीणा
कामोद्यता काञ्चनशङ्कुलेव ॥ ५६ ॥

ஸமுந்நமந்தீ குடிலாயதாத்மா
சசாங்க லேகோதய த்ருச்யகோடி :
வியோகிசேதோலவநே ப்ரவீணு
காமோத்யதா காஞ்சந சங்குலேவ (56)

(கருத்து) வளைந்தும் நீண்டும் வெளிக் கிளம்புகின்றதாய், சந்திரன் கோடு தோன்றும் பொழுது தோன்றும் அழகான நுணி பிரிந்த காதலர்களின் மனதை அறுப்பதில் கை தேர்ந்ததாய் காமனுல் ஏந்தப்பட்ட தங்க அறிவாள் போல் இருந்தது.

(விரிவுரை) சந்திரனின் கிரணங்கள் பட்டு திக்குகள் எல்லாம் ப்ரகாசித்தன என்ருர் முன் ச்லோகத்தில். சந்திரனுடைய நுணியானது வெளியில் தோன்றத் தொடங்குகிறது. அதைக் கொண்டு அழகான வர்ணனம் இங்கு இடம் பெறுகிறது.

ஸமுந்நமந்தீ குடிலாயதாத்மா கோணலாயும் நீண்டும் உள்ளது அதன் உருவம். சந்திரனுடைய ரேகை இவ்வாறு உள்ளது. முதலில் ஸமுத்கச்சந்தீ என்று உரையிட்டார் தீக்ஷிதர்.

சசாங்கலேகா - உதயத்ருச்ய - கோடிः சந்திரனின் ரேகை, உதயமாகும் பொழுது அழகான நுணி தோன்றுகின்றது என்று பொருள். இதை அழகாக ரூபணம் பண்ணுகிருர் மேல் பாதியினுல். சசாங்கலேகா-சந்திர கலை.

வியோகிசேதோலவநே ப்ரவீணு வியோகிகள்-பிரிந்த காதலர்கள். அவர்களுடைய உள்ளங்கள் கூடலை விரும்பும், ஆனுல் அது சாத்தியமல்லாமல் போகும், அப்பொழுது அவர்களுடைய உள்ளத்தை அது வாட்டும்: சந்திரகலை உத்தீபநம் பண்ணுமவை. இந்த சந்திரகலையானது உள்ளங்களை அறுப்பதில் துணிந்தது. அதில் திறமையும் பெற்றது. ப்ராவீண்யம் எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை.

காமோத்யதா காஞ்சந சங்குலேவ காமன் உபயோகித்தது, காமன் ப்ரயோகிப்பது. ஆம் தங்கமயமான அறுவாள்-கத்தியாகும் போலும். சந்திரனுடைய உருவ அமைப்பினைக் கொண்டு இவ்வாறு வர்ணித்தபடியாம். சந்திரனுடைய கிரணங்கள் பட்டு மன்மதனுடைய பாணங்களை யொக்கும் என்று முன் ச்லோகத்தில் கூறினுர், இதில் சந்திரனே ஒரு பாணம்-அல்லது ஓர் வகையான சஸ்திரமாக மாறிவிட்டான் என்கிருர். முன் ச்லோகத்தில் கூறியபடி சகாசே என்று சேர்த்துக்கொள்ள வேண்டும், அத்புதமான ரூபணம்.

तमांसि दुर्वारबलः स कालः
प्रायो विलोप्तुं सहसा दिशां च ।
मनांसि कामश्च मनस्विनीनां
प्रायुँक्त शैत्याधिकं अर्धचन्द्रम् ॥ ५७ ॥

தமாம்ஸி துர்வாரபலஸ் ஸ கால:
ப்ராயோ விலோப்தும் ஸஹஸா திசாம் ச
மநாம்ஸி காமஸ்ச மநஸ்விநீநாம்
ப்ராயுங்க்த சைத்யாதிகம் அர்த்தசந்த்ரம் (57)

(கருத்து) காலத்தின் பலத்தை எவ்வாறு அறிய இயலும்! அதன் பலத்தை தடுத்து நிறுத்த யாராலும் இயலாது. அது விரைகிறது. திக்குகள் வரை படர்ந்துள்ள இருட்களை முழுதுமாக போக்கிவிட முனைந்துவிட்டது. அது மட்டுமல்ல. காலத்தைப் போலவே காமனும் பலசாலி.

தைரியசாலிகளான ஸ்த்ரீகளின் உள்ளங்களை அடக்குவதற்கும் முனைந்து விட்டான். இருவரும் செய்தது என்ன? அர்த்தசந்த்ர ப்ரயோகம் தான். தோன்றியது அஷ்டமீ சந்திரன் அர்த்த சந்திரனானபடியால் வர்ணனம்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் சந்திரனின் ஒரு முனை எழுந்ததைக் கொண்டு அதன் தன்மையைக் கூறினார். இந்த ச்லோகத்தில் பூரணமான அர்த்த சந்திரனுடைய உதயத்தைப் பார்த்து அதை அழகாக வர்ணிக்கிறார்.

தமாம்ஸி துர்வாரபல: ஸ கர்ல: அந்த காலம் (காலம் என்கிற புருஷன்) அவனுடைய பலம் தடுக்கவொண்ணாதது என்று பொருள். காலம் யாரைத்தான் விட்டுவைத்தது! அதன் வாயில் விழாதவர்களே இல்லை. அந்த காலம் இருட்களுக்கு யமனாகவே வந்து விட்டது.

ப்ரயோ விலோப்தும் ஸஹஸா திசாம் ச உடனடியாக அழித்துக்கட்டவே என்றபடி, சந்திரோதய காலத்தில் விரைவாக இருட்கள் ஓடி ஒளிந்து கொண்டு விட்டன. திக்குகளின் இருட்களையும் அகற்றவே என்றபடி. இந்த காலத்தினால் ஏற்பட்ட நிலை இது. **திசாம் ச** திக்குகளுடையவும் என்று ஆச்சரியம். ப்ராய: வெகுவாக என்ற பொருள் இருப்பினும் உத்ப்ரேக்ஷை என்ற அணி இங்கு என்பதைக் காட்டவேயாம். ப்ராயோ விலோப்தும் என்பதற்கு முழுதுமாக என்றும் பொருள் கொள்ளலாம். திசாம் என்ற பன்மை அதிலும் ஸ்த்ரீலிங்கம். 55வது சுலோகத்திலேயே திச: என்று பன்மையில் தொடக்கம்.

மநாம்ஸி காமஸ்ச மநஸ்விநீநாம் மன உறுதியுடைய பெண்டிரின் மனங்களை மன்மதனும் என்றபடி, காமஸ் ச என்பதற்கு மன்மதனும் என்று பொருள். காலத்திற்கும் (காலனுக்கும்) காமனுக்கும் பொதுவான தன்மை

துர்வார பல: என்பது. காமோ$\,$ऽகார்ஷீத் என்று ஜபிக்காத முனிவரில்லை என்னலாம். மநஸ்விகள் என்பதற்கு உதார கம்பீர மனதையுடையவர்கள் என்று பொதுவாக பொருள் உண்டு. இங்கு காமத்திற்கு வசப்படாத மனதையுடையவர்களுடையவும் என்று கொள்ளலாம். **ச** என்பதை மநஸ்விநீநாம் என்பதுடன் இணைக்க வேண்டும். சந்திரோதயம் 55ல் தொடங்கியது. கிரணங்கள் மன்மதனுடைய பாணங்களை யொத்தன என்றார், 56ல் காமோத்யதா வியோகி சேதோலவநே என்று காமப்ரஸங்கத்தைக் குறிக்கிறார். இந்த சுலோகத்திலும் காமன் மனஸ்வினிகளுடைய மனங்களை அழித்துக்கட்டவே என்கிறார்.

ப்ராயுங்க்த சைத்யாதிகம் அர்த்த சந்த்ரம் அர்த்த சந்திரனை ப்ரயோகித்தான் என்று பொருள். குளிர்ச்சி அதிகமாயிருப்பது ஏற்றம். இதைச் செய்தது காலமும் காமனும். காலம் திக்குகளின் இருளை அழிக்க உடனே ப்ரயோகித்தது இது. மன்மதனாலும் நெஞ்சுவலிமையுடைய பெண்களின் உள்ளங்களை ஒடுக்கவும் ப்ரயோகிக்கப்பட்டது. அஷ்டமியானபடியால் அர்த்த சந்திரன் உதயமாகிறான். இந்த சந்திரன் இரண்டு பேருக்கும் ஆயுதமாகவே மாறிவிட்டான் என்பதாம். கழுத்திலே கையை வைத்து தள்ளிவிடுவதை அர்த்த சந்த்ரப்ரயோகம் என்பர். பாணம் உஷ்ணமாயிருக்கும். இது குளிர்ச்சி மிக்கது என்பது ரஸம். சைத்யம் என்பதற்கு கூர்மையானது என்றும் பொருள் டிப்பணியில் கூறப்பட்டது. சில்லென்றிருத்தலும் அஸஹ்யமே. திக்குகள் எவ்வாறு வெளுத்தனவோ அவ்வாறே மங்கைகளுடைய உள்ளங்களும் நெகிழ்ந்து காமவசமாயின என்று கூறியபடியும் ஆம் (இம்மூன்று சுலோகங்களில் காமப்ரஸங்கம் உற்று நோக்கத் தக்கது.

करेण सङ्कोचितपुष्करेण
मदप्रतिच्छन्दकलङ्कभूमा ।
क्षिप्त्वा तमश्शैवलं उन्ममज्ज
मग्नो दिशानाग इवेन्दुरब्धेः ॥ ५८ ॥

கரேண ஸங்கோசிதபுஷ்கரேண
மதப்ரதிச் சந்த கலங்கபூமா
க்ஷிப்த்வா தமஶ் ஶைவலம் உந்மஜ்ஜ
மக்நோ திசாநாக இவேந்துரப்தே: **(58)**

(கருத்து) சந்திரன் கடலிலிருந்து தோன்றுகிறான். அவன் திங்நாகம் மாதிரி இருக்கிறான். திக்கஜம் மூழ்கி விட்டு வெளிவருவது போல் உள்ளது. இருட்கள் கடலில் படர்ந்த பாசைகள் போல் உள்ளன. அவற்றை விலக்கிக் கொண்டு வருவது போல் சந்திரனுக்கும் யானைக்கும் அவ்வளவு பொருத்தம்! சந்திரன் தனது கையினால் (கிரணத்தினால்) தாமரை மலரை மூடச் செய்கிறான். யானையும் தனது தும்பிக்கையை மடக்கி கிளம்பும். யானைக்கு மதஜலம் பெருகும். சந்திரனுக்கும் கலங்கம் மதஜலம் போல் தோன்றும்.

(விரிவுரை) சந்திரோதயத்தினால் ஏற்பட்ட நிலைகளை இதற்கு முன் மூன்று சுலோகங்களால் கூறினார். இப்பொழுது நேரிடையாகவே சந்திரோதய வைகரியை வர்ணிக்கிறார். அழகான உவமைகள்.

கரேண ஸங்கோசித புஷ்கரேண புஷ்கரம் என்பதற்கு தாமரை மலர் என்றும் யானையின் தும்பிக்கை நுனி என்றும் பொருள். கரேண என்பதற்கு கையினால் என்றும் ஒளியினால் என்றும் பொருள். கரம் என்பது யானையின் துதிக்கைக்குப் பெயர். ஆதலால் யானைக்கு கரீ என்று பெயர். மடக்கப்பட்ட நுனியையுடையதான தும்பிக்கையினால் என்று பொருள். கரேண என்பதற்கு விவரணம் ஸங்கோசிதபுஷ்கரேண என்பது. புஷ்கரம் என்ற சொல் யானையின் தும்பிக்கையின் நுனி பாகத்தை மட்டுமே குறிக்கும்.

மதப்ரதிச்சந்த கலங்க பூமா மதஜலம் போல் கலங்கம் அதிகமாகப் பெற்றவனும். இது சந்திரனுக்கு விசேஷணம். யானைக்கும் சேரும். சந்திரனுக்கு கலங்கம் போலே யானைக்கு மதஜலம் பெருகுவதும் ஆம். ப்ரதிச்சந்தம் என்பதற்கு ஸத்ருசமான என்று பொருள். பூமா என்பதற்கு மிகுதி என்று பொருள். மதமே யானைக்கு அழகு பெருமை எல்லாம். அவ்வாறே சந்திரனுக்கும் கலங்கமே அழகு பெருமையாகும்.

க்ஷிப்த்வா தம: சைவலம் உந்மமஜ்ஜ இருளாகிற பாசியை அறுத்துக் கொண்டு அகற்றி விட்டு வெளிக் கிளம்பியது என்று பொருள். யானை மடுக்களிலிருந்து பாசைகளை அகற்றிக் கொண்டு நீரிலிருந்து வெளிக் கிளம்பும். இங்கு சந்திரனும் இருளாகிற கறுத்த பாசிகளை தனது கையால் விலக்கி விட்டு எனப்படுகிறது. நீரிலிருந்து வெளிக் கிளம்புவது உந்மஜ்ஜனம் எனப்படும்.

மக்நோ திசாநாக இவ இந்துரப்தே: மூழ்கியிருந்த சந்திரன் கடலிலிருந்து வெளிக்கிளம்பினான். இவன்

திக்கஜம் மாதிரியுள்ளான் என்றபடி, திக்கஜம் என்று ஒருமை கவனிக்கத் தக்கது. கிழக்கு திக்கில் உள்ள யானை என்று கொள்ள வேண்டும். 43-வது ச்லோகத்தில் கடலையே திக்கஜமாக வர்ணித்து சூரியபிம்பத்தை அது விழுங்கி விட்டது என்று கூறினார். 39-ல் அஸ்தமனம் என்றதொரு மத யானை தள்ளி விட்ட மநச்சிலாச்ருங்கம் சூரிய பிம்பம் என்றார். இங்கு சந்திரனையே திக்கஜமாக வர்ணிப்பது ரஸம். மேலும் இங்கு திசாநாகம் என்பது ஐராவதத்தைக் குறிக்கலாம். ஐராவதமும் வெளுப்பு. சந்திரனும் வெளுப்பு என்பதை நோக்க வேண்டும். அத்புதமான உபமானம்.

मदोदयाताम्रकपोलभासा
शक्रस्य काष्ठा शशिना चकाशे ।
उदेयुषा व्यञ्जयितुं त्रिलोकीं
नाथस्य सा नाभिरिवांबुजेन ॥ ५९ ॥

மதோதயா தாம்ர கபோலபாஸா
சக்ரஸ்ய காஷ்ட்டா சசிநா சகாசே
உதேயுஷா வ்யஞ்ஜயிதும் த்ரிலோகீம்
நாதஸ்ய ஸா நாபிரிவாம்புஜேந (59)

(கருத்து) இந்திரனுடைய திக்கான கிழக்கு மூன்று உலகங்களையும் விளங்கச் செய்யத் தோன்றிய சந்திரனால் மிகவும் ப்ரகாசித்தது. மேலும் தோன்றும்பொழுது கொஞ்சம் சிகப்பு நிறம் கலந்திருக்கும். ஆஸவம் முதலிய மதுவின் சேர்க்கையால் கொஞ்சம் சிவந்து ஒளிபெற்ற கன்னமுடையவனாகத் தோன்றினான். அவனால் கிழக்கு விளங்கியது. இது எப்படி இருக்கிறது என்பதை வர்ணிக்கிறார். பத்மநாபனுடைய நாபியானது தாமரைப்பூவால் எத்தகைய சோபை அடையுமோ அத்தகையது என்பதாம். பிரமனும் மூன்று உலகங்களையும் தோற்றுவிப்பவனும்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் சந்திரனை திக்கஜம் என்றார். இங்கு கிழக்கு திக்கு என்ற பெண்மணி சந்திரனால் பெற்ற சோபையை கூறுகிறார். அன்றியும் இந்திரனுக்கு அழகான உபமானம் இங்கு கூறப்பட்டுகிறது.

மதோதயா ஆதாம்ரகபோலபாஸா கொஞ்சம் சிவந்த கன்னத்தின் ஒளியுடையவனாலே - இது சசிநா என்பதற்கு விசேஷணம். மதம் ஏற்பட்டதான (பெண் போன்ற) என்றபடி, மதோதயா என்று பிரித்தே தனிச் சொல்லாகவே டிப்பணியில் உரை கூறப்பட்டது. தீக்ஷிதரின் உரைப்படி ஒரே ஸமஸ்தபதம். மதோதயத்தினால் சிவந்த கன்னத்தின் ஒளியுடைய சந்திரனால் என்று பொருள்.

சக்ரஸ்ய காஷ்ட்டா சசிநா சகாசே இந்திரனுடைய திக்கு, சந்திரனால் விளங்கியது என்று பொருள். சந்திரனுக்கு மேல் வரும் வாக்கியம் விசேஷணமாகும். காஷ்ட்டா என்பதற்கு திக்கு என்று பொருள்.

உதேயுஷா வ்யஞ்ஜயிதும் த்ரிலோகீம் மூன்று உலகங்களையும் விளங்கச் செய்ய உதித்தவனை என்று பொருள். இந்திரனுக்கு விசேஷணம். அன்றியும் மேலே கூறப்போகும் தாமரைப் பூவிற்கும் இது விசேஷணம், நாபீகமலமானது பிரமனைத் தோற்றுவித்து அவன் வாயிலாக மூன்று உலகங்களையும் தோற்றுவிக்க என்றபடியும் ஆம்.

நாதஸ்ய ஸா நாபிரிவ அம்புஜேந நாதனான நாராயணனுடைய நாபி தாமரை மலரால் போல் என்று பொருள். ஸா என்பதற்கு அத்தகைய வைபவமுடைய என்று பொருள். நாதனுக்கு பத்மநாபன் என்றே திருநாமம். ஸர்வலோகங்களுக்கும் அவன் நாதனாயிருக்க மூன்று உலகங்களைப்பற்றி கேட்கத்தான் வேண்டுமோ! நாராயணனுடைய நாபி தாமரை மலரால் போல் என்பதைக் கவனிக்க வேண்டும். கிழக்கு திக்கு நாபி போன்றது. சந்திரன் தாமரைப் பூவிற்கு சமானம். இப்பொழுது சந்திரனும் கொஞ்சம் சிவந்திருக்கிறான். தாமரைப்பூவும் கொஞ்சம் சிவந்திருக்கும். மேலும் இங்கு நாபியை குறித்ததில் ஒரு ரஸம். இப்பொழுது கிழக்கு திக்கில் ஆகாயத்தில் தான் தோற்றம். நாபியிலிருந்து ஆகாயம் தோன்றியது. ஆகாயத்தில் உள்ள சந்திரன் அந்த நாபி கமலத்திற்கு நிகராகத் திகழ்கிறான் என்பதாம். சந்திரனும் அம்புஜனே. நாபிபத்மம் தருணார்கவர்ணம் என்று பாரதத்தில் கூறியிருப்பதை நினைத்து இவ்வாறு கூறியது என்றார் தீக்ஷிதர்.

समीपतः सन्तमसांबुराशेः
बभार शङ्खाकृतिरिन्दुबिम्बः ।
पित्तोपरागादिव पीतिमानं
दोषाविलप्रोषितदृष्टिदत्तात् ॥ ६० ॥

ஸமீபதஃ ஸந்தமஸாம்பு ராசேஃ
பபார சங்காக்ருதிரிந்துபிம்பஃ
பித்தோபராகாதிவ பீதிமாநம்
தோஷாவில ப்ரோஷித த்ருஷ்டிதத்தாத் (60)

(கருத்து) இருள் என்ற பெருங்கடலின் அருகில் சங்க வடிவில் உள்ள சந்திரபிம்பம் மஞ்சள் நிறத்தை ஏந்தி நின்றது இந்த மஞ்சள் நிறம் பித்தஸம்பந்தத்தினால் ஏற்படுவதாம். பிரிந்து வாழும் காதலர்கள் கண்கள் விழித்து அதனால் கணகளில் தோஷங்கள் ஏற்பட, அதன் காரணமாக பித்த ஸம்பந்தம் அதிகமாக சந்திரபிம்பமும் மஞ்சள் நிறமாகத் தோன்றுவது என்றபடி.

(விரிவுரை) சந்திரன் உதயமாகும் பொழுது கொஞ்சம் மஞ்சள் நிறம் காணப்பெறும். அப்பொழுது மட்டும் அந்நிறம் தோன்றக் காரணத்தை வெகு அழகான ரீதியில் வர்ணிக்கிறார்.

ஸமீபத : ஸந்தமஸாம்புராசே : காரிருளாகிற பெருங்கடலின் அருகிலிருந்து என்று பொருள். ஸந்தமஸாம்புராசி என்பது உபமித ஸமாஸம். கடல்போன்றதொரு இருள் என்று பொருள். கடல் நீர் கறுப்பாயிருப்பினும் இங்கு இருளை கடலாக கூறுவது ரஸம். ஸமீபத : என்பதில் பஞ்சமி ஸப்தமி இரண்டும் கொள்ளலாம். ஸந்தமஸாம்புராசே : என்று பஞ்சமியுமாகலாம். கடலிலிருந்து உண்டான என்று கொள்ளவேண்டும்.

பபார சங்காக்ருதி : இந்துபிம்ப : சங்கத்தின் உருவம் போன்றதொரு உருவமுடைய சந்திரனின் பிம்பம் என்று பொருள். அஷ்டமி சந்திரன் ஆனபடியால் சங்க வடிவம் பொருத்தம். சங்கத்தை சந்திரமண்டலமாக கோதை கூறினாள். ஆனால் சந்திரன் சங்குபோல் உளன் என்கிறார் ஸ்வாமி. சமுத்திரத்திலிருந்து சந்திரன்போல் சங்கமும் உண்டாயிற்றே. சந்திரன் என்னாமல் பிம்பம் என்பதும் சங்கம் என்னாமல் ஆக்ருதி என்பதும் ரஸம். 63 - வது சுலோகத்தில் பாஞ்சஜந்ய பரஸங்கம் பண்ணுவார்.

பித்தோபராகாதிவ பீதிமாநம் பித்த ஸம்பந்தத்தினுல் மஞ்சள் நிறத்தை என்று பொருள். பபார என்ற சொல்லுடன் சேர்க்கவேண்டும் மஞ்சள் நிறத்தை சுமந்து நின்றது என்று பொருள். பித்த த்ரவ்ய சேர்க்கையால் என்ருர் தீக்ஷிதர் பித்தம் பரவினதால் என்ருர் டிப்பணியில். உபராகம் என்பது இங்கு அழகான சொல். ராகுவினுலும் கேதுவினுலும் உபராகம் சந்திர பிம்பத்துக்கு ஸஹஜம். அதுவேபோல் பித்தத்தால் ஏற்பட்ட உபராகம் என்பது ரஸம். இது புண்யகால உபராகமல்ல. உபராகம் போலே என்கிருர். இவ என்பதை பபார இவ. என்று கொள்ளலாம் பித்தேந பாஞ்சஜந்யம் பீதம் பச்யந் பிஷஜ்யதி கிம் என்று நீவியில் சாதித்தார். தார்கிக ப்ரக்ரியையால் இவ்வாறு கூறியபடி என்பர் தீக்ஷிதர். பித்தரோகம் இல்லே என்பதையும் கவனிக்க.

தோஷாவில ப்ரோஷித த்ருஷ்டிதத்தாத் தோஷா என்பது ராத்திரி என்ற பொருளுடையது. தோஷம் என்பதும் பொருள். இரவில் ஆவில-கலங்கின த்ருஷ்டி என்று ஒரு பொருள். கண் தோஷத்தினுல் கலங்கின த்ருஷ்டி என்றும் பொருள். அதனுல் ஏற்பட்டது. ப்ரோஷிதர்கள்-தமது மனேவியைப் பிரிந்து வெகுதூரத்தில் வசிப்பவர்கள். அவர்களுடைய கண்கள் ஆவிலமாயிருக்கும். இங்கு தீக்ஷிதர் ப்ரியா விரஹதுக்கோத்கத பாஷ்ப கலுஷா என்று விவரித்தார். மேலும் தோஷேண ப்ரமா ப்ரதிபந்தகேந விக்ருதா என்றும் ஆவிலா என்பதை விளக்கினுர், மேலும் दुष्ट लोचनानां पुंसां लोचन रश्मिभिः निर्गत्य विषयान् व्याप्नुवन्तः पित्त द्रव्यस्य पीतिम्ना अवकुण्ठनात् तेषु पीतिमभ्रमः इति तार्किक प्रक्रियया हेतूत्प्रेक्षा என்றும் விவரித்தார். ஆதலால் த்ருஷ்டிதத்தாத் என்பதற்கு பார்வையால் வைக்கப்பட்டது என்று பொருள், அத்புதமான உத்ப்ரேக்ஷை.

कृशोदरीलोचनकृष्णलक्ष्मा
रात्र्याः समिद्धोदयराग इन्दुः ।
कस्तूरिकाकुङ्कुमचित्रितात्मा
कर्पूरविन्यास इवान्वभावि ॥ ६१ ॥

க்ருசோதரீ லோசந க்ருஷ்ணலக்ஷ்மா
ராத்ர்யா ஸ் ஸமித்தோதயராக இந்து:
கஸ்தூரிகா குங்கும சித்ரிதாத்மா
கர்பூர விந்யாஸ இவாவந்வபாவி (61)

(கருத்து): மெல்லிய இடையுடைய மங்கைகளின் கண்கள் போல் கறுத்து இருப்பதையே அடையாளமாகக் கொண்டவனும், உதய காலத்தில் ஒரு விதமான சிகப்பு நிறமுடையவனுமான சந்திரன் கஸ்தூரியும் குங்குமமும் இழைத்து ராத்ரி என்கிற பெண்ணுக்கு இடப்பட்ட கர்பூரதிலகம் போல் காட்சியளித்தான்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் சந்திர பிம்பம் மஞ்சள் நிறமாகக் காணப்படுவதைச் சுட்டிக் காட்டினுர். இங்கு கொஞ்சம் சிவந்து தோன்றும் சந்திரனே வர்ணிக்கிருர். முன்பு உபராகம் என்ருர். இங்கு உதயராகம் என்பர்.

க்ருசோதரீ லோசந க்ருஷ்ண லக்ஷ்மா க்ருசோதரிகள் என்பது பெண்டிரை. ஸாமுத்ரிகாலக்ஷணம் அவ்வாறு கூறும். மஹோதரீ என்று சூர்பணகையை பரிஹஸித்தார் வான்மீகி. சிறு மருங்குல் என்பர். க்ருசோதரீ கார்ச்யமதீத்ய என்று முன்பும் தேவகியை குறித்தார். அத்தகைய பெண்டிரின் கண்கள் கறுத்து இருக்கும். அதுவே

போல் கறுத்த அடையாளமுடையவன் என்று பொருள். அஞ்சன மிட்டபடியாலும் ஆகலாம். க்ருஷ்ணதாரை என்றே கூறுவர். கறு விழிகள் என்பதாம். அதுவே போல் கலங்கம் சந்திரனிடம் தெளிவாகத் தெரிவதாம். இதற்கு முன் சுலோகத்தில் புருஷர்களுடைய கண்கள் தோஷா விலப்ரோஷிதத்ருஷ்டி என்றார். இங்கு பெண்களுடைய த்ருஷ்டி முற்றிலும் மாறுபட்டது என்பர். ஆழிமழைக் கண்ணு என்ற விடத்து வருணனை. அழைக்கும் போதும் கண்ணு என்றவள் சுவட்டில் செல்லும் ஸ்வாமி இங்கு க்ருஷ்ண லக்ஷ்மா என்பர் போலும். தனது வம்சத்திலே க்ருஷ்ணனையே அடையாளமாகப் பெற்ற பெருமை சந்திரனுக்கே சேரும் என்றும் கொள்ளலாம்.

ராத்ர்யா: ஸமித்தோதயராக இந்து: இரவு என்கிற பெண்ணிற்கு. இதுமேலே சேரும். உதய காலத்தில் ஒரு வகையான சிகப்பு நிறம் புஷ்டமாயிருக்கும். ஸமித்தம் தெளிவாகத் தோன்றுவது என்பதாம். ஸமித்தே ஹவ்ய வாஹநே என்பது போலாம். முன்பு உபராகம் என்றார். அது குறை. இங்கு உதயராகம் என்பது புஷ்டி என்பதாம். இந்து: சந்திரன். ஸ்வாமி உகந்த சொல். இந்து பிம்பம் என்றார் முன் ச்லோகத்தில் இங்கு சந்திரன் என்றே கூறுவார். ப்ராச்யாம் திசி இந்து ரிவ என்றார் ஸ்ரீசுகரும், தாராபிநந்த்யா தநு: ஐந்தவீவ என்றும் குறிப்பிடுவர்.

கஸ்தூரிகா குங்கும சித்ரிதாத்மா கஸ்தூரி குங்குமம் ஆகிய இரண்டும் சேர்த்து விசித்திரமாக அமைந்தது என்றபடி. கஸ்தூரியின் நிறம் கறுப்பு அதுவே சந்திரனின் கறுப்புக் கோடுகளான கலங்கம், குங்குமம்-உதய காலத்தில் ஏற்படும் சிகப்பு நிறம்.

கர்பூர விந்யாஸ இவ அந்வபாவி கர்பூரத்தினால் ஆன திலகம் இட்டது போல் அனுபவிக்கப் பெற்றான் என்றபடி. சந்திரன் வெளுப்பான கர்பூரமானான். சந்திரனுடைய கலங்கம் கஸ்தூரியாயிற்று, அவனுடைய சிகப்பு நிறம் குங்கும மாயிற்று இத்தகைய சந்திரனைத் திலகமாகப் பெற்ற பெண்ணாகத் திகழ்கிறாள் ராத்ரி என்கிற மங்கை. இக்காலத்திலும் பலவர்ணத்தில் திலகம் இடுபவர்களையும் பார்க்கிறோம். இரவு கறுப்பு நிறப் பெண்ணானபடியால் வெள்ளைத் திலகம் இடுவாள் போலும் கறுப்பு சாந்தாகலாம்—இவ்வாறு சந்திரன் அனுபவிக்கப் பெற்றான் என்பர். ரஸிகர்களால் அல்லது தன்னால் என்றும் கொள்ளலாம்.

प्रसादं अन्तःकरणस्य दाता
प्रत्यक्षयन् विश्वमिदं प्रकाशैः ।
तमश्च रागंच विधूय चन्द्रः
संमोदनं सत्वमिवोल्ललास ॥ ६२ ॥

ப்ரஸாதம் அந்தக்கரணஸ்ய தாதா
ப்ரத்யக்ஷயந் விச்வமிதம் ப்ரகாசை:
தமஸ்ச ராகஞ்ச விதூய சந்த்ர:
ஸம்மோதநம் ஸத்வமிவோல்லலாஸ (62)

(கருத்து) மனதில் ஒரு வகையான தெளிவைத் தருபவன் சந்திரன். தனது ஒளிகளால் இவ்வுலகையே காணுறச் செய்து கொண்டு இருளையும், ராகத்தையும் உதறிவிட்டு நல்லவர்களுக்கு மகிழ்ச்சிதரும் ஸத்வம் போல் விளங்கினான்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் சந்திரன் இரவெனும் பெண்ணுக்கு திலகமாகத் திகழ்ந்தான் என்றார். அங்கு சிகப்பும் கறுப்பும் கலந்த நிலை. இங்கு நல்ல வெளுப்பான நிலையை அழகாக வர்ணிக்கிறார்.

ப்ரஸாதம் அந்தஃ கரணஸ்ய தாதா தாதா-அளிப்பவன். அதுவே அவனுக்குப் பெயருமாகும். அந்தக் கரணஸ்ய மனதினுடைய ப்ரஸாதம் தெளிவை என்று பொருள். மனதில் தெளிவை மகிழ்ச்சியை அளிக்கிறவனாய் என்று கருத்து. தான் ப்ரஸன்னனானால் தான் பிறருக்கு ப்ரஸாதத்தை அளிக்க இயலும். ப்ரஸாதஸ்ய என்று ஷஷ்டீ விபக்தி வரவில்லை. ந லோகாவ்யய என்ற விதியின் படி த்விதீயை தான் வரும். மனதிலே தோன்றியவன் சந்திரன். சந்த்ரமா மநஸோ ஜாத: என்று ஸூக்தம் கூறியது. தெளிவான மனதில் தோன்றியபடியால் தெளிவைத் தருவான் போலும். மந: ப்ரஸாதம் மானஸதபஸ் என்றும், அது ஸத்வத்தின் கார்யம் என்றும் கீதை கூறும். ப்ர்ஹ்லாதநாச் சந்த்ர: என்றான் காளிதாஸன்.

ப்ரத்யக்ஷயந் விச்வமிதம் ப்ரகாசை: இந்த உலகினை தனது ஒளிகளால் எல்லோரும் கண்டு களிக்கச் செய்வான். சந்திரோதயம் ஏற்பட்ட பிறகே உலகம் தெள்ளியதாய் விளங்கும்.

தமஸ்ச ராகஞ்ச விதூய சந்த்ர: இருளையும்-சிவந்த நிறத்தையும் உதறித் தள்ளிய சந்திரன் என்று பொருள். இங்கு முன் ச்லோகத்தில் கூறிய இரண்டு நிறங்களையும் நீக்கிய நிலையை கூறுவதாம். ஸத்வம் வ்ருத்தியடைந்தால் தமோகுணமும் ரஜோகுணமும் தானே விலகிவிடும்.

ஸம்மோதநம் ஸத்வமிவ உல்லலாஸ ஆனந்தத்தை அளிக்கும் ஸத்வகுணம் போல் விளங்கினான் என்று பொருள். சந்திரன் நல்ல வெளுப்பாக இருந்த நிலை

இது. ஸந்மோதநம் என்றும் பாடம். அப்பொழுது ஸத்துக்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாய் என்று பொருள். அன்றியும் ஸத்துக்கள் என்பதற்கு நக்ஷத்திரங்கள் என்று பொருள். சந்திரன் நன்றாகத் தோன்றியதும் நக்ஷத்திரங்கள் அளவில்லா மகிழ்ச்சியை அடைந்தன என்பதாம். ஸத்வாத் ஸஞ்ஜாயதே க்ஞானம் என்பதற்குச் சேர, வ்ருத்தியடைந்த ஸத்வம் விச்வத்தை தனது க்ஞானத்தாலே ப்ரகாசங்களாலே காணச் செய்வது என்றபடியாம். ஸத்புருஷர்களுக்கு இஷ்டம் ஸத்வம் என்றும் டிப்பணியில் குறிப்பிட்டார்.

निशाकरो वारिधिनिःस्वनानां
निष्पादकः कुन्दरुचिश्चकाशे ।
उदेष्यतः चक्रभृतो नियोगात्
प्रादुर्भवन् प्रागिव पाञ्चजन्यः ॥ ६३ ॥

நிசாகரோ வாரிதி நிஸ்வநாநாம்
நிஷ்பாதக: குந்தருசிஸ் சகாசே
உதேஷ்யதஸ் சக்ரப்ருதோ நியோகாத்
ப்ராதுர்பவந் ப்ராகிவ பாஞ்சஜந்ய: (63)

(கருத்து) கடலில் ஓசை கிளம்புகின்றது. அது சந்திரனின் உதயத்தால் ஏற்பட்டது. சந்திரன் தானே இதை உண்டு பண்ணியவன்! இத்தகைய நிசாகரன் குருக்கத்திப்பூ போல் விளங்கினான். சக்ரதாரி பிறக்கப் போகிறான். அவனுடைய ஆணையினால் பாஞ்சஜன்யம் முன்கூட்டியே பிறந்தது போல் இருந்தது.

(விரிவுரை) 60வது சுலோகத்தில் சங்கின் வடி வொத்த வடிவுடையது சந்திரபிம்பம் என்றார். இங்கு சந்திரன் பாஞ்சஜன்யமாகவே இருக்குமே என்பர்.

நிசாகரோ வாரிதி நிஸ்வநாநாம் நிசாகரன், சந்திரன், அவன் உதயமாகும் பொழுது கடலில் ஓசையும் உண்டாகும். கம்பீர ஓசைகள் என்கிறார். இது நிஷ்பாதக: என்பதோடு சேரும். நிசாகரன் நிஸ்வனத்துக்கு நிஷ் பாதகன் என்ற சொல்லமைப்பு அழகு.

நிஷ்பாதகஃ குந்தருசிஃ சகாசே குந்தம் என்பது குருக்கத்திப் பூவை. அது வெண்மையானது. அதனுடைய ஒளி போல் ஒளி பெற்றிருந்தான் சந்திரன் என்பதாம். குந்த சப்தத்திற்கு முராரி என்றும் பொருள் உண்டு, அவனிடத்தில் ருசி-பக்தி. அபிருசியுடையது என்றும் கூறியபடியாம். குந்தன் முகுந்தன் என்றார் தீக்ஷிதர். முஞ்ச குஞ்ச ததாதி என்று முகுந்த சப்தத்திற்கு நிர் வசனம் உண்டு. இங்கு கும் ததாதி இதி முகுந்த: என்பது குறிப்பில் கொள்ள அமையும். இவ்வாறு ஸமுத்ர கோஷங் களைச் செய்பவனான சந்திரன் பாஞ்சஜன்யம் போல் விளங் கினான்.

உதேஷ்யதஃ சக்ரப்ருதோ நியோகாத் பிறக்கப் போகின்ற சக்ரதாரியின் ஆணையினால் என்பதாம். பல சக்ரங்களை பரிப்பவன் என்றும் கொள்ளலாம். சங்க சக்ரதாரி இவன். சங்கசுதார்யுதாயுதம் என்றார் சுகர். இப்பொழுது இவன் சக்ரதாரியாகப் பிறக்கப் போகிறான் என்பதை அறிந்து கொண்டு ஞானஸாரமானதும் ஸாரக்ஞமானதுமான சங்கம் முன்னமே தோன்றி விட்டது. நித்யயோகத்தையுடைய சங்கம் இப்படி பிரிந்து முன்னம் வரலாமோ என்றால் அதற்கு விடையாக நியோகாத் என்கிறார். அதுவும் அவனுடைய ஆக்ஞையே. நீ முன்னே போய் தோன்றுவாயாக என்றால் ஆக்ஞா

பாலனம் செய்வது சங்கத்தின் ஸ்வரூபம் ஆம். **உதேஷ்யத:** என்பதால் கர்ப்பத்திலிருந்தும் நியமிப்பன போலும்.

ப்ராதுர்பவந் ப்ராகிவ பாஞ்சஜந்யஃ முன்னமே தோன்றும் பாஞ்சஜந்யம் போல் என்று பொருள். ப்ராக் ப்ராதுர்பவந் பாஞ்சஜந்ய இவ நிசாகர: சகாசே என்று அந்வயம் பகவானுடைய ப்ராதுர் பாவத்திற்கு முன்னமே என்று பொருத்தினார் தீக்ஷிதர். கண்ணன் கிழக்கு திக்கில் தோன்றிய சந்திரன் போல் ஆவிராஸீத்-தோன்றினான் என்றார் ஸ்ரீசுகர். ஸ்வாமி அவனுடைய கையில் உள்ள பாஞ்சஜந்யம் போல் சந்திரன் தோன்றினான் என்பர். பாஞ்சஜந்யம் ஒலித்த வண்ணமேயிருக்கும். கடலும் அவ்வாறேயாம். கடலில் பிறந்தவன் பாஞ்சஜந்யன் என்ற நிலையும் உள்ளது, அந்த பாஞ்சஜந்யன் என்ற நிலையும் உள்ளது, அந்த பாஞ்சஜந்யத்தை கண்ணன் தேடி எடுத்ததாக கதையுண்டு. அவ்வாறின்றி நியோகாத் என்பது ரஸம். நித்ய யோகமுடைய பாஞ்சஜந்யம் நியோ கத்தினால் முன்னம் தோன்றியது என்பதும் ரஸம். பாஞ்ச ஜந்யம் என்பது கண்ணனுக்கே உரியது, பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேச: என்று கீதை கூறியது, ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன பாலன்னவண்ணத்து உன் பாஞ்ச சந்நியமே போல்வன என்றார் நாச்சியார். தம் பாஞ்ச ஜந்யம் சசிகோடி சுப்ரம் என்பர். இப்பொழுது சந்திரனை வர்ணிப்பதால் பாஞ்சஜந்யத்தையே உபமானமாக்கி அருளிச்செய்கிறார் இங்கு. அழகான உத்ப்ரேக்ஷை.

मृगेण निष्पन्नमृगाजिनश्रीः
स्वपादविक्षेपमितान्तरिक्षः ।
मुरद्विषो वामनमूर्तिभाजः
पर्यायतामन्वगमत् शशाङ्कः ॥ ६४ ॥

ம்ருகேண நிஷ்பந்ந ம்ருகாஜிநஸ்ரீ :
ஸ்வபாத விக்ஷேப மிதாந்தரிக்ஷ :
முரத்விஷோ வாமநமூர்த்திபாஜ :
பர்யாயதா மந்வகமத் சசாங்க : (64)

(கருத்து) ம்ருகம் சந்திரனில் உள்ளது. அது க்ருஷ்ணாஜினத்தின் சோபையை அளிப்பதாய் அமைந்து விட்டது. தனது கிரணங்கள் எங்கும் படுவதால் ஆகாசம் முழுவதுமே நிறைத்து விட்டது. முராரி வாமனனாய் தோன்றிய பொழுது அவர் ஏற்ற நிலைகளைப் பெற்று விட்டதால் சந்திரனும் வாமன ஸாத்ருச்யத்தை அடைவான் போலும்.

(விரிவுரை) இதற்கு முன் ச்லோகத்தில் சந்திரன் பாஞ்சஜன்யம் போல் விளங்கினான் என்றார். இங்கு அந்த சக்ரதாரியின் ஸாத்ருச்யமே ஸமத்வமே தோன்றும் என்று கூறுகிறார். எங்கும் ச்லேஷையில் ரஸம்.

ம்ருகேண நிஷ்பந்ந ம்ருகாஜிநஸ்ரீ : சந்திரனில் ஒரு வகையான கறுப்பு தென்படுகிறது. இது பார்ப்பதற்கு முயல் வடிவமாக இருக்கும். ஆதலால் சந்திரனை சசாங்கன் என்றழைப்பர். இதை கடைசி சொல்லில் காண்பிக்கிறார். அந்த ம்ருகம் போர்வைபோல் அமைந்திருக்கும். இது கறுப்பாய் இருப்பதால் க்ருஷ்ண - அஜினமாகத் தோன்றுகிறது. சசம் என்பது முயலை, அதுவும் வெளுப்பாயிருக்கும். ஆயினும் சந்திரனின் காந்தியில் அது கறுப்பு நிற நிலையை அடையும் போலும். நோக்கும் பொழுது க்ருஷ்ணாஜினத்தை மார்பில் போர்த்தி யிருப்பது போல் தோன்றும். ஆதலால் அந்த ம்ருகமே ம்ருகாஜி நச்ரீயை சோபையை உண்டு பண்ணியது என்பதாம். வாமனனும் க்ருஷ்ணாஜினம் தரித்தே யக்ஞவாடத்தில் தோன்றியது.

ஸ்வபாத விக்ஷேப மிதாந்தரிக்ஷ : தனது காலடி வைப்பினால் அளக்கப்பட்ட ஆகாசாவகாசத்தை யுடையவனானன். சந்திரனும் ஆகாசத்தில் அடி வைத்த பொழுதே ஆகாசம் முழுவதையுமே வ்யாபித்து விட்டான். திருவடி படாத இடம் இல்லை என்பது போல் சந்திரனுடைய கிரணம் படாத இடம் இல்லை என்றபடியாம்.

முரத்விஷோ வாமந மூர்த்தி பாஜ : முரனைக் கொன்று முராரி என்று பெயர் பெற்றான். அவனே வாமனனானன். அப்பொழுது ஏற்பட்ட இரண்டு நிலைகள் சந்திரனுக்கும் ஒத்திருக்கும் என்கிறார். முதல் நிலை க்ருஷ்ண ஜிநத்துடன் ஸேவை. இரண்டாவது நிலை ஆகாசத்தை அளந்து நின்றது. இவ்வவதாரத்தில் ஸம்பாதித்த திரு நாமம் முராரி என்பது என்பதையும் நினைக்க.

பர்யாயதாம் அந்வகமத் சசாங்க: ஸாத்ருச்யத்தை சந்திரன் அடைந்து விட்டான் என்பதாம். சந்திரோதய வர்ணனப்ர கரணமானதால் ஒவ்வொரு சிறு நிலைகளையும் ஸ்வாமி அழகாக வர்ணிக்கிறார். க்ருஷ்ணாவதாரத்திற்கும் வாமனாவதாரத்திற்கும் நெறுங்கிய ஒற்றுமை உளது என்பர். பொதுவாக கிரணங்களை கரங்கள் என்பர். இந்த ச்லோகத்தில் அவற்றை பாதமாக வர்ணிப்பது உற்று நோக்கத் தக்கது.

जिगाय शंखाश्रितशैवलाभः
चारुद्युतेश्चन्द्रमसः कलङ्कः ।
उदीयमानस्य महोर्मियोगात्
सामिच्युतं सागरमूलपङ्कम् ॥ ६५ ॥

ஜிகாய சங்காச்ரிதசைவலாப:
சாருத்யுதேஸ் சந்த்ரமஸ; கலங்க:
உதீயமாநஸ்ய மஹோர்மி யோகாத்
ஸாமிச்யுதம் ஸாகரமூலபங்கம், 65

(கருத்து) சந்திரன் எவ்வளவு ஒளியுடன் இருக்கிறான் அவன் உதயமாகும்பொழுது கலங்கத்துடனேயே தோன்றுகிறான். சந்திரனை சங்கெனக் கூறினார் முன்பு. இப்பொழுது கலங்கத்துடன் கூடிய சந்திரன் பாசையுடன் கூடிய சங்கம் போல் உளன் என்கிறார். மேலும் களங்கத்தை ஒரு விதத்திலும் அழிக்க முடியவில்லை. எவ்வளவு அலைகளைக் கொண்டு கழுவினாலும் அதைப் போக்க இயலவில்லை. சங்கத்தில் பாசை என்பது போல் மட்டுமில்லாமல் சந்திரனுக்கே இந்த யோகம். பாதாளத்திலிருந்து உண்டான சந்திரன் மீது சேறு படிந்து விட்டது. எந்த அலைகளும் அதை ஒழிக்க முடியவில்லை. பாதி சேறே ஒழிந்தது. அம்மிகுதி வெற்றியோடு விளங்குகிறது என்பதாம்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் சசாங்கன் என்பதைப் பெருமையுடன் கூறி, சசாங்கம் என்றில்லையானாலும், அது கலங்கமென்று கொண்டாலும் அதன் தோற்றம் வெற்றித் தோற்றமல்லவோ என்று இங்கு கூறுகிறார். வாமன மூர்த்தி ஸாம்யம் முன் சுலோகத்தில். அங்கு யாசகம் பண்ணியது கலங்கம் போல் இருந்தாலும் அது குற்றமாகப் படவில்லையே! அம்மாதிரியே சந்திரனின் கலங்கமும் என்பர் போலும்.

ஜிகாய சங்காச்ரித சைவலாப: சங்கில் படிந்த பாசை போன்ற தோற்றமுடையது வென்று விட்டது என்று பொருள். பாசையில் சங்கம் என்னுமல், சங்கில் பாசை என்பது ரஸம். இங்கு ஆச்ரிதசப்தம் மிக மிகப் பொருத்தம், பாசை சுற்றிக் கொண்டு விட்டாலும்

படிந்து விட்டாலும் அது அகலுவது மிகவும் கடினம், வெள்ளைத்துணியில் கறும் புள்ளியாக இருக்கலாம். சங்கம் என்கிற சொல்லுக்கு அசுபத்தை சமனம் பண்ணும் கருவி என்று பொருள். இது கலங்கம் என்பதற்கு விசேஷணம் ஆபம் (பு:) என்பதற்கு காந்தி என்றும் போன்று என்றும் ஸமமான என்றும் பொருள்.

சாருத்யுதே: சந்த்ரமஸ: கலங்க: அழகான ஒளியையுடைய சந்திரனின் கலங்கம் என்று பொருள், சாரு அழகான-விரும்பத்தக்கதான என்பதாம். சரதி சித்தே என்ற வ்யுத்பத்தியினால் சாரு என்ற சொல் அமைந்தது. சூரியனுக்கு த்யுதி அதிகம். அது சாரு அல்ல. சாருத்யுதியானதால் தான் கலங்கமும் தென்படுகிறது, சங்கத்திற்கு பாசை போலே சந்திரனுக்கு கலங்கம் என்றபடி. இந்த கலங்கம் எத்தகையதாயிருக்கும் என்பதை மேல் பாகத்தினால் வர்ணிக்கிறார்.

உதீயமாநஸ்ய மஹோர்மி யோகாத் உண்டாகிக் கொண்டிருக்கும் பொழுது பேரலைகளின் சேர்க்கையால் என்று பொருள். பாதாளத்திலிருந்து ஸமுத்ர ரந்திரத்தின் வழியாக வெளி வருகின்ற என்றார் தீக்ஷிதர். ஒரு சிறிய அலையினாலேயே கலைந்து விடும் சேறு அவ்வாறு கலைய வில்லையே என்று ஆச்சரியப்படுகிறார். மஹோர்மிகள் ஏற்பட்டதே ஒரு யோகம். அந்த யோகம் மட்டும் வீணாகவும் இல்லை. பகவத் விஷயத்தில் போலே பூரணமாகப் பலிக்கவும் இல்லை (அலசி அலசியும் அழுக்கு அகலவில்லை).

ஸாமிச்யுதம் ஸாகரமூலபங்கம் பாதி விழுந்து விட்டதால் ஸமுத்திரத்தின் அடிச்சேறு என்று பொருள். இது ஜிகாய என்பதுடன் சேரும். ஸாகரத்தின் அடித்தளத்தில் இருந்த சேறு என்று பொருள். ஸாமி என்பதற்குப் பாதி என்று பொருள் ச்யுதம் – கழிந்தது அல்லது நழுவியது.

ஸாமி ச்யுதம் மூலபங்கம் ஜிகாய என்று விவரித்தார் தீக்ஷிதர். இங்கு கவனிக்க வேண்டும். மஹோர்மிகளாலும் பாதி தான் அழிக்க முடிந்தது, பாதி அழிக்க முடியவில்லை யாதலால் அலைகள் தோல்வியுற்றன. தன்னைப் பூரணமாக அழிக்க முடியாமல் அலைகள் தோற்று விட்டதால் சேறு பாதி தங்கி வெற்றி பெற்றது, ச்யுதமானது மறைந்து விடும். இங்கு வர்ணிக்க இயலாது. அச்யுதமானால் ஜயம். ஸாமி ச்யுதமானால் அதுவும் ஜயமே. ஏனெனில் இது ஸாகர மூலபங்கம் ஆதலால் மூலதோ ஹாநி ஏற்பட வில்லை. சந்திரனிடம் ஒட்டியது அழியவில்லை. அதுவே அதற்கு வெற்றியாம். ஸாகரமூலபங்கம் தான் கலங்கம் என்று வேறு யாரும் கூறவில்லையே! என்று வியக்கிறார் தீக்ஷிதர். அன்றியும் தனது குவலயாநந்தம் என்ற அலங்கார க்ரந்தத்தில் ஸ்வாமியின் உத்ப்ரேக்ஷையை விகல்பித்து ஜலநிதே: பங்கம் பரே மேநிரே என்று அழகு படுத்திப் பேசுகிறார்.

उदेत्य तुङ्गात् उदयाद्रिशृंगात्
तमोगजान् अग्रकरेण निघ्नन् ।
निशाकरस्तन्मदलेपलक्ष्मा
सिताभिशुः सिंहदशामयासीत ॥ ६६ ॥

உதேத்ய துங்காத் உதயாத்ரி ச்ருங்காத்
தமோகஜாந் அக்ர கரேண நிக்நந்
நிசாகரஸ் தந்மத லேப லக்ஷ்மா
ஸிதாபிசு: ஸிம்ஹதசாம் அயாஸீத் **66**

(கருத்து) உதயமலையின் உன்னதமான சிகரத்தை அடைந்த சந்திரன் தனது கிரணங்களைப் பரப்பி இருளாகிற யானைகளை அழிக்கலானான். அந்த யானைகளின் மத ஜலமானது சந்திரன் மீது அழியாத வகையில் பதிந்து விட்டது. ஆனால் அவன் வெண்மையுடை யொளியுடைச் சிங்கம் என்ற நிலையை அடைந்து விட்டான் என்பதாம்.

(விரிவுரை) முந்திய சுலோகத்தில் களங்கம் பெற்றமையையும் அது பெருமையாகவே அமைந்து விட்டதையும் கூறினார். இந்த சுலோகத்தில் சந்திரன் ஓர் வகையான சிங்கத் தன்மையையும் அடைந்து விட்டான் என்கிறார்.

உதேத்ய துங்காத் உதயாத்ரி ச்ருங்காத் உயர்ந்த தான உதயமலையின் சிகரத்திலிருந்து தோன்றி என்று பொருள். கிழக்கில் உள்ள மலை உதயமலை, மேற்கில் உள்ளது அஸ்தமந மலை என்பது ப்ரஸித்தம். சூரியனுடைய உதயாஸ்தமயங்கள் தான் நியதம். சந்திரனுக்கு அவ்வாறு சொல்ல இயலாது. பௌர்ணமி தொடக்கமாக க்ருஷ்ணபக்ஷத்தில் சந்திரன் கிழக்கில் தான் உதயம். சுக்லபக்ஷத்தில் மேற்கில் தான் தோற்றம். படிப்படியாக வளர்ந்து பூரண சந்திரனாகும் பொழுது கிழக்கில் தான் உதயம். ப்ரக்ருதம் க்ருஷ்ணபக்ஷமான படியால் இது பொருந்தும். சந்திரனுக்கும் உதயாத்ரி யாயிற்று போலும். சிங்கமும் சிகரத்தில் ஏறி தான் வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்படும். குடத்தில் ஏற்றி வைத்த விளக்கு போல் ஆகக் கூடாது, மாடங்களில் ஏற்றியது தான் எல்லா இடங்களையும் ஒளி பெறச் செய்யும். அதுவே போல் உலகில் உள்ள இருளனைத்தும் போக்க சந்திரன் உன்னத மான உதயமலையின் சிகரத்தில் ஏறினான் என்கிறார்.

தமோகஜாந் அக்ரகரேண நிக்நந் இருளாகிற யானைகளைத் தனது நுணிக் கரங்களால் அழிப்பதாய்

என்று பொருள். இருளை யானைகளாக நிரூபணம் பண்ணுகிறார். நிறம் ஒத்திருக்கும். சிலர் எருமைகளையும் இருளோடு இணைப்பர். யானைகளைத் துரத்துவது மிகவும் கடினம். அதை அங்குல்யக்ரேண என்னுமாப்போலே அநாயாஸமாகச் செய்யுமவை என்பதாம். அக்ரம் சாஸௌ கரஸ்ச என்று ஸமநாதிகரண ஸமாஸம் பண்ணினார் தீக்ஷிதர். கராக்ரம் என்று ஷஷ்டீ தத்புருஷம் போல் அல்ல என்பர். ஹஸ்தாக்ரம்-அக்ரஹஸ்தம என்னுமாப் போலே என்றார். இங்கு குண குணிகளுக்கு அபேதம். அவயவ அவயவிகளுக்கு அபேதம் என்று வாமனரை ப்ரமாணமாக காண்பித்தார். கரம் என்பதற்கு கிரணம் என்றும் கை என்றும் பொருள். யானையின் தும்பிக்கைக்கும் இப்பெயர் உண்டு. கஜங்களுக்கு அக்ரத்தில் கரம் இருந்தாலும் சிங்கம் பின்னே பாய்ந்து யானைகளைக் கொல்லும் என்பது ப்ரஸித்தி. சிங்கத்தின் முன் கால்கள் கைகளாக மாறிப் பிளந்து விடும் போலும்.

நிசாகரஸ் தந்மதலேப லக்ஷ்மா சந்திரன் அவ்விருளின் நிறம் பூசப்பட்டவனாகவிட்டான். அது அடையாளமாகவே ஆகிவிட்டபடியாம். கலங்கத்தைக் குறித்தபடி. இங்கு கவனிக்க வேண்டியதொன்று. முன் ச்லோகத்தில் சந்த்ரமஸ் என்றார். இங்கு நிசாகரன் என்கிறார். நிசையை செய்பவன் என்று பொருள். இப்பொழுது அவன் நிசாகாதகனாகிறான். அந்த நிசை அவன் மீது கறி பூசிவிட்டது போலும்.

ஸிதாபிசுः ஸிம்ஹதசாம் அயாஸீத் வெளுத்த கிரணமுடையவன் ஸிம்ஹத்தின் தன்மையை பெற்று விட்டான் என்று பொருள். இது சந்திரனுக்கு விசேஷணம். வெளுத்த சிங்கம் என்றும் டிப்பணியில் விவரித்தார். வெளுப்பான சிங்கத்தைக் கண்டதில்லை. ஆதலால் கறுப்பு நிறம் கலந்தது அனுகூலமாயிற்று போலும். அபிசு: என்பதற்கு கிரணம் என்று பொருள் காந்தியென்

பதாம். அபிசு: அபீசு: என்று இரண்டு விதமும் உண்டு. வன்மிக - வன்மீகவத் என்றார் தீக்ஷிதர். அபீசூநாம் மஹிமானம் என்பது ஸ்வஸ்தி வாசனம்-ஸித-அபிசு: என்பதற்கு வெளுத்தது என்னாமல் சுப்ரமயூக: என்றார். கலங்கத்தினால் வெண்மை தூய்மை குறையவில்லை என்பதாம்.

निशीथलक्ष्म्या इव पुण्डरीकं
निर्वेशसिन्धोरिव फेनचक्रम् ।
तमन्ववैक्षन्त विलासतन्त्राः
तारामणीनामिव सूतिशुक्तिम् ॥ ६७ ॥

**நிசீத லக்ஷ்ம்யா இவ புண்டரீகம்
நிர்வேச ஸிந்தோரிவ பேநசக்ரம்
தம் அந்வவைக்ஷந்த விலாஸ தந்த்ரா:
தாராமணீநாமிவ ஸூதி சுக்திம். (67)**

(கருத்து) அழகான அர்த்தராத்ரி என்ற லக்ஷ்மி கையில் விளங்கும் வெண் தாமரைப்பூவோ, ஆனந்தம் என்ற கடலின் நுரைக்குவியலோ நக்ஷத்திரங்களாகிற முத்துக்கள் பிறக்கும் முத்துச் சிப்பியோ என்று ரஸிகர்கள் அந்த சந்திரனை பலவாறு கண்டு ரஸித்தனர்.

(விரிவுரை) இதற்கு முந்திய சுலோகத்தில் நிசாகரனைச் சிங்கமாக வர்ணித்தார். இங்கு இப்படியும் வர்ணிக்கலாமோ என்று கேட்டுக்கொண்டு ரஸிகர்கள் எத்தனையோ விதமாக உல்லேகம் செய்வது ஸஹஜம் தானே என்று மூதலிப்பார்போலும். உல்லேகம் என்று ஒரு அலங்காரம் உண்டு. அதைக்கொண்டு அழகாக வர்ணிக்கிறார்.

நிசீத லக்ஷ்ம்யா இவ புண்டரீகம் இரவு எனும் லக்ஷ்மியின் கையில் வெண்டாமரை மலர்போல் என்று பொருள், நிசீதம் என்பதற்கு நள்ளிரவு எனப் பொருளுரைப்பர். பொதுவாக இரவு என்றும் கொள்ளலாம். நன்றாக உறங்கும் வேளை என்பதால் இப்பெயர் என்பர். நடுப்பகலில் தாபம் தவிர வேறில்லை நடு நிசியின் அழகு அலாதியானது. இயற்கையின் தோற்றம் தனித்தன்மையதாம். ஞானிகளும் ரஸிகர்களும் விழித்துக்கொள்ளும் காலம் என்னலாம். உடலுக்கினிய தென்றல் கண்களுக்கினிய வான்தோற்றம், உள்ளத்துக்கினிய போகங்கள், இதைகாட்டிலும் லக்ஷ்மி வேறு உண்டோ! ஆதலால் இரவை லக்ஷ்மீ என்று சொல்கிறார். லக்ஷ்மீ என்பதற்கு சோபை என்றும் பொருள். அந்த லக்ஷ்மிக்குத் தாமரைப் பூபோல் இருந்தான் சந்திரன் என்கிறார் லக்ஷ்மீ கையில் ஏந்தியது என்றும் கொள்ளலாம். பத்மஹஸ்தை என்பது அவளுக்கே அஸாதாரணமான திருநாமம். புண்டரீகம் என்று வெண்டாமரையைச் சொல்வது. லக்ஷ்மிக்குச் சிவந்த தாமரைதானே என்று நினைக்கலாம், ஸரஸ்வதிக்கும் பரிமுகனுக்கும்தானே வெள்ளைத் தாமரை! சந்திரன் வெள்ளையாயிருப்பதால் இது லக்ஷ்மி ஏந்தியது என்று எப்படிக் கூற இயலும்! இங்கு ஸகயில் ஏந்திய என்று கொண்டால் இக்கலக்கம் இங்கு புண்டரீகம் என்றே ஸ்வாமி கூறியது. புண்டரீகம் என்பதற்கு வெள்ளைக் குடை என்று பொருள். லக்ஷ்மிக்கு பிடிக்கப்பட்ட வெண் குடையாம் என்றும் கொள்ளலாம் பாண்டரஸ்ய ஆதபத்ரஸ்ய என்பர் சூரியனை சிவந்த பத்மம் என்றார் முன்பு, சந்திரனை வெள்ளைத் தாமரை என்பர். விஷ்ணுவாலயங்களில் வெண்குடையே தரிப்பது வழக்கம்.

நிர்வேச ஸிந்தோரிவ பேந சக்ரம்: ஆனந்தக் கடலில் எழுந்த நுரையின் குவியலோ என்று பொருள்.

நிர்வேச என்பதற்கு போகம் பூதி என்பதோடு விவாஹம் என்ற பொருளும் உண்டு. பொதுவாக இங்கு ஆனந்தாநுபவக் கடல் என்று கொண்டார் தீக்ஷிதர். அக்கடலில் தோன்றும் நுரையின் குவியல்போலே. கடல் எவ்வாறு இருப்பினும் நுரை வெளுப்பாகவே இருக்கும். நீலவானத்தில் சந்திரன் நீலக்கடலில் தோன்றும் வெள்ளை நுரைக் கட்டியாகத் திகழ்ந்தான் என்பது ரஸம்.

தமந்வவைக்ஷந்த விலாஸதந்த்ரா: மனோரஞ்ஜனமான சாஸ்திரம் வல்லவர்கள் இவ்வாறு உல்லேகம் செய்தனர் என்று பொருள். ஸாஹித்ய சாஸ்திரம் வல்லவர்கள் என்பதாம். உல்லாஸமாகப் பொழுதைப் போக்குவது போல் இவர்களின் போக்கு. எல்லா சாஸ்திரங்களும் ஒருங்கிணைந்து விளங்குவதுதான் ஸாஹித்யம். ஸர்வ சாஸ்த்ரார்த்த பாரிஷதம் ஹி ஸாஹித்யம் என்பர். ரஸிகர்கள் காமதந்த்ர ப்ரதானர்கள். அநு - அவ - ஐக்ஷந்த என்பதற்கு உத்ப்ரேக்ஷை என்று பொருள் உரைத்தார்.

தாராமணீநாமிவ ஸூதி சுக்திம்: நக்ஷத்திரங்களாகிற மணிகளை உண்டாக்கும் முத்துச்சிப்பிபோல் என்று பொருள். முத்துச்சிப்பி அர்த்த சந்திராகாரமுடையது, அதிலிருந்து உண்டான முத்துக்கள்போல் நக்ஷத்திரங்கள் விளங்குகின்றன என்பதாம். முத்துக்களும் ரத்தினங்களில் சேர்க்கப்பட்டுள்ளதால் தாராமணிகள் என்றது. இந்த ச்லோகத்தில் தாமரைப்பூ-நுரைக்குவியல்-முத்துச்சிப்பி என்று அசேதனமாகவே கருதப்பட்டது கவனிக்கத்தக்கது. முத்துச்சிப்பிக்கு முக்தி ப்ரஸூ: மௌக்திக ப்ரஸவா, முக்தா மாதா என்று வேறு பெயர்கள் உண்டு!

उदारतारागणबुद्बुदौघः
चन्द्रेण संपन्नसुधाप्रसूतिः ।
अशेषदृश्यामधिगम्य लक्ष्मीं
आलोकदुग्धोदधि राबभासे ॥ ६८ ॥

உதார தாராகண புத்புதௌக :
சந்த்ரேண ஸம்பந்ந ஸுதாப்ரஸூதி :
அசேஷத்ருச்யாம் அதிகம்ய லக்ஷ்மீம்
ஆலோக துக்தோததி ராபபாஸே. (68)

(கருத்து) சந்திரனின் ஒளி எங்கும் பரவிவிட்டது. அவ்வொளிப் பரப்பே பாற்கடலோ என்னலாம்படியிருந்தது. பாற்கடலின் தன்மைகள் பல இதில் காணப்பெற்றன. கடலெனில் குமிழிகள் இருக்கும். இங்கும் நக்ஷத்திரங்களின் கூட்டங்கள் அக்குமிழிகளாகத் தோன்றுகின்றன. அமுதம் தோன்றியது சந்திரனே அக்கடலில் தோன்றிய அமுதமென ஆனான். அங்கு கமலே பிறந்தாள் இங்கும் உலகெலாம் நேரிடையாகக் கண்டு களிக்கும் சோபை-அழகு-லக்ஷ்மி நிலைத்திருந்தது.

(விரிவுரை) இதற்கு முன் சந்திரனைப் பலர் பலவாறு உல்லேகம் செய்ததைக் கூறினார். இங்கு சந்திரனுடைய ப்ரகாசத்தின் பெருமையை வர்ணிக்கிறார்.

உதாரதாரா கண புத்புதௌக: பெரிய பெரிய நக்ஷத்திரங்களின் கூட்டங்கள் குமிழிகளாகத் தோன்றுகின்றன. உதார சப்தம் கொடுப்பவன்-பெரியவன் என்று இருபொருளை உடையது என்று அமரகோசம் கூறும். புத்புதம் என்பதற்கு நீர்க்குமிழிகள் என்று பொருள்.

ஆகாயத்தில் சந்திரனின் ஒளியான நிலவெனும் பாற்கடலிலே கிளம்பும் குமிழிகள்போல் நக்ஷத்திரங்கள் உள்ளன.

சந்த்ரேண ஸம்பந்ந ஸுதா ப்ரஸூதி: சந்திரனால் அமையப்பெற்ற அமுதப்பொதியின் தோற்றமாம். சந்திரனுக்கு ஸுதாகரன் என்று பெயருண்டு. அவ்வாறின்றி சந்திரனே ஸுதையாகத் தோற்றமளிக்கிறான் என்று ரஸம். [இதற்கு முன் சுலோகத்தில் ஸூதி என்றார். இங்கு ப்ரஸூதி என்பர். தேவகியின் ப்ரஸவகாலம் ஸமீபத்தில் உள்ளதால் இம்மாதிரி சொற்களைக்கொண்டு வர்ணனம் இடம் பெறும் போலும்]

அசேஷ த்ருச்யாம் அதிகம்ய லக்ஷ்மீம் அனைவரும் காணத்தக்கதான அழகினைப் பெற்று என்று பொருள். இங்கு லக்ஷ்மீ சப்தம் ஸ்வரஸம். திருப்பாற்கடலில் லக்ஷ்மியை அனைவரும் ஸேவித்ததில்லை, பச்யதாம் ஸர்வ தேவாநாம் யயௌ எனப்பட்டது. தேவர்கள் மட்டுமே சேவித்தனர். இங்கு அவ்வாறில்லை என்பதாம். அசேஷ சப்தம் அனைவருக்கும் என்று பொருளுடையது. த்ருச்யாம் காணத்தகுந்த குறிப்பிட்டுக் காணத்தக்க லக்ஷ்மி என்று கொள்ளவேண்டும். த்ருச்யாம்- அழகான என்றும் பொருள். விச்வரமணீயாம் என்று உரையிட்டார் தீக்ஷிதர் மேலும் பாற்கடலில் லக்ஷ்மி சேஷனுக்கே த்ருச்யமானாள். இங்கு அவ்வாறில்லை எனறும் கொள்ளலாம். சோபை என்று பொருளாயினும் லக்ஷ்மீ என்பது அழகு. முன் சலோகத்திலும் இதிலும் இவ்வாறு லக்ஷ்மீ பதவிந்யாஸம். வான்மீகியும் சந்திரனைக் குறிப்பிடுகையில் லக்ஷ்மீ:சந்த்ராத் அபேயாத் வா என்று ராமசந்திரனின் வசனமாக ப்ரயோகித்தபொழுது லக்ஷ்மீ: என்றே கூறினார்.

ஆலோக துக்தோதி ராபபாஸே ஆலோகம்-ஒளி-அதுவே பாற்கடல், அப்பாற்கடல் மிக மிக விளங்கியது.

ஆபா என்பதைக்கொண்டு ஆபபாஸே என்பர் போலும் அந்த பாற்கடல் யாராலும் பார்க்கவியலாதது. பிரமனும் தீரத்திலேயே நின்றுவிடுவர் அவ்வாறில்லை என்பதாம். ஆலோக என்பதற்கு சந்திர ப்ரகாசம் என்று உரையிட்டார் தீக்ஷிதர். ஆலோக ஸஹகாரம் இல்லையெனில் ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் உண்டாகாது. சந்த்ராலோகம், த்வந்யாலோகம் என்று விலாஸ தந்திரர்கள் நாமகரணமும் செய்வதுண்டு. அத்புதமான வர்ணனம்.

प्रकाशयन् विश्वमिदं यथावत्
चन्द्रोदयोद्दीपित सौम्यतारः ।
आसीन्निशीथो जगतः प्रभूतात्
अन्धस्य दैवादिव दृष्टिलाभः ॥ ६९ ॥

ப்ரகாசயந் விச்வமிதம் யதாவத்
சந்த்ரோதயோத்தீபித ஸௌம்யதார:
ஆஸீந் நிசீதோ ஜகத: ப்ரபூதாத்
அந்தஸ்ய தைவாதிவ த்ருஷ்டிலாப: (69)

(கருத்து) இரவு ஒளி பெற்று விளங்குகிறது. உலகத்தையே விளங்கச்செய்கிறது. சந்திரோதயத்தினால் மேலும் பளபளப்பு பெற்ற நக்ஷத்திரங்கள் உலகின் சிறத்ததொரு அத்ருஷ்டமே. குருடனுக்கு கண் பார்வை கிடைத்துவிட்டால் எப்படி இருக்கும்! அவ்வண்ணமே அந்த நள்ளிரவும் இருந்தது.

(விரிவுரை) நிலவினை பாற்கடலாகப் பாவித்து அதன் பெருமைகளைப் பகர்ந்தார். இரவு பெற்ற பேற்றினை இந்த சுலோகத்தில் விளக்குகிறார்.

ப்ரகாசயந் விச்வமிதம் யதாவத் இவ்வுலகினை உள்ளபடியே ப்ரகாச முறச் செய்வதாய் என்று பொருள். இது நிசீத: என்பதோடு சேரும். உலகை ப்ரகாசப் படுத்துவது சந்திரனுக்கோ சூரியனுக்கோ பொருத்தம். இரவுக்கு அந்நிலை ஏற்பட்டு விட்டதை வியந்து கூறுகிறார். இரவு எங்கும் பரவியது. ப்ரகாசமும் அப்படியே.

சந்த்ரோதயோத்தீபித ஸௌம்ய தார: சந்திரனுடைய உதயத்தினால் உந்தப்பட்ட அல்லது அழகுறச் செய்யப்பட்ட நக்ஷத்திரங்களையுடையதாய் என்று பொருள். இதுவும் நிசீத : என்பதற்கு விசேஷணம். ஸௌம்ய தார : - அழகான நக்ஷத்திரத்தையுடையதாய் என்று பொருள். தாரசப்தத்திற்கு கண்ணில் இருக்கும் கருவிழி என்றும் பொருள். இதை க்ருஷ்ணதாரை என்பர்.

ஆஸீத் நிசீத: ஜகத: ப்ரபூதாத் உலகின் சிறந்த பாக்யத்தினால் நிசீதம்-நள்ளிரவு இவ்வாறு ஆயிற்று. ப்ரபூதாத் என்பது மேல் வரும் தெய்வாத் என்பதுடன் சேரும்.

அந்தஸ்ய தெய்வாதிவ த்ருஷ்டிலாப : குருடனுக்கு அத்ருஷ்ட வசமாக கண் பார்வை கிடைத்தது போல் என்று பொருள். இங்கு குருடனுக்கு கிடைத்த லாபம் போல் என்பதை தீக்ஷிதர் இவ்வாறு விளக்குவர் :— சந்திரோதயம் என்ற மருந்தைப் பூசியதால் கண் மணியில் ஸௌம்யத்வம் ஏற்பட்டு விட்டது. கண்களுக்கு இயற்கையாக வரும் படலம் முதலான தோஷங்களால் எரிச்சல் முதலியன இல்லை என்பதை ஸௌம்ய பதம் குறிக்கும். சில புஸ்தகங்களில் உத்தரார்த்தம். - தெய்வாந் நிசீதோ ஜகத: ப்ரபூதாத் ஆஸீதி வாந்தஸ்ய ஸுத்ருஷ்டி லாப: என்று காணப்படுகிறது. சந்திரோதயத்திற்கு முன்பு நள்ளிரவு குருடனின் நிலையைப் பெற்றிருந்தது. இப்பொழுது அதுவே தாரைகளும் அழகாக இருக்க, சந்திரோதயம் ஏற்பட, உலகெல்லாம் விளக்கும்படி ஆயிற்று என்பதாம்.

विशोधितात् विष्णुपदात् क्षरन्ती
विष्वङ्मुखी सागरवृद्धिहेतोः ।
तमोमयीं सूर्यसुतां निगीर्य
ज्योत्स्ना नदी शोणमपि व्यमुञ्चत् ॥ ७० ॥

விசோதிதாத் விஷ்ணுபதாத் க்ஷரந்தீ
விஷ்வங்முகீ ஸாகர வ்ருத்தி ஹேதோ:
தமோமயீம் ஸூர்யஸுதாம் நிகீர்ய
ஜ்யோத்ஸ்நா நதீ சோணமபி வ்யமுஞ்சத் (70)

[கருத்து] : பிரமனால் பாத்யம் ஸமர்பித்து, சோதிக்கப் பெற்ற விஷ்ணுவின் திருவடியிலிருந்து பெருகுவதும். ஸாகரத்தை வ்ருத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடே ஸர்வதோ முகமாய் பாய்வதுமான நிலவெனும் ஆறு கறுப்பான யமுனையையும் விழுங்கிவிட்டு, சிகப்பு தன்மையையும் சோணத்தையும் விட்டு விட்டது.

[விரிவுரை] நிலவினால் நள்ளிரவுக்கு ஏற்பட்ட யோகத்தை முன் சுலோகத்தில் விளக்கினார். நிலவின் பெருமையை இங்கு ஆறாக அழகாக நிருபணம் பண்ணுகிறார்.

விசோதிதாத் விஷ்ணுபதாத் க்ஷரந்தீ துலக்கப்பட்ட ஆகாயத்திலிருந்து பெருகுவது என்று பொருள். இது ஜ்யோத்ஸ்நா நதீ என்பதோடு சேரும். விஷ்ணுபதம் என்பதற்கு ஆகாசம் என்று பொருள். ஆகாசம் இப்பொழுது நிர்மலமாக அதாவது சுத்தி செய்யப்பட்டது போல் உள்ளது. இருள் சூழ்ந்தால் அழுக்குடையது போலவும், வெளிச்சம் சேர்ந்தால் சுத்தம் செய்த வஸ்து போலவும் உள்ளது என்று எளிதில் அறியலாம்.

விஷ்ணுவின் பதம் - திருவடி என்றும் பொருள். பிரமன் விஷ்ணுவின் பதத்தில் பாத்யம் ஸமர்பித்து ஆராதித்தான். அதனால் சோதித்த திருவடியென்றதாயிற்று. கங்கை அங்கிருந்து தான் பெருகியது. தீக்ஷிதரும் शोधितात् चतुर्मुखेन क्षालितात् विष्णोः चरणात् என்று விவரித்தார்.

விஷ்வங்முகீ ஸாகர வ்ருத்தி ஹேதோ: ஸமுத்ரம் வ்ருத்தியடைய வேண்டுமென்பதற்காகவே அந்த நதி நான்கு பக்கங்களிலும் பாய்ந்தது. சந்திரனால் ஸாகரம் மகிழும். அலைகளும் அதிகமாகும்,

தமோமயீம் ஸூர்ய ஸுதாம் நிகீர்ய கறுப்பான ஸூரியன் மகளான யமுனையை விழுங்கி விட்டது என்பர்.

ஜ்யோத்ஸ்நா நதீ சோணமபி வ்யமுஞ்சத் : நிலவெனும் ஆறு சோணம் என்ற நதத்தையும் விட்டு விட்டது என்று பொருள். ஜ்யோத்ஸ்னை இருப்பதும் ஆகாயத்தில். கங்கை முதலில் பாய்ந்ததும் ஆகாயத்தில். ஆகாச கங்கை என்றே வ்யவஹரிப்பர். வெளுத்திருப்பதால் ஸத்வ மயமாகும். யமுனை கறுத்திருப்பதால் தமோமயம். சோணம் சிவந்திருப்பதால் ரஜோமயம். ஸத்வம் பாய்கிற பொழுது தமஸ்ஸும் ரஜஸ்ஸும் நிற்பதில்லை. கங்கை யமுனையோடும் சோணத்தோடும் கலந்து பிரிந்து செல்வது கண்கூடு. அப்பொழுது இருளும் இல்லை. சிகப்பு நிறமும் இல்லை. சோணா என்பது கிழக்கு நோக்கிச் சொல்லும் ஆறு. ஆறு மேற்கு நோக்கிச் சென்றால் அது சோணம் எனப்படும். ஸகரபுத் ரவ்ருத் தாந்தத்தை டிப்பணியில் குறித்துள்ளார்.

இந்த சுலோகத்தின் பூர்வார்த்தம் விசோதிதாத் ஸாகரவ்ருத்தி ஹேதோ: விஷ்வங்முகீ விஷ்ணுபதாத் க்ஷரந்தீ என்றும் காணப்படுகிறது.

प्रियामुखैस्तोयमधु प्रदिष्टं
पीत्वा नवं प्रीत इवाम्बुराशिः ।
समेत्य चन्द्रद्युतिनर्तकीभिः
तरङ्गितं ताण्डवं आततान ॥ ७१ ॥

ப்ரியாமுகை ஸ்தோயமது ப்ரதிஷ்டம்
பீத்வா நவம் ப்ரீத இவாம்புராசிः
ஸமேத்ய சந்த்ரத்யுதி நர்த்தகீபிः
தரங்கிதம் தாண்டவம் ஆததாந (71)

(கருத்து) பெருங்கடல் தனது ப்ரியைகள் வாயிலாக அவர்கள் அளித்த மதுவை நன்றாக குடித்துவிட்டு, சந்திரனின் கிரணங்களாகிற நாட்டியககாரிகளுடன் கூடி தானும் அலைமோதும் தாண்டவத்தைச் செய்யலாயிற்று.

(விரிவுரை) நிலவினை கங்கையாகவும் அது யமுனை சோணம் என்ற ஆறுகளைக் கடந்து கடலோடு கலந்தது என்று கூறினர். இங்கு அறுகள் புகுந்தபிறகு கடலில் ஏற்படும் ஒரு அழகான நிலையை பரமபோக்யமாக அனுபவிக்கிறார்.

ப்ரியாமுகை: தோயமது ப்ரதிஷ்டம் ப்ரியை முதலானவர்களால் அளிக்கப்பட்ட நீரான மதுவை என்று பொருள். இது பீத்வா என்பதோடு சேரும். கடலை புருஷனாகவும் ஆறுகளைப் பெண்களாகவும் கூறுவது மரபு. ப்ரியைகள் கொடுத்தால் தோயமும் மதுவாகலாம். நதிகள் ப்ரியைகள் என்பது ரஸம். எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து கடைசியில் கணவனைப் பெறும் மங்கைகள் போல் ஆறுகள். பத்தினியானல் மதுவைக் கொடுக்க மாட்டாள் ஆதலால் ப்ரியா என்பர். ச்ருங்கார கோலாஹலத்தில் வாயிலிருந்தும் மதுவை அளிப்பள் போலும் ப்ரியை. மதுவை மிந்திரனும் கொடுக்கலாம். அவ்வாறு ஆதிபி: என்னுமல் முகை: என்பது ரஸம். நதிமூலம் வேறு. நதிமுகம் வேறு. ஸமுத்ரத்தில் சேரும் இடம் ஆறுமுகமாகலாம். சமுத்ரநீரைக்காட்டிலும் ஆற்று நீர் மதுரமாகவே இருக்கும். மதுபோன்ற தோயத்தை என்றும் கொள்ளலாம். ப்ரதிஷ்டம் என்பதற்கு அளிக்கப்பட்டது என்று பொருள். உபஹாரமாக அளிக்கப்பட்டதும் ப்ரதிஷ்டம் எனப்படும். ப்ரதத்தம் என்னுமல் ப்ரதிஷ்டம் என்பது ஒருவகையான பாக்யத்தையும் குறிப்பதாகும்.

பீத்வா நவம் ப்ரீத இவ அம்புராசி: புதியதான மதுவை கடல்குடித்து ப்ரீதியடைந்ததுபோல் என்று பொருள். பீத்வா - குடித்துவிட்டு என்று பொருள். நவம் புதிய சரக்கு எனப்படும். நவமானதால் ஆதரம் அதிகம் போலும். ப்ரீதனுக என்னுமல் ப்ரீதன்போல் என்பது ரஸம். அத்தகைய குடிகாரர்களுக்கு எவ்வளவு குடித்தாலும் போதும் என்ற ப்ரீதி ஏற்படுவதில்லையே! அம்புராசி என்பது ஸமுத்திரத்தை. இது ஒரு ராசிபோலும். இனம் ஒன்றே. ரஸமும் ரூபமும்தான் வேறு.

ஸமேத்ய சந்த்ரத்யுதிநர்த்தகீபி: சந்திரனின் கிரணங்களாகிற ஆட்டக்காரிகளுடன் சேர்ந்து என்று பொருள், த்யுதிசப்தம் ஸ்த்ரீலிங்கம். ஆதலால் அவைகளை நாட்டியக்காரிகளாக நிரூபிக்கிறார். மதுபானம் ஆட்டக்காரிகளோடு சேர்த்துவைக்கும்போலும். மதுபான வேகம் பல பெண்களோடு ஒருவன் ஆடுகிறான். த்யுதி என்றால் காந்தி. நர்த்தகிகள் ஆடும்பொழுது அலங்கரித்துக்கொள்வர். அங்கப்ரத்யங்க சோபையை வெளிப்படுத்த பலவிதமான சித்ர தீபங்களைக் கொண்டு மேலும் அழகுறச் செய்வது இக்காலத்திலும் கண்கூடு, இங்கு இவ்வாறு இல்லை. த்யுதிகளே த்யுதியுடைய நர்தகிகள் என்பதாம். அவைகள் தாம் ஆடுவதோடு ஆட்டியும் வைக்கும் இயல்புடையன

தரங்கிதம் தாண்டவம் ஆததாந அலையெறியப் பெற்று பெரியதொரு தாண்டவத்தையே செய்வான் போலும். தரங்கத்தினால் உண்டான தாண்டவம். தரங்கம் தரங்கமாக அமையும் தாண்டவம். இது ஓய்வதில்லை. இரவுதான் ஓயவேண்டும். பெண்களோடு ஆண் கலந்து ஆடும் இணையற்ற நாட்டியம். ஆண்கள் ஆடுவதற்கு தாண்டவம் என்றும் பெண்களுடைய ஆட்டத்திற்கு லாஸ்யம் என்றும் பெயர். பெண்களுடைய ஆட்டம் கௌணமாயிற்றுபோலும். தாண்டர் என்ற முநிவரால் செய்யப்பட்டது **தாண்டம்** என்ற ந்ருத்ய சாஸ்த்ரம் தண்டு என்றும் அவருக்குப் பெயர் உண்டு. பும்ந்ருத்யம் தாண்டவம். ப்ராஹு: ஸ்த்ரீந்ருத்யம் லாஸ்யமுச்யதே என்பர். உத்தத ந்ருத்யம் என்பது. நடராஜன் ஆடுவது தாண்டவம்.

ப்ரியாமுகங்களால் நல்ல மதுவை அருந்திவிட்டு, சந்திரகிரணங்களாகிற பெண்களோடு கலந்து தானும் அலைகளைக்கொண்டு தாண்டவம் ஆடுகிறான் இந்த ஸாகரம் என்பவன் என்பது. அத்யத்புதமான வர்ணனம்.

कलङ्कचित्रीकृतं इन्दुखण्डं
तमस्समध्यासित सत्वकल्पम् ।
अशुष्कशैवालं इवाबभासे
सिद्धापगासैकतमर्धदृश्यम् ॥ ७२ ॥

கலங்க சித்ரீக்ருதம் இந்துகண்டம்
தமஸ் ஸமத்யாஸித ஸத்வகல்பம்
அசுஷ்க சைவாலமிவாபபாஸே
ஸித்தாபகா ஸைகதம் அர்த்தத்ருச்யம் (72)

(கருத்து) சந்திரனின் பாதியுருவம் கலங்கத்தினால் நன்றாகவே தோற்றமளிக்கிறது. தமஸ்ஸும் ஸத்வமும் கலந்ததாய் தோன்றுகிறது. உலராத பாசியையுடைய ஆகாசகங்கையின் மணற்பரப்போ என்று சொல்லும்படி விளங்குகின்றது.

(விரிவுரை) சந்திரனுடைய ஒளியும் கடலின் அலைகளும் இணைந்து எவ்வாறு தோற்றமளித்தன என்பதை முன் சுலோகத்தில் கூறினார். இங்கு அஷ்டமீ சந்திரனின் பாதியுருவம் எவ்வாறு தோற்றமளிக்கின்றது என்பதனை விளக்குவார்.

கலங்க சித்ரீக்ருதம் இந்துகண்டம் சந்திரனின் துண்டு கலங்கத்தினால் புது மேனி பெற்றதாய் என்று பொருள். உதயமாகும் பொழுது சிறிது சிகப்பும் கலந்து அவ்வளவு அழகாக இருக்காது. பிறகுச் சிகப்பு நிறம் மறைந்து விடும். சித்ரீக்ருதம் என்ற இடத்து அபூத தத்பாவே ச்வி: என்ற விதியை கொள்ள வேண்டும். இக்ஷு கண்டம் என்னுமாப்போலே இந்து கண்டம் என்பது போலும்.

தமஸ் ஸமத்யாஸித ஸத்வகல்பம் : தமஸ் கறுப்பு. ஸத்வம் வெளுப்பு. தமஸ்ஸுடன் கூடின ஸத்வம் போல் தோற்றமளிப்பதாம் என்று பொருள். ஸத்வம் மேலிட்டு தமஸ் உள்ளே அடங்கியிருப்பது போலாம். கல்பம் என்பதற்கு ஸாம்யம் என்று பொருள். கல்பப் என்று ப்ரத்யயம். கல்ப என்று ப்ராதிபதிகமும் உண்டு என்று விவரித்தார் தீக்ஷிதர்.

அசுஷ்க சைவாலம் இவ ஆபபாஸே காயாத பச்சைப் பாசியை உடையதாய் என்று பொருள். இவ- போல். ஆபபாஸே விளங்கியது என்பதனை ஸித்தாபகா ஸைகத மிவ ஆபபாஸே என்று இணைத்துக் கூற வேண்டும்

ஸித்தாபகா ஸைகதம் அர்த்த த்ருச்யம் பாதி தோற்றமளிக்கும் ஆகாச கங்கையின் மணற்பரப்பு போல் என்று பொருள். பாசி முழுதுமாக உலரவில்லை. தென்படும் மணற்பரப்பும் பாதிபாகத்தில் காணப்படுவதாம். பூர்வார்த்தம் உபமேயபரம். உத்தரார்த்தம் உபமானபரம் என்று நிர்வகிக்கலாம். கலங்க சித்ரீக்ருதம் தமஸ்ஸமத் யாஸித ஸத்வ கல்பம் இந்து கண்டம் - அர்த்தத்ருச்யம் அசுஷ்கசைவாலம் ஸித்தாபகா ஸைகத மிவ ஆபபாஸே என்று அந்வயக்ரமம்

स्वमध्यसंपन्नविशुद्धधामा
श्यामा च सा देवकनन्दिनी च ।
तमः क्षिपन्त्यौ जगतां त्रयाणां
अन्योन्य संवादमिवान्वभूताम् ॥ ७३ ॥

ஸ்வமத்ய ஸம்பந்ந விசுத்ததாமா
ச்யாமாச ஸா தேவகநந்திநீ ச
தம: க்ஷிபந்த்யௌ ஜகதாம் த்ரயாணும்
அந்யோந்ய ஸம்வாதமிவாந்வபூதாம். (73)

(கருத்து) தனது இடையிலேயே விசுத்தமான ஒளியையுடையதாய் அந்த இரவும், தனது இடையி லேயே விசுத்தமான ஒரு தேஜஸ்ஸையுடைய தேவகியும் மூவுலகங்களில் இருக்கும் இருளை அகற்றியவாறு ஒருவருக் கொருவர் நிகரோ என்று சொல்லலாம்படி அனுபவிக்கப் பெற்றது.

(விரிவுரை) முன் சுலோகத்தில் சந்திரபிம்பத்தை ஆகாசகங்கையின் மணற்பரப்போ என வர்ணித்தார். இங்கு அவ்வொளி சூழ்ந்த இரவின் பெருமையை வர்ணிக் கிறார்.

ஸ்வ மத்ய ஸம்பந்ந விசுத்த தாமா தனது இடையே அமையப்பெற்ற தூயதான ஒளியை யுடைய தாய் என்றும், உடையவளாய் என்றும் பொருள். ஸ்வ சப்தம் ச்யாமா என்றழைக்கப்படும் இரவைக் குறிக்கும். இரவின் மத்யம் நள்ளிரவு என்பதாம். அப்பொழுது ஸம்பந்நமான்து அமைந்தது ஒரு விசுத்தமான தெள்ளிய தான சோதி. ஆயிரம் ஆயிரம் நக்ஷத்திரங்களிருந்தாலும் ஒரு சந்திரன் இருந்தால் எவ்வளவு சோபை ஏற்படுகிறது! அஷ்டமீ சந்திரன் ஆனாலும் ஒளி பாதிதான் படுவது என்பதில்லை. நக்ஷத்ர தாராக்ரஹஸங்குலாபி: ஜ்யோதிஷ் மதீ சந்த்ரமஸைவ ராத்ரி: என்பர். இங்கு தாம சப்தம் ஜோதி என்று பொருள்தரும். இவ்வாறே ஸ்வசப்தம் தேவகியை குறிக்கும். அவளுடைய இடையில் - பரஞ் சோதியானது - இருக்கிறது. அது திவ்யமான தாம. கர்ப்பவாஸ கேதமில்லாதது என்பதாம். அங்கும் விளங்குவதாகும்.

ச்யாமா ச ஸா தேவக நந்தநீ ச இரவும் தேவகியும் என்று பொருள். ச்யாமா - இரவு. கறுப்பு நிறம் பெற்றே இருப்பதால் இப்பெயர். ச்யாமா - நிசா என்று நிகண்டு கூறியது. தேவகியை முன்பு ச்யாமா என்று கூறினர். இங்கு அவ்வாறு இல்லை. இரண்டு சகாரம் ரஸம். ச்யாமா ச ஸ்வமத்ய ஸம்பந்ந விசுத்த தாமா, ஏன் அத்தகைய பெருமையுடைய தேவகரின் மகளும் ஸ்வமத்ய ஸம்பந்ந விசுத்ததாமா என்பது அழகான அமைப்பு. தேவகரை மகிழ்விக்கும் நிலையை இப்பொழுது பெறுவாள்போலும்! ஆதலால் தேவகநந்தநீ என்று உரைத்தது. நந்தநீ என் பது நந்த தாதுவில் உண்டானது.

தம: க்ஷிபந்த்யௌ ஜகதாம் த்ரயாணும் மூன்று உலகங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் இருளை அழிப்பதாய் - அழிப்பவளாய் என்று பொருள். பசு பக்ஷி மனுஷ்ய லோகங்கள் என்னலாம் மூன்று உலகங்களிலும் இருள் நீங்குகிறது. லோகத்ரயேபி அப்ரதிம பரபாவ என்றான் அர்ஜுனன்.

அந்யோந்ய ஸம்வாதமிவ அந்வபூதாம் ஒருவருக்கொருவர் ஸம்வாதமோ என்று அனுபவிக்கப்படலாயினர். இரவு தேவகிபோல் இருந்து அவளைப் பின்பற்றுமோ! அல்லது தேவகி நள்ளிருள் போலிருந்து, அதைப் பின்பற்றுவளோ, என்று எண்ணும் வகையில் அமைந்தமை இருவரிடமும் காணப்பெற்றது போலும்.

शाखावकाशेषु कृतप्रवेशैः
चन्द्रातपैराश्रितचारकृत्यैः ।
हतावशिष्टानि तमांसि हन्तुं
स्थानं तदाक्रान्तममृग्यतेव ॥ ७४ ॥

சாகாவகாசேஷு க்ருதப்ரவேசை:
சந்த்ராதபை: ஆச்ரிதசாருக்ருத்யை;
ஹதாவசிஷ்டாநி தமாம்ஸி ஹந்தும்
ஸ்தாநம் ததாக்ராந்தம் அம்ருக்யதேவ (74)

(கருத்து) கிளைகளின் இடையில் சந்திரனுடைய கிரணங்கள் விழுகின்றன. இலைகளின் நிழலும் அங்கு தென்படுகிறது. கிளைகளின் வழியாகச் சென்றவையும், ஒற்றனுடைய தொழிலைச் செய்பவையுமான சந்திரனுடைய கிரணங்கள் அழித்தும் மிச்சமாயிருந்து ஒளிந்து கொள்ளும் இருட்டுகளைப் போக்க வெண்ணி அவை சென்ற விடத்தில் சென்று தேடுபவை போலும்.

(விரிவுரை) இதற்கு முன் சுலோகத்தில் தம: க்ஷிபந்த்யௌ என்று கூறினர். அத்தொழிலைச் செய்தவை திசையும் தேவகியும். ஆனல் இங்கு சந்திரனுடைய கிரணங்கள் செய்யும் தொழிலை அழகாக வர்ணிக்கிறார்.

சாகாவகாசேஷு க்ருத ப்ரவேசை: கிளைகளின் இடைவெளியில் புகுந்தனவாய் என்று பொருள். இது சந்த்ராதபை: என்பதோடு சேரும். சாகா என்பதற்கு கிளையென்று பொருள். கிளைகளின் இடையில் கிடைத்த அவகாசங்கள் என்பதாம். ஆகாசாவகாசத்தைக் காட்டிலும், சாகாவகாசம் இங்கு கூறப்படுவது. க்ருதப்ரவேசை : என்பதற்கு அனுமதியில்லாமலும் உள்ளே நுழையும் தன்மையுடையவை என்றும் பொருள்.

சந்த்ராதபை: ஆச்ரித சாரக்ருத்யை: சந்திரனுடைய ப்ரகாசங்களால். அவை ஒற்றனுடைய தொழிலை ஏற்றுக் கொண்டுவிட்டன என்று பொருள். சாரர்கள் செய்ய வேண்டிய காரியத்தைத் தாமே ஏற்றுக் கொண்டன என்பதாம். ஆதபை: என்பதற்கு ப்ரகாசம் என்று பொருள். சூரியன் தபிக்கச்செய்யுமான படியால் ஆதபை: என்று சூரியனிடம் சொன்னல் பாதகமில்லை. சந்திரனுடைய கிரணங்கள் தாபத்தை அளிப்பவை அல்ல. எவ்வாறு பொருந்தும்! சந்திர கிரணங்கள் குளிர்ச்சியாக இருப்பினும் காமுகர்களை எவ்வாறு வாட்டுகிறது! அதனல் ஆதபை: என்பது ரஸம். தமஸ்ஸுக்களை அழிக்க முற்பட்டபடியால் தமஸ்ஸுகளுக்கு தாபத்தை உண்டு பண்ணுமவை என்றும் கொள்ளலாம். ஆதப என்பதற்கு ப்ரகாசம் என்றே பொருள் கூறியது அமரகோசம்.

ஹதாவசிஷ்டாநி தமாம்ஸி ஹந்தும் அழிந்தது போக மிச்சமுள்ளதான இருட்களை அழிக்க என்று பொருள். ஆகாசத்திலிருந்து சந்திரனுடைய ஒளிகளால் விரட்டப்பட்ட இருளானது எங்கு எங்கு ஒளிந்து கொள்ள அவகாசம் இடம் கிடைக்குமென்று தேடி அலைந்து கிளைகளின் அந்தரங்களில் வந்து ஒளிந்து கொண்டன. அவற்றையும் தேடிப் பிடித்து அழிக்க வேண்டமா! மரத்தின் நிழல் படிந்த இடம் இருட்டாயிருப்பதால் இவ்வாறு வர்ணனம்.

ஸ்தாநம் ததாக்ராந்தம் அம்ருக்யத இவ அந்த இருளினல் ஆக்ரமிக்கப்பட்ட இடத்தை தேடுவது போலாயிற்று என்று பொருள். சாரர்கள் ஒற்றர்கள். அவர்களுடைய பணி தேடிக்கண்டு பிடிப்பதே.

पराकृतध्वान्तनिकायपङ्कैः
पर्याप्ततारागणफेनपुञ्जैः ।
अशोभत द्यौरसमायुधस्य
यशःप्रवाहैरिव चन्द्रपादैः ॥ ७५ ॥

பராக்ருத த்வாந்த நிகாய பங்கைः
பர்யாப்த தாராகண பேந புஞ்ஜை:
அசோபத த்யௌரஸமாயுதஸ்ய
யசःப்ரவாஹைரிவ சந்த்ரபாதைः **(75)**

(கருத்து) ஆகாயம் மிகவும் அழகாக விளங்கியது. சந்திரனின் கிரணங்கள் அவ்வாறு படிகின்றன. அவை சாதாரணமானவை அல்ல. இருளுக்கு நிகரான சேற்றினை அறவே அழித்து விட்டன. எங்கும் குவியல் குவியலாக இருக்கும் நக்ஷத்திரங்கள் நுரையின் குவியல்களோ என்னலாம்படியுள்ளன. மேலும் மன்மதனின் புகழெனும் ப்ரவாஹமோ என்பதாயும் உள்ளன.

(விரிவுரை): முன் ச்லோகத்தில் சந்திரனுடைய கிரணங்களை ஒற்றர்களாக வர்ணித்தார். இங்கு மன்மதனின் புகழ் பெருக்கே வானத்தின் ஒளி என்கிறார்.

பராக்ருத த்வாந்த நிகாய பங்கைः இருள் போன்றதொரு சேற்றை அகற்றுவதாய் என்று பொருள். இது சந்த்ரபாதைः என்பதற்கு விசேஷணம். த்வாந்தம் இருள். நிகாய-நிகர். இருளைச் சேருகக் கூறினர். சேறும் கறுப்பு ஆதலால் தேங்கின ஜலத்தின் அடியில் சேறு அடர்ந்திருக்கும். வெள்ளத்தில் சேறு அடித்துக் கொண்டு போகப்படும். ஆகாயத்தில் இருளென்ற சேற்றினை அடித்துச் சென்ற ப்ரவாஹம் என்பதாம். பராக்ருதம்-என்பதற்கு அகற்றப்பட்ட என்று பொருள்.

பர்யாப்த தாராகண பேந புஞ்ஜை: குவியல் குவியலான நக்ஷத்திரங்கள் எங்கும் வ்யாபித்துள்ளன. அவை நுரைகளின் குவியல்கள் போல் உள்ளன என்று பொருள். பர்யாப்தம் என்பதற்கு பரிபூர்ணம் என்று உரையிட்டார் தீக்ஷிதர். ப்ரவாஹத்தில் நுரைகள் தென்படுவது இயற்கை. இங்கு வானில் நக்ஷத்திரங்கள் எல்லாம் நுரைக் குவியல்களாகத் தோன்றுகின்றன.

அசோபத த்யௌர் அஸமாயுதஸ்ய வானம் விளங்கியது. அஸமாயுதஸ்ய என்பதற்கு மன்மதனுடைய என்று பொருள். ஐந்து பாணங்களையுடையதால் இப்பெயர். ஸமம் என்றால் இரட்டை. அஸமம் என்றால் ஒற்றை என்று பொருள் கொள்ளவேண்டும். அவன் மலரையே பாணமாக வைத்துக் கொள்வான். அம்மாதிரி பிறர் வைத்துக் கொள்ள இயலாது. அது பாணமாக

இராது. நிகரற்ற என்றும் அஸம என்பதற்குப் பொருள். இங்கு அஸமாயுதன் என்பதனுல் அவதரிக்கப் போகும் பகவானையே குறிக்கலாம். அவனுடைய ஆயுதங்கள் எல்லாம் நிகரற்றவை. ஆதலால் கர்ப்பத்திலேயும் தரித்து வருவான் போலும். தனக்கு சரியில்லாத வேல் முதலானவற்றையும் கொண்டு கோஸஞ்சாரம் பண்ணுவானுதலாலும் இவன் அஸமாயுதன் அவன் வருவதற்கு முன்னமே புகழ் ப்ரவஹித்து விட்டது என்றபடி. ஆதலால் பராக்ருத என்பதால் துஷ்ட நிரஸனமும், பர்யாப்த என்பதால் ஸாது பரித்ராணமும் குறிப்பில் உள்ளன என்றும் கொள்ளலாம்.

யச: ப்ரவாஹைரிவ சந்த்ரபாதை: புகழின் பெருக்கு போன்ற சந்திர கிரணங்களால் என்று பொருள். ப்ரவாஹங்கள் போன்றிருந்த சந்த்ரபாதங்கள் என்று கொள்ளவேண்டும். பாத சப்தத்திற்கு கிரணம் என்று பொருள். கிரணங்களை கைகள் என்றும் கால்கள் என்றும் வர்ணிப்பது கவி ஸமயம்.

दद्‌ानया दिक्सरितां प्रसादं
प्रसक्तहंसागमया स्वकान्त्या ।
अपाकृतध्वान्तघनप्रवृत्त्या
शरत्त्विषा चन्द्रिकया चकाशे ॥ ७६ ॥

ததாநயா திக்ஸரிதாம் ப்ரஸாதம்
ப்ரஸக்த ஹம்ஸாகமயா ஸ்வகாந்த்யா
அபாக்ருத த்வாந்தகந ப்ரவ்ருத்யா
சரத்த்விஷா சந்த்ரிகயா சகாசே (76)

(கருத்து) நிலவு மிகவும் ஒளிபெற்றிருந்தது. சரத்ருதுவில் எத்தகைய வொளி இருக்குமோ அத்தகைய வொளி இருந்தது ஆறு போன்ற திக்குகள் எல்லாம் தெளிவைப் பெற்றன. அன்னங்களும் வரத் தொடங்கி விட்டன - இருள் அறவே அகன்றுவிட்டபடியால் மறுபடி காரிருளோ கருமேகமோ வர இடமில்லை என்பதாம்.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் புகழின் பெருக்கோ என்ருர். இப்பொழுது அந்நிலவின் ஏற்றத்தைப் பல கோணங்களில் கூறுவர்.

ததாநயா திக்ஸரிதாம் ப்ரஸாதம் ஆறுபோன்ற திக்குகளில் தெளிவை அளிப்பதாய் என்று பொருள். இது ஸ்வகாந்த்யா என்பதுடன் சேரும். திசாம் ஸரிதாமிவ என்ருர் தீக்ஷிதர் இப்பொழுது நிலவில் வானம் தெளிவாகவுள்ளது. கலக்கமேதுமின்றியிருக்கும். திச: ப்ரஸேது: என்ருர் ஸ்ரீசுகர்.

ப்ரஸக்தஹம்ஸாகமயா ஸ்வகாந்த்யா அன்னங்கள் எல்லாம் வந்து சேரும்படியான தனது ஒளியினுல் என்று பொருள். ஹம்ஸத்தின் வருகையோ என்று சந்தேகம் உண்டாக்கவல்லது தனது ஒளியினுல் என்று விவரித்தார் தீக்ஷிதர். இங்கு ஸ்வ சப்தம் சந்த்ரிகையை குறிக்கும். சரத்காலத்தில் மேகங்கள் அறவே ஒழிந்துவிட்டபடியால் அன்னங்கள் ஸஞ்சரிப்பதுபோலாம். ஹம்ஸாகமநம் என்பதற்கு பகவதவதாரம் என்று உரையிட்டார் டிப்பணியில். ஆகாய வொளியைக் கண்டு ஹம்ஸமும் வரத் தொடங்கியது என்ருர் தீக்ஷிதர்.

அபாக்ருத த்வாந்த கநப்ரவ்ருத்யா இருளாகிற மேகங்களின் ப்ரவ்ருத்தியே இல்லாமல் செய்யப்பட்டது என்று பொருள். த்வாந்தம் இருள். கரிய - மேகம். இருளாகிற மேகம், அல்லது மேகம் போக்கப்பட்டதாம்.

சரத்த்விஷா சந்த்ரிகயா சகாசே சந்திரனின் ஒளி நிலவு, சரத்ருதுவின் ஒளிபெற்று விளங்கியது என்பதாம்.

कलावता कामविहारनाट्ये
कालोचितं कल्पयतेव नर्म ।
अमोघ मायापलितङ्करण्यः
प्रायो दिशां दीधितयः प्रयुक्ताः ॥ ७७ ॥

கலாவதா காம விஹார நாட்யே
காலோசிதம் கல்பயதேவ நர்ம
அமோக மாயாபலிதங்கரண்யः
ப்ராயோ திசாம் தீதிதயः ப்ரயுக்தாः (77)

(கருத்து) கலைவல்லவன் சந்திரன். அவன் மன்மத விஹாரம் என்னும் நாட்டியத்தில் அக்காலத்துக்கேற்ப ஒரு கேலிக்கூத்து நடத்துவான்போலும். திக்குகளில் கிரணம் படுகிறது. அவை வெளுத்துக் காணப்படு கின்றன. திக்குகளாகிற பெண்களின் தலைமயிர்கள் எல் லாம் நரைத்துவிட்டனபோல் செய்துவிட்டான். இது காமவிஹார நாட்டியத்தில் சந்திரன் செய்த கேலிக்கூத் தாக அமைந்தது என்றபடி.

(விரிவுரை) முன் ச்லோகத்தில் சந்திரனின் ஒளி மிகவும் தெளிவாக இருந்தது. சரத்காலத்தில் ஏற்பட்ட ஒளியே போன்றது என்றார். இங்கு திக்குகள் எல்லாம் வெளுத்துக் காணப்படுகின்றன என்பதை கலையின் கண் கொண்டு அழகாக கூறுவர்.

கலாவதா காமவிஹார நாட்யே மன்மதலீலைகள் என்பதொரு நாட்டியத்தில் கலைநிறைந்த சந்திரனால் என்று பொருள். கலை என்பது சந்திரனின் கலையை. கலையுடையவன் கலாவான். அவனுக்குப் பிறரைப் பரிஹ

ஸிக்கும் தன்மையும் எதையும் மாற்றிச் சொல்லும் பெருமையும் உண்டு. நாட்யசில்பம் தெரிந்த ஸூத்ர தாரன் என்று விளக்கினார் தீக்ஷிதர். சந்த்ரோதயம் காமோத்தீபனம். காமன் விஹரிக்கிறான். அது நாட்டிய மாயிற்று என்பதாம். யுவாக்களுடைய காமக் கேளிக்கை களிலே என்பதாம்.

காலோசிதம் கல்பயதேவ நர்ம ஸமயத்துக்கு ஏற்றவாறு நகைச் சுவையை ஏற்படுத்துபவனால் போல் என்று பொருள். நர்ம-ஹாஸ்யரஸம். பரிஹாஸம் என்ப தாம். இங்கு நாடகக்கலையில் தேர்ந்தவன் சந்திரன் என்ப தாம்.

அமோக மாயா பலிதங்கரண்ய: மாயையினால் நரைத்தவைகளாகச் செய்து வைப்பவை என்பதாம். அமோகம் என்பதற்கு அழியாதது என்று பொருள். பலிதம் என்பதற்கு கிழத்தன்மையினால் வெளுத்தது என்று பொருள். இப்பொழுது உண்மையில் நரைத்தவை அல்ல என்பதாம். அவற்றை மாயையினால் நரைத்தவை களாக காட்டுவானாம். காமவிஹார நாட்ய ஸமயத்தில் தலை நரைத்த கிழவிகளுக்கு யோகம் எப்படி சேரும். ஆனால் அவர்களும், கிழவிகளல்ல. தலை மட்டும் திடீரென்று நரைத்து விட்டனவே என்பது தான் மாயை. தலை நரைத் தவர்களுடன் காமவிஹாரம் விகாரமாகத் தானே இருக்கும். பலிதம் என்பது தர்மியையும் குறிக்கும். பலிதம் சித்ரம் தத்வதி த்ரிஷு தர்மிணி என்று யாதவ கோசம் கூறும். இங்கு தீக்ஷிதர் இவ்வாறு விவரிப்பர்.

मायया पलिताः मिथ्यापलिताः । अमायापलिताः माया पलिताः क्रियन्ते आभिः என்றபடி.

ப்ராயோ திசாம் தீதிதய: ப்ரயுக்தா: கிரணங்கள் எங்கும் வீசப் பட்டன என்று பொருள். திசாம்-திக்கு களுக்கு. திக்குகளின் மீது சந்திரனின் கிரணங்கள் படிந்ததை இவ்வாறு உத்ப்ரேக்ஷிப்பர்.

कदंबमालाभिरधीतलास्यः
कल्याणसंभूतिरभूत् प्रजानाम् ।
प्रियोदयस्फीतरुचो रजन्याः
सन्तोषनिःश्वासनिभः समीरः ॥ ७८ ॥

கதம்பமாலாபி : அதீதலாஸ்ய :
கல்யாண ஸம்பூதிர் அபூத் ப்ரஜாநாம்
ப்ரியோதயஸ்பீதருசோ ரஜந்யா :
ஸந்தோஷ நிச்வாஸ நிப : ஸமீர : (78)

(கருத்து) கடம்ப மரங்கள் ந்ருத்யம் பயின்றனவோ என்றபடியும், மக்களுக்கு ஏற்பட்ட ஆனந்தோதயம் போன்றதும், தனது ப்ரியனான சந்திரனுடைய உதயத்தினால் வெளிச்சம் மிகப் பெற்றதான இரவெனும் மங்கையின் ஸந்தோஷமெனும் மூச்சுக் காற்றுக்கு நிகராயும் காற்று அமைந்தது.

(விரிவுரை) சந்திர கிரணங்களினால் ப்ரக்ருதியில் ஏற்படும் சோபா விசேஷங்களை முன் சுலோகத்தில் விளக்கினார். இங்கு சந்திர கலையும் சுகமான காற்றும் கலந்து அதனால் அமையும் சோபையை கூறுகிறார்.

கதம்ப மாலாபி: அதீத லாஸ்ய : கடப்ப மரங்கள் வரிசை வரிசையாக இருந்து ந்ருத்யம் பயிலுகின்றனவோ என்ற வகையில் உள்ளது. இது காற்றுக்கு விசேஷணம். அதீதம் லாஸ்யம் யஸ்மாத் ஸ: என்று கொள்ளவேண்டும். பெண்கள் ஆடும் மெல்லிய நடனத்திற்கு லாஸ்யம் என்று பெயர். மாலாபி: என்று பெண்பாலில் பேசியபடியால் லாஸ்ய : எனப்பட்டது. பெண்கள் தான் அதிக அளவில் நாட்டியம் பயிலுவர் என்பது மாலாபி : என்ற பன்மையால் குறுப்பிடப்பட்டது. மலரில் உள்ள மணமும், அசைவினால் அது பெருகுவதும், சந்திரகிரணம் படுவதால் குளிர்ச்சியும் ஏற்படுவதாம். ஆட்டம் கற்பவர் பெண்டிர். ஆட்டிவைப்பது காற்று என்பது ரஸம்.

கல்யாண ஸம்பூதி: அபூத் ப்ரஜாநாம் மக்களுக்கு ஒருவிதமான கல்யாணமே உண்டாயிற்று என்று பொருள். கல்யாணம் என்பதற்கு ஆனந்தம் என்று பொருள் உரைத்தார். ப்ரஜாநாம் என்பதற்கு சிறப்புடன் பிறந்தவர்களுக்கு எனப் பொருள் அமையும். சந்த்ரோதயத்தினால் ஆனந்தோதயம் உண்டாவது இயற்கை. கடம்ப மரங்கள் மெல்லிய மலர் கொண்ட கிளைகள் அசைவதும், ப்ரஜைகளுக்கு கல்யாணம் ஏற்படுவது என்பதும் க்ருஷ்ணாவதாரத்தைக் குறிக்கும் பாங்குடையவை.

ப்ரியோதய ஸ்பீத ருசோ ரஜந்யா: ப்ரியனின் உதயத்தினால் மலர்ந்த முகமும் ஒளியும் பெற்ற இரவெனும் மங்கைக்கு என்று பொருள். ரஜநீ இரவு, அதற்கு ப்ரியன் சந்திரன், அவனுடைய தோற்றத்தால் இரவுக்கு புன்னகை என்பதொரு மகிழ்ச்சி, எங்கும் வெண்மை படர்ந்திருப்பதால். சந்திரன் யாருக்குத்தான் ப்ரியமாக மாட்டான்! ரஜனிக்கு ப்ரியன் கணவன் என்பர். ஸோமன் ப்ரியனே. ப்ரியம் ராஜந் ப்ரியதமம் ப்ரியாணாம் என்பதையும் கவனிக்க. ஸோமவத் ப்ரியதர்சன: என்றும் கூறுவர்.

ஸந்தோஷ நிச்வாஸ நிப: ஸமீர: ஸந்தோஷமெனும் மூச்சுக் காற்றோ என்ற வகையில் அமைந்தது காற்று என்பது. தெள்ளிய இரவு மெல்லிய காற்று ஏன் ஸந்தோஷம் ஏற்படாது!

ஸ்ரீ பாகவதம் கூறுவதை இங்கு நினைவு கூறுகிறார். திச: ப்ரஸேது: ககநம் நிர்மலோடுகணோதயம். வவௌ வாயு : ஸுகஸ்பர்ச: புண்யகந்தவஹ: சுசி: என்ற ச்லோக பாகங்களை வரிசைபடுத்தி அனுபவிப்பர் போலும். இங்கு மாலை, கல்யாணம், ப்ரியம், உதயம், ருசி, ஸந்தோஷம் முதலிய சொற்கள் அந்த இரவெனும் பெண்ணுக்குப் போலே நமக்கும் ஸந்தோஷ நிச்வாஸ நிபமாக அமையப் பெறுவது ரஸம்.

प्रायेण हंसैरवधूतसंगा
चारुस्मिता संभृतभृङ्गनादा ।
सर्वोपभोग्ये समये प्रसुप्तं
कुमुद्वती कोकनदं जहास ॥ ७९ ॥

ப்ராயேண ஹம்ஸை ரவதூதஸங்கா
சாருஸ்மிதா ஸம்ப்ருத ப்ருங்கநாதா
ஸர்வோபபோக்யே ஸமயே ப்ரஸுப்தம்
குமுத்வதீ கோகநதம் ஜஹாஸ (79)

(கருத்து) இரவில் தாமரை உறங்கும் ஆம்பல் அலரும். அன்னங்கள் தாமரையிலேயே ஊற்ற முடையவை. ஆதலால் இரவில் அவை ஸஞ்சரிப்பதில்லை. ஆம்பல் ஓடைக்குத் தான் இரவில் பெருமை எல்லாம். ஹம்ஸங்களால் உதரித் தள்ளப்பட்ட ஆம்பலோடை வண்டுகளின் ரீங்காரமும் சந்திரனின் கதிரும் பெற்று புன்னகை செய்கிறது. எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கும் தருணத்தில் கமலம் உறங்குவதேனோ! ஆம்பல் தன்னொளியால் தாமரையைப் பார்த்து நகைக்கிறது என்பதாம்,

(விரிவுரை) கதம்ப மலர்மணமும், சந்திரனின் ஒளி நிறமும் பெற்ற காற்று சில்லென்று வீசியதின் சேர்த்தி மக்களுக்கு ஆனந்தமளிப்பதாய் அமைந்தது என்றார். இங்கு, ஆம்பல் மலர்ந்து தாமரை மூடியிருக்கும் நிலையை வெகு அழகாக வர்ணிக்கிறார்.

ப்ராயேண ஹம்ஸை: அவதூதஸங்கா வெகுவாக அன்னங்களால் விடப்பட்டது என்று பொருள் குமுத்வதீ என்பதோடு சேரும். ஹம்ஸங்கள் நாடுவதில்லையே என்ற குறையும் இல்லை. அவதூதரின் ஸங்கமுடையது என்றும் கொள்க.

சாருஸ்மிதா ஸம்ப்ருத ப்ருங்கநாதா அழகான புன்முறுவலுடையதும், வண்டுகளின் ரீங்காரம் கலந்ததும் என்று பொருள். இவ்விரண்டும் குமுத்வதீ என்பதற்கு விசேஷணங்கள். பரிஹஸிப்பவர்கள், புன்னகையும் செய்வர், அவர்களின் வாயில் ஒலிகளும் தோன்றும். சிரிப்பில் ஒலி பலவகையில் சேரும், முன்பு அப்ருங்கநாத ப்ரதிபந்ந மௌநா என்றார், இங்கு ப்ருங்கநாதமே ஸம்பாரமாயிற்று என்பர். பெண்களின் சிரிப்பே சாருவாகத் தான் இருக்கும்.

ஸர்வோப போக்யே ஸமயே ப்ரஸுப்தம் எல்லாரும் அனுபவித்துக்குதுகலிக்கும் ஸமயத்தில் நன்றாக உறங்குவதான என்று பொருள். இது கோகநதம் என்பதோடு சேரும். சமயத்தில் உறங்குவது தௌர்பாக்யம் தானே ! இந்த ஸமயம் எவ்வளவு நன்றாக உள்ளது. நிலவு அழகான மெல்லிய காற்று.

குமுத்வதீ கோகநதம் ஜஹாஸ ஆம்பலோடை தாமரையை நோக்கி பரிஹாஸ நகை செய்வதாம். அனுபவிக்கத் தெரியாதவன் என்றும், கொடுத்து வைக்காதவன் என்றும் நகைப்பதாம். இக்காலத்திலும் உல்லாஸ சிங்கார உடையணிந்து நிலவி வரும் பெண்கள் அவ்வாறில்லாத சாதுவான பெண்களைப் பார்த்து நகைப்பதும் கண் கூடு. குமுத்வதீ பெண்பால். கோகநதம் நபும்ஸகலிங்கம் என்பதையும் நோக்க வேண்டும்.

कलङ्कलक्षेण समैक्षि काचित्
कस्तूरिकापत्रविशेषकान्तिः ।
सुधांशुबिम्बव्यपदेशदृश्ये
मुग्धे रजन्या मुखपुण्डरीके ॥ ८० ॥

கலங்க லக்ஷண ஸமைக்ஷி காசித்
கஸ்தூரிகா பத்ர விசேஷகாந்திঃ
ஸுதாம்சு பிம்ப வ்யபதேச த்ருச்யே
முக்தே ரஜந்யா முக புண்டரீகே. (80)

(கருத்து) இவ்வளவு வர்ணித்தும் சந்திரனிடமுள்ள கலங்கம் மனதை ஈர்க்கிறது. அதுவும் ஒரு அழகாகத் தான் உள்ளது. ஒரு பெண்ணின் நெற்றியில் அணிந்த கஸ்தூரிகாபத்ரமே என்னலாம்படி யுள்ளது. ஆம்-ரஜனி - (இரவு) என்ற பெண்ணின் அழகான, தாமரைப்பூ போன்ற முகத்தில் இடப்பட்டதாகும். சந்திரபிம்பம் என்பது பெயருக்கு மட்டுமாம்.

(விரிவுரை) ஒரு பெண் பிறரைப் பார்த்து நகை புரியும் பாங்கினை முன்பு கூறினார். இப்பொழுது ஒரு பெண்ணின் முகத்தில் கறுப்பு ஓடுவதும் அழகாக இருக்கிறது என்கிறார்.

கலங்கலக்ஷண ஸமைக்ஷி காசித் அங்கம் என்கிற வ்யாஜமாகத் தோன்றுவது ஒன்று காணப்பெறுவது. காசித்-ஓர்விதமான ஒப்பற்றதான என்பதாம். இது காந்தி என்பதோடு சேரும். லக்ஷம் என்பதைற்கு வ்யாஜம்-தோற்றம் என்று பொருள்.

கஸ்தூரிகாபத்ர விசேஷ காந்தி : கஸ்தூரியினால் செய்யப்பட்ட பில்லைப் போன்ற தொரு ஒளி என்று பொருள். பத்ரத்தின் விசேஷ காந்தி என்றும் பத்ர விசேஷத்தின் என்றும் கொள்க. பத்ர விசேஷஸ்ய - கஸ்தூரிகா ரசித சித்ரக விசேஷஸ்ய காந்தி: என்று தீக்ஷிதர் விவரித்தார். கலங்கம் என்பது பெயர் மட்டிலே, அது எவ்வளவு ஒளியுடையதாயிருக்கிறது என்று கூறியபடியாம்.

ஸுதாம்சுபிம்பவ்யபதேசத்ருச்யே சந்திரமண்டலம் என்ற பெயரில் கண்ணில் புலப்படுகிற என்று பொருள். வ்யபதேசம் என்பதற்கு கைதவம். கபடம், வ்யாஜம் ஒரு பெயர் முதலான பல பொருள்கள் உண்டு. ஸுதாம்சு பிம்பம் என்ற பெயர் மட்டுமேயன்றி வேறில்லை என்ற படியாம். த்ருச்யே என்பதற்கு இலக்காவதான என்று பொருள். த்ருஷ்டி கோசரே என்றார் தீக்ஷிதர்.

முக்தே ரஜந்யா முகபுண்டரீகே இரவெனும் பெண்ணின் அழகான தாமரைப்பூ போன்ற முகத்தில் என்று பொருள். मुग्धे-சுந்தரமான என்பதாம் - இது முகபுண்டரீகே என்பதற்கு விசேஷணம். புண்டரீகம் என்பதற்கு வெண்டாமரை என்று பொருள். சந்திர பிம்பமே இரவெனும் பெண்ணிற்கு முகமாகும். அம்முகம் வெள்ளைத் தாமரைப்பூவாகும். அதில் கலங்கம் என்பது இடப்பட்ட திலகமாகும். திலகமும் கஸ்தூரியினால் ஆனது, அதுவும் இலை போல் அமைந்தது என்பதாம். முன்பு 61வது சுலோகத்தில் சந்திரனையே திலகம் என வருணித்தார். இங்கு கலங்கத்தைத் திலகமாக வர்ணிப்பது உற்று நோக்கத் தக்கது.

அஷ்டமீ சந்திரனானபடியால் பூரணனல்லவே என்று நினைக்க வேண்டாம். கவிசமயத்தில் இது ஸஹஜம் என்றார் தீக்ஷிதர். மாக மஹாகவியின் ப்ரயோகத்தைக் காட்டியுள்ளார். அர்த்த சந்திராகாரம் இருப்பினும் போக்யமே. திலகப்ரஸங்கமானதால் பாதியே யமையும். மேலும் புஷ்கல: இந்துரிவ என்று ஸ்ரீசுகர் வாக்கியம் மனதில் இருப்பதால் இந்த அஷ்டமீ சந்திரன் பூரண சந்திரனாக தோன்றுவதில் வியப்பில்லை என்று கொள்ளலாம். இங்கு பிம்ப சப்தம் பூர்ணமண்டலபாமன்று என்றார் டிப்பணியில் मूर्तिमात्रपरो मन्तव्यः என்றார் தீக்ஷிதர். 60வது சுலோகத்திலும் இந்து பிம்ப: என்பது மண்டல பரமன்று என்று விவரித்தனர்.

तलेष्ववेपन्त महीरुहाणां
छायास्तदा मारुतकंपितानाम् ।
शशाङ्कसिंहेन तमोगजानां
लूनाकृतीनामिव गात्रखण्डाः ॥ ८१ ॥

தலேஷ்வவேபந்த மஹீருஹாணாம்
சாயாஸ் ததா மாருத கம்பிதாநாம்
சசாங்கஸிம்ஹேந தமோகஜாநாம்
லூநாக்ருதீநாமிவ காத்ரகண்டா: **(81)**

(கருத்து) காற்று வீசுவதால் மரங்கள் அசைகின்றன. அப்பொழுது நிழல்கள் அசைந்தவண்ணமே யிருக்கும். மரங்களின் கீழ் பகுதிகளில் வெளுப்பும் கறுப்புமாக அசைவுகள் ஏற்படுவதை அழகாக வர்ணிக்கிறார். சந்திரன் சிங்கமானான். அவன் இருளென்னும் யானைகளைக் கொன்று தோலை உறித்து எறிந்து விட்டான். கீழே விழுந்த யானையின் அறுபட்டு விழுந்த பாகங்கள் அசைந்த வண்ணமே இருப்பது போலாம்.

(விரிவுரை) இதற்கு முன் சந்திரனுடைய கலங்கமும் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கின்றது என்று பேசினார். இங்கு சந்திரனைச் சிங்கமாகவும் இருளை யானைகளாகவும் குறிப்பதோடு நிற்காமல் மரத்தடிகளில் ஏற்படும் அசைவுகளை அழகாக வர்ணிக்கிறார்.

தலேஷ்வவேபந்த மஹீருஹாணாம் அடிப் பகுதிகளில் அசைவு பெற்றன என்று பொருள். மஹீருஹாணாம் மரங்களின்-(அடிப் பகுதிகளில்) என்றபடி.

சாயாஸ்ததா மாருதகம்பிதாநாம் காற்றினால் உலுக்கப்பட்ட மரங்களின் நிழல்கள் அப்பொழுது அசைந்தன என்று பொருள். மாருதகம்பிதாநாம் மஹீருஹாணாம் சாயா: ததா தலேஷு அவேபந்த என்று அன்வயக்ரமம். **சசாங்கஸிம்ஹேந தமோகஜாநாம்** சசாங்கம் என்பது சிங்கம். தமஸ்ஸாகிற யானைகளுடைய என்று பொருள்.

லூநாக்ருதீநாமிவ காத்ரகண்டா: அறுபட்ட யானைகளின் உடல் துண்டுகள் போல் என்று பொருள். சந்திரனை சிங்கமாகவும் இருட்களை யானைகளாகவும், கூறி, நிழல்களின் அசைவுகள் மட்டும் யானைகளின் துண்டிக்கப்பட்ட உடற் பகுதிகள் துடிக்கின்றன போல் உள்ளன என்று உத்ப்ரேக்ஷிக்கிறார். உடற் பகுதிகளைப் போல் நிழல்களின் அசைவுகள் இருந்தன என்பது ரஸம். 66வது சுலோகத்தில் நிசாகர: ஸிம்ஹதசாம் அயாஸீத் என்று கூறினார். இங்கு நிழல்களை-யானையின் உடல் பகுதிகளாக வர்ணிப்பதில் நோக்கு என அறியவேண்டும்.

तमस्तरङ्गान् अवसादयन्त्या
समेयुषी चन्द्रिकया महत्या ।
श्यामा बभौ सान्द्रनवोत्पलश्रीः
सुरस्रवन्त्येव कलिन्दकन्या ॥ ८२ ॥

தமஸ் தரங்காந் அவஸாதயந்த்யா
ஸமேயுஷீ சந்த்ரிகயா மஹத்யா
ச்யாமா பபௌ ஸாந்த்ர நவோத்பலஸ்ரீ:
ஸுரஸ்ரவந்த்யேவ கலிந்த கந்யா **(82)**

(கருத்து) இருளாகிற அலைகளை அடக்குவதாயும், மிகப் பெரியதாயும் உள்ள தேவகங்கை போன்றதொரு நிலவுடன் கறுநைதல்கள் பூத்துத் தனிச் சிறப்புடைய இரவு என்ற யமுநை என்ற பெண் கலந்து மிகவும் விளங்கு வதாம் என்று பொருள்.

(விரிவுரை) இதற்கு முந்திய சுலோகத்தில் நிழல் களின் அசைவுகளைப் பற்றிக் கூறினர். இங்கு கங்கையும் யமுனையும் கலந்ததோ என்று சொல்லும் வகையில் நில வுடை அவ்விரவு விளங்கியது என்கிறார்.

தமஸ் தரங்காந் அவஸாதயந்த்யா இருளாகிற அலைகளை அல்லல் பெறச் செய்ததான என்று பொருள். இது சந்த்ரிகயா என்பதோடு சேரும். ப்ரகாசத்தை அலை களாக வர்ணிப்பது வழக்கம். அது இருளுக்கும் பொருந் தும் என்பர் போலும். அஜ்ஞான அலைகளையும் நம்மால் காணமுடிகிறது.

ஸமேயுஷீ சந்த்ரிகயா மஹத்யா பெரிதான நில வுடன் இணைந்து என்று பொருள். ஸமேயுஷீ என்பது ச்யாமா என்பதோடு சேரும். மஹத்தான நிலவுடன் என்பதாம். இருளைத் தலை தூக்காமல் அடிப்பதே மஹத் துவத்திற்கு காரணமாகும். மஹத்யா என்பதை ஸுரஸ்ர வந்த்யா என்பதோடு சேர்க்கவேண்டும்.

ச்யாமா பபௌ ஸாந்த்ரநவோத்பலஶ்ரீ: அடர்த்தி யான நீலகமலங்கள் மொட்டித்தும் மலர்ந்தும் இருக்கும் அழகுடைய இரவு மிகவும் நன்றாக விளங்கியது என்று பொருள். ச்யாமா என்பதற்கு வயதுப் பெண் என்றும் இரவு என்றும் பொருள். நவோத்பலம், கறுநைதல் மலர்கள், நீலோத்பலம் என்று ப்ரஸித்தம். அது அடர்த்தி யாய் இருப்பது என்பதாம். குமுதமும் கைரவமும் வெளுத் திருக்கும், உத்பலம் கறுத்திருக்கும்.

ஸுரஸ்ரவந்த்யா இவ களிந்தகந்யா கலிந்தகந்யா யமுநை தேவகங்கையினுல் போல் என்று பொருள். யமுநைபோல் இரவு விளங்கியது என்று தேர்ந்தபொருள், யமுனை கறுப்பு, கங்கை வெளுப்பு என்பது ப்ரஸித்தம். இப்பொழுது எங்கும் நிலவு நிலவியிருப்பதால் கறுப்பு கண்களில் படவில்லை. நிலவின் ஒளியில் இருள் அடங்கி விட்டது. கங்கையின் வெளுப்பு கலந்தபொழுது யமுனை யின் கறுப்பு அடங்கிவிடும். இவ்விரவு இருந்தது. களிந்த கந்யா ச்யாமா இவ பபௌ என்றும், ச்யாமா களிந்த கந்யேவ பபௌ என்றும் கொள்ளலாம். அடர்த்தியான- புதிய-உத்பல மலர்களின் சோபையைப் பெற்றிருக்கும் யமுனை போல் என்றும் கொள்ளவேண்டும். யமுனையும் ஆறு, கங்கையும் - ஆறு, ஆதலால் இருளலைகள் எனப் பட்டது. சந்த்ரிகையோடு கலந்த ச்யாமா (இரவு) கங்கை யோடு கலந்த யமுனை போல் ஆயிற்று என்பதாம். ஒரு பெண்ணுக்கு அடங்கின மற்றொரு பெண் போல் இரவு என்ற பெண் விளங்கினள் என்பது ரஸம்.

स्वविप्रयोगव्यसनान्निपीतं
भृङ्गापदेशेन कुमुद्वतीभिः ।
सुधाभिराप्लाव्य करस्थिताभिः
प्रच्यावयामास विषं सुधांशुः ॥ ८३ ॥

ஸ்வவிப்ரயோக வ்யஸநாந் நிபீதம்
ப்ருங்காபதேசேந குமுத்வதீபி:
ஸுதாபி ராப்லாவ்ய கரஸ்திதாபி:
ப்ரச்யாவ யாமாஸ விஷம் ஸுதாம்சு: (83)

(கருத்து) தனது பிரிவினுல் துயருற்று, ஆம்பல் ஓடைகள் வண்டுகளை வாயில் போட்டுக்கொண்டு விட்டன. வாழ முடியாது என எண்ணி விஷத்தையுட் கொண்டு விட்டன. சந்திரன் தோன்றினுன். தனது காதலிகள் விஷம் குடித்து விட்டதை அறிந்தான். தனது கையில் உள்ள அமுதத்தை அவர்கள் மீது கொட்டினுன். குமுதங்கள் வாய் திறந்தன. அப்பொழுது வண்டுகள் வெளியேறி விட்டன என்பதாம்.

(விரிவுரை) இரவின் பெருமையை முன் சுலோகத்தில் கூறினுர். இதில் ஆம்பல் கண் மலரும் அழகினை அழகாக வர்ணிக்கிறுர்.

ஸ்வ விப்ரயோக வ்யஸநாத் நிபீதம். தனது பிரிவாற்றுமை தாங்காது குடிக்கப்பட்டது என்று பொருள். பிரிவாற்றுமை எதைத் தான் செய்யாது! ராமன் சீதையை மறுத்த பொழுது பிரிவு என்ற சொல்லும் தாங்க மாட்டாமல் விஷமத்யைவ பாஸ்யாமி என்றும் கூறுவள் எனின் ஆம்பலோடைக்கு கேட்கவும் வேணுமோ! வ்யஸநம் தாங்காது குடித்து விட்டது என்பது ரஸம்.

ப்ருங்காபதேசேந குமுத்வதீபி: வண்டெனும் வியாஜத்தினுல் ஆம்பலோடைகளால் என்று பொருள். குமுத்வதீபி: நிபீதம் என்று அந்வயம். பகலில் ஆம்பல்கள் மலருவதில்லை. மொட்டித்தே இருக்கும். அப்பொழுது அதில் வண்டு சிக்கிக் கொண்டு அதிலேயே இருக்கும். குமுத்வதீபி: என்று பெண்பாலும், பன்மையும் ரஸம். ஆம்பலோடைகளின் பதிபக்தியே அலாதியானது.

ஸுதாபி: ஆப்லாவ்ய கரஸ்த்திதாபி: தனது கையிலிருந்த அமுதங்களைக் கொண்டு ஆம்பல்களை நனைக்கிறுன் சந்திரன், அமுதம் பட்டதும் ஏற்பட்ட நிலையை மேலே கூறுகிறுர்.

ப்ரச்யாவயாமாஸ விஷம் ஸுதாம்சு: சந்திரன் விஷத்தைக் கக்க வைத்து விட்டான் என்று பொருள். கிரணம் பட்டவுடனே ஆம்பல் அலர்கின்றது. உடனே அதில் இருந்த வண்டுகள் பறந்து சென்று விடுகின்றன என்பதாம். அத்புதமான வர்ணனம். ஸுதாம்சு: என்பதால் கிரணங்களிலேயே (கைகளிலேயே) எப்பொழுதும் ஸுதையை வைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. குமுத்வதிகளின் ஸ்வபாவ மறிந்தும் எப்பொழுதும் கையில் வைத்திருக்கலாம். ஒஷதீசன் ஆனபடியால் விஷத்தைக் கக்க வைத்து விட்டான் போலும்! ஆம்பல் வண்டெனும் விஷத்தைக் குடித்து சந்திரன் உதயமானவுடன் விஷத்தைக் கக்கி விட்டு மகிழ்ந்து மலர்கின்றது என்று தேர்ந்த பொருள்.

चकाशिरे पत्रकलासमृद्ध्या
व्योमोपमे वारिणि कैरवाणि ।
कलङ्कदृश्यभ्रमराणि काले
स्वनाथसाधर्म्यमुपागतानि ॥ ८४ ॥

சகாசிரே பத்ர கலா ஸம்ருத்யா
வ்யோமோபமே வாரிணி கைரவாணி
கலங்க த்ருச்ய ப்ரமராணி காலே
ஸ்வநாத ஸாதர்ம்யம் உபாகதாநி. 84

(கருத்து) ஓடைகளில் நீர் ஆகாயம் போன்றது. அதில் ஆம்பல் மலர்கள் மலர்ந்துள்ளன. அம்மலர்களிலும் இதழ்கள் கலைகள் போல் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றில் வண்டுகள் அமர்கின்றன. வெளுத்த அம்மலர்

களில் கறுத்த வண்டுகள் அமரும் பொழுது ஆம்பல்கள் இரவில் தனது கணவனை சந்திரனோடு நிகரான தன்மையையும் பெற்று விட்டன போல் இருக்கின்றன. ஆகாயமும் நீரும் ஒன்று. சந்திரனும் ஆம்பல் மலரும் ஒன்று சந்திரனிடம் உள்ள களங்கமும் மலரில் உள்ள வண்டும் ஒன்று. ஆக ஆம்பல் சந்திர ஸாம்யம் பெற்று விட்டது என்கிறார்.

(விரிவுரை) இதற்கு ஆம்பல் ஓடைகளின் நிலைகளைக் கூறினார். இப்பொழுது ஆம்பலில் வண்டு அமர்ந்திருக்கும் அழகை வர்ணிக்கிறார்.

சகாசிரே பத்ர கலாஸம்ருத்யா தளங்களின் இதழ் களின் ஸம்ருத்தியினால் விளங்கின என்று பொருள். மலரிதழ்களும் கலைகள் போல் உள்ளன. பத்ராணி-தலாநி-கலா இவ தாஸாம் ஸம்ருத்யா என்று விவரித்தார் தீக்ஷிதர்.

வ்யோமோபமே வாரிணி கைரவாணி ஆகாயத்துக்கு நிகரான நீரில் ஆம்பல் மலர்கள் என்று பொருள். நீர் நிலை வான் போல் தெளிவாகவுள்ளது என்பது ரஸம்.

கலங்கத்ருச்ய ப்ரமராணி காலே இரவில் களங்கம் போல் அழகான வண்டுகள் என்றபடி, இது கைரவாணீ என்பதற்கு விசேஷணம். இந்த ஆம்பல்கள் விளங்கின என்பதோடு சேரும்.

ஸ்வநாத ஸாதர்ம்யம் உபாகதாநி - தனது கணவனுக்கு நிகராகும் தன்மையை பெற்றுவிட்டன என்று பொருள். ஆம்பல் கொடிகளுக்கு கணவன் சந்திரன். ஆம்பலின் முகங்கள் கணவனைக் கண்டால் தான் மலரும். உபாகதாநி இவ என்று சேர்த்துக் கொள்ளவேண்டும். அடைந்துவிட்டன போல் விளங்கின என்பதாம், இங்கு ஜீவர்கள் நாராயணனோடு அடையும் ஒப்புமை போல் இருந்தது என்று டிப்பணியில் விவரித்தார். கைரவாணீ சகாசிரே என்பது முக்ய வாக்யம்.

सरिन्मुखोपाहृतमम्बुराशिः
पीत्वेव तोयं मधु जातहर्षः ।
चकारचन्द्रप्रतिबिंबितानां
करग्रहैः कामपि रासलीलाम् ॥ ८५ ॥

ஸரிந் முகோபாஹ்ருதம் அம்புராசிঃ
பீத்வேவ தோயம் மது ஜாதஹர்ஷঃ
சகார சந்த்ரப்ரதிபிம்பிதாநாம்
கரக்ரஹைঃ காமபி ராஸலீலாம். (85)

(கருத்து) ஆறுகளின் வாயிலாக அளிக்கப் பெற்றதான இனிய நீரினை மது அருந்துவது போல் அருந்திவிட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்த கடலானது, சந்திரனின் ப்ரதிபிம்பங்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு விலக்ஷணமான ராஸலீலை புரிந்தது.

(விரிவுரை) 71வது சுலோகத்தில் இக்கருத்தே அழகாக கூறப்பட்டது அங்கு தாண்டவம் ஆததாந என்று கூறப்பட்டது. இந்த சுலோகத்தில் அது ராஸ லீலையாக அமைந்துவிட்டது என்று விசேஷித்து கூறப் படுகிறது. மேலும் அங்கு ப்ரியாமுகை: என்று பொது வாக உள்ளது. இங்கு ஸரிந்முகை: ஆறுகளின் வாயிலாக என்றும் கூறப்படுகிறது. இதற்கு முன் சுலோகத்தில் ஆங்காங்கே இருக்கும் ஆம்பல்களும் ஓடைகளும் நாதனுடன் ஸாம்யத்தைப் பெற்றுவிட்டன என்றார். இங்கு நீரில் விழும் சந்திர ப்ரதிபிம்பங்கள் அலைகளின் அசைவால் ஒரு அழகான ராஸலீலையே செய்துவிட்டன என்கிறார்.

ஸரிந்முு கோபாஹ்ருதம் அம்புராசி: ஆறுகளின் வாயிலாக உபஹாரமாக ஆதரத்துடன் அளிக்கப் பட்டதை. அம்புராசி - தோயம் பீத்வா என்பதோடு சேரும். இங்கு அம்புராசி என்பதற்கு நீர்தேக்கம் (மடு ஏரி - குளம்) என்று பொருள் கொள்ளலாம். அத்தகைய நீர் நிலைகளிலிருந்த ஆம்பல்களின் நிலைகளை வர்ணித்து வரும் ப்ரகரணமானதால் இவ்வாறு கொள்வதில் குறை யில்லை. நீர் தேக்கங்களுக்கு ஆறுகளின் வாயிலாகத்தான் நீர் கிடைக்கும். உப ஆஹ்ருதம் என்பதும் சேரும்.

பீத்வேவ தோயம் மது ஜாதஹர்ஷ: ஜலத்தை மது குடிப்பது போல் குடித்துவிட்டு ஹர்ஷம் மேலிட்ட தாய் என்று பொருள். அம்புராசி: ஜலாசயம் என்பதற்கு விசேஷணம் ஜாதஹர்ஷ: என்பது, ஆற்றிலிருந்து நீர் பாயும் பொழுது ஜலாசயங்களின் பூரிப்பைக் காண இயலும். அப்பொழுது அலைகள் மோதும்.

சகார சந்த்ர ப்ரதிபிம்பிதாநாம் சந்திரனின் ப்ரதி பிம்பங்களின் என்று பொருள். கரக்ரஹை: என்பதோடு சேரும். பிம்பம் ஒன்று தான். ஆனால் ப்ரதிபிம்பங்கள் பல. ப்ரதிபிம்பங்களிலிருந்தும் கிரணங்கள் கிளம்புகின்றன

கரக்ரஹை: காமபி ராஸலீலாம் கிரணங்களாகிற கைகளைப் பிடித்துக் கொண்டு விலக்ஷணமான ராஸ லீலையை (செய்தது) என்று பொருள். அம்புராசி: ராஸ லீலாம் சகார என்று சேர்ந்த வாக்யம். ராஸலீலை அவதரிக்கப் போகும் எம்பெருமான் செய்த அத்புதம். அவன் விரைவில் அவதரிக்கப் போவதால் இவ்வனுபவம் இயற்கையில் முந்துகிறது. ராஸலீலையில் சில விஷயங்கள் இங்கு கையாளப்படுகின்றன. அங்கு அந்யோந்யாபத் தபாஹுபி: எனப்பட்டதை கரக்ரஹை: என்பர். மேலும் ரேமே ரமேச: வ்ரஜஸுந்தரீபி: யதார்பக: ஸ்வப்ரதிபிம்ப விப்ரம: என்றும் உள்ளது. இங்கும் ப்ரதிபிம்பிதாநாம்

கரக்ரஹை: என்பதும் ரஸம். மேலும் ரஸ சப்தத்திற்கு ஜலம் என்றும் பொருள். அம்புராசியான படியால் அங்கு ஏற்படும் லீலை ராஸம். அதாவது ரஸ (ஜல) ஸம்பந்தி யாகத் தானே அமையும். யமுநாதீரத்தில் ஒவ்வொரு அம்புராசியிலும் ஒவ்வொரு ராஸமண்டலம் அமைந்தது போலாம். காமபி என்பதற்கு ஆஸ்சர்யபூதாம் என்றும் இருகரங்களாலும் பெண்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு என்றும் விவரித்தார் தீக்ஷிதர். ராஸக்ரீடையில் பல கண்ணன் உருவங்கள் இருந்தன. ஆனால் இங்கு சந்திரன் ஒருவன் தான் என்பது தான் விசேஷம் என்றார் டிப்பணியில். ராஸக்ரீடை நடந்த இடம் கடலோர மில்லை. ஆதலால் அம்புராசி என்பதற்கு நீர் நிலை என்றே பொருள் கொள்ளலாம்.

प्रसादभाजोरुभयोरभूतां
उभावनिर्धार्यमिथोविशेषौ ।
नभःस्थले शीतरुचिः सतारे
सकैरवे तत्प्रतिमा च तोये ॥ ८६ ॥

ப்ரஸாத பாஜோரு பயோரபூதாம்
உபாவநிர்த்தார்ய மிதோ விசேஷௌ
நபஸ் ஸ்தலே சீதருசிஸ் ஸதாரே
ஸகைரவே தத்ப்ரதிமா ச தோயே (86)

(கருத்து) இரண்டு இடங்களிலும் தெளிவு உள்ளது. எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்று உறுதியாகச்

செல்ல இயலாது. வானில் சந்திரன். அவனைச் சுற்றி நக்ஷத்திரங்கள். அவ்வாறே நீர் நிலையில் ஆம்பல் கூட்டம் அதன் நடுவில் சந்திரன் ப்ரதி பிம்பம். பிம்பம் நன்றாக உள்ளதா ப்ரதி பிம்பம் நன்றாக உள்ளதா! தீர்மானிக்க இயலாத வகையில் இது அமைந்து விட்டது.

(விரிவுரை) ஆங்காங்கு நீர் தேக்கங்களில் சந்திர கிரணங்களாலும் சந்திரனுடைய பிரதி பிம்பங்களாலும் ஏற்பட்ட நிலைகளைக் கூறினார். இங்கு பிம்ப ப்ரதி பிம்பங்களில் வாசி கண்டறிவதும் கஷ்டமாயிருக்கும் என்கிறார்.

ப்ரஸாத பாஜோ: உபயோ: அபூதாம். தெளிவினைப் பெற்ற இரண்டினுள் என்று பொருள். அபூதாம் ஆயின. ப்ரஸாதம் என்பது அழுக்கற்ற நிலை. நத்ய: ப்ரஸந்ந ஸலிலா: ஹ்ரதா ஜலருஹச்ரிய: என்றார் ஸ்ரீசுகர். ககநம் நிர்மலோடு கணேதயம் என்று கூறினார். ஆதலால் நீரும் வானும் தெளிவாகவுள்ளன என்பதாம்.

உபௌ அநிர்த்தார்ய மிதோ விசேஷௌ தீர்மானிக்க முடியாத தான விசேஷத்தை உடையவைகளாக இரண்டும் ஆயின. விசேஷம் என்பதற்கு பேதம் என்று பொருள். ஒன்றுக்கே விசேஷம்-பெருமை என்று சொல்ல இயலவில்லை. அவ்விரண்டு எவை! மேலே கூறுவர்.

நபஸ்த்தலே சீதருசி: ஸதாரே. நக்ஷத்திரங்கள் நிறைந்த வானவெளியில் சந்திரன் நிலவுகிறான். ககநம் நிர்மலம், தெளிவான வானம். அவ்வாறே.

ஸகைரவே தத்ப்ரதிமா ச தோயே தெளிவான-ப்ரஸந்ந ஸலிலமான நீர் நிலை. இது வானுக்கு ஒப்பாகும்.

இதில் ஆம்பல் மலர்ந்திருக்கிறது. இது நக்ஷத்திரங்களுக்கு ஒப்பாகும். அன்றியும் அந்த சந்திரனின் ப்ரதிமை இங்கு. அசைவற்ற நீரில் சந்திர பிம்பம் அழகாக இருக்கும். இங்கு இதை ஸ்வாமி எது உயர்ந்தது என்று தீர்மானிக்க முடியவில்லையே என்று வியக்கிறார். கைரவம்—ஆம்பல்.

नभस्तुषारांशुमयूखयोगात्

तमिस्रया मोक्षमविन्दतेव ।

अतृप्यतः तत्वविदो निशायां

अन्तर्मुखं चित्तमिवात्मयोगात् ॥ ८७ ॥

நபஸ் துஷாராம்சு மயூக யோகாத்
தமிஸ்ரயா மோக்ஷம் அவிந்ததேவ
அத்ருப்யத: தத்வ விதோ நிசாயாம்
அந்தர் முகம் சித்தமிவாத்ம யோகாத். (87)

(கருத்து) ஆகாயம் சந்திரனுடைய கிரணம் பெற்ற யோகத்தினால் இருளிலிருந்து விடுதலையை அடைந்தது போலாயிற்று. இதற்கு ஒரு உதாரணம். தத்வஜ்ஞானிக்கு புற விஷயங்களில் த்ருப்தி ஏற்படுவதில்லை. ஆத்மாவில் ஏற்பட்ட யோகத்தில் இரவிலும் அவனுடைய உள்ளம் அந்தர்முகமாகவே உள் நோக்கியே இருக்கும். அந்த அக்ஞானம் அவனை அண்டுவதில்லை.

(விரிவுரை) முன் சுலோகத்தில் தெளிவான வானத்தைப் பற்றிய உல்லேகம் செய்யப்பட்டது. இங்கு இருள

கன்றமை என்ற பெருமை பேசப் படுகிறது. மநாம்ஸி ஆஸந் ப்ரஸந்நாநி ஸாதூநாம் என்றார் ஸ்ரீசுகர். அது நினைவில் கொண்டு இந்த சுலோகம் அவதரிக்கிறது.

நபஸ் துஷாராம்சு மயூக யோகாத் ஆகாயமானது சந்திரனுடைய கிரணங்களின் யோகத்தால் என்று பொருள். துஷாராம்சு-சந்திரன்' மயூகம்-கிரணம்.

தமிஸ்ரயா மோக்ஷம் அவிந்தத இவ. இருளின் பிடியிலிருந்து மோக்ஷத்தை—விடுதலையை அடைந்தது போல் இருந்தது. பஞ்சம்யர்த்தே த்ருதீயா என்று கொள்க. இதற்கு அழகான தொரு உவமை கூறுவர்.

அத்ருப்யத: தத்வவிதோ நிசாயாம் தத்துவக் ஞாநியின் இதயம் போலே த்ருப்தியற்றிருக்கும் என்று பொருள். தத்துவம் தெரிந்து விட்டால் புறவிஷயங்களில் அவர்களுக்கு ப்ரீதி-பூர்த்தி த்ருப்தி ஏற்படுவதில்லை. இது ஒரு யோகம். இவர்கள் விழித்திருப்பர். இவர்களுடைய உள்ளம் பஹிர்முகமாக ஸுகபோகாதிகளை நாடுவதில்லை. இதை மேலே கூறுவர்

அந்தர்முகம் சித்தமிவ ஆத்மயோகாத். ஆத்ம யோகம் ஆத்மாவின் யோகத்திற்கு அமைந்தது. யோகாப்யாஸத்தினால் ஆன்மாவில் ஒருவித ஸாக்ஷாத்காரம் ஏற்படுவது இயற்கை. பராஞ்சி காநி வ்யத்ருணத் என்பதை நினைக்க. அந்தர் முகமாவது பெருமை. பஹிர்முகமானால் அதோ முகமும் அதோ கதியும் தான் அமையும்.

सहोदिता चन्द्रमसा बभासे
ज्योत्स्ना पयोधेरुपजातरागा ।
तदानने संजननेऽपि शौरेः
सहायिनी सागरसंभवेव ॥ ८८ ॥

ஸஹோதிதா சந்த்ரமஸா பபாஸே
ஜ்யோத்ஸ்நா பயோதேருபஜாதராகா
ததாதநே ஸஞ்ஜநநேபி சௌரே:
ஸஹாயிநீ ஸாகர ஸம்பவேவ. (88)

(கருத்து) சந்திரன் உண்டானான். அவனோடு அவன் ஒளியும் தோன்றியது. அப்பொழுது அது சிகப்பு கலந்திருந்தது. உதயமாகும் பொழுது அந்த ராகம் இருந்தே தீரும். நிறம் மாறினாலும் நிலவில் அதன் குணம் மாறுவதில்லை. எப்பொழுதுமே உடனிருக்கும். இது தான் ஜ்யோத்ஸ்நா எனப்படும் நிலவு. இப்பொழுது சௌரி பிறக்கப் போகிறான். ராகமுடைய நிலவு ஸஹாயமாகவே அப்பொழுதும் இருந்தது. இந்த நிலவு ஸமுத்திரத்தில் தோன்றிய லக்ஷ்மீ போல் விளங்கியது. அவளும் சந்திர ஸஹோதரி. பிறக்கும் பொழுது அனுராகத்துடன் பிறந்தவள் என்பதாம்.

(விரிவுரை) முன் சுலோகத்தில் வானத்தின் யோகத்தைக் கூறினார். இதில் நிலவின் பெருமையை விளக்குவர்.

ஸஹோதிதா சந்த்ரமஸா பபாஸே. சந்திரனோடு உடன் பிறந்ததாய் மிகவும் விளங்கியது என்று பொருள். இது ஜ்யோத்ஸ்நா என்பதோடு சேரும். ஒளியோடு தானே சந்திரன் பிறப்பது! சந்திரனுடன் பிறந்தது என்பது லக்ஷ்மிக்கும் பொருந்தும்.

ஜ்யோத்ஸ்நா பயோதே: உபஜாதராகா சமுத்திரத்திலிருந்து உதிக்கும் பொழுதே சிவந்திருந்த தான ஜ்யோத்ஸ்நா என்றபடி. சந்த்ரிகா என்று கூறாமல் ஜ்யோத்ஸ்நா என்பது ஸாபிப்ராயம். சந்திரனுக்கு அர்க்யப்ரதானம் பண்ணும் பொழுது "ஜ்யோத்ஸ்நா பதே என்று சந்திரனை அழைப்பது. அவதார காலம் இங்கும் நெருங்குவதால் அச்சொல் நினைவில் இருப்பதாம். முதலில் சிவந்த நிலவு தான் பிறகு தெள்ளியதாகும். ராகம் ஸஹஜம் ஆனால் உபஜாதம் என்பது ரஸம். ஸஹஜமானால் மறையாது. உபஜாதமானால் பிறகு சிகப்பு நிறம் மறையும் என்பதாம். அநுராகம் வெளிப்படையாகத் தோன்றலாம்-பிறகு உள்ளேயே இருக்கலாம்.

ததாதநே ஸஞ்ஜநநேபி சௌரே: ஸஞ்ஜனனம் ஸம்பவம். அவதாரம், பிறப்பு என்பதாம். சௌரி பல அவதாரங்கள் எடுத்தவன். பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி என்று சொல்லப் போகிறவன். அவன் இப்பொழுது பிறக்கவிருக்கிறான். ததாதநம் என்பதற்கு அப்பொழுது ஏற்பட்ட தான என்று பொருள். அப்பிறப்பிலும்-என்று அபிசப்தம் கூறும். பல உருவங்களில் தோன்றுவது போல் என்று கொள்ளாமல் ஸஞ்ஜநநம் எனப்பட்டது.

ஸஹாயிநீ ஸாகர ஸம்பவேவ கடலில் பிறந்த லக்ஷ்மி எப்பொழுதும் இருப்பது போல் விளங்கியது என்று பொருள். லக்ஷ்மியும் பிறக்கும் பொழுது அநுராகமுடையவள். வக்ஷஸ்தலத்தை அடைந்தவுடனே வித்யுல்லேகை போல் பாஸ்வரமானவள் என்பதையும் நினைக்க வேண்டும். க்ருஷ்ணனாகப் பிறக்கும் பொழுது அவள் ருக்மிணியாக வருவாள் என்பர். என்றும் அநபாயிநி லக்ஷ்மி, இங்கு ஸஹாயிநீ என்பதற்கும் அதே பொருள் தான். விச்லேஷமின்மை அநபாயிநீ. உடனிருத்தல் ஸஹாயிநீ என்று கொள்க.

प्रबुद्धताराकुमुदाब्धिचन्द्रे
निद्राणनिश्शेषजने निशीथे ।
स तद्दशो देवपतेः प्रसूतिं
पुष्यन् बभौ पुण्यतमो मुहूर्तः ॥ ८९ ॥

ப்ரபுத்த தாரா குமுதாப்தி சந்த்ரே
நித்ராண நிச்சேஷ ஜநே நிசீதே
ஸ தாத்ருசோ தேவபதே: ப்ரஸூதிம்
புஷ்யந் பபௌ புண்யதமோ முஹூர்த்த: (89)

(கருத்து) நக்ஷத்திரங்கள், ஆம்பல், கடல், சந்திரன் ஆகியவை விழிப்புடன் உள்ளன. மற்றைய உலகெல்லாம் உறங்குகிறது. அத்தகைய நள்ளிரவில் அவ்வளவு சிறப்பான ஒரு முஹூர்த்த வேளை. தேவநாதனின் ப்ரஸவத்தை பலப் படுத்திக் கொண்டு ஏற்பட்டு விட்டது.

இதல்லவோ புண்யதமமான முஹூர்த்தம். பகவதவதார ஸமயம்.

(விரிவுரை) ஆகாயத்திற்கும் இருளிலிருந்து விடு படும் பெரிய பேறு கிடைத்தது என்றும், தத்துவக் ஞாநியின் உள்ளம் அந்தர் முகமாகவே இருந்தது என்றும் குறிப்பிட்டார். இங்கு பகவதவதார முஹூர்த்தம் ஏற்பட்டிருப்பதை விளக்குகிறார்.

ப்ரபுத்த தாரா குமுதாப்தி சந்த்ரே சந்திரன் நக்ஷத்திரங்கள் ஆம்பல் ஆழ்கடல் ஆகியவை விழித்துக் கொண்டிருக்கின்றன. இது இயற்கை. இது நிசீதே என்ப தற்கு விசேஷணம். ப்ரபோதமாவது ஒளிர்விட்டு விளங் குவது. விழித்துக் கொண்டிருப்பவர்களை முதலில் கூறினார். வானில் இரண்டும், தரையில் இரண்டும் விழித்துள்ளமை கூறப்பட்டது.

நித்ராண நிச்சேஷஜநே நிசீதே ஜனஸமுதாயம் முழுவதும் பாக்கியில்லாமல் உறங்குகின்றது. இத்தகைய நிசீதே — நள்ளிரவில் என்று பொருள். ஒரு புறம் விழிப்பு மறுபுறம் உறக்கம். யார் விழித்துக் கொண்டிருக்க வேண்டுமோ அவர்கள் உறங்குவது என்பது குறிப்பிடத் தக்கது.

ஸ தாத்ருசः தேவபதேः ப்ராஸூதிம் தேவர்களுக் கெல்லாம் நாதனின் பிறப்பினை பூரிப்பதாய். அதுவும் - அத்தகையதும் என்று ஸ: தாத்ருச: என்பதற்குப் பொருள். தாத்ருச: என்பதற்கு ஷஷ்டீ விபக்தியில் பொருள் கூறப்பட்டது டிப்பணியில். அப்படிப்பட்ட தேவபதியினுடைய என்பதாம். தேவபதே: பதிம்விச்வஸ்ய

என்று சொல்லப்பட்டவன், பரதேவதேதி விதித: எனப் பட்டவன். தேவநாதன் தேவராஜன் என்று அழைக்கப் பெற்றவன். தகப்பனோ வஸுதேவர். தாயோ தேவகி. இவரோ தேவபதி, மூவருக்கும் தேவத்வம் என்பது ஸமானம். ப்ரஸூதிம் என்பதற்கு அவதாரம் என்று பொருள். தேவகியின் ப்ரஸவகாலம் அணுகுவதால் ப்ர ஸூதிம் என்றே வ்யவஹரிப்பர்.

புஷ்யந் பபௌ புண்ய தமோ முஹூர்த்தः புஷ்யந் ஸம்பாதயந் என்று உரை. இது புண்யதமமான முஹூ ர்த்தம் நல்லவேளை என்பதாம். ஸர்வகுணோபேத: கால: பரம சோபந: என்றார் ஸ்ரீசுகர்.

भागेन पूर्वेण तमोमयेन
प्रकाशपूर्णेन च पश्चिमेन ।
तदा निशीथः स सतां प्रसत्त्यै
संसार मुक्त्योरिव सन्धिरासीत् ॥ ९० ॥

பாகேந பூர்வேண தமோமயேந
ப்ரகாச பூர்ணேந ச பஸ்சிமேந
ததா நிசீதः ஸ ஸதாம் ப்ரஸத்யை
ஸம்ஸார முக்த்யோரிவ ஸந்திர் ஆஸீத் (90)

(கருத்து) முன் பகுதியினால் இருண்மயமானது. பின் பகுதியினால் விசேஷமான ப்ரகாசம் உடையது. இத்தகைய இரவு என்றபடி. ஸத்துக்களின் உள்ளம் தெளிய அமைந்து

விட்டது. மேலும் இதை ஸம்ஸாரம்-முக்தி இவைகளின் இணைப்பு வேளையென்றே சொல்லலாமே. என்கிறார்.

(விரிவுரை) இதற்கு முன் சுலோகத்தில் நள்ளிரவும் நல்ல முஹூர்த்தமும் அமைந்து விட்டது என்றார். மேலும் இங்கு அந்த நள்ளிரவின் பெருமையை கூறுகிறார்.

பாகேந பூர்வேண தமோமயேந முன் பகுதி இருண்மயமாக இருந்தது என்று பொருள். இரவின் பூர்வராத்ரி எனப்படும். க்ருஷ்ண பக்ஷ அஷ்டமியாதலால் சந்திரோதயம் அர்த்த ராத்திரியில் தான் அமையும். ஆதலால் முன் பகுதி இருண்மயமாக இருந்தது. தமோமயேந என்பதற்கு தம: ப்ரசுரமான என்று உரையிட்டார். பின் பகுதி இருளாயிருப்பது மிகவும் மட்டமாகும். முன் பகுதியானதால் நலமே என்றபடி.

ப்ரகாச பூர்ணேந ச பஸ்சிமேந பின்பகுதி வெளிச்சம்நிறைந்த தாய் என்று பொருள். நிறைந்திருக்கும் என்பதாம்.

ததா நிசீதః ஸ ஸதாம் ப்ரஸத்யை அப்பொழுது இருந்த அந்த நள்ளிரவு நல்லோர்களின் மன நிறைவுக்காக ஆயிற்று. மநாம்ஸி ஆஸன் ப்ரஸந்நாநி ஸாதூநாம் அஸுரத்ருஹாம் என்றார் ஸ்ரீசுகர். அதையே இங்கு ஸ்வாமியும் ஸதாம் ப்ரஸத்யை என்று குறிப்பிடுவர் போலும். ஸதாம் என்பதற்கு ப்ரம்ஹவித்துக்கள் என்று பொருள் கூறினார் தீக்ஷிதர்.

ஸம்ஸார முக்த்யோரிவ ஸந்திః ஆஸீத் ஸம்ஸாரத்திற்கும் முக்திக்கும் இடைவேளை ஆகிவிட்டது என்று

பொருள். ஸம்ஸாரம் இருண்மயம். முக்தி ப்ரகாசமயம். இரண்டும் பெற்றது இந்த நள்ளிரவு ஸம்ஸாரம் தீர்ந்து முக்தி வரும் ஸமயம். பகலுக்கும் இரவுக்கும் இடைவேளையை ப்ராதஸ் ஸந்த்யை என்பது. பகலையும் இருளையும் இணைக்கும் மாலை வேளையை ஸாயம் ஸந்த்யை என்பது. பூர்வான்ஹத்தையும் அபரான்ஹத்தையும் சேர்க்கிற பகுதியை மாத்யான்னிகஸந்த்யை என்பது. ஸம்ஸாரத்திற்கும் முக்திக்கும் இடைவேளையான இணைப்பு வேளை. ஸந்த்யாகாலம் புண்ய காலம். முன்பு புண்யதமோ முஹூர்த்த: என்றார். இங்கு அந்த நள்ளிரவு புண்யமாக எப்படியானது! இருட்டிலிருந்து விடுதலை ப்ரகாசத்தில் ப்ரவேசம். இரண்டும் இரவிலேயே ஏற்படுவதால் இந்நிலை. வ்யஸநோதயாப்யாம் லோகோ நியம்யத இவ என்றான் காளிதாஸன். ஸம்ஸார முக்த்யோரிவ ஸந்தி: ஆஸீத் என்பர் ஸ்வாமி. இங்கு பாகேந பூர்வேண என்று சாதாரணமாகச் சொல்லி பஸ்சிமேந என்றபொழுது பூர்ணேந என்பது ரஸம். இங்கு தீக்ஷிதர் இவ்வாறு விவரித்தார்:— संसार मुक्त्योः सन्धिरपि तमोगुण प्रचुरेण तमोगुण विकारेण वा पूर्व भागेन संसार कालेन, प्रकाश पूर्णेन - अविर्भूत स्वरूप ज्ञान परिपूर्णेन पश्चिमभागेन मुक्ति कालेन च उपलक्षितः ॥ ஸதாம் என்பதற்கு ப்ரம்ஹ வித்துக்களுக்கு என்பது. தத்வ ஜ்ஞானிகளின் ஜீவனகாலம் என்பர் டிப்பணியில். नाथे नः என்ற ச்லோகத்தை இங்கு அனுஸந்திக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். ப்ரக்ருதியிலிருந்து விடுபடுவதும் அப்ராக்ருத தசையை அடைவதும் புகலாம். ஸம்ஸ்ருதி காளராத்ரி விலகலும் முக்தி ப்ரபாதமும் ஏற்படும் உயர்ந்ததொரு நள்ளிரவு. ஆதலால் ஸ: நிசீத: என்று கூறினார். ரஸமயமான ச்லோகம்.

प्रागेव जातेन सितेन धाम्ना
मध्योपलक्ष्येण च माधवेन ।
प्रकामपुण्या वसुदेवपत्न्या
संपन्नसाम्येव निशा बभासे ॥ ९१ ॥

ப்ராகேவ ஜாதேந ஸிதேந தாம்நா
மத்யோபலக்ஷ்யணே ச மாதவேந
ப்ரகாமபுண்யா வஸுதேவபத்ந்யா
ஸம்பந்நஸாம்யேவ நிசா பபாஸே **(91)**

(கருத்து) இந்த இரவு சாதாரணமானதல்ல, முதலிலேயே வெளுப்பு தோன்றியது. இடையில் மாதவனையும் காண்பிக்கிறது. எவ்வளவு புண்யம்! வஸுதேவரின் மனைவியோடு இது ஸாம்யத்தையும் பெற்றுவிட்டது. இது எப்படி விளங்காமல் இருக்கும்!

(விரிவுரை) முன் சுலோகத்தில் நிசீதத்தின் பெருமையை இருள் வெளிச்சம் இரண்டினைக் கொண்டு விவரித்தார். இங்கு அந்த நள்ளிரவுக்கு ஏற்பட்டிருக்கும் மற்றொரு பெருமையையும் கூறுகிறார்.

ப்ராகேவ ஜாதேந ஸிதேந தாம்நா முன்னமேயே உண்டான வெள்ளை யொளியாலே என்று பொருள். ப்ராகேவ என்பதற்கு க்ருஷ்ணாவதாரத்துக்கு முன்னமே என்று பொருள். அன்றியும் இரவு பன்னிரண்டு மணிக்கு முன்னமே என்றும் பொருள். பெருமாளுக்கு முன்னமே தோன்றினான் சந்திரன். ஜோதி வெளுப்பாகத்தானே

இருக்கும். ஸிதேந என்பானேன்! க்ருஷ்ணன் என்ற ஜோதி நிறத்தினால் கறுப்புதானே! அவ்வாறில்லை என்பதாம் தாம்நா என்பதால் இங்கு பலராமனைக் கூறியபடி. ஸப்த மகர்பத்திலேயே சேஷாக்யம் தாம மாமகம் ரோஹிண்யா உதரே ஸந்நிவேசய என்பது பகவத்வாக்யம். வெள்ளிப் பெருமலைக் குட்டன் என்று பெரியாழ்வார் அனுபவம்.

மத்யோபலக்ஷ்யேண ச மாதவேந இடையில் காணப்படும் மாதவனால் என்று பொருள். அந்த இரவின் நடுவில் தோன்றுவதால் ஏற்றம். சந்திரன் பலராமன் லக்ஷ்யமாயினர். க்ருஷ்ணன் உபலக்ஷ்யமாகிறான். இன்னும் அவதரிக்காததால் தேவகி அவனுக்கு உபலக்ஷணமாவாள் போலும். தேவகீ மத்ய பாகத்தில் இடுப்பில் என்றபடி. மாதவன் என்பது கண்ணனுக்குச் சேரும். ராகவன் என்று ராமனைக் குறிப்பது போல் மாதவன் என்பது. யதுவின் புதல்வன் மது. அவனது புதல்வன் என்ற கணக்கிலே மாதவன் என்றும் தேரும். கோத்ராபத்யம் என்று கொள்வது. ஸ்ரீகாந்தன் என்பதும் தோன்றும் போலும்.

ப்ரகாமபுண்யா வஸுதேவ பத்ந்யா நிறைந்த புண்ணியமுடைய - இது நிசா என்பதோடு சேரும். இந்த இரவின் புண்ணியத்தைச் சொல்லத்தான் ஆமோ! அத்யர்த்த புண்யகரீ என்றார் தீக்ஷிதர். பலராமனையும் ஈன்று இப்பொழுது கண்ணனையும் பெறப்போகும். தேவகியும் பரகாம புண்யைதான்.

ஸம்பந்நஸாம்யேவ நிசா பபாஸே ஸாம்யம் பெற்றது போல் அந்நள்ளிரவு விளங்கியது. தேவகியின் ஸாம்யம் பெறுவது எவ்வளவோ புண்ணியத்தினால்தானே

அமையும். ஸம்பந்நம் என்பதற்கு நன்முக அமைந்த என்று பொருள். இது இரவிற்கு ஏற்பட்ட யோகம். 73வது ச்லோகத்தில் இரவுக்கும் தேவகிக்கும் பரஸ்பரம் ஸாம்யம் கூறப்பட்டது. இங்கு நிசைக்கு ஏற்பட்ட பாக்ய விசேஷம் எத்தகையது என்று வியந்து கூறப்படுகிறது. இங்கு உப லக்ஷ்யம் என்பதும் விசேஷம். மேலும் இங்கு தேவகி பல ராமனை முன்னமே பெற்றது என்பதும் ப்ராகேவ ஜாதேந என்பதால் குறிப்பிடப்படுகிறது. முன் ச்லோகத்தில் முதலிலே கறுப்பு என்றூர். இங்கு முதலிலேயே வெளுப்பு என்று சமத்காரமாகவும் குறிப்பிடுவதும் விசேஷம்.

सह प्रतिच्छन्दशशाङ्कभेदैः
सरस्वतां ताण्डविनः तरङ्गाः
अवेक्ष्य शौरेरवतारवेलां
सन्तोष निघ्ना इव संप्रणेदुः ॥ ९२ ॥

ஸஹ ப்ரதிச்சந்த சசாங்க பேதைः
ஸரஸ்வதாம் தாண்டவிநः தரங்காः
அவேக்ஷ்ய சௌரேரவதார வேலாம்
ஸந்தோஷ நிக்நா இவ ஸம்ப்ரணேதுः (92)

(கருத்து) கடல்களில் கிளம்பும் அலைகள் அவதார வேளையை அறிந்து கொண்டு ஸந்தோஷம் தாங்க முடியாதவைகளாய் சந்திரனின் ப்ரதிபிம்பங்களோடு கலந்து குதிப்பும் கொம்மாளமுமாக இரைச்சலிடுகின்றன போல் உள்ளன.

(விரிவுரை) இதற்கு முன் சுலோகத்தில் நள்ளிரவினை தேவகியோடு ஒப்பிட்டுக் கூறினூர். இப்பொழுது அவதார காலம் நெருங்குகின்ற பொழுது நீர்நிலைகளில் ஏற்படும் பூரிப்பினை அழகாக வர்ணிக்கிறூர்.

ஸஹ ப்ரதிச்சந்த சசாங்க பேதைः பிரதிபம்பங்கள் பலவாகி பல சந்திரன்களோடு கூட என்று பொருள். ப்ரதிச்சந்தம் என்பது ப்ரதிரூபத்தை, சந்தம் என்பதற்கு அபிப்பிராயம் என்று பொருள். சந்திரனுக்கும் இவ்வாறு பலவுருவங்கள் கொண்டு ஆடவேண்டும் என்றும் அபிப் ராயம் இருக்கலாம். சசாங்க பேதைः என்பது சசாங்க விசேஷங்கள் என்பதாம். ப்ரதிஸூர்யர்கள் போல் ப்ரதிசந்திரர்கள் கிடையாது. அஷ்டமீ சந்திரனுனபடியும் ஆகலாம். ஆகாயத்தில் பார்த்தால் ஒரு சந்திரன். நீர் நிலைகளில் பல சந்திர உருவங்கள் என்றும் கொள்ளலாம்.

ஸரஸ்வதாம் தாண்டவிநः தரங்காः ஸரஸ்ஸு களில் சிறந்தது கடல். அங்கு எழுந்த அலைகள் தாண்டவம் புரிகின்றன என்று பொருள். பல ஸரஸ்ஸுகளைத் தம்மில் கொண்ட படியால் ஸரஸ்வான் கடல் என்று கொள்ள லாம். கடல்கள் பலவானதால் பன்மை. மற்றைய நீர் நிலைகளையும் கொள்ளலாம். தரங்கங்கள் அலைகள். அவை அசைவதால் சசாங்கபேதங்கள். அலைகள் தாண்டவம் புரிகின்றன, தரங்காः என்று ஆண்பாலானதால் தாண்ட வம் என்றூர். வீசிகள் எனில் லாஸ்யமாகும்.

அவேக்ஷ்ய சௌரேः அவதார வேலாம் சௌரியின் அவதார ஸமயத்தைக் கண்டு கொண்டதாய் என்று பொருள். பிறக்கப் போகிறவன் சௌரி. பகவான் என்று

பொருள். ஸஹஸ்ரநாமத்தில் ஸம்பாதித்த திருநாமம். சூரஜனேச்வரன் என்று சேர்த்தும் படிக்கப்பெற்றது. தரங்கங்களும் கண் பெற்றுவிட்டன. கண் கொடுக்கும் பெருமாளானபடியால் கண்ணன். இவ்வவதாரத்தில் ஏற்பட்ட திவ்ய திருநாமம். கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில் என்றார் பெரியாழ்வாரும். ஸமயத்தைக் கண்டு கொண்டுவிட்டன. ஜன்ம வேளை என்னுமல் அவதாரம் என்பது குறிப்பிடத் தக்கது. கர்ப்ப க்ருஹத்திலிருந்தும் இறங்கி வரப்போகும் சமயம் என்பதாம்.

ஸந்தோஷநிக்நா இவ ஸம்ப்ரணேது: அடக்க முடியாத ஸந்தோஷத்துடன் ஒலியெழுப்பின போல் ஆயின. அலைகளில் எழும் ஓசையை இவ்வாறு குறிப்பிட்டார், நிக்ந சப்தத்திற்கு அதீனம் பரவசம் என்று பொருள். தாண்டவமாடுவதும் தகுந்தபடி ஸந்தோஷ ஆரவாரமும் மங்கள சூசகமாக அமைந்தவை. ப்ரக்ருஷ்டமான நாதம் ப்ரணுதம் வானர சேனைகளின் ஆரவாரத்தை ப்ரணுதம் என்றார் ரிஷி. இங்கு தரங்கநாதத்தை ஸம்ப்ரணுதம் என்பர்.

अवादितोदीरितवाद्यघोषं
दिशाभिराम्रेडितदिव्यगीतम् ।
सतां उपस्थापितसत्त्वलास्यं
सङ्गीतमंगल्यमभूत् तदानीम् ॥ ९३ ॥

அவாதிதோதீரித வாத்ய கோஷம்
திசாபிராம்ரேடித திவ்ய கீதம்
ஸதாம் உபஸ்தாபித ஸத்வலாஸ்யம்
ஸங்கீத மங்கல்யம பூத் ததாநீம் (93)

(கருத்து) ஒரு அழகான ஸங்கீத விழாவே அப்பொழுது நடைபெற்றது என்னலாம். வாசிக்காமலேயே வாத்யகோஷம் ஏற்பட்டது. திக்குகள் எல்லாம் பாட்டின் ஒலியை ப்ரதிபலிக்கின்றன. ஸத்துக்களுக்கு ஸத்வகுணம் நடமாடுகிறது. மூன்றும் சேர்ந்தது தானே ஸங்கீத விழா.

(விரிவுரை) இதற்கு முன் சுலோகத்தில் சௌரியின் அவதார வேளையில் ஸந்தோஷ ஆரவாரம் எவ்வாறு இருந்தது என்பதைக் கூறினார். இங்கு அத்புதமான ஒரு ஸங்கீத மங்களம் ஏற்பட்டதை விவரிக்கிறார்.

அவாதிதோதீரித வாத்யகோஷம் வாசிக்காமலேயே தோன்றியது வாத்யகோஷம் என்று பொருள். வாதனம் - என்பதற்கு அடித்தல் - மீட்டல் வாசித்தல் என்று பொருள். தூர்யநாதம் என்ற பாடமும் காணப்படுகிறது. தூர்யநாதம் என்று விவரித்தார் தீக்ஷிதர். ஆகாசத்தில் ஒலித்த ஓசையாயிருக்கும். **நேதுர் துந்துபயோ** திவி என்றார் ஸ்ரீசுகர். வானவர் அமைத்த வாத்யகோஷம் ஆதலால் அவாதிதோதீரித எனப்பட்டது.

திசாபி: ஆம்ரேடித திவ்யகீதம் திக்குகளால் மூன்று முறை என்ற கணக்கிலே எழுந்த திவ்யமான கீதம் என்று பொருள். ப்ரதித்வனியானால் ஒரு முறைதான் கேட்கும். அவ்வாறில்லை என்பதாம். திவ்யம் என்பது

ரஸம் திவி-பவம் திவ்யம், திவி ஜகு : கிந்நர கந்தர்வா: என்றார் ஸ்ரீசுகர். இங்கு திசாபி. என்ற பெண்பாலும் பன்மையும் அமைந்தது ரஸம்.

ஸதாம் உபஸ்தாபித ஸத்வ லாஸ்யம் ஸத்துக் களின் இதயம் மகிழ்ச்சியால் நடனமாடுகிறது என்று பொருள். நந்ருதுஸ் ச அப்ஸரோகணா : என்றார் ஸ்ரீசுகர்.

ஸங்கீத மங்கல்யம் அபூத் ததாநீம் இது சுபமான கல்யாண மங்கள அமைப்பாக அப்பொழுது ஆயிற்று. மேளம் பாட்டு கூத்து என்று சொன்னபடி. கீதம் ந்ருத்தம் ச வாத்யம் ச த்ரயம் ஸங்கீதம் உச்யதே என்று ஸங்கீத ரத்னாகரம் கூறிற்று.

प्रदीपितैः कंसगृहेषु दीपैः
तापैश्च भावेषु तपोधनानाम् ।
अलभ्यत क्षिप्रं अलब्धभङ्गैः
अहेतुनिर्वाणदशानुभूतिः ॥ ९४ ॥

ப்ரதீபிதை : கம்ஸக்ருஹேஷு தீபை :
தாபைஸ்ச பாவேஷு தபோதநாநாம்
அலப்யத க்ஷிப்ரம் அலப்தபங்கை :
அஹேது நிர்வாண தசாநுபூதி : (94)

(கருத்து) கம்ஸனுடைய மாளிகைகளில் ஏற்றப் பட்டிருந்த விளக்குகள் யாவும், தபஸ்விகளின் உள்ளங் களில் அணையாது பெருகி வந்த தாபங்களும் எக்காரணத் தைக் கொண்டும் அழிவு பெறுதவைகளாய் இருந்தவை காரணமே யில்லாமல் அழியும் - அணையும் தன்மையை அடைந்து விட்டன.

(விரிவுரை) மங்கள வாத்ய கீதங்கள் அமைந்ததை முன்பு வர்ணித்தார். இங்கு கம்ஸனுக்கு ஏற்பட்ட அரிஷ் டங்களையும் அதனால் ஸாதுக்களுக்கு ஏற்பட்ட நன்மை களையும் வர்ணிக்கிறார்.

ப்ரதீபிதை: கம்ஸக்ருஹேஷு தீபை: கம்ஸ னுடைய வீடுகளில் ஏற்றிவைக்கப்பட்டிருக்கும் விளக்கு களால் என்று பொருள். தீபங்கள் பல வகையாயிருக்கும். சில மங்கள தீபங்கள். சில அலங்கார தீபங்கள். மங்கள தீபங்களை அணையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். தூங்கா விளக்கு என்றும் சொல்வது உண்டு. ப்ரதீபிதை: என்பதற்கு நன்றாக எரிந்துகொண்டிருந்த என்று பொருள். ப்ரகாசமுடையவை என்பதாம். இரவானபடியால் தீபை: என்று பன்மையில் பேசப்பட்டது. கம்ஸ க்ருஹேஷு என்பதால் வைபவம் கூறப்பட்டது. அணையாதபடி பாது காப்பாக இடங்களில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகள் என்பதாம். இதற்கு அலப்யத என்பதோடு அந்வயம்.

தாபைஸ்ச பாவேஷு தபோதநாநாம் தவத்தையே செல்வமாகப் பெற்றிருந்த நல்லவர்களின் உள்ளங்களில் ஏற்பட்டிருந்த தாபங்களால்—துயரங்களால் என்று பொருள். தபோதனர்களுக்கு சாந்திதானே இருக்க வேண்டும். அது இல்லாமல் போயிற்று. ப்ரதீபிதை: என்ப தையும் தாபை: என்பதோடு சேர்க்கலாம். பாவேஷு

என்பதற்கு உள்ளங்களில் என்று பொருள். அஸுரர்களின் பீடைகளால் மேன்மேலும் பெருகின ஸந்தாபங்களால் என்றபடியாம்.

அலப்யத க்ஷிப்ரம் அலப்த பங்கை: தட்டுத் தடையில்லாமல் உடனே அடையப்பட்டு விட்டது என்று பொருள். இதுவரை தீபங்களும் தாபங்களும் எந்தவிதமான அழிவும் இல்லாமல் இருந்தன. விளக்கு-எண்ணெய், திரி காற்றின்மை எல்லாம் நன்றே இருந்தது. இவ்வாறு இருக்க திடீரென்று அணைந்துவிட்டன.

அஹேது நிர்வாண தசாநுபூதி: காரணமில்லாமலேயே நிர்வாணம் அழிதல். என்கிற தசையின் அனுபவம் அடையப்பட்டு விட்டது என்று பொருள். விளக்குகள் அணைவதற்கு காரணங்கள் இல்லாமலிருக்க அணைந்தது தான் அநிஷ்டம். அவ்வாறே தபோதனர்களின் உள்ளங்களிலும் நிர்வாணதசானுபவம் ஏற்பட்டதும் இஷ்டம். இங்கு நிர்வாண சப்தம் ரஸம், இதற்கு பல பொருள்கள் உள்ளன. மோக்ஷம், அஸ்தமித்தல், ஸந்தோஷம், அமைதி நிம்மதி, சூன்யம், ஸமாப்தி முக்தன், நஷ்டம், என்பவை. ஆயினும் நிர்வாணம் ஆத்யந்திகம் என்றார் குலசேகரன். நிர்வாணம் என்பதற்கு விஷ்ணு என்ற பொருள் பொருத்தமுடையது. நிர்வாணம் பேஷஜம் பிஷக் என்று ஸஹஸ்ரநாம படிதமான திருநாமம். தசா என்பதற்கு வர்த்தி-(திரி) அவஸ்தை மனது என்றும் பொருள். அநுபூதி: அலப்யத என்று சேர்க்கவேண்டும். விளக்கு அணைவது அபசகுன

மாகும் கம்ஸனுக்கு வரவிருக்கும் அனிஷ்டத்தை குறிப்பிட்டபடியாம்.

अजः स्वजन्मार्हतयाऽनुमेने
यामष्टमीं यादवभावमिच्छन् ।
द्वितीयया भावितयोगनिद्रा
साभूत् तदानीं प्रथमा तिथीनाम् ॥ ९५ ॥

அஜ: ஸ்வஜந்மார்ஹதயாநுமேநே
யாம் அஷ்டமீம் யாதவபாவமிச்சந்
த்விதீயயா பாவித யோக நித்ரா
ஸாபூத் ததாநீம் ப்ரதமா திதீநாம். (95)

(கருத்து) அஜன் இப்பொழுது யாதவனாகப் பிறக்கப் போகிறான். தனது பிறப்பிற்கு ஏற்றதாக அஷ்டமி திதியை ஸங்கல்பித்துக் கொண்டான். அஷ்டமி இதனால் ப்ரதமையாகி விட்டது. ஆதலால் தான் யோகநித்ரை நவமியில் தோன்றினாள். நவமி த்விதீயை ஆகிவிட்டது போலும்.

(விரிவுரை) எம்பெருமானுடைய அவதார காலம் என்னது என்பதை இந்த சுலோகத்தில் கூறுகிறார்.

அஜ: ஸ்வஜந்மார்ஹதயா அநுமேநே பகவான் தனது தோற்றத்திற்கு ஏற்றதாக அந்த வேளையை அனுமதி பண்ணினார் என்று பொருள். எந்த அஷ்டமியை என்

பதோடு சேர்க்க வேண்டும். அஜ: பிறப்பேயில்லாதவன். பிரமனேயும் அஜன் என்பர். இங்கு அவதரிக்கப் போகும் கண்ணனேயே குறிக்கும். அஜ: ஸர்வேச்வர: என்று ஸஹஸ்ர நாமத்தில் ஸஹபடிதமாய் ஸர்வேச்வரனே குறிப்பதாம். அஜோபி ஸந்-ஸம்பவாமி ஆத்ம மாயயா என்கிற ஸ்ரீக்ருஷ்ண கீதாவசனத்தில் அவன் வாயிலாக வந்த திரு நாமம். ஜாயமாநே அஜநே என்று அவனே அஜனன் (அஜ:) என்றே ஸ்ரீசுகர் குறிப்பிட்டதை நினைப்பர் போலும். ஸ்வ ஜந்மார்ஹதயா தனது பிறப்புக்கு ஏற்ற தாய் இருந்ததால் அல்லது ஏற்றதாக என்று பொருள். யதா யதாஹி தர்மஸ்ய என்ற இடத்தில் காலத்தையே குறிப்பிட்டருளினர். இங்கும் அஷ்டமி என்பதோடு கால விசேஷத்தை ஸங்கல் பித்துக் கொள்வர் என்பதாம். பிதரம் ரோசயாமாஸ என்னுமாப் போலே காலத்தையும் வரிப்பன் போலும். திதி வார நக்ஷத்திரங்கள் ஏற்றதாயிருக்க வேண்டும். நாவமிகே திதௌ என்றுர் வான்மீகியும். ஆதலால் இங்கும் திதியை வரித்ததாம்.

யாம் அஷ்டமீம் யாதவ பாவம் இச்சந் யாதவனுய் இருக்கும் நிலையை விரும்பிய பொழுது எந்த அஷ்டமியை என்று பொருள். அனுமேநே என்பதோடு சேரும். அஷ்டமியில் அவதரிக்க ஸங்கல் பித்துக் கொண்டான் என்பதாம். யாம் - எந்த என்கிறுர். எட்டாவது கர்ப்பம் கொல்லப் போகிறது என்ற ஆகாச வாணியை ஸத்யமாக்க எட்டிலேயே பிறக்க எண்ணினர். எட்டாவதாகப் பிறக்கப் போவதாலும் அஷ்டமியை வரித்தார். அஷ்ட வஸுக்களுக்கும் வஸுதேவர் தேவர் என்ற நிலையை

உணர்த்த அஷ்டமியை விரும்பினர். ப்ரதமஜம் என்றும் ஸப்தமோ வைஷ்ணவம் தாம என்றும் கூறும் பொழுது ஸங்க்யையை குறிப்பிட்டதால் அஷ்டமியை வரித்தார். எட்டு எட்டு என்று எண்ணியே கம்ஸன் எட்டாத இடத்தை அடையப் போகிறபடியால் அஷ்டமியை தனது ஜன்மத்திற்கு ஏற்றதாக்கினர். யாதவபாவம்-யதுவம்சத்தில் பிறந்தவன் என்ற பெயரையும் நிலையையும் திருவுள்ளத்தில் கொண்டு என்பதாம். ராகவனுய் நவமியில் பிறந்தான். அவன் விரும்பியதாக அங்கு இல்லை. இவன் யாதவபாவத்தை ஏற்ற பொழுது அஷ்டமியை அனுமதித்தான் என்பதாம். இச்சன் விரும்புகிறவனுய் என்று பொருள். ஸங்கல்பித்துக் கொண்டான் என்பதாம்.

த்விதீயயா பாவித யோக நித்ரா அதற்கடுத்த இரண்டாவதான திதி யோகநித்ரைக்கு அமைந்து விட்டது. இங்கு நவமியை த்விதீயை என்று கொண்டால் அஷ்டமி ப்ரதமையாகும். யோகமாயை தான் யோக நித்திரை. யோகநித்திரையை உத்தரவிட்டான் போலும். க்ருஷ்ணன் பிறப்பதற்கு முன்னம் அவள் இருப்பினும் பிறகே பிறக்கும்படி செய்து கொண்டான். இது அவனுடைய ஸங்கல்பப்ரகாரம். அகடிதகடனம் என்றுர் டிப்பணியில்.

ஸாபூத் ததாநீம் ப்ரதமா திதீநாம் அந்த அஷ்டமி திதிகள் எல்லாவற்றைக் காட்டிலும் சிறப்புற்று விளங்கியது. அஷ்டமி ப்ரதமையாவதும் நவமி த்விதீயை ஆவதும் ஆச்சர்யம் தானே. ஜயமாந தசையிலும் திதி மாறுட்டம் பண்ணுவான் போலும்,

अथ सितरुचिलग्ने सिद्धपञ्चग्रहोच्चे
व्यजनयदनघानां वैजयन्त्यां जयन्त्याम् ।
निखिलभुवनपद्मक्लेशनिद्रापनुत्त्यै
दिनकरमनपायं देवकीपूर्वसन्ध्या ॥ ९६ ॥

அத ஸிதருசிலக்நே ஸித்தபஞ்சக்ரஹோச்சே
வ்யஜநயத் அநகாநாம் வைஜயந்த்யாம் ஜயந்த்யாம்
நிகிலபுவந பத்மக்லேசநித்ராபநுத்யை
திநகரம் அநபாயம் தேவகீபூர்வஸந்த்யா (96)

(கருத்து) பிறகு சந்திர லக்னத்தில், ஐந்து க்ருஹங்கள் உச்சமாயிருக்கும் பொழுது, நல்லவர்களுக்கு வெற்றியை அளிப்பதும் அதனாலேயே ஜயந்தி என்ற பெயருமுடைய வேளையில், உலகங்களுடைய வருத்தம் உறக்கம் முதலியவற்றைப் போக்கடிக்க, தேவகி யென்ற கிழக்கு ஸந்த்யை அழிவில்லாத சூரியனை உண்டுபண்ணி விட்டது.

(விரிவுரை) இங்கு பகவானுடைய அவதார காலத்தைக் குறிப்பிட்டு அப்பொழுது கதிரவன் போல் உதித்தான் என்கிறார்.

அத ஸிதருசிலக்நே ஸித்தபஞ்சக்ரஹோச்சே இவ்வாறு சந்திரன் உதயமான பிறகு, ஐந்து க்ரஹங்கள் உச்சமாயிருக்கவும், சந்திரனுடன் கூடிய வ்ருஷப லக்னத்தில் என்று பொருள். அவதாரத்தைக் கூறும் ச்லோகம் ஆனதால் அத என்று மங்களவாசகமான சொல். சந்திரன் உதயமான பிறகு என்றார் தீக்ஷிதர். முக்கியமான விஷயம் கூறப்படுவதால் அத எனப்பட்டது. ஸிதருசி—சந்திரன் அவனும் அப்பொழுதே தோன்றியபடியால் சந்திரன் உதயமான லக்னம் வ்ருஷபமாயிற்று. ஸிதன் என்றால் சுக்ராசாரியரையும் குறிக்கும். அவ்வாறின்று ஸிதருசி எனப்பட்டது. அவ்வேளையில் ஐந்து க்ரஹங்களும் உச்சமா யிருக்கின்றன என்கிறார். ஸ்வோச்சஸம்ஸ்த்தேஷு பஞ்சஸு என்று முன் அவதாரத்தில் வான்மீகி குறித்தார். இங்கு கம்ஸபயம் காரணமாக கர்காசாரியர் குறிப்பிடவில்லை போலும். ஸ்வாமி பூர்வாவதார ஸாம்யமும் வைசிஷ்ட்யமும் உள்ளன என்று கூறுவர். சந்திரன் - செவ்வாய் புதன், குரு சனி ஆகிய ஐந்து க்ரஹங்கள் உச்சமாயிருக்கின்றன. வ்ருஷபம்-மகரம் கந்யா கடகம் துலாம் ஆகியவை உச்ச ஸ்தானங்கள். ஐந்து க்ரஹங்கள் உச்சமானால் அவன் லோகநாயகன் என்று தெய்வக்ஞர்கள் கூறுவர். சந்திர லக்னத்தில் அவதாரம் என்பதைக் குறிக்க ஸிதருசி லக்நே என்று தனித்துக் கூறியது என்பர். ஸித்தம் என்பதற்கு அமைந்தது ஸம்பந்நமானது என்றார் தீக்ஷிதர்.

வ்யஜநயத் அநகாநாம் வைஜயந்த்யாம் ஜயந்த்யாம் நல்லவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கும் ஜயந்தியில் தோன்றச் செய்தாள் என்று பொருள். அநகாநாம் என்பதற்கு தூய்மையானவர்களுக்கு என்று பொருள். புண்யதிவஸாநாம் என்று உரையிட்டார் தீக்ஷிதர். காலத்துக்குள் வெற்றிவாய்க்க கூடிய காலம் என்பதாம். முதல் ஸர்கம் முடிவில் அநகாதேச: என்றும், ப்ராதுர் பூஷு ரநக: என்றும் தர்மஸ்ய ஸ்திதிம் அநகாம் என்றும்

கூறி இரண்டாவது ஸர்கத்தின் தொடக்கத்திலும் அநகேந பூம்நா என்றும் ஸாதித்தருளினார். அவ்வண்ணமே இங்கும் அநகாநாம் என்பதை உற்று நோக்க வேண்டும். வைஜயந்த்யாம் என்பதற்கு பதாகை த்வஜபடம் - கொடி என்று உரையிட்டார் தீக்ஷிதர். வைஜயந்தீ விபூஷணனை அளிக்கவல்ல காலமானதால் அதுவும் வைஜயந்தியாயிற்று என்னலாம். ஜயந்தீ என்பது இந்த ஓரே காலத்தைக் குறிக்கும் சொல். ஆவணி மாதத்தில் க்ருஷ்ணபக்ஷ அஷ்டமியும் ரோஹிணியும் கலந்த காலத்தை ஜயந்தி என்று அழைப்பர். வ்யஜநயத்—ஈன்றெடுத்தாள். வி-அஜநயத் என்பது. அஜாயமானோ பஹுதா விஜாயதே என்ற ச்ருதியிலுள்ள விஜாயதே என்பதை குறிப்பதாகும் என்று டிப்பணியில் சாதித்தார். விலக்ஷணமாக உண்டுபண்ணினாள் என்றும் கொள்ளலாம். விஷ்ணுபுராணத்தில் ஆவிர்ப்பூதம் என்றார். ஆவிராஸீத் என்றார் பராசரருடைய திருப்பேரனார். ஆகையால் இதரவிலக்ஷணமாக ஈன்றெடுத்தாள் என்பது பொருத்தம். அன்றியும் கௌஸல்யா அஜநயத் ராமம் என்றார் வான்மீகி. தெய்வ பாகத்தையும் மறைக்காத அவதாரம் ஆனதால் வி அஜநயத் என்று இணைத்தார் ஸ்வாமி என்றும் கொள்ளலாம். பிறந்த மாயா என்றனர் ஆன்றோர்.

நிகிலபுவநபத்ம க்லேச நித்ராபநுத்யை அகில உலகங்களாகிற தாமரை மலருக்கு வாட்டமும் உறக்கமும் இல்லாமல் செய்திட என்று பொருள். புவனங்களே தாமரை மலர்கள். க்லேசம்-மூடிக்கொள்வது என்பதே

உறக்கம். அதை அகற்ற என்று விவரித்தார் தீக்ஷிதர். அகில ஜகத் பத்ம போதாய அச்யுத பாநுநா என்று ஸ்ரீவிஷ்ணு புராண ச்லோகம் திருவுள்ளத்தில் இருப்பதாம். ஸலிலம் புவநம் வநம் என்று கோசம் கூறியபடி புவநம் என்பதற்கு ஜலம் என்று பொருள். புவனங்களாகிற புவனங்களில் இருக்கும் தாமரை மலர்கள் வாடலாகாது என்பதும் உள்ளடங்கினதாம். க்லேச கர்மாசயை: அபராம்ருஷ்டனை ஈச்வரன் அவதரிக்கப் போவதால் க்லேசம் அகற்றப்படும். க்லமதந்த்ரிகள் அற்றவனைபடியால் நித்ராபநோதநம் செய்யப்படும் போலும். இதய கமலங்களின் க்லேச நித்ரைகள் அறவே அழியும் என்பதாம்.

திநகரம் அநபாயம் தேவகீ பூர்வஸந்த்யா அஸ்தமனமில்லாத சூரியனை தேவகி என்ற பூர்வஸந்த்யை ஈன்றெடுத்தது என்று பொருள். அபாயம் இல்லாத சூரியன். உபராகம் இல்லாத சூரியன். அஸ்தமனமேயில்லாத சூரியன். சக்ரவர்த்தித் திருமகனை பரம வ்யோம பாஸ்கரன் என்றார். அவ்வாறும். திசையில் தோன்றினாலும் திநகரன் தான், பகல் நடுவே இரவு அழைக்கவல்லார் ஆனபடியால் நள்ளிரவில் இவரே சூரியனாகத் தோன்றியபடியாம். பூர்வஸந்த்யையில் தோன்றுவது சூரியன்தானே! அச்யுத பாநு என்றார் ஸ்ரீபராசரர். சூரிய வம்சத்திலே ஒரு ராமசந்திரன். சந்திர வம்சத்திலே ஒரு கிருஷ்ணஸூர்யன். தேவரூபிணீ தேவகி என்றார் ஸ்ரீசுகர். தேவகீ பூர்வஸந்த்யை என்றார் அவருடைய பிதாமஹன். பரதேவதா பாரமார்த்யவேதியானதால் தேவகியை பூர்வஸந்த்யையாகவே கூறினார். இவனே யதாதித்யகதம் தேஜ: ஜகத்

பாஸயதே-தத்தேஜோ வித்தி மாமகம் என்று சொன்னார். ஸர்காரம்பத்தில் ஸாயம் ஸந்த்யையை வருணித்து இந்த ஸர்கமுடிவில் பூர்வஸந்த்யையை ப்ரஸ்தாபித்து முடிவு கட்டுவது ரஸம். ப்ராசீஸந்த்யை தேவகி போல் விளங்கியது என்றார் 51வது சுலோகத்தில். இங்கு தேவகியே பூர்வ ஸந்த்யை என்பர் போலும். அஸூத என்னாமல் வ்யஜநயத் என்பதிலும் ரஸம் உண்டு. ஜநி என்ற தாதுவிற்கு ப்ராதுர்பாவம் என்றே பொருள். ஆதலால் ஆவிராஸீத், ஆவிர்பூதம்-என்பதோடு மாறுபடவில்லை என்பதையும் உணர முடியும். அத்புதமாக அவதரித்த அவதார ச்லோகம்.

अवतरति मुकुन्दे संपदामेककन्दे
सुरभितहरिदन्तां स्वादुमाध्वीकदिग्धाम् ।
अभजत वसुदेवस्थानं आनन्दनिघ्नैः
अमरमिथुनहस्तैः आहितां पुष्पवृष्टिम् ॥ ९७॥

அவதரதி முகுந்தே ஸம்பதாம் ஏககந்தே
ஸுரபித ஹரிதந்தாம் ஸ்வாது மாத்வீகதிக்தாம்
அபஜத வஸுதேவஸ்த்தாநம் ஆனந்த நிக்நை:
அமர மிதுந ஹஸ்தைராஹிதாம்
புஷ்பவ்ருஷ்டிம். (97)

(கருத்து) முகுந்தன் அவதரித்து விட்டான். அவன் ஸகலவிதமான ஸம்பத்துக்களையும் செழிக்க வைக்கும்

மூல புருஷன். கிழங்கு போன்றவன். எங்கும் மணம் கமழ்ந்தது. இனிமையும் எங்கும் தோய்ந்தது, ஆனந்த பரவசர்களான தேவர் குழாமெல்லாம் மிதுனங்களாக சொரிந்த மலர் மழையை வஸுதேவஸ்தானமானது ஏற்று ஏற்றம் பெற்று விட்டது.

(விரிவுரை) எம் பெருமான் அவதார ஸமய வைபவத்தை இதற்கு முன் சுலோகத்தில் விளக்கினார். இப்பொழுது எம்பெருமான் அவதரிக்கும் பொழுது வஸுதேவர் திருமாளிகையில் ஏற்பட்ட தெய்விக புஷ்ப வர்ஷத்தை அழகாக நிரூபிக்கிறார் இந்த ஸர்கத்தை புஷ்பவ்ருஷ்டியோடு மங்களமாகத் தலைக் கட்டுகிறார்.

அவதரதி முகுந்தே ஸம்பதாம் ஏககந்தே ஸகலவிதமான ஐச்வர்யங்களுக்கு ஒரே காரணமாயிருக்கும் முகுந்தன் அவதரிக்கின்ற பொழுது என்று பொருள். முகுந்தன் என்பதற்கு போகங்களையும் மோக்ஷத்தையும் அளிப்பவன் என்று பொருள். குந்தன் வேறு. ஒருவர் ஔபாதிகமாகவாவது இருக்கலாம். முந்தன் —மோக்ஷப்ரதன் என்பது மற்றயாருக்குமே சேராது. அபவர்கப்ரதன் ஹரி என்றதாலே லௌகிக போகங்களுக்காக பிறரை நாட வேண்டும் என்பதில்லை. முகுந்த சப்தத்தில் ஸ்வாமிக்கு விசேஷ ஈடுபாடு உண்டு என்று தெரிகிறது. முக்தாநுபூதிம் இஹதாஸ்யதி மே முகுந்த: என்றார் ஸ்ரீ தயா சதகத்தில். இங்கும் கிருஷ்ணனை முகுந்தனாகவே ஸேவிப்பதில் ருசியும் உண்டு போலும். முன்னம் முகுந்த கர்ப்பா என்று கூறினார். எம் பெருமான் முகுந்தனாக அவதரிக்கும் பொழுது என்று தேரும். இவன் ஸம்பத்துக்களை எல்லாம்

அளிக்க வல்லவன். மூலகந்தே என்பர். முதற்கிழங்கு என்றும் கூறுவர். மூலகந்தம் தான் முகுந்தன். அல்லது முகுந்தன் தான் மூலகந்தம். கிழங்கு என்பதால் பீஜாங்குரந்யாயத்தை ஒருவாறு ஸமாளிக்கலாம். சாச்வதிகம் முகுந்த: என்பர். முகுந்த மாலை என்றே நாமம் சூட்டினுர் தனது தோத்திரத்திற்கு குலசேகரன். முகும் ததாதி என்றே வ்யுத்பத்தியும் உண்டு. முக்திம் ததாதி என்பது. முகும் அவ்யயம் மாந்தஞ்ச. நிர்வாண மோக்ஷ வாசகம் த்தத் ததாதி ச யோ தேவ: முகுந்தஸ் தேந கீர்த்தித: என்றும் முகும் பக்திரஸ ப்ரேமவசநம். வேதஸம்மதம். யஸ் தத் ததாதி விப்ரேப்ய: முகுந்த: தேந கீர்த்தித: [ப்ரம்ஹவைவர்த்தம்]

ஸுரபித ஹரிதந்தாம் ஸ்வாது மாத்வீக திக்தாம். நறுமணமுறும்படி செய்யப் பெற்ற திக்குகளையுடையது. இனிமையான தேன் தோய்ந்ததாயும் உள்ளது என்று பொருள். இது புஷ்ப வ்ருஷ்டிம் என்பதோடு சேரும். புண்ய கந்தவஹமான காற்று வீசியது என்றுர் ஸ்ரீசுகர். ஹரித்—திக்குகள், அவற்றின் அந்தம் முடிவு. திகந்த வ்யாபியாய் மணம் கமழ்ந்தது என்று பொருள். திவ்யமான மலர்களாதலால் மது நிறைந்தது என்றபடி.

அபஜத வஸுதேவஸ்த்தாநம் ஆனந்தநிக்நை: புஷ்பவ்ருஷ்டியை வஸுதேவ ஸ்த்தானம் அடைந்தது என்று பொருள். வஸுதேவ ஸ்த்தாநம் என்பது ரஸம். வஸுதேவரின் இருப்பிடமெல்லாம் என்றுர் டிப்பணியில். வஸுதேவரின் ஸ்த்தானம் இப்பொழுது தேவஸ்த்தாநமாய் விட்டது. வஸுபூர்ணமான தேவஸ்த்தாநம் என்றும் கொள்ளலாம். வஸுதேவ ஸ்த்தானமானதால் தேவர்கள் மலர்மாரி பொழிந்தன போலும். கம்ஸனின் காராக்ருஹமாக இருப்பினும் வஸுதேவ ஸ்த்தானமாதலால் புஷ்பவ்ருஷ்டி. தேவபுஷ்பங்களாதலால் கம்ஸாதிகளுக்குப் புலப்படுவதில்லை என்றும் தோன்றுகிறது. ஆனந்த நிக்நை: என்பதற்கு ஆனந்த பரவசர்கள் என்று பொருள். பிறகு ஆனந்த நிக்னர்கள் நந்த நிக்னர்களாகப் போகிறுர்கள் அப்பொழுது அங்கு சேவிக்கலாம், இது அமரமிதுன ஹஸ்தை: என்பதோடு சேரும்.

அமரமிதுநஹஸ்தை: ஆஹிதாம் புஷ்பவ்ருஷ்டிம். தேவர்கள் தம்பதிகளாய் வந்து தமது கைகளாலேயே பூமாரிபொழிவர் என்று பொருள். அமர மிதுன ஹஸ்தை: இரண்டு பேரும் ஒன்ருக இணைந்து நான்கு கரங்களாலும் மலர்மாரி பொழிந்தனர் என்பதாம். கூடை கூடைகளாக கொட்டாமல் தமது கைகள் சரிதார்த்தமாகும்படி தமது கைகளாலேயே என்பர் போலும். ஆதானம் பண்ணுவதைக் காட்டிலும் இது சிறந்தது என்பதுமாம். முமுசுர் முநயோ தேவா: ஸுமநாம்ஸி முதாந்விதா: என்றுர் ஸ்ரீசுகரும். - ஸ்வாமி இங்கு அமரமிதுனங்களை மட்டும் குறிப்பிட்டார். புஷ்பவ்ருஷ்டியுடன் இந்த ஸர்கம் முடிவு பெறும்.

சுபம்

——x——

நம த

சி

கவிதார்கிகசிங்கமாயும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராயும், வேதாந்தாசாரியராயும் விளங்கும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் அருளிச்செய்யப்பட்ட யாதவாப்யுதயம் என்ற திவ்யமான மஹாகாவியத்தின் இரண்டாவது ஸர்கம் முற்றுப்பெறுகிறது.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ॥

கவிதார்கிக ஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம:

னை